பத்தகுதம்(Intestional obstruction) பஸ்ராவி(Intestional perforation) என்னும் உதரரோகங்களில் ஸ்வேத, அப்யங்கனாதிகளைச் செய்தபின் தொப்புளுக்குக் கீழுள்ள ரோமராஜிக்கு இடதுபுறமாய் 4 அங்குலம் விட்டு மேல் வயிறைக் கிழிக்கவும். உள்ளிருக்கும் குடலில் 4 அங்குலம் வெளிப்படுத்தி அங்கு அடைக்கப்பட்டிருக்கும் கல், மயிர் முதலான மலங்களை வெளியில் எடுத்த பின்பு, அக்குடலை நன்கு சுத்தம்செய்து, வ்ரணஹரமான தேன், நெய் முதலானவைகளைப் பூசிக் குடல்களை அந்தந்த இடத்தில் வைத்துத்தைத்து, வயிற்றின்மேலும் தையல் போடவும்.

2. பரிஸ்ராவியில்

शल्यमुद्धृत्य आन्त्रस्नवान् संशोध्य, तच्छिद्रान्त्रं समादाय, कालपिपीलिकामिर्दशयेत्, दष्टं च तासां कायानपहरेत्, न शिरांसि ततः पूर्ववत् सीव्येत्, सन्धानं च यथोक्तं कारयेत्।।

மேற்கூறியவாறு குடலை வெளியிலெடுத்தபின், அங்கு அடைபட்டிருக்கும் சல்யத்தை வெளியிலெடுத்துச் சுத்தம் செய்து, அத்துவாரங்கள் தோறும், கருமை நிறமுள்ள கட்டெரும்புகளை விட்டுக் கடிக்கச்செய்யவும். அவைகள் அத்துவாரங்களின் இருபுறங்களையுஞ் சேர்த்து இறுகப் பற்றிக்கொண்டபின் அதன் தலையைத்தவிர மற்ற பாகங்களை வெட்டி எடுத்து விடவும். இவ்வாறு துவாரங்களை மூடிய பின் குடலைச் சரியாக அதனதன் இடங்களில் வைத்து தைத்துவிடவும். ஆறுவதற்கேற்ற மருந்துகளையும் போடவும். (எறும்புத்தலை இறுகப் பிடித்துக்கொள்ளும் தன்மையும் இலகுவாக ஜீர்ணமாகக் கூடியதன்மையும் வாய்ந்தது.) இதைப்போலவேஅஷ்டாங்க ஹ்ருதயத்திலும்கூறப்பட்டிருக்கிறது.

प्रयुञ्जित भिषक्शस्त्रमार्तबन्धुनृपार्थितः।
स्निग्धस्वित्ततनोर्नरिधो बद्धक्षतान्त्रयोः।।

पाटयेदुदरं मुक्त्वा वामतश्चतुरंगुलात्
चतुरंगुलमानं तु निष्कास्यान्त्राणि तेन च ।।

निरीक्ष्याऽपनयेद्वालमललेपोपलादिकम्।
छिद्रे तु शल्यमुद्धृत्य विशोध्यान्त्रं परिस्रवम्।।

मर्कोटैर्दशयेच्छिद्रं तेषु लग्नेषु चाऽहरेत्।
कायं मूर्ध्नोऽनु चान्त्राणि यथास्थानं निवेशयेत्।।

अक्तानि मधुसर्पिर्भ्यामथ सीव्येद्बहिर्व्रणम्।

ततः कृष्णमृदाऽऽलिप्य बध्नीयाद्यष्ठिमिश्रया।
निवातस्थः पयोवृत्तिः स्नेहद्रोण्यां वसेत्ततः।।

(अष्टाङ्गहृदयम् उदरचि. श्लो. १०७-१११)

(இதன் பொருள்)

பத்தகுதோதரம், உதகோதரம் முதலானவைகள் ஔஷத ஸேவையினால் தீராவிட்டால் வைத்யன் ரோகியின் பந்துக்கள் அரசன் முதலானவர்களின் அனுமதியின்பேரில் சஸ்திர சிகித்ஸையைச் செய்யவேண்டும். வியாதியஸ்தருக்கு ஸ்நேக, ஸ்வேத சிகித்ஸைகளைச் செய்து, நாபிக்குக் கீழே (தொப்புளுக்கு) மத்ய ரேகைக்கு இடது பக்கத்தில் 4 அங்குல அளவில் சஸ்திரத்தினால் கீறவும். அத்துவாரத்தின் மூலமாகக் குடலை வெளியில் எடுத்து, அதனுள்ளிருக்கும் மயிர் மலம், கற்கள் முதலியவைகளை வெளிப்படுத்தவும்.

சித்ரோதர ரோகத்தில், முன் கூறியபடி குடலை வெளியிலெடுத்து அங்கு அடைபட்டிருக்கும் சல்யத்தை வெளியிலெடுத்து, கசியும் நீரையும் சுத்தம் செய்து மர்கோடம் என்ற வகை எறும்புகளை விட்டு, இரணத்தின் வரம்புகளை யொன்று சேர்த்துக் கடிக்கச் செய்து, அதன் உடலை நீக்கி விடவும். பின்பு குடலை ஏற்கனவே இருந்தவாறு வைத்துத் தேன், நெய் முதலியவைகளைப் பூசி வ்ரணத்தின் வெளி வாயைத் தைத்து விடவும். கறுத்த களிமண்ணையும் அதிமதுரத்தையும் கூட்டியரைத்து அவ்விடத்தில் லேபனம் செய்து கட்டி விடவும். காற்றோட்டம் அதிகமில்லாத இடத்தில் இருந்துகொண்டு, பாலையே உணவாக உட்கொள்ளவும். எண்ணெய்த் தொட்டியிலும் அந் நோயாளியை அமரும்படி செய்யவும்.

மேற்கூறியபடி கட்டெறும்புகளினால் தைக்கப்படும் முறை கூடியவரை தற்காலத்தில் வழங்கப்படும் உடம்பிலேயே சீரணித்துவிடும் catgut என்ற வகை நரம்பினாலான தையல் முறைக்கு ஒப்பானது. மேலே சொன்ன வகைத் தையல் முறை தென் அமெரிக்காவிலுள்ள பெரு முதலான பிரதேசங்களில் இப்போதும்

கையாளப்படுகிறது. இவ்வகைத் தையல் முறைக்கு ஆங்கிலத்தில் DORAT'S SUTURE என்றும் பெயர்.

இம்மாதிரியே ஸிராவ்யதம் (Venesection)க்ஷார கர்ம, (alkaline application)அக்னீ கர்மம்(cauterization) முதலானவைகளிலும் நம் முன்னோர்கள் மிகவும் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதை அவர்களியற்றிய கிரந்தங்களைப் படித்தால் நன்கு விளங்கும்.

சஸ்திர சிகித்ஸையும் & ஒட்டவைத்தலும்
(Rhinoplastic Surgery & Skin graphting)

நல்ல இடத்திலிருந்து மெல்லியதாக எடுக்கப்பட்ட சருமத்தை, பெரும் அளவில் கீறப்பட்ட வேறொரு இடத்தில் பொருந்தவைத்துத் தைத்துவிடுதல் என்ற முறை அக் காலங்களில் மிகப் பிரபலமாக இருந்திருக்கிறது என்பதை ஸுச்ருத ஸம்ஹிதை ஸூத்ரஸ்தானம் 16ம் அத்யாயத்தைப் படித்தால் விளங்கும். அறுந்துபோன காதைப் படியும்படி வைத்துக் கழுத்திலிருந்து எடுக்கப்பட்ட சருமத்துண்டைப் பொருத்தித் தைத்துவிடுதல் முறையாகும்.

*மேல்நாட்டு சஸ்திர நிபுணர்களும் இம்முறை இந்தியாவில் மிகப்பழமையான சஸ்திர முறை என்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

மேலும் ருக்வேதத்தில், சண்டையில் கால்களை இழந்தவர்களுக்கு இரும்பினால் செய்யப்பட்ட கால்களும், கண்களை இழந்தவர்களுக்குக் கண்களும் வைக்கப்பட்டன என்று காணப்படுகிறது. *(1, 116, 15&16)*

---

* Doctor Hirseh berg of Germany says, "The whole of plastic Surgery in Europe took a new flight when those cunning devices of Indian workmen become known to us"

வ்ரண ரோகம் என்ற இத்தொகுதியில் வ்ரண சோதம் (விரணங்கள் ஏற்படுவதற்கு முன்னுள்ள வீக்கம்), சாரீர, விரணங்கள், பக்னம் (எலும்பு முறிவு), நாடீ விரணங்கள் பவுத்திரம், விஸர்ப்பம் (கரப்பான் போன்றவை) சல்யாஹரணம் நெருப்புச் சுட்ட புண்கள் முதலான பற்பல வியாதிகளுக்கும் மருந்துகள் சொல்லப்பட்டுள்ளதால் அவைகளின் லக்ஷணங்களையும், வகைகளையும் கூறவேண்டியது அவசியமாகிறது.

வ்ரண சோதம் (ABSCESS)

வ்ரணம் ஏற்படுவதற்குமுன் வீக்கம் ஸம்பவித்துப் பின்பு அது நன்றாகப் பழுத்து உடையும். சீதோபசாரங்கள், பற்று வகைகள், ஜலம் முதலானவைகளின் உபயோகம், ரத்தத்தை வெளிப்படுத்தல் முதலியவைகளினால் முதலிலேயே கூடியவரை பழுக்காதபடி செய்யவேண்டும்.

பழுக்காத வீக்கத்தின் லக்ஷணங்கள்

வீக்கம் ஏற்பட்டவிடத்தில் வர்ண வேறுபாடு உண்டாகும். சிவப்பாகவும் காற்று அடைத்த துருத்தியைப் போலத் திரண்டு உடைந்துவிடுவதைப் போலவும், வலியுடனும் இருக்கும். உடம்பில் வேதனையுடன் அடிக்கடி கொட்டாவி, படபடப்பு, ருசியின்மை, உடம்பில் எரிச்சலும், தாகம், ஜ்வரம், தூக்கமின்மை முதலியவைகளும் ஏற்படும். நெய் முதலானவைகளை அதன்மேல் போட்டால் அது உருகிவிடும். தொடமுடியாத வலியுமேற்படும்.

பழுக்க ஆரம்பித்து நன்றாகப் பழுக்காத வீக்கத்தின் லக்ஷணங்கள்

வலி மிகக் குறைவடையும், விரண வீக்கமும் சுருங்கும். உடம்பு வாட்டமுறும். விரண வீக்கங்களின் ஓரங்கள் பள்ளமாகி, மத்ய பாகம் மேலெழுந்து நிற்கும். அரிப்பு,

வீக்கம், முதலானவை சாந்தமாகும். சிவப்பு நிறம் மாறி வெளுப்பு நிறமுண்டாவதுடன், துருத்திக்குள்ளிருக்கும் தண்ணீரைப்போல் சீழ் அதனுள் ஸஞ்சரிக்கும்.

வாதவிரண சோபமாகில் வலியுடனும், பித்த சோபமானால் எரிச்சலுடனும், கபத்தினாலெனில் வீக்கத்துடனும், இரத்த தோஷப் பிரகோபமாகில் சிவப்பாகவும் இருக்கும். மூன்று தோஷங்களும் ஒன்று சேர்ந்தால்தான் சோபம் பழுக்கும்.

அதிகமாகப் பழுத்த சோபத்தின் குறிகள்

அதன்மேல் துவாரம் ஏற்பட்டுச் சீழ் வெளிவரும். உடையாமல் போனால் அது சருமத்தையும், மாம்ஸாதி களையும், தின்னவாரம்பிக்கும். சுருக்கங்கள் ஏராளமாக விழுவதுடன், கருமை நிறத்தையும் அடைந்து அவ்விடத்திலுள்ள மயிர் உதிரும்.

சோபத்தைக் கீறுவதற்கும், தானே உடைவதற்கும் ஏற்ற நிலமைகள்.

நல்ல பலமில்லாதவர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஏற்படும் விரண சோபங்கள், நன்றாகப் பழுத்த விரண சோபங்கள், மர்ம ஸ்தானங்களிலேற்படும் விரண சோபங்கள், ஸந்திகளில் ஏற்பட்டிருக்கும் விரண வீக்கங்கள் முதலானவைகளைத் தானாகவே உடையச் செய்வதுதான் ஹிதமானது.

மற்ற இடங்களிலுண்டான சோபங்களைக் கீறலாம்.

பழுக்காத கட்டியை கீறுவதனாலேற்படும் விகாரங்கள்

ஸிரை முதலான இரத்தக் குழாய்கள், நரம்புகள் முதலியன சேதமடையும். அதிகமான இரத்தப் பெருக்கு தாங்கமுடியாத வலி, விரணத்திலிருந்து நீர்க்கசிவு, புண்கள் முதலானவைகளும் ஏற்படும்.

சீழ் உள்ளேயே தங்கிவிடுவதனாலேற்படும் தீமைகள்

சீழ் கட்டிக்குள் விருத்தியடைந்தால் அது, ஸிரை, ஸ்நாயு, ரக்தம், மாம்ஸம் முதலானவைகளைத் தின்றுவிடும். காய்ந்த புல்லை அக்னி எவ்வாறு பஸ்பம்செய்து விடுமோ அவ்வாறு அழித்துவிடும்.

வைத்தியன் கட்டிகளுக்குச் சிகித்ஸை செய்யவேண்டி முறை

பக்குவமான வீக்கத்தை அறுக்காமலிருப்பதும், பழுக்காத கட்டியைக் கீறவும் கூடாது. அப்படிச் செய்தால் அவன் சண்டாளனுக்குச் சமானமானவன்.

சஸ்திரப் பிரயோகமும் ஆகாரமும்

நோயாளிக்குச் சஸ்திர சிகித்ஸை செய்யுமுன் அவனுக்கு வேண்டிய அளவு சாப்பாடு போடவும். ஏனெனில் பசியிருக்கையில் சஸ்திரப் பிரயோகஞ் செய்தால் நோயாளி ஒருக்கால் மூர்ச்சசையாகிவிடக்கூடும். வலி தெரியாமலிருக்கும்படி நோயாளிக்கு மதுவையும் அருந்தக் கொடுத்துப் பின்பு சஸ்திர சிகித்ஸையும் செய்யலாம்.

மயக்கம் உண்டுபண்ணத் தகாதவர்

கர்ப்பம் வெளிவராமல் தடையுற்றிருக்கும் ஸ்திரீ, கல்லடைப்பு ரோகமுள்ளவர், வாயிலுண்டான வியாதியினால் அவதியுறுபவர், உதரரோகி முதலான வர்களுக்கு மயக்கம் கொடுக்கக்கூடாது.

சஸ்திர சிகித்ஸையைச் செய்யும் முறை

பிணியாளியைக் கிழக்கு முகமாக உட்காரச் சொல்லி அவனுக்கு எதிரில் வைத்யன் நின்றுகொண்டு, மர்ம ஸ்தானங்களை நீக்கிவிட்டு வீக்கத்திற்குள் சஸ்திரத்தை

அனுலோமமாகச் (மேலிருந்து கீழ்) சீழ் வெளிப்படுமாறு நன்றாகக் கீறவும். சஸ்திரத்தை ஒரே தடவையில் உள்ளே செலுத்தி விடவும். பெரிய வீக்கங்களில் 2 தடவைகள் பிரயோகிக்கலாம். புரையோடியிருந்தால் ஏஷணியை விட்டுத் துழாவி அது எவ்வளவு தூரம் வியாபித்துள்ளது என்பதை அறிந்து பின்பு கீறவும். மேலே எழுந்து நிற்கும் வீக்கத்தைக் கீறுவதனால் கெடுதல் இல்லை. கூடியவரை சீழ், சதைவளர்ச்சி முதலியவைகள் அதிலேயே நின்றுவிடா வண்ணம் நன்றாகக் கீறி விடவும்.

விரண சிகித்ஸையில் வைத்தியனுக்கு வேண்டிய குணங்கள்

வைத்யனுக்குத் தைரியம், சீக்கிரத்தில் சிகித்ஸையை முடிக்கும் தன்மை, உடம்பில் வியர்வையோ, நடுக்கமோ இல்லாமலிருத்தல் முதலான குணங்களிருக்க வேண்டும். மனதில் கலவரமேற்படக்கூடாது. எந்த விதமான சஸ்திரப் பிரயோகத்திலும் நிதான புத்தி இருத்தல் வேண்டும்.

சஸ்திரத்தைக்கொண்டு குறுக்காக அறுக்கக்கூடிய இடங்கள்

நெற்றி, புருவம், பல்லீறு, தோள், வயிறு, அக்குள், நேத்திரத்தின் கீழ் மேல் புறங்கள், உதடு, கன்னம், கழுத்து, துடையிடுக்கு முதலிய இடங்களைத் தவிர மற்ற இடங்களில் சஸ்திரத்தைக் குறுக்காகப்பிரயோகிக்கக் கூடாது.

கட்டுக்கட்டவேண்டிய வஸ்துக்களின் இலக்ஷணங்கள்

அவை சுத்தமாகவும், மெல்லியதாகவும், கெட்டியாகவும், இருத்தல் வேண்டும். கவலிகை எனப்படும் பஞ்சு சேர்ந்த துணி, அகில் முதலான சரக்குகளின் தூபங்களைப் போடப்பட்டவைகளாகவும், ம்ருதுவாகவும், வழவழப்பாகவும், மடிப்புகளில்லாமலும், இருத்தல் வேண்டும்.

விரணரோகி செய்யக்கூடாதவை.

பகலில் தூங்கக்கூடாது. ஸ்திரீ சேர்க்கை கூடாது.

ஆஹார நியமங்கள்

யவம், கோதுமை, கடலை, பயறு, துவரை, அரைக்கீரை, இளமுள்ளங்கி , கத்தரி, அம்மான் பச்சரிசி, சிறுகீரை, பாகல், வெள்ளெரி, புடலை, கண்டுபாரங்கி, இந்துப்பு, மாதுளை, கடுக்காய், நெய், கொதித்து ஆறிய ஜலம், சம்பா சாதம் இவைகளை வேண்டிய அளவு உட்கொள்ளலாம்.

வ்ரணரோகி அஜீரணமுண்டாகும் வண்ணம் சாப்பிடக் கூடாது. ஆஜீர்ண மேற்படில் விரணத்தில் வீக்கமும், வலியும், அழற்சியும், எரிச்சலும் உண்டாகும்.

விரணரோகி உபயோகிக்கக்கூடாதவை

புதிய தானியம், எள், உளுந்து, மது, ஆநூப மாம்ஸம் , (கபதேசத்திலிருந்து கிடைக்கும் மாம்ஸாதிகள்) தயிர் வெண்ணெய், வெல்லம், கருப்பஞ்சாறு, புளி, உப்பு, காரம் முதலியவைகளையும் நீக்க வேண்டும். பித்தத்தைப் பிரகோபிக்கச் செய்யும் பதார்த்தங்களையும் அறவே நீக்கவேண்டும்.

சரியானபடி ஜீரணமாகாத குருவான வஸ்துக்களையும், விதாஹி, விஷ்டம்பி (தக்கபாதம் அடையக்கூடிய) குணமுள்ள வஸ்துக்களையும். சீதள பதார்த்தங்களையும் நீக்கவிடவும்.

வ்ரணங்களின் கட்டுக்களை அவிழ்த்தல்

மூன்றாவது நாளன்று கட்டுக்களை அவிழ்த்துச் சுத்தம் செய்யலாமேயல்லாது இரண்டாவது நாளன்று அவிழ்க்கக்

கூடாது. அவசரப்பட்டு அவிழ்த்தால் வலி தீவிரமாகப்போய், விரணங்களில் கரடுகட்டி ஆறுவது தடைப்படும்.

வ்ரணங்களில் வைத்துக் கட்டப்படும் பஞ்சின் நிலைமை. (விகேசிகை)

அதிக நைப்புள்ளதும், வரட்சியுள்ளதும், இறுக்கிக் கட்டப்பட்டதும், சரியாகப் பொருத்தி வைக்கப்படாததுமான விகேசிகை நல்லதல்ல. ஏனெனில், நைப்புள்ளது ஊண், தண்ணீர் கசிவையும், வரட்சியான விகேசிகையினால் தசைநார்கள் அறுக்கப்படுவது போன்ற உணர்ச்சியும், வலியும், இரத்தப் பெருக்கும் உண்டாகும். முறை தவறிக் கட்டப்பட்டால் விரணங்களில் அது உராய்ந்து வலி அதிகமாகும். விகேசிகைகளை விரணத்தினுள் நன்றாகச் செலுத்துவதால் புரைகளும், துர்நாற்றத்துடன் கூடிய மாம்ஸத்துடன் கூடிய புண்களும் சீக்கிரம் ஆறிவிடும்.

தையல் போடவேண்டிய விரணங்கள்

அடி முதலியவைகளாலேற்படும் விரணங்களின் வாய் பெரிதாக இருந்தால் அவைகளை உடனே தைத்து விடவேண்டும். மேதஸ் வருத்தியாவதனால் ஏற்படும் கிரந்திகள், கர்ணபாலீ, சிரஸ், கண்கள், தொண்டை, மூக்கு, உதடு, கைகள், கழுத்து, நெற்றி, பின்புறம், ஆண்குறி, வயிறு முதலான இடங்களில் ஏற்பட்ட விரண சோபங்களையும் கீறித் தைத்துவிடவும்.

தைக்கத்தகாத விரணங்கள்

அற்ப தசைநார், மாம்ஸம் முதலான இடங்களிலுள்ள விரணங்களையும், கைகளின் இடுக்கு, தொடையிடுக்கு முதலான அசையும் பாகங்களிலிருக்கும் விரணங்களையும், வாயு ஸஞ்சரிக்கும் இடத்தையும், சல்யம் உள்ளிருக்கும் விரணத்தையும், க்ஷாரம், விஷம், அக்னி இவைகளினால் ஏற்பட்ட விரணங்களையும் கட்டக்கூடாது.

தையல் போடும் முறை

அடிபட்ட இடத்திலிருக்கும் உறைந்த இரத்தம், புல், ரோமம், முதலானவைகளை நீக்கிவிட்டுத் தொங்கும் மாம்ஸ பாகங்களையும் எலும்புகளையும் அதனதன் இடத்தில் பொருத்தி, இரத்தப் பெருக்கு நின்றபின், தசைநார், நூல், நரம்பு முதலியவைகள் ஏதேனுமொன்றைக் கொண்டு தையல் போடவும். தையல்களை அதிக இடைவெளி உள்ளதாகவோ, அல்லது வெகு நெருக்கமாகவோ போடக்கூடாது. விரணங்களின் விளும்புகளின் நுனியிலோ அல்லது அடியிலோ தையல்களைப் போடக்கூடாது.

தையல் போட்டபின் ரோகியை ஆச்வாஸப்படுத்தித் தேன், நெய், அஞ்சனம், பட்டின் கறுக்கு முதலியவைகளையோ அல்லது வெள்ளி லோத்திரப் பட்டை, அதிமதுரம் இவைகளையோ தேனுடன் குழைத்து விரணத்தின்மேல் பூசவும். இரத்தம் பெருகாத விரணங்களின் வாயைக் கீறி இரத்தம் வடியச் செய்து பின்பு தையல்களிடவும். அப்போதுதான் அவைகள் கூடும்.

பந்தனமிடும் முறை

கட்டுமுறைகளைக் கட்டுப் போட வேண்டிய அவயவம், பழக்கம் முதலியவைகளை அநுஸரித்துக் கட்டவேண்டும்.

கம்பளி, தோல் முதலியவைகளினால் செய்யும் பந்தனம் உஷ்ண குணமுள்ளவை.

பட்டைக்கொண்டு பந்தனமிடச் சீத குணமுள்ள வையாம்.

பருத்தி, மரவுரி முதலியவைகளினாலிடப்பட்ட பந்தனங்கள் உஷ்ணம், சீதம் ஆக இரு குணங்களையும் பெற்றிருக்கும்.

எலும்பு முறிந்த விரணங்களில் அங்கங்களைத் தாங்கிப் பந்தனம் செய்யப் பலகைகள், தர்ப்பம் முதலியவைகளைப் பிரயோகிக்க வேண்டும்.

பந்தன முறைகள்

இவை 15 வகைப்படும். 1. கோசபந்தனம் 2. ஸ்வஸ்திக பந்தனம் 3. முத்தோலி பந்தனம் 4. சீன பந்தனம் 5. தாம பந்தனம் 6. அநுவேல்லித பந்தனம் 7. கட்வா பந்தனம் 8. விபந்த பந்தனம் 9. ஸ்தகிகா பந்தனம் 10. விதான பந்தனம் 11. உத்ஸங்க பந்தனம் 12. கோபண பந்தனம் 13. யமக பந்தனம் 14. மண்டல பந்தனம் 15. பஞ்சாங்க பந்தனம்.

பந்தனமிடப்படாத வ்ரணங்களுக்கு நேரிடும் கெடுதிகள்.

பூச்சி, கொசு முதலியவைகள் விரணங்களில் உட்கார்ந்து அசுத்தம் செய்யும். 2. வாயு அதிகமாகச் சேரும். 3. விரணங்களில் பிரயோகிக்கப்படும் ஸ்நேஹம் முதலான மருந்துகள் வெகுநேரமிராது. ஆகவே அவை சீக்கிரம் ஆறாது.

எலும்பு முதலானவை, ஓடிந்ததாலேற்பட்ட விரணங்களுக்கு மேலும் அவை தீங்கு நேரிடாவண்ணம் பாதுகாத்து, அசைவு ஏற்படாமலிருக்கச் செய்ய வேண்டும்.

பந்தனமிடத்தகாத வ்ரணங்கள்

குஷ்டவிரணம், நெருப்புச்சுட்ட புண்கள், மதுமேக விரணங்கள், சுண்ணாம்பினாலேற்பட்ட விரணங்கள், அக்கி போன்ற வெகு எளிதில் பரவும் விரணங்கள் முதலானவைகளைக் கட்டக்கூடாது.

விரணங்கள் ஆறியபின் பத்தியக்கிரமம்

அஜீர்ணபோஜனம், தேகப்பயிற்சி, புணர்ச்சி முதலியவைகளையும், அதிகச்சந்தோஷம், கோபம், பயம் முதலியவைகளையும் நீக்கவும். இம்மாதிரியான பத்தியத்தை வ்ரணம் ஆறியபின் 6 மாதங்களுக்கேனும் குறைந்தபக்ஷம் கடைப்பிடித்தல் நலம்.

விரணங்களின் பேதங்கள்

இவைகளை நிஜவிரணங்கள் என்றும், ஆகந்துக விரணங்கள் என்று ஒரு வகையாகவும், சுத்த விரணம்(Simple Ulcers) அல்லது துஷ்ட விரணம் (Chronic Ulcers)என்று மற்றொரு வகையாகவும் பிரிக்கலாம்.

நிஜவிரணம்

சரீர தோஷங்களின் மாறுபாடுகளினால், தானாகவே உண்டாகும் விரணங்கள் "நிஜவ்ரணங்க"ளாகும்.

ஆகந்துக விரணம்

அடி, வெட்டு, குத்து முதலியவைகளால் ஏற்படும் புண்கள்.

துஷ்ட விரண இலக்ஷணங்கள்

1. விரணத்தின் வாய் மூடி மறைதல் அல்லது அதிகமாக விரிதல்

2. அதிகமான மிருதுத்தன்மை அல்லது கடினம்

3. விரணத்தின் அடிபாகம் ரொம்பவும் மேலெழுந்தோ அல்லது ஆழ்ந்தோ இருத்தல்

4. தொட்டால் அதிகக் குளிர்ச்சியாகவோ அல்லது சூடாகவோ இருந்தால்

5. அதிகமான சிவப்பு, வெண்மை, அல்லது கருமையாயிருந்தல்

6. துர்நாற்றமுள்ள சீழ் அதிகமாக வடிதல் முதலியவைகளுடன்

7. தாங்கமுடியாத வலியும், அழற்சியும், அரிப்பும், வீக்கமும் உண்டாகும்.

சுத்த விரண லக்ஷணங்கள்

1. நாக்கின் நிறமுடையதாகவும், ம்ருதுவாகவும், வழவழப்பாகவும் இருக்கும்.

2. விரணத்தின் சுற்றுப்புறங்கள் கருநிறமாக இருப்பதுடன், சீழ்ப்பெருக்கு, வலி, உஷ்ணம் முதலான உபத்ரவங்கள் முதலியவைகள் இராது.

வ்ரணங்கள் உண்டாகும் இடங்கள்

1. தோல் 2. விரை (இரத்தக்குழாய்கள்) 3. மாம்ஸம் 4. ஸ்நாயு (Tendons தசைநார்) 5. ஸந்திகள் (மூட்டுகள்) 6. எலும்பு 7. குடல்கள் 8. மர்மஸ்தானங்கள் (சிரஸ், ஹ்ருதயம், சிறுநீர்ப்பை) முதலான இடங்கள் வ்ரணத்தின் ஸ்தானங்கள்.

எளிதில் குணமாகும் விரணங்களாவன:

1. மனோதிடம், நல்ல மாம்ஸவளர்ச்சி, சரியான பசி, வாலிப தேகம், சரீர பலம் முதலியவைகள் உள்ளவர்களுக்கு விரணங்கள் ஏற்பட்டால் அவை எளிதில் குணமடையும்.

2. விரணங்களின் வடிவம் வட்டமாகவோ, நீண்டதாகவோ, அல்லது மத்யபாகம், விளும்பு, சுற்றுப்புறம் முதலானவை சுத்தமாக காணப்பட்டாலோ அவைகளை எளிதில் ஆற்றிவிடலாம்.

3. பின்புறம், ஆண்குறி, உதடு, உள்வாய், கன்னம் முதலிய உறுப்புகளிலேற்படும் விரணங்களும் ஸுகஸாத்யமானவை.

விரணம் ஆறாமலிருப்பதற்கான காரணங்கள்

ஸ்நாயு என்ற தசைநாரில் சீழ்பிடித்துத் துர்நீர் கசிவதாலும், ஸிரைஎனப்படும் இரத்தக் குழாய்கள்துண்டித்து விட்டாலும், விரணம் ஆழ்ந்து சரீர தாதுக்களைப் பற்றியிருந்தாலும் , க்ருமிகள் சேர்வதினாலும், எலும்புகள் முறிந்துவிடுவதனாலும், சல்யங்கள் உள்ளேயே தங்கிவிடுவதனாலும், விஷக் கடியுள்ள விரணங்களும், முறைப்படி சிகித்ஸை செய்யப்படாமலிருந்தாலும், தவறாகக் கட்டப்பட்டாலும், நைப்பின்மையாலும், மயிர் முதலியவை உராய்வதனாலும், அதிர்ச்சியினாலும், அமிதபோஜனம், கள் முதலிவைகளை அதிகமாக உபயோகப்படுத்துவதாலும், பகல் தூக்கம், இரவில் கண் விழிப்பு, அதிகப் புணர்ச்சி முதலியவைகளைச் செய்வதனாலும் விரணங்கள் எளிதில் குணமாவதில்லை.

விரணம் ஆறிவருவதின் குறிகள்

விரணத்தின் ஓரங்கள் புறாவின் வர்ணத்தையொத்த படியும், அதன் உள்பாகம் சீழ் முதலியவைகளில்லாமலும், சிறுசிறு மாம்ஸ முளைகளுடன் கூடியதாகவும் இருக்கும். மேலும் விரணத்தில் சுருக்கங்களும் ஏற்படும்.

ஸத்யோ விரணங்களின் குறிகள்:

நெருப்பு, அடி, வெட்டு, குத்து முதலிய ஆகந்துக (வெளியிலிருந்து உண்டான) காரணங்களினாலுண்டாகும் விரணங்களுக்கு ஸத்யோ விரணம் என்று பெயர்.

இவை 8 வகைப்படும்.

1. **க்ருஷ்ட வ்ரணம்:** (சிராய்த்தல்) உடம்பின் தோல் சிறிது வழுமூண்டு நிணநீரோ அல்லது கொஞ்ச இரத்தக்கசிவோ ஏற்படும்.

2. **அவக்ருத்த வ்ரணம்:** (காயம் உண்டாதல்) மேற்கூறியதைவிட ஆழமான சிதைவு ஏற்பட்டு, இரத்தம் ஸ்ரவித்தல்.

3. **விச்சின்னம்:** அடி பலமாக விழுவதனால் சதை வெளிவரும்

4. **ப்ரவிலம்பி:** எலும்பைத் தவிர மற்ற தசைகள் வெளியில் வந்து தொங்கும்.

5. **பாதிதம்:** பலமான அடியினால் தசைநார் துண்டித்து வீழ்தல்

6. **வித்தம்:** கூர்மையான ஆயுதத்தினால் குத்தப்படுதல்.

7. **பிந்நம்:** கத்தி, அறுவாள் முதலியவைகளினால் கிழிக்கப்படுதல்

8. **விதளிதம்:** அடி, பாரம், முதலியவைகளினால் சரீர அவயவங்கள் நன்றாக நசுக்கப்பட்டு, இரத்தம், மஜ்ஜை முதலியவைகள் வெளியில் வருதல்.

இனி இவ்விரணரோக கரப்பான்ரோக சிகித்ஸை முறைகளில் காணப்படும் நோய்களுக்கான குறிகளையும், வகைகளையும் ஆராய்வோம்.

அக்கி

இது "விஸர்ப்பம்" என்ற வகையைச் சேர்ந்தது. உடம்பில் வீக்கம் ஏற்பட்டுப் பலநிறமுள்ள கொப்பளங்க உண்டாகும். இவை சிற்சில சமயங்களில் ஜ்வரத்துடனே அல்லது ஜ்வரமில்லாமலோ இருக்கும். இது மர்ம

ஸ்தானங்களைப்பற்றி அதிசீக்கிரத்தில் பரவுவதால் விஸர்ப்பம் என்ற பெயரை அடைகிறது.

இது ஏழு வகைப்படும்.

வாத விஸர்ப்பம்

உடம்பெங்கும் வீங்கி அதன்மேல், கருநிறமுள்ள கொப்பளங்கள் எழும்பும். அதிகமான குத்தல் வலி, சரீர வாட்டம், இரைப்பு, தாகம் முதலியவைகளேற்படும்.

பித்த விஸர்ப்பம்

சரீர முழுதும் வெகு சீக்கிரத்தில் வீங்கி, அதன் மேல் சிவப்பு அல்லது மஞ்சள் நிறமுள்ள கொப்பளங்களேற்படும். பித்த ஜ்வர லக்ஷணங்களும் காணும்.

கப விஸர்ப்பம்

தேக முழுவதும் மினுமினுப்பான வீக்கம், அதில் வெளுப்பு நிறமுள்ள கொப்பளங்கள் எழும்புதல், அரிப்பு, ச்லேஷ்ம ஜ்வர குறிகள் முதலியவைகளேற்படும்.

வாத பித்த விஸர்ப்ப லக்ஷணங்கள்

இதற்கு அக்னி விஸர்ப்பம் என்று வேறொரு பெயரும் உண்டு.

வீக்கம், ஜ்வரம், வாந்தி, மூர்ச்சை, பேதி, தாகம், எலும்பு பொடியானது போன்ற வலி, அக்னி மந்தம், ருசியின்மை, உடம்பிற்கு ஏற்றதல்லாத வஸ்துக்களில் விருப்பம், நெருப்புச்சுட்ட விரணத்தைப் போன்ற எரிச்சல், எரிச்சலுண்டான இடங்கள் கருமை நிறமடைதல், எரிச்சலில்லாத இடங்களில் சிவப்பு நிறப் புள்ளிகள், நெருப்புச் சுட்ட கொப்பளம் போல் உடம்பு முழுவதும்

எழும்புதல், சரீர வேதனை, நித்திரையின்மை, உடம்பு அலட்டல் முதலானவைகள் ஏற்படும். இது அசாத்ய ரோகமாகும்.

வாத விஸர்ப்ப லக்ஷணம்

உடம்பில் பல உபத்திரவங்களுடன் கொப்பளங்களை உண்டாக்கும். ரத்த தாதுவும் கோளாறடைவதால் இந்நோய் சருமம், மாம்ஸம் இவைகளில் வ்யாபித்திருக்கும். இரத்தக் குழாய்களை நீண்டதாகவோ, வட்டவடிவமாகவோ, கொப்பள வடிவமாகவோ தடிக்கச் செய்யும். சிவப்பு நிறமுள்ள சுருக்கங்கள் கிரந்தி ரூபமாக எழும்பும். அப்போது ஜ்வரம், இரைப்பு, இருமல், பேதி, சரீரத்தில் வலி, வாய் உலரல், விக்கல், வாந்தி, உள்ளெரிச்சல், மூர்ச்சை முதலியவைகளுண்டாகும். இதற்குக் "கிரந்தி விஸர்ப்பம்" என்றும் பெயர்.

கப பித்த விஸர்ப்பம்

ஜ்வரம், மரத்துப்போதல், தூக்கம், சோம்பல், தலைவலி, உடம்பு இளைப்பு, பிதற்றல், ருசியின்மை, மூர்ச்சை, பசியின்மை, எலும்புகளில் வலி, நாவறட்சி, இந்திரியங்களில் பார உணர்ச்சி, சீதபேதி, சிறுவீக்கம் இவைகளுடன் தேக காங்கையுமேற்படும். அவ்வீக்கங்களில் கறுப்பு நிறமும், வெளுப்பு நிறமும் கலந்த மினு மினுப்புள்ள தடிப்புகள் காணும். இவைகள் சீக்கிரத்தில் பழுத்து உடைவதில்லை. மாம்ஸங்களை அழுகச் செய்து துர்நாற்றத்தைக் கொடுக்கும். இதற்குப் "பங்க விஸர்ப்பம்" என்று வேறொரு பெயரும் உண்டு.

ஸந்நிபாத விஸர்ப்பம்

வாதம் முதலான தோஷங்களின் விஸர்ப்பங்களி லேற்படும் குணங்களைப் பெற்று ரஸாதி தாதுக்களைக் கெடுப்பதால் இதற்கு ஸர்வ விஸர்ப்பம் என்றும் பெயர்.

க்ஷத விஸர்ப்பம்

ஆயுதம் முதலான சஸ்திரங்களினால் ஏற்பட்ட விரணத்திலுள்ள உதிரம் கோளாறடைந்து வாயுவையும், இரத்தத்தையும் பிரகோபிக்கச் செய்து, கொள்ளுப் பிரமாணமுள்ள கொப்பளங்களை உண்டாக்கும்.

கிரந்தி பேதங்கள்

கபதோஷப் பிரகோபத்தினால் தோல், மாம்ஸம், நரம்பு முதலான இடங்களில் முடிச்சுகளுண்டாகும். இது கிரந்தி ரோகமாகும்.

வாதக்கிரந்தி

கறுத்த நிறத்துடன் காரணமில்லாமல் விருத்தி அடைந்தும், குறைந்தும் உடம்பில் பற்பல கட்டிகள் ஏற்படும். இவை குத்தல், புரளல் முதலியவைகளைக் கொடுக்கும். இது பழுத்து உடைந்தால் அதிலிருந்து சிவப்பு நிறமுள்ள இரத்தம் ஸ்ரவிக்கும். பின்பு இது மிருதுவாகும்.

பித்தக் கிரந்தி

மஞ்சள் நிறமும் சிகப்பு நிறமும் கலந்த கட்டிகள் ஏற்பட்டு அவைகளில் எரிச்சல் அதிகமாக இருக்கும். பழுத்து உடைந்தால் இரத்தமும் சீழும் பெருகும்.

கபக் கிரந்தி

வெளுத்தும், கனத்தும், அரிப்புடனும், அதிக வலியில்லாமல் வீக்கம் உண்டாகும். பழுத்து உடைந்தால் கெட்டியான சீழ் வெளிவரும்.

ரத்தக் கிரந்தி

மூன்று தோஷங்களும் கோளாறடைந்து இரத்தத்தை முறித்துக் கிருமிகளையுண்டாக்கும். இக்கிரந்தி

மாமிஸத்தையும் நரம்பையும் அநுஸரித்துப் பித்தக் கிரந்திகளுக்குள்ள குணங்களைப்பெற்று ரத்தம் ஸ்ரவிக்கும்.

மாம்ஸக் கிரந்தி

மாம்ஸத்தை விருத்திசெய்யும் மாம்ஸம் முதலானவைகளை அதிகமாகச் சாப்பிடுவதனால், மினுமினுப்புடன் பருத்துக் கெட்டியான பற்பல கட்டிகளுண்டாகும். இது பழுத்து உடைந்தால் கபக் கிரந்திக்குள்ள குணங்களுடன் கூடிய பெருக்கு உண்டாகும்.

மேதோ கிரந்தி

மேதஸை அதிகப்படுத்தும் ரஸாதி வஸ்துக்களைப் புசித்து அது விருத்தியாகும் வாயு அதிகமடைந்து மாம்ஸத்திலோ, தோலிலோ, வெளுப்பு நிறமுள்ளதும், மினுமினுப்பானதும் உள்ளே குலுங்குவதுமான சிறு சிறு கட்டிகளேற்படும். இது பழுத்து உடைந்தால் பிசினைப்போலக் கருப்பு, சிவப்பு, வெளுப்புநிறமுள்ள சீழ் வெளிவரும். இதனால் தேகம் இளைக்கும்.

அஸ்திக் கிரந்தி

எலும்புகள் நொறுங்கி உடம்பிலேயே சிக்குவதால் இக்கட்டியேற்படும். இது சிற்சில சமயங்கள் விருத்தியாவதும் குறைவதுமாக இருக்கும்.

நரம்புக் கிரந்தி

நரம்புகள் புடைத்து ரஸதாதுவின் ஓட்டமில்லாமல் தேங்கும். இரத்த ஓட்டமும் நின்று வாயு அதிகரித்து நரம்புகளை முடங்கச் செய்து கட்டிகளைப் பிறப்பிக்கும்.

வ்ரணக் கிரந்தி

ஷட்ரஸங்களையும் அதிகமாக உண்பதனால் இந்நோய் ஏற்படும். தேகத்தில் சிறு புண் ஏற்பட்டாலும், அது வெகு எளிதில் விருத்தியாகி மாம்ஸங்களை முடிச்சு முடிச்சாக

எழும்பச் செய்யும். விரணங்களில் ஸஞ்சரிக்கும் வாயு அங்குள்ள தூஷித்த ரத்தத்தை உலரச் செய்வதால் விரணங்கள் அதிகமாகி எரிச்சலும், தினவும அதிகமாகும். இது பெரிதானால் அற்புத கிரந்தி என்ற நோயாகும்.

கண்டமாலையின் குறிகுணங்கள்

த்ரிதோஷங்கள் மேதோ தாதுவைத் தூஷித்து, மாம்ஸமும் வ்ருத்தியடைந்து, கழுத்து, கண்கள், அக்குள் முதலான இடங்கள் மினுமினுத்து நெல்லிக்காய் பிரமாணமுள்ள பல கட்டிகளை உண்டாக்கும். இவைகள் சின்னாட்கள் சென்றபின் பழுத்து உடையுந்தன்மை வாய்ந்தவைகளாகும். இவற்றுள் சிலவகை அற்ப வலியுள்ளவைகளாகவும், உடைந்து சீழைச் சொறிந்துகொண்டும், அரிப்புடனும், உஷ்ணத்துடனும் இருக்கும். சிலது அடிக்கடி கிளைத்துக்கொண்டும், வெகுநாளாகியும் அமுங்காதவைகளுமாக இருக்கும். மேலும் இந்நோய் அநேகமாகக் கழுத்தைச் சுற்றிலும் ஏற்படுவதால் இதற்குக் கண்டமாலை என்ற பெயரேற்பட்டது.

அசாத்திய குறிகள்

இக்கண்டமாலை கட்டியானது அறுகின் வேரைப் போல் சிறுசிறு துவாரங்களோடு கூடியிருந்தாலும், இதனால் ஜ்வரம், இருமல், வாந்தி, பக்கவலி, தேகஇளைப்பு முதலிய உபத்ரவங்களேற்பட்டாலும், அசாத்தியமாகும்.

அரையாப்புக் கட்டி

மேற்கூறியபடி குறிகுணங்களுள்ள கட்டிகள் தொடையிடுக்குகளிலுண்டானால் அதற்கு அரையப்புக்கட்டி என்று பெயர்.

நாடீவ்ரணம் (புரை)

இப்பகுதியின் ஆரம்பத்தில் கூறியுள்ள விரண வீக்கம் நன்கு பக்குவமாகிய பின்னும் அதைச் சிகித்ஸை செய்யாமல் அலக்ஷ்யம் செய்தால் அது மாம்ஸம் முதலான தாதுக்களை

அழித்து நாடீவிரணரோகத்திற்குக் காரணமாகும். சீழ் சேர்ந்துள்ள விரணத்தைத் தக்கபடி சுத்தம் செய்யாமலிருந்தாலும் அது சர்மம், மாம்ஸம், ஸிரை, ஸ்நாயு, முட்டுகள், எலும்பு முதலியவைகளைக் கெடுத்துப் புரைஓடும் புண்களை ஏற்படுத்துகின்றது. இதன் சீழ் சிறுகச்சிறுக துவாரம் செய்து கொண்டு உள்ளே ஒரு குழாய்போல் செல்வதனால் இதற்கு நாடீவிரணம் என்று பெயருண்டாயிற்று. இவை 5 வகைப்படும்.

வாத நாடீவிரணம்

அதிகக் கடுமையானதும், ஸூக்ஷ்மமான முகத்துடனும், அதிகமான வலியுடனும், நுரையுடன் கூடிய சீழ் அல்லது துர்நீரை இரவு நேரங்களில் அதிகமாக வெளிப்படுத்தும். கருஞ்சிவப்பு நிறமுள்ளதாகவும் இருக்கும்.

பித்த நாடீ விரணம்

இவ்வகையில் அதிகமான எரிச்சல், ஜ்வரம், நாவறட்சி, முதலியவைகளுடன் இதிலிருந்து வடியும் நீர் பசுமை நிறமாகவும் அதிகச் சூடாகவும் இருக்கும். பகல் நேரங்களில் அதன் பெருக்கு அதிகமாகவிருக்கும்.

கபநாடீவிரணம்

கெட்டிப்பட்டும், மிகவும் வெளுப்பு நிறத்துடனும், பிசுபிசுப்புடன் கூடியதாகவும், சிறிது இரத்தம் கலந்தும், அரிப்புடனும் வலியுடனும் கூடிய துர்நீர்க்கசிவை உண்டாக்கும். இரவில் இதன் கசிவு அதிகமாக இருக்கும்.

ஸந்நிபாத நாடீவிரணம்

அதிகமான ஜ்வரம், மேல்மூச்சு, மூர்ச்சை, வாயுலரல் முதலிய பொதுக்குறியுடன் மேற்கூறிய மூவகையிலும் உள்ள

குறிகளுடன் கூடிய நாடிவிரணமாகும். இது அஸாத்ய ரோகமாகும்.

சல்யஜ நாடிவ்ரணம்

சரீரத்தினுட்புகுந்த முள்முதலான சல்யங்கள் இருக்குமிடத்திலிருந்தும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களிலிருந்தும் புரையை உண்டுபண்ணும். அதிலிருந்து நுரைத்தும் உஷ்ணமானதும், இரத்தத்துடன் கூடிய துர்நீர் வெளிவரும். அதிகமான வலியும் உண்டாகும். இதிலுள்ள சல்யத்தை நீக்கினாலொழிய விரணம் இலகுவில் ஆறாது.

எழுநாயிறு, படுநாயிறு

எழுநாய ராகி லெழும்வலது பக்கம்
பழுகாதடி நெஞ்சில் பார்கழுத்தில் - வழுவாமல்
நொந்து சீழ்க்கொள்ளும் நுகர இடமானால்
தொந்தபடு நாயறெனச் சொல்.

(அகஸ்தியர் - 2000)

(இ-ள்.)

கழுத்து, நெஞ்சு முதலான இடங்களில் வலியேற்பட்டுச் சீழுடன் கூடிய வீக்கம் உண்டாகும். இது வலது புறத்திலிருந்தால் "எழுநாயறு" என்றும், அதுவே இடது புறத்திலிருந்தால் "படுநாயறு" என்றும் வழங்கும்.

கன்னமூலம்

கன்னமூல மதுவலி காதிலும்
மன்னியாணி யடித்துற வாங்கிலுஞ்
சென்னிநெத்தி பிடரியுஞ் சேரநோய்
சொன்ன நீரொடு சோறுங் குமட்டுமே.

(அகஸ்தியர் - 2000 - 299)

(இ-ள்)

காதுகளில் வலி ஏற்படும். நெற்றி, பிடரி, கன்னங்கள் முதலான இடங்களில் குத்தலேற்பட்டு ஆகாரமும் இறங்காது. இதற்குக் "கன்னமூலம்" எனப்பெயர்.

வெப்புப்பாவை

மத்தித்திருந்து வுடல்வற்றிக்
கனல்போல்மேனி வெதும்பல்செயும்
அப்புக்காத்து மிகவுண்டாம்
கைப்புப்புளிப்பை மிகத்தேடி
உப்பும்வயிறு தனிற்புரளு *
மொருபக்கத்தே தான்கிடக்கும்
வெப்புப்பாவை யிதுவென்று
வியனாமுனிவோர் விளம்பினரே.
(அகஸ்தியர் 2000 - செய். 283)

(இ-ள்)

உடம்பில் வாயு அதிகமாகச் சேர்ந்து உடம்பு இளைக்கும். நோயாளிகளுக்குக் கசப்புச்சுவை, புளிப்புச்சுவை இவைகளுள்ள பதார்த்தங்களில் விருப்பம் உண்டாகும். ஜ்வரமேற்படும். வயிறு உப்பும். ஒரு பக்கத்தில் வலியும், வீக்கமும் உண்டாகும்.

மகோதரம் அல்லது பெருவயிறு நோய்க்குக் காரணம்

தும்பிதேரை விடுநீரால் தோஷந்திரண்ட சுனைநீரால்
கம்பினுமியால் நெல்லுமியால் * மயிரிலாம்பு தான்கட்டிச்
செம்பொன் மகரக் குழைமடவாய் தினமுமுன்
மேலுண்பதனால்
வம்புமுலையாளிடு மருந்தால் மகோதரநோயும் வந்திடுமே.
(அகஸ்தியர் 2000 - 252)

---

* "கறிமுள்ளெலும்பால் மயிரதனால்" என்ற பாடபேதமும் உண்டு

(இ-ள்.)

தும்பி, (தட்டான் பூச்சி) தேரை முதலியவைகளின் சிறுநீர் உடம்பின்மேல் விழுவதாலும், ஓரிடத்திலும் வெளியேறாமல் தேங்கி அசுத்தங்களுடன் கூடிய சுனைநீரை உட்கொள்ளுவதனாலும், கம்பு, நெல் முதலான தான்யங்களின் உமி வயிற்றில் சிக்கிக்கொள்வதாலும், மயிர் குடலில் தங்குவதாலும், அதிக அளவில் சாப்பிடுவதனாலும், இடுமருந்து முதலியவைகளினாலும் மகோதர நோய் சம்பவிக்கும்.

குறிகள்

அங்கமு முடைக்க வீங்கி வுரமெலிந் தாக மாகி
மங்கிய வுதரந் தன்னில் வாயுவுஞ் சலமுங் கோர்த்து
கங்குல்சேர் நேர மாகில் கடியதோர் வாதை பண்ணு
மங்குல்சேர் குழலி னாளே மகோதர மென்ன லாமே.
(அகஸ்தியர் 2000 - 253)

(இ-ள.)

உடலெங்கும் வீக்கம், மார்புப்பக்கங்களில் இளைப்பு நாவரட்சி, வயிற்றில் வாயுவும், நீரும் அதிகமாகச் சேர்ந்து குலுங்குதல், இரவு நேரங்களில் உபாதையின் அதிகரிப்பு முதலான குறிகள் உண்டாகும்.

மகோதர அசாத்யக் குறிகள்

மேலோடு வயிறுமூதி மிகைக்கவே வீங்கும்போது
ஊசிபோலு தரம்நொந்து உதரமுங்காலும் வீங்கி
பாசிபோல் கண்சிவந்து பசுந்துடல் நீலம்போலாய்
கூறிடவேண்டா மிந்தக் குணமிது கண்டபோதே
சாவதே திண்ணமென்று சடக்கென விரைந்து
போமே.
(அகத்தியர் 2000 - 34)

(இ-ள்.)

வயிறு மிகப்பெரிதாகும். குத்துவலியுண்டாகும். வயிறு கால்கள் முதலான இடங்களில் அதிகமான வீக்கம், கண்களில் சிவப்பு, உடலில் நீலநிறம் முதலிய குறிகள் ஏற்பட்டால் நோயாளி இறப்பது திண்ணம் என்று அறிந்துகொள்ளவும்.

பிளவையின் குறிகள்

பெரியபிளவை முள்ளெலும்பில்
பெருக்கப் பிளக்கும் நடுமுதுகி
பெருமையதுவு மாறாம
லடங்காவுழலையது வெடுக்கும்
மரியப் பொன்னினாவாரையல்லி
யதுவும் புன்னைக் காயளவு
உரியப்பழமோர் தனிற்குடிக்க
உழலைதவன மோடிடுமே. 2

(அகஸ்தியர் - 2000)

(இ-ள்.)

முள்ளெலும்பின்மேல் இப்பிளவை ஏற்பட்டு வெட்டுவதைப் போன்ற வலியைத் தரும். தாங்கவொண்ணாத எரிச்சலும் உண்டாகும். இதற்கு மருந்தாவது.

பொன்னாவரை, அல்லி இவ்விரண்டையும் (புஷ்பங்கள்) புன்னைக் காயளவெடுத்து நன்றாக அரைத்துப் புளித்த மோரில்குழப்பி அருந்தவும். எரிச்சல் நிற்கும்.

முதுகிடுமையந்தன்னில்
முள்ளந்தண் டதனைப்பற்றி
பதுமமாய் காய்கள்போல
பிளவையும் பலகண்ணாகில்

மதியுறு மருந்தினாலும்
மற்றுள கருவியாலும்
விதியின்படி யேதென்ன
வேதமா முனிவர் சொன்னார். 3

(இ-ள்.)

முதுகின் நடுவிலுள்ள முள்ளந்தண்டின் மேல் சிறு சிறு தாமரை மொட்டின் பிரமாணமுள்ள பற்பல கண்களுடன் கூடிய கட்டிகள் உண்டாகும்.

இவைகளை மருந்துகளினாலும், சஸ்திர சிகித்ஸைகளினாலுமே ஆற்றக்கூடியவை.

பக்கப்பிளவை

மார்பினி லீரல்தன்னில் மறுப்படாத் தண்டுகோல்போல்
நேர்படச் செம்மையாக்கி நிற்பதே வரவுநெஞ்சில்
கார்செறி குழலினாளே! கருவியால் கீறிக்காரம்
பேர்படக் கட்டப்பக்கப் பிளவையும் விட்டுப்போமே. 6

முதுகிற் புறத்திலுறைபோல முள்ளந்தண்டி தனைத்தப்பி
யிதுவேவந்தால் மரணமில்லை யெனவேகண்க
ளடைபடுமென்
றதிலேமேனி குளிர்ஜ்வரமு மதனோடுழலை கழிச்சலுட
னிதுதான்பக்கப் பிளவையதுக் கினிதாங் காலைக்கீறியிடே. 7
(அகஸ்தியர் 2000 - ஏடு. 248)

(இ-ள்.)

மார்பு, ஈரல், முதலான இடங்களில் தண்டுகோல் போன்ற வீக்கமேற்படும். இதனைச் சஸ்திரத்தினால் கீறிக் காரம் வைக்க குணமுண்டாகும்.

இப்பிளவை முள்ளந்தண்டைத்தவிர முதுகின் மற்ற பாகங்களில் ஏற்பட்டால் சுக சாத்யமாகும். இருந்தாலும்

பிளவையின் கண்களடைபட்டு, உடம்பில் குளிர் ஜ்வரமும், எரிச்சலும் கழிச்சலும் உண்டாகுமாதலால் அதைச் சஸ்திரத்தினால் கீறி ஆற்றிவிடுதல் நல்லது.

பிளவையின் ஸ்தானங்கள்

பிளவைபிறக்கும் வகைகேளீர் பிடரிகன்னந் தலைமுதுகு
வளமதிடுப்புமார்தனிலே வருநோய் பந்து கமலம்போல்
துளையதாகிக் கண்வெடித்துச் சுற்றித்தோன் றுமென்றுயர்ந்
ரளகபார முலையாளே! யறிந்தே புவியிலுரையீரோ. (தோ

(அகஸ்தியர் குணவாகடம் - 297)

(இ-ள்.)

கழுத்துப்பிடரி, கன்னம், தலை, முதுகு, இடுப்பு, மார்பு, முதலிய இடங்களில் பந்து, தாமரைமொட்டு முதலியவை களைப் போன்ற கட்டிகளேற்பட்டு அதில் பல கண்களும் ஏற்படும்.

நீராம்பல் (நீராமை)(Dropsy)

உடம்புமுலர்ந்து[1]யிருமலுண்டாய்
[2]யுதரம் வீங்கி நாவறண்டு
துடங்கண் வெளுத்துப் புறங்காலுந்
தடித்து வீங்கித் தாகமுமாய்
அடந்தே மூச்சு மிகத்தோன்று
மனத்தால் மிகவேவுண்டாகும்
மடந்தாய் சொன்னோம் நீராம்பல்
வருந்துங் குணங்களிவைதானே. 249

---

[1] "திமிருண்டாய்" என்னும் பாடபேதம்.
2 "யுதரம் வீங்கியுள்ளடைந்து" என்றும் பாடம்

மார்பின்கீழ் வயிறு தாழ்ந்து
வகைபட வீக்கமாகி
நேரொத்த காயம்வற்றி
நிறமது வெளுத்து நாவுந்
நீர்வற்றித் தண்ணீர்தேடும்
நினைவற்றுப் பலவுங் கேட்கும்
வார்கட்டு முலையாய்ச் சொன்னோம்
வயிற்றி நீராம்பலாமே. 250

(இ-ள்.)

உடம்பு இளைத்து இருமலேற்படும். வயிறு வீங்கும். அடிக்கடி நாவரண்டு தாகமேற்படும். கண்கள் வெளுத்துப் புறங்கால்கள் வீங்கும். மூச்சுத் திணரலுண்டாகும். மனதில் வேதனையுண்டாகும். மேல்வயிறு உள்ளே போகும். (உட்செல்லும்). அடிவயிற்றில் வீக்கமுண்டாகும். நாக்கு வெண்மை நிறத்தையடையும். இக்குறிகள் காணப்பட்டால் அது நீராம்பல் ரோகமாகும்.

பேராம்பல் (பேராமை) (General Anasarca)

வீங்குஞ்சலமு மிகக்கோற்கும்
மிகுந்தே பொருமுமுடலெங்கும்
தேங்கும் வாங்கும் முகந்தன்னைத்
தேடுமறுகித்துயர் மிகுந்திருக்குங்
தாங்குங்கண்ணு மேல்மூச்சுஞ்
சோபை யும்பின் தாபிக்கும்
எங்குமிகவே பேராம்ப
லிதுவே செய்யுங் குணந்தானே. 251

(இ-ள்.)

உடம்பெங்கும் வீக்கமுண்டாகும். சருமத்தில் நீர் ததும்பி நிற்கும். முகத்தில் சோகக் குறிகள் காணும். கண்கள் சொருகும். மேல்மூச்சு அதிகமாக இருக்கும். உடம்பில் எரிச்சலுண்டாகும். இதனைப் பேராம்பல் என்று கூறுவர்.

கரப்பான் ரோகக் குறிகள்

(அகஸ்தியர் குணவாகடத்திலிருந்து)

வாதகரப்பான்

வீங்குங்குத்தி மிகவழைந்து
விடம்போலுடலந் திமிர்ந்துகொண்டு
அங்கம் புண்ணில் சலம்விழுந்தா
லதுவுந்தினவு சொறிசெய்யில்
நீங்கிச் செவ்வே தீராது
நெடுநாட்படவே மசகிநிற்கும்
தேங்கச்சுட்டுப் புகைத்துவிடத்
தீரும் வாதக் கரப்பனிதே. 34

தலையுங்கனத்து காலெரிந்து
தறுகாவுடம்புந் திமிருண்டாய்
யுலையுங்காலும் வீக்கமுமாய்
யுளையாதிருக்கு முறுப்புளையுங்
களையும் மலையுஞ் சரீரநேர்
மிகுந்து வலுவைக் குறைத்துவரும்
வலுவுங் குலையுங் குன்மவாதங்
கொடிய கரப்பன் தானாமே. 35

நொந்துதான் கனத்துமிக்க
நோவுடைப் புண்கள் தன்னில்
வந்துவல் லாயுதங்கள்
வடுவறத் தைத்திடத்தில்
சந்துதாழ் மொழிபெருத்
தசைவு தாணங்களாகிற்
வந்துதான் தொடுக்குஞ் சேதி
வாதமாங் கரப்பானாமே. 38

(இ-ள்.)

உடம்பில் வீக்கமும், குத்துவலியுமுண்டாகும். விஷத்தைச் சாப்பிட்டதுபோல் உடம்பெங்கும் திமிரேற்படும். அங்கங்களிலேற்பட்ட புண்களில் ஜலம் வடியும். அதிகமானஅரிப்பு உண்டாகும். அதைச்சொறிந்தால் இலகுவில் ஆறாத விரணமாகும். இவைகளுக்கு புகையிட்டால்தான் குணமாகும்.

தலையில் பார உணர்ச்சி, கைகால்களில் எரிச்சல், உடம்பில் திமிர், காலில் வீக்கம், உறுப்புகள் அதனதன் வேலைகளைச் செய்யாமலிருத்தல், சரீரத்தின் பலம் குன்றல், முதலான குறிகளும் காணும்.

புண்களின் அடிபாகம் கனமாகி அதில் ஆயுதங்கள் தாக்கினால் அவை நாளாவட்டத்தில் வாதகரப்பான் ரோகத்தைத் தோற்றுவிக்கும்.

வாதகரப்பான்

கால்தலையுடம்பதெங்கும் கனக்கவே சிறு சிறங்காய்
சேலது கடிவதத்தித் தினவுடன் சொறிவதாகிச்
சாலவே காதுநாசி மிடறுதான் தாதாராகில்
மால்தரு மடந்தைமாதே வரட்சிசேர் கரப்பானாமே. 43

வார்சொல்லறிந்து வசங்காதே வரட்சிக்கரப்பான்
வகைகேளீர்
ஊறுஞ்சொறிதான் பரபரத்து யுடம்பு மிகவே
பதைப்புண்டாய்
தீருமிருந்து பரந்தேனுந்திதமாய்ச்சாம்பல் பொருக்கேறு
மாறுமொருவற் குண்டென்னில் சடாய்ப்புலால்மேல்
நாறுவதே. 65

(இ-ள்.)

தலை, உடம்பு, முதலான இடங்களில் கனம் அதிகமாகும். சிறுசிறு சிறங்குகள் அதிகமாகி அரிப்பு ஏற்படும். காதுகள், மூக்கு முதலான விடங்களிலும் இது பரவும்.

உடம்பில் சொறிகளேற்பட்டு, உடம்பில் சிறு வீக்கமுமேற்படும். நன்றாகச் சொறிந்துவிட்டால் அவ்விடத்தில் சாம்பல் நிறமுள்ள பொருக்குகள் ஏற்படும்.

மண்டைக்கரப்பான்

சிரசில் வலிக்கும் மயிர்காலிற்
சிறங்காயழிஞ்சப் புண்ணாகும்
பரவிச் செவியில் சீழ்பாயும்
பக்கங்கழுத்தடி கண்டுகட்டும்
விரசங்கொண்டு வேதனையு
மிகவும் பிடரி தலைநோகும்
வரசேயறிந்த குழல்மடவீர்
மண்டைக்கரப்பான் குணந்தானே. 54

(இ-ள்.)

தலைவலி அதிகமாகும். மயிர்கால்கள் தோரும் சிறங்குகளேற்பட்டுப் புண்களாகும். காதுகளிலிருந்து சீழ் வெளிவரும். அருசியுடன் வேதனை அதிகமாக இருக்கும். கழுத்துகளின் பக்கங்களினடியில் கரளைகள் உண்டாகும். இவை (enlargement of glands) "மண்டைக்கரப்பான்" குறி குணங்களாகும்.

விஷ பாகம்

வீங்கும்வற்று மொருபக்கம் மேனிவரண்டு வெளிறிடுங்கண்
தூங்குந்தலையுங் கனத்துநிற்கும் துயரம்மிகுந்து தாகிக்கும்
வாங்கிப்பொசிக்கமாட்டாது வாயுவுடலில் விஷம்போல
ஏங்கிக் கொல்லும் விஷபாகமிதுவே செய்யுங் குணமாமே.
(அகஸ்தியர் 2000 - செய் 1513)

(இ-ள்.)

உடம்பில் வீக்கம் ஏற்பட்டுப் பின்பு அது குறையும். உடம்பில் வரட்சி அதிகமாகி வெளுப்பாகும். தூக்கம், தலைபாரம், இவைகளுடன்தாகம் மிகுந்து காணும். சாப்பாடு செல்லாது. உடலில் வாயு நிற்கும். பின்பு வாதனை அதிகமாகி உயிரையும் மாய்க்கும். இவைகள் விஷபாகத்தின் இலக்ஷணங்களாகும்.

(கீழ்க்கண்ட கரப்பான் ரோகங்களின் குறிகள் பாலவாகடத்திலிருந்து எடுக்கப்பட்டவை)

பித்தக்கரப்பான் குறிகுணம்

தலைவலி, தேகத்தில் சூடு, வாந்தி, சில சமயங்களில் கடுமையான ஜ்வரம், உடம்பு சிவப்பாதல், கண்கள் பசுமை நிறத்தையடைதல், மலபந்தம், முதலான குறிகள் காணும்

கபக்கரப்பான்

நன்றாகப் பேச இயலாமை. மார்படைப்பு, நெஞ்சு, மார்பு முதலானவைகளில் புண்களேற்படுதல், தலைவலி, வாய் புண் உண்டாதல், முதலான குறிகளால் "கபக்கரப்பான்" என்று தெரிந்துகொள்ளவும்.

அரிகரப்பான்

இலிங்கப்புற்று, யோனிப்புற்று, உடலில் ஆறாத புண்கள், அரிப்பு உடல் ஆக்ருதி மாற்றம், முதலான குறிகளுடன் இரு துடையிடுக்குகளிலும் விரணமாகி அதிலிருந்து நீர் வடிதல், உடம்பு இளைப்பு, வாட்டம் முதலான குறிகுணங்களும் ஏற்படும்.

ஊதுகரப்பான்

குளிர் ஜ்வரம், உடம்பெங்கும் சிறு கட்டிகளேற்படல், செயலின்மை, உடலில் வீக்கம், மூக்கில் புண் உண்டாதல் முதலான குறிகுணங்கள் தோன்றும்.

சூலைக் கரப்பான்

முகவாட்டம், உடலில் வெடிப்புகள் காணல் முழங்காலை நீட்டவும், மடக்கவும் முடியாமை, கையினால் உணவு உட்கொள்ள முடியாமை, மயக்கம் முதலான குறிகளேற்படில் அது சூலைகரப்பானாகும்.

வெடி கரப்பான்

உடல் வீக்கம், கீல்களில் கண்டு கண்டான வீக்கம், ஜ்வரம், தலைவலி, அரிப்பு முதலான குறிகளேற்படும்.

பொரி கரப்பான்

உடம்பில் சிவப்பு நிறமுள்ளதடிப்புகள், அவை பழுத்து உடைந்தால், அவைகளில் தாங்க முடியாத எரிச்சல், நாவரட்சி, மனப்ராந்தி முதலான குறிகளுண்டாகும்.

சட்டைக் கரப்பான்

மூட்டுகளில் வலியுடன் கள்ளிப்பூவைப் போன்ற சிறங்குகளேற்படும். அதிலிருந்து துர்நீர் கசியும். உடலில் உஷ்ணம், மலச்சிக்கல், தலைவலி, ஆகாரத்தில் வெறுப்பு, முதலான குறிகளும் ஏற்பட்டால் அது சட்டைக் கரப்பான் ஆகும்.

ஓடு கரப்பான்

மூட்டுகளில் வீக்கம் ஏற்பட்டு அவைகளை நீட்டவும் மடக்கவும் முடியாமை. நரம்புகளில் வலியேற்பட்டுக் குத்துவலி ஏற்படல், மலச்சிக்கல், உடம்பில் தடிப்புகளேற்பட்டுப் பின்பு வீக்கங்கள் முதலான குறிகளேற்படும். இது ஓடு கரப்பான் என்ற நோயின் குறிகளாகும்.

கருங்கரப்பான்

காரணமில்லாமல் அழுகை, ஜ்வரம், குழந்தை பாலுண்ணாமை, உடல் நிறவேறுபாடு, நரம்புகள் பசுமை

நிறமடைதல், கையிற்றங்காது துள்ளிவிழுதல், கால், முகங்கள் முதலான விடங்களில் வீக்கம் முதலான குறிகளேற்படும்.

செங்கரப்பான் குறிகுணம்

ஜ்வரம், உடம்பு வலி, வீக்கம், அனத்தல், அரிப்பு, வியர்க்குரு, முகம் கருமை நிறம் அடைதல், உடம்பு சிவப்படைதல் முதலிய பற்பல குறிகளுண்டாகும். இது அசாத்யமாகும்.

கொள்ளிக்கரப்பான்

வயிறு வீக்கம், மலபந்தம், உடல் மெலிதல், குரற்கம்மல், விக்கல் முதலான குறிகள் உண்டாகும். இதில் கொள்ளுக் கரப்பான் என்ற ஒரு வகையும் உளது. கொள்ளின் நிறத்தையொத்த தட்டையான தடிப்புகள் உடம்பு முழுவதும் ஏற்படும். இதற்குக் கொள்ளை அவித்து அதிலிருந்து கிளம்பும் ஆவியைக் கரப்பான் புண்களில் பிடித்தல் வழக்கம். ஆனால் கொள்ளிக்கரப்பான் என்ற நோயால் பீடிக்கப்படும் குழந்தைகள் பிழைப்பது அரிது.

தோஷக் கரப்பான்

தேகத்தினால் உள்ளும், மேலும் நடுக்கத்துடன் கூடிய ஜ்வரம் உண்டாகும். உடம்பு அழன்று புண்களேற்படல், கள்ளின் வாடை வாயிலிருந்து வீசுதல், உடல் வீக்கம், மூக்கில் அரிப்பு, தீராத அழுகை முதலானவை ஏற்படும்.

வாலைக் கரப்பான் குறிகள்

கால் கடுப்பு, கீல்கள், கழுத்து, இவ்விடங்களில் சருமம் வெடித்துப் புண்கள் முதலானவைகளேற்படும் அதிலிருந்து நீர்வடியும். உடம்பு இளைத்தல், முதலான குறிகளும் உண்டாகும்.

வீங்கு கரப்பான் குணம்

உடம்பில் வீக்கங்கள் கட்டுக்கட்டுகளாக உண்டாகி பின்பு புண்களேற்பட்டு எரிச்சலுண்டாகும். எரிச்சல் நின்றபின் அதிலிருந்து நீர் வடியும். இது வீங்கு கரப்பான் ரோகம். ஆகும்.

விப்புருதிக்குறி குணங்கள் (வித்ரதி)

இது சீழுள்ள கட்டிகளைக் குறிக்கும். வாதாதி தோஷங்கள் சர்மம், இரத்தம், மாம்ஸம், மேதஸ் என்கிற கொழுப்பு முதலானவைகளை தூஷித்துப் பின்பு கிரமமாக அஸ்தி முதலான ஆழமான தாதுக்களைப்பற்றி விருத்தியாகி பெருத்த வீக்கத்தை உண்டுபண்ணுகின்றன. பின்னர் இது மெதுவாகப் பழுத்து உடையும்.

வாத வித்ரதி

கறுப்பு அல்லது சிவப்பு நிறமுள்ளகட்டிகள் உண்டாகி அவை சில சமயங்கள் பெரிதாகவும், சில சமயங்களில் சிறியதாகவும் ஏற்பட்டு, அதிக வேதனையுள்ளதாகவும் இருக்கும்.

பித்த வித்ரதி

பழுத்த அத்திப்பழம் போன்ற நிறமுடையதாகவும், ஜ்வரம், எரிச்சல் முதலானவைகளோடு கூடியவைகளாகவும், சீக்கிரத்தில் பழுக்கும் தன்மையுள்ளதாகவும் இருக்கும்.

கப வித்ரதி

இது அகல்போன்று அகன்றும், வெண்மை நிறமுள்ளதாகவும், குளிர்ச்சியாகவும், பளபளப் புள்ளவைகளாகவும் வேதனைக் குறையுள்ளதாகவும் வெகு மெதுவாகப் பக்குவமடையுந் தன்மையுள்ளவைகளாகவும் இருக்கும். கொட்டாவி அருசி முதலான குறிகளும் உண்டாகும்.

ஸந்நிபாத வித்ரதி

பற்பல நிறங்களுள்ளதாகவும், மிகுந்த வலியுடன் கூடியதாகவும், சீழுடன் கூடிய திரண்டு வராத கட்டியுடனும் மிகப்பெரிதாகவும் இருக்கும்.

ரக்த வித்ரதி (Haemotoma)

வித்ருதிக் கட்டி கறுமை நிறமுள்ள கொப்பளங்களினால் சூழப்பட்டுள்ளதாக இருக்கும். எரிச்சல் அதிகமாகும். தாகம், ஜ்வரம் முதலான குறிகளுமுண்டாகும். புருஷர்களுக்கு வெளிப்புறத்திலும் ஸ்திரீகளுக்கு உட்புறமும் இந்நோய் காணும்.

அபிகாதஜ வித்ரதி

கத்தி முதலான ஆயுதங்களினால் தாக்கப்பட்டவன், விரணரோகிக்குள்ள பத்யங்களை அநுஸரிக்காமல் இருந்தால், அடிபட்டதாலேற்பட்ட வெப்பம் வாயுவினால் தேகம் முழுவதும் பரவி, இரத்தத்துடன்கூடப் பித்தத்தையும் அதிகரிக்கச் செய்து இந்நோயை உண்டாக்கும். ஜ்வரம், நாவரட்சி, அழற்சி முதலியவைகளும் ஏற்படும்.

அந்தர் வித்ரதி (abscess of Internal Organs)

தோஷங்கள் கோளாறடைந்து குல்மரூபமாகவோ, புற்றைப்போன்றோ, நன்றாகப்படர்ந்தோ உடலின் உட்புற அவயவாதிகளில் விருத்தியை உண்டாக்குகின்றன. அவைகள் எந்தெந்த அவயவங்களைப் பாதிக்கின்றனவோ அந்தந்தப் பெயர்களையும் அடையும்.

சூத வித்ருதியில் - அபானவாயு தடைப்படும்

வஸ்திவித்ருதியில் -சிறுநீர் மிகுந்த கஷ்டத்துடன் வெளிவரும்.

நாபி வித்ருதியில் - விக்கலுண்டாகும். மேலும் தேகத்தில் தாங்கவொண்ணாத வலியும், மனக்குழப்பமும் ஏற்படும். அபானவாயு ப்ரகோபமும் அதிகரிக்கும்.

வங்க்ஷண வித்ரதி - பின்பக்கத்தில் தொடையிடுக்குகளிலும் பிடிப்பும், கடுமையான வலியுமேற்படும்.

ப்லீக வித்ரதி - மூச்சுத்திணரல் அதிகமாயிருக்கும்.

இருதய வித்ருதி - கால், கை முதலான அங்கங்களில் பிடிப்பு ஏற்பட்டு வலியும், இருமலும் உண்டாகும்.

யக்ருத் வித்ருதி - (Liver abscess) பெருமூச்சும், விக்கலும் அதிகமாகும்.

க்லோம வித்ருதி - (Left lung abscess) நாவரட்சி அதிகமாகும்.

தோஷங்கள் வெளிவரும் மார்க்கம்.

நாபிக்குமேல் ஏற்படும் கட்டிகள் பக்குவமடைந்தால் அந்த தோஷம் வாய்மூலமாக வெளிவரும். நாபிக்குக் கீழ் உண்டாகிப் பக்குவமடைந்த வித்ருதிகளின் தோஷங்கள் குதத்தின் மூலமாகவே வெளியாகும்.

பக்ந நிதானம் (fractures)

பக்னம் இருவகைப்படும். "ஸந்தி பக்நம்" (மூட்டு நழுவுதல் (Dislocation of Joints), என்றும் "காண்ட பக்நம்" எலும்பு முறிதல் (Fractures) என்றும் அவைகளுக்குப் பெயர்களாகும்.

ஸந்திபக்ந லக்ஷணங்கள்

கோளாறடைந்த மூட்டுகளை நீட்டும்போதும், மடக்கும்போதும், அல்லது திருப்பும்போதும் வலி அதிகமாக

இருக்கும். ஒரே நிலைமையில் வைத்திருந்த போதிலும் வலி அதிகமாகும். அந்த பாகத்தைத் தொடவும் முடியாது. மேலும் அம்மூட்டை நீட்டவோ அல்லது மடக்கவோ முடியாத நிலமையும் ஏற்படும். இவை "மூட்டுநழுவு"தலின் குறிகளாகும்.

வகைகள்

உத்பீஷ்டம் - மூட்டில் சேரும் எலும்புகளின் முனைகள் ஒன்றோடொன்று தேய்வதுடன் வீக்கமும் உண்டாகும். இரவு நேரங்களில் வலி அதிகமிருக்கும்.

விச்லிஷ்டம் - மூட்டுகள் விலகிவிடுதல் என்ற இவ்வகையில் எப்போதும் வலியிருக்கும்.

விவர்த்திதம் - மூட்டிலுள்ள எலும்புகள் ஒன்றின்மேல் ஒன்று ஏறிக்கொண்டு வீக்கத்துடன் வலியையும் உண்டாக்கும். இரவு வேளைகளில் வலி அதிகரிக்கும்.

திர்யக்கதம் -ஸந்தியை விட்டு எலும்பு விலகி குறுக்காகப் பாய்ந்துவிடும். வலி அதிகமாயிருக்கும்.

ஊர்த்வக்ஷிப்தம் - எலும்புகள் தன் நிலைமைகளை விட்டு ஸந்தியின் மேலே தூக்கிக்கொள்ளும். கடுமையான வலி உண்டாகும்.

அதஃக்ஷிப்தம் - ஒரு எலும்பு தன் ஸ்தானத்தை விட்டுக் கீழ்நோக்கி நழுவ அதன் முனைகள் ஒன்று சேராமலிருப்பதுடன் அதிகமான வலியும் உண்டாகும்.

காண்டபக்நத்தின் குறிகள்

அவயவம் துவளல், வீக்கம், வலி, ஒடிந்த எலும்புகளைச் சேர்த்து இணைத்தால் நறநற என்ற சப்தம் (Cripitation) தொடமுடியாத வலி, குத்தல், துடித்தல், அவயவத்தை எப்படி வைத்தபோதிலும் வலி தாளாமை முதலியவைகளாம்.

வகைகள்

காகடக பக்நம் - எலும்பின் நடுபாகத்தில் அடிவிழுவதனால் அவ்விடம் நசுங்கி அதன் இருபுறங்களும் உயர்ந்து தோன்றுதல்

அச்வகர்நம் - எலும்பின் மத்யபாகம் வரை நசுங்குவதால் ஏற்படும் கோளாறு

விசூர்ணிதம் - எலும்பு பொடியாகுதல்

பிச்சிதம் - எலும்பு நன்றாக நசுங்கி விடுதல்.

அஸ்தி சல்லிகா - எலும்பின்மேல் பாகத்திலுள்ள மெல்லிய தோலின் சிதைவு.

காண்ட பக்நம் - எலும்பு இரண்டு துண்டுகளாகப் போதல்

அதிபாதிதம் - துண்டுகள் நன்றாக ஒடிந்து ஒன்றின் மீதொன்று ஏறிக்கொள்ளல்.

மஜ்ஜாகதம் - எலும்பினுள்ளிருக்கும் சோறு வெளி வருதல்

ஸ்புடிதம் - அடியினால் எலும்பில், சிறிய பிளவு ஏற்படுதல்,

வக்கிரம் - எலும்பு வளைந்து போதல் (Green Stick Fractures)

சின்னம் - எலும்பின் நீளவாட்டத்தில் ஏற்படும் பிளவு.

பாதவன்மீக ரோகம் (கால்ப்புற்று) (Cancer)

கபப்பிரதானமான தேசங்களில் வாசம் செய்தல், மலஜலம் ஊறிய பதார்த்தங்களைப் புசித்தல், கபத்தை வ்ருத்தி செய்யக்கூடிய பதார்த்தங்களைப் புசித்தல், அதிகமான ஸ்திரீ

ஸங்கம் முதலியவைகளினால் தொடையில் கபம் விருத்தியாகும். பின்பு சிறுகச் சிறுக வாதபித்தங்களும் அதனுடன் ஒன்று சேர்ந்து துர்மாம்ஸத்தை வளர்க்கும். அவ்வாறு மாம்ஸம் விருத்தியாகும்போது, அரோசகம் முதலான குறிகளும் ஏற்படும். இதனாலேற்படும் புண்கள் எளிதில் ஆறாது.

பவுத்திர ரோக வகைகளும் குறிகுணங்களும்

(யூகிமுனி வைத்ய சிந்தாமணியிலிருந்து)

ஆசனப் பவுத்திரம்

உடம்பு இளைக்கும். குதத்தில் அரிப்பு உண்டாகும். லேசாக ஜ்வரமடிக்கும். பின்பு ஆஸன வாயினருகில் குத்து வலியுடன் சிறு கொப்புளமுண்டாகும். உடம்பில் நடுக்கலும், மயக்கமும் ஏற்படும். மலத்துடன் இரத்தமும் சீழும் விழும்.

கொடிப்பவுத்திரம்

சடையைப்போல் குதப்பிரதேசத்தில் வீக்கம் உண்டாகும். அதன் அடிகனத்துப் புண்ணாகி அங்கு பருத்திக்கொட்டைப் பிரமாணமுள்ள மாம்ஸ முளையேற்படும். உடம்பில் வெளுப்பு நிறமும், துர்நாற்றமும் அதிகமாகும்.

பக்கப் பவுத்திரம்

ஆண்குறியின் விதைகளுக்கிடையேயுள்ள நரம்பு (ஸீவனி) சம்பந்தப்பட்டு வலப்பக்கமோ அல்லது இடப்பக்கமோ தடித்துப் பழுத்து உடைந்து செந்நிறமுள்ள நீர்க்கசிவை வெளிப்படுத்தும். அதன் வழியே சிறு நீரும் கசியும்.

மூலப் பவுத்திரம்

ஆஸனத்துவாரம் பெரிதாகிப் பொருக்கமுடியாதபடி குத்துவலியேற்பட்டு நரம்புகள் புடைத்துப் கருணைக்

கிழங்கின் குருத்தைப்போல் முளையேற்படும். இதிலிருந்து செந்நிறமுள்ள நீர் முதலில் கசியும். பின்பு முளையுடைந்து துர்நாற்றமுள்ள நீர் வெளிவரும்.

கிரந்திப் பவுத்திரம்

ஆஸனத்தில் கடுப்பு அதிகமாகிக் கட்டியேற்பட்டுப் பழுத்து உடையும். பவுத்திரத்தினுள் கொடிகள் போல் புரைகள் ஏற்படுவதுடன் ஆண்குறியிலும் புண்கள் உண்டாகும். உடம்பில் நாற்றத்துடன் வியர்வைத்துளிகள் காணும். ஆண்குறிக்கடியில் வீக்கமும் உண்டாகும்.

மேகப் பவுத்திரம்

விதைகளில் நீர் சுரந்து பின்பு அது உடைந்து பனி நீர் போன்று வெளியாகும். சிறிது நாட்கள் சென்றால் சீழாகவும் அது மாறும். குளிர்ஜ்வரம் அன்னத்வேஷம், கைகாலெரிவு, உடம்பு இளைத்தல், மதமதப்பு முதலான தேகசம்பந்தமான குறிகளும் காணும்.

ஆசனக் கண்டமாலை

ஆஸனத்தில் அம்புகுத்துதலைப் போன்ற வலி, தேகத்தில் பீதி, ஜ்வரம் முதலானவைகளுடன் மலத்வாரத்திற்குச் சமீபத்தில் பற்பல கண்களுடன் புண்களேற்படும். அதன் வழியே மலமும் சிறுநீரும் வெளிவரும். அரிப்பும் எரிச்சலும் உண்டாகும். சிவப்பு நிறமானகசிவும் ஏற்படும்.

சரக் கண்டமாலை

கருணைக் கிழங்கின் குருத்தைப்போல் பற்பல முளைகள் ஏற்பட்டு அவைகள் பழுத்து உடைந்து சீழும் இரத்தமும் பெரும் அளவில் வெளியாகும். அம்புக்குத்தலையொத்த வலியும் வீக்கமும் உண்டாகி அங்குள்ள மாம்ஸம் அழுகி நாற்றமெடுக்கும்.

யோனி கந்த நிதானம்

யோனித்திரி, யோனிலிங்கம் முதலியவைகளை ஆயுர்வேதத்திலுள்ள யோனிகந்தம் என்ற வியாதியில் சேர்ப்பது மிகப் பொருத்தமாகும்.

ஸ்திரீகள் பகலில் அதிகமாகத் தூங்குவதனாலும், அதிகமான கோபத்தினாலும், அதிக தேகப்பயிற்சியினாலும், அதிகமான புணர்ச்சியினாலும், மம்மஸ்தானத்தில நக தந்தாதிகளினாலேற்படும் காரியங்களினாலும், வாதாதி தோஷங்கள் பிரகோபமடைந்து எலுமிச்சங்காய்ப் பிரமாணமுள்ள சீழும் இரத்தமும் கலந்த கட்டியை யோனியில் உண்டாக்கும்.

வாத யோனிகந்தம்

வீக்கம் சூக்ஷமாகவும், கழுப்பு நிறமாகவும், சொர சொரப்பாகவும் மடிப்புள்ளவைகளாகவும் இருக்கும்.

பித்தஜ யோனிகந்தம்

கட்டி அழற்சியையும், செந்நிறத்தையும் பெற்று ஜ்வரத்துடனே இருக்கும்.

கபயோனி கந்தம்

அரிப்புடன் கூடியதாகவும், காசாம்பூ போன்ற நிறம் (நீலம்) உள்ளதாகவும் இருக்கும்.

ஸந்நிபாத யோனிகந்தம்

மேற்கூறிய வகைகளில் காணப்படும் குறிகள் எல்லாம் சேர்ந்து காணும். இது அஸாத்யமானது.

LXIII

குஷ்டரோக நிதானம்

(யூகிமுனி வைத்ய சிந்தாமணி)

இந்நோய் 18 வகைப்படும்.

புண்டரீக குஷ்டம்

உடம்பில் தாமரையிதழைப்போல் சுற்றிலும் சிவந்து நடுவில் வெளுத்தோ அல்லது சிறு கருமை நிறத்துடனோ மேலெழுந்த தடிப்புகள் ஏற்படும். இதில் அரிப்பு இருக்கும். சொறிந்தால் சிவப்பு நிறமுள்ள துர்நீர்க்கசிவு வெளிவரும்.

விஸ்போட குஷ்டம்

சரீரம் முழுவதிலும் முதலில் அரிப்பு உண்டாகிப் பின்பு பாளம் பாளமான வெடிப்புகளேற்படும். சில நாட்கள் சென்றபின் அவை நல்ல பாம்பின் படம் போன்று வெளுப்பு நிறமுள்ள தடிப்புகளாக மாறும். அவைகளைச் சொறியும் பட்சத்தில் சிவப்பு நிறமாக ஆகும். மிகுந்த மனக்கிலேசத்தையுண்டாக்கும்.

பாமா குஷ்டம்

தேகத்தில் அரிப்புடன் வெளுப்பு நிறமான சீழுள்ள கொப்பளங்களேற்படும். உடம்பு இளைக்கும். எரிச்சலும் ஏற்படும். உடம்பு முழுவதும் சொறிகளுண்டாகித் தோல் பாம்பின் சட்டையைப்போல் உரியும். வீக்கத்துடன் கை கால்களும் குன்றிவிடும்.

ஏக குஷ்டம் (கஜ சர்மம்)

உடம்பு மிகுந்த கறுநிறத்தையடைந்து, தோல் உரிந்து சிவப்பு நிறமடையும். பின்பு, வற வற என்று இழுத்து சருமத்தில் வெடிப்புகளை உண்டாக்கும். அரிப்பு

அதிகமாயிருக்கும். கால் விரல்கள் பருமனாகும். உடம்பில் குத்துவலியும் ஏற்படும்.

கர்ண குஷ்டம்

சருமத்தில் வெடிப்புடன் பொறிப் பொறியான தடிப்பு ஏற்பட்டு மிகுந்த வேதனையைக் கொடுக்கும். வாதாதி மூன்று தோஷங்களும் பிரகோபித்து உடம்பில் மதமதப்பை உண்டாக்கும். காக்கணப்பூவின் நிறமுள்ள வீக்கங்கள் ஏற்படும். மனக்கவலையும் அதிகமாகும்.

சர்மதள குஷ்டம்

உடம்பு வெளுத்து அரிப்பு ஏற்படும். பின்பு தேகம் கறுமை நிறமடைந்து தடித்துப் புண்ணாகிச் சீழ் வெளியாகும். வயிறு, பின்புறம் முதலான இடங்களில் அரிப்பு அதிகமாகும். தேகத்தில் எரிச்சல் மிகும். வயிற்றுவலியும் ஏற்படும்.

கருங் குஷ்டம்

தேகமுழுவதும் கறுத்துச் சருமம் தடிப்பாகும். துர்நாற்றமும் அதிகமாக வீசும். உஷ்ணமும் அதிகரிக்கும். உடம்புவலி, முக்யமாகப் புறங்காலுக்குக் கீழ் அதிகமாக இருக்கும். தலைச்சுற்றலும் உண்டாகும்.

ஔதும்பர குஷ்டம்

அத்திக்காய்ப் பிரமாணமுள்ள பற்பல கட்டிகள் உடம்பின் மேலேற்படும். இவை பெரியதாகிப் பழுத்து அமுங்கும். சருமத்தில் சுருக்கங்களேற்பட்டுத் தொங்கும். தேகத்தில் மதமதப்பும் உண்டாகும். சொறிந்தால் சிவப்பு நிறமுள்ள நீர்க்கசிவும் ஏற்படும். அடிக்கடி மயக்கமும் வரும்.

அபரிசகுஷ்டம்

தேகத்தில் வலியுண்டாகி, இரத்தமும் கறுமை நிறத்தையடையும். சிற்சில சமயங்களில் வலி பொறுக்க முடியாதபடி அதிகமாகும். வீக்கமும் ஏற்பட்டுச் சருமம் வெடித்துப் புண்களேற்படும்.

மண்டலகுஷ்டம்

தோலின்மேல் பச்சை அல்லது சிவப்பு நிறமுள்ள தடிப்புகள் இருக்கும். தலையில் வெளுப்பு அதிகமாகும். அரிப்பு, சொறி முதலியவைகள் அதிகமாயிருக்கும். சிவப்பான துர்நீர்க்கசிவும் ஏற்படும்.

விசர்ச்சிகாகுஷ்டம்

இது வாதம். இவ்விரு தோஷங்களினால் ஏற்படும் வகையைச் சேர்ந்தது. எண்ணெய்ப் பசையுடன் கூடிய வெளுப்பு நிறமுள்ள தடிப்புகளேற்படும். அரிப்பு, வலி முதலியவைகள் உண்டாகிச் சொறிந்தால் அவ்விடம் சிவந்து அதன் தோல் கடினமாகும். அந்நோய் கால்களில் எரிச்சல், வயிற்றுப் பொருமல், சோம்பல் முதலானவைகளுடன் வெகுசீக்கிரத்தில் பரவுந்தன்மையும் உள்ளது. கபில நிறத்துடன் அதிக துர்நாற்றமுள்ள நீர்க்கசிவுடன் கூடியதாகவும் இருக்கும்.

விபாதிகாகுஷ்டம்

கபமும் பித்தமும் இவ்வகையில் கோளாறடையும். உடம்பில் வெடிப்புகள் ஏற்படும். காற்று அடித்தால் கூடி பொறுக்கமுடியாதபடி வலி உண்டாகும். அப்புண்கள் நெருப்புச் சுட்ட புண்களைப்போலாகிச் சருமத்தையும் தின்னும். அதிகமான எரிச்சலேற்படும். கைகள், கால்கள், கழுத்து முதலிய அவயவங்கள் மிகவும் அழன்றுவிடும்.

உடம்பு வீங்கி, நல்ல பாம்பின் நிறத்தை அடையும். சில நாட்களில் இவைகள் கறுமை நிறமடையும். பாதங்களிலும் கைகளிலும் வெடிப்புகளேற்படும்.

கிடிப குஷ்டம்

சரீரம் பசுமை நிறமடையும். சருமம் யானைத் தோலைப் போலக் கனமாகும். காரணமின்றி அதிகமான அரிப்பு ஏற்படும். அடிக்கடி சிறுநீர் வெளியாகும். உடம்பிலிருந்து துர்நீர் கசியும். நோயாளியின் சமீபத்தில் நெருங்க முடியாதபடி துர்நாற்றம் வீசும். உடம்பு முழுவதும் வீங்கும். காய் காய்த்திருப்பதுபோல் பரிசிப்பதற்குச் சுரசுரப்பாக இருக்கும்.

சர்மதல குஷ்டம்(முன்கூறியது "சர்ம குஷ்ட"மாகும்.)

உடம்புவலி அதிகரிக்கும். உடம்பு முழுவதிலும் வெடிப்புகள் ஏற்பட்டு எரிச்சல் அதிகரிக்கும். பின்பு அவ்விடத்தில் தடிப்புகளேற்பட்டு சிவப்பு நிறமடையும். அரிப்பு அதிகரிக்கும். மயக்கம், அசதி, வயிற்றுவலி முதலான தேக சம்பந்தமான குறிகளும் காணும். மேலும் கொப்புளங்கள் சிதைந்து உதிர்வதனால் இவ்வகைக்குச் "சர்மதளம்" என்ற பெயர் உண்டாயிற்று.

தத்ரு குஷ்டம்

தேகத்தில் சிவப்பு நிறமுள்ள தடிப்பான வட்டங்களுண்டாகி அரிப்பு ஏற்படும். நன்றாகச் சொறிந்தால் வெண்மை நிறமடையும். மயிர்கால்கள் வளைந்து அவை ஒரே உருண்டையாகும். பித்தமும், கபமும் விருத்தியாகும். உடம்பு வீங்கி மதமதப்பு ஏற்படும்.

ஸித்மா குஷ்டம்

வாதமும், பித்தமும் பிரகோபிப்பதால், ஏற்படும் வகையாகும். சுரைப்பூவைப்போல் வட்டம் வட்டமான

மஞ்சள நிறமுள்ள கொழுப்புகள் சரீரத்தில் ஏற்படும். தேகத்தில் மதமதப்பு உண்டாகித் துர்நீர் கசியும். உடம்பு பளபளப்பாக ஆகும். மறதி அதிகமாகும். வியாதியுள்ள இடங்களைச் சொறிந்தால் பொடிப் பொடியான புறணிகள் உதிரும்.

சதாரு குஷ்டம்

சிவப்பு, பச்சை, வெண்மை முதலான நிறங்களுடன் கூடிய தடிப்புகளேற்பட்டு, எரிச்சலும், அரிப்பும் அதிகமாயிருக்கும். இந்நோய் வாதம், கபம், இவ்விரு தோஷங்களின் பிரகோபத்தினாலேற்படும். அத்தடிப்புகள் கரடுகட்டிப் புண்ணாகும். உரித்த பாம்புச் சட்டையைப் போலவுமிருக்கும். மூக்கு, காதுகள், கன்னம் முதலான விடங்கள் தடிக்கும்.

ச்வேத குஷ்டம்

தடிப்பான வட்டங்கள் உடம்பிலேற்பட்டுத் தேகமும் ஒருவாறு வெண்ணிறமடையும். தேகத்திலுள்ள ரோகங்கள் வெளுத்துவிடில் இது அசாத்யமாகும். உதடு, உள்ளங்கைகள், ஆஸனவாய், முதலான இடங்கள் நெருப்புச்சுட்ட புண்களைப் போலவாகும். அவ்விடங்கள் சிவப்பு நிறத்தையுமடையும். உடம்பில் வெடிப்புகளேற்பட்டு வெளுப்பாகி வீக்கமுமேற்படில் இதற்கு வெண்குஷ்டம் எனப்பெயர்.

ஸப்த தாதுக்களைப்பற்றிய குஷ்டங்களின் இலக்ஷணங்கள்

சர்மத்தை ஆச்ரயித்தால்

ஆங்காங்கு நிறவேறுபாடும், வரட்சியும், தொட்டால் உணர்ச்சிக் குறைவும், அடிக்கடி மயிர்க்கூச்சலும், வியர்வை அதிகமாகவும் இருக்கும்.

இரத்தத்தைப் பற்றினால்

உடம்பில் அரிப்பு உண்டாகி, விரணங்களேற்பட்டுச் சீழும் அதிகமாக வடியும்.

மாம்ஸத்தைப் பற்றிய குஷ்டத்தில்

விரணங்கள் தேகத்தில் அதிகமாகத் தோன்றல், வாய் வரளுதல், தோல் கடினமாதல், கட்டிகள் உண்டாதல், குத்தல் வலி, கொப்பளங்கள் அதிகமாதல், குஷ்டம் ஸ்திரமாக ஆகிவிடுதல் முதலிய குறிகளுண்டாகும்.

மேதஸைப்பற்றினால்

கை, கால்கள் குறைவடைதல், கால்நடை தடையுறுதல், அவயவங்களில் தாங்கமுடியாத வலி, ஒரு இடத்தில் விரணம் உண்டாகி அது மற்ற இடங்களில் பரவுதல் சருமம், இரத்தம், மாம்ஸம் முதலான இடங்களிலும் புண்கள் அதிகமாய் உண்டாகி மற்ற குறிகளும் காணும்.

அஸ்தியையும், மஜ்ஜையையும் ஆச்ரயித்தல்

மூக்கு உள்ளடங்கல், கண்களில் சிவப்பு நிறம், விரணங்களில் கிருமிகள் உண்டாதல், குரல் கம்மல், பேசமுடியாமை முதலான குறிகளுண்டாகும்.

சுக்லத்தைப்பற்றினால்

ரோகியின் ஸந்ததிகளுக்கும் இந்நோய் தொடரும்.

குஷ்டம் உண்டாகக் காரணங்கள்

அதிகமான உஷ்ணத்தினாலும், அல்லது அதிக குளிர்ச்சியினாலும், பசியின்மையினாலும் வாந்தி அதிகரித்தாலும், அமித ஸ்திரீ சேர்க்கையினாலும்,

மனக்கவலை அதிகரிப்பதனாலும், சாப்பிடும் சாதத்தில் மண், மயிர், தவிடு இவைகள் இருந்து அவை தவறுதலாக உட்செல்வதனாலும், குஷ்டரோகம் ஸம்பவிக்கும். இதையன்றி குரு நிந்தனை, தெய்வநிந்தை, படித்தவர்களை தூஷித்தல், அதிகமான கோபம், பரஸ்திரீ கமனம், பிறர் பொருளைக் கைப்பற்றுதல், பரதேசியைத் தூஷித்தல் முதலானவைகளும் இந்நோய்களுக்குக் காரணங்களாகும். பூர்வ ஜன்மத்தில் செய்த தீவினைகளினாலும் உண்டாவதும் உண்டு.

குஷ்டரோக ஸம்ப்ராப்தி

மேற்கூறிய காரணங்களினால் வாதாதி தோஷங்கள் திடீரென தூண்டப்பட்டு சரீரத்தில் குறுக்கு நெடுக்காய் ஓடும். ஸிரைகளில் பிரவேசித்துச் சர்மம், நிணநீர், இரக்தம், மாம்ஸம் முதலானவைகளைத் தூஷித்துப் பின்பு தேகத்திலுள்ள தோலின்மேலும் பரவி, தோஷங்கள் நிற மாறுபாட்டையுண்டாக்கும். எவ்விதமான குஷ்டரோகமும் தக்க சிகித்ஸை செய்யப்படாமல் போனால் அது நாளாவட்டத்தில் ஸர்வ சரீரத்தையும் சுருக்கி ஒடுக்கிவிடுந் தன்மையுடையதாக இருப்பதால் இதற்குக் "குஷ்டம்" என்று பெயர். மேலும் தோஷங்கள் ஸர்வ தாதுக்களிலும் வ்யாபித்து அவைகளைத் துர்நீரால் கசிவடையச் செய்து வியர்வை, நிணநீர் இவற்றை அதிகமாக வெளிப்படுத்தும். கடைசியில் க்ருமிகள் தேகத்தில் விருத்தியாகி ரோமம், சர்மம், ஸ்நாயு, தமனீ, தருணாஸ்தி முதலியவைகளைத் தின்றுவரும். ஆகவே இவைகளுக்கு வெகு சீக்கிரத்திலேயே சிகித்ஸை செய்தல் வேண்டும்.

ரோக அகராதி

கீழ்க்காணும் ரோகங்களின் குறிகள் வைத்திய க்ரந்தங்களில் திட்டமாகக் காணப்படாததால் அவைகளின் இலக்ஷணங்களை கூடியவரை யூகித்து விளக்கப் பட்டிருக்கின்றன.

அகுவை - அரையாப்புக்கட்டி

ஊமசிங்கன் - (ஊமக்கட்டி) பொன்னுக்கு வீங்கி போன்ற முகங்கொள்ளாக் கட்டி

எழுச்சி - சிறுகட்டி. அநேகமாக காதிலுண்டாகும் வகைக்குக் கூறப்படும் பெயர்.

ஒட்டியபுண் - புண்கள் உள்ளவர்களிடம் நெருங்கிப் பழகுவதனால் அவர்களிடமிருந்து மற்றொருவருக்கு ஏற்படும் புண் வகைகள்.

கழலை -முகமில்லாக் கட்டி வகைகள்(Lymph adenitis)

காளான்- புற்றுநோய், தேகத்தில் பூச்சி வகைகளால் பெரும் அளவிலேற்படும் புண்கள்

கால் ஆணி - உள்ளங்காலில் சிறு சிறு வட்டமான சதையினாலேற்பட்ட தழும்புகளுக்கு ஆணி என்று பெயர். இது உள்ள ரோகி கால்களை நன்கு படியவைத்து நடக்கமுடியாமல் தவிப்பான். குத்துவலி அதிகமாக இருக்கும்.

குதிப்புற்று - குதிகால்களிலேற்படும் வியாதி, அவ்விடத்தில் துர்மாம்ஸம் வளர்ந்து, சீழும் இரத்தமும் ஒழுகும். தாங்கமுடியாதபடி எரிச்சலும், வலியும் கொடுக்கும்.

குதிப்புற்று - குதிகால்களிலேற்படும் வியாதி, அவ்விடத்தில் துர்மாம்ஸம் வளர்ந்து, சீழும் இரத்தமும் ஒழுகும். தாங்கமுடியாதபடி எரிச்சலும், வலியும் கொடுக்கும்.

குறு, மறு முதலியவைகள் - பாலுண்ணி போன்ற சிறு சிறு மாம்ஸமுளைகள் சருமத்தில் ஏற்படும். வலி இராது.

சிலந்தி - கிரந்திப்புண்களுக்கும், பருவுக்கும் பெயர்.

நாக்குச் சிலந்தி - நாக்கின் மேலேற்படும் புண்

தண்டுநோக்காடு - ஆண் குறியில் வலி உண்டாதல்

துடைவாழை - துடையிலுண்டாகும் கண்களுடன் கூடிய கட்டி.

தோடகச் சிறங்கு - கொப்பளமான சிறங்கு

பஞ்சை - சிலந்திகளுக்குப் பெயர்

படர்தாமரை - தேகத்தில் வெகு எளிதில் பரவும் ஒருவகைத் தேமல்

படுவன் - கிரந்திப்புண்கள்

பல்லரணை - பற்களில் மாசுபடியும் ஒருவகைநோய்

பற்குத்து - பற்களினடியில் உள்ள ஈறுகளில் வீக்கம் ஏற்பட்டுக் குத்துவலி எடுத்தல்.

பித்தவெடி - உள்ளங்கால்களில் பாளம் பாளமான வெடிப்புகளேற்படுதல். துர்நீர் கசியாது. கால்களை ஊன்றி நடக்க முடியாது.

மேகவெடி - உடம்பிலும் கை கால்களிலும் வெடிப்புகளேற்பட்டு அதிலிருந்து ஊன்தண்ணீர் கசிதல்.

சத்திர விதி

(இவைகனின் மூலச் செய்யுட்கள் 25 நெ, சுவடியிலிருந்து எடுக்கப்பட்டவை. பிறைக்குறிகளுள் காணப்படும் பாடபேதங்கள் அகஸ்தியர் 2000த்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.)

காப்பு

குத்திரமாகிய கொடுவினைதுருசறு
நித்திரைதனிலு முன்திருசரணமும்
பத்தொரு கரமுமென் மனதில் மறந்திலேன்
சத்திரவிதி சொல வந்தருள் செய்வாய்.

26 வகை சத்திரங்களின் பெயர்:

கத்திசத்திரமொரு குரும்பிதனை வாங்கியுங்
கருமூக்குவாதன னுடன்கடுமுள்ளுவாங்கி(யும்)
(கொடுமாழுகோலுங் கதித்திடுமடுத்த
புரையுந்தத்துகத்திரி கைபற்கைவாங்கி)
மூக்குச்சலாகையு மொழி(ழு)ப் பொட்டுடன்தகு
மட்டக்கோலுசி மிகுசெப்புக்குழையோடு
சலாகைவட்டகையுமிக வேகுத்துமொருபஞ்ச
முகஞ்செப்புச்சலாகையுங் கூறுகாய்க்கோலுமே
குலவுமொருதெண்டுச்ச லாகைநயனக்கத்தி
கூடுமிவ்வகையானதே பத்துடன் பதினாறு
வகையானதாயுதம் பார்மீது பண்டிதற்குப்
பரமசிவனருளினா லுண்டான திவ்வகை
பகுத்தறிந்திவை செய்வாரே. 1

கத்திரியின் லக்ஷணம்:

கத்தி (கதித்த) மூவிரலி(ல) லங்குல மூன்றரை
மெத்துகூறுமோர(ரதுக்கு)துவுமொ(மோர)ங்குலஞ்
சித்தமாமிவை செப்பிடும்போதுதான்
வைத்தவட்டமயிர்க் கத்திகாணுமே. 2

சந்திர லக்ஷணம்:

அண்டுமங்குல மாறாகு(மாறி)மளவு
வேப்பிலைதான் காம்பு
உண்டென அறு(உரு)க்கும்போது உகந்தநற்
பிளவைதன்னை
கண்டமாய் வட்டமொக்க வறுத்து அச்சத்திரத்தால்
உண்டெனக் கட்டீர்பாள முறுவினையறும
தென்றே 3

குறும்பி வாங்கி

அங்குல மேழதாகும் மதனிறை யரைக்கழஞ்சு
பொங்கிய குறும்பிவாங்கி யதிமுலைருதிர்ந்து
மெய்யிற்
செங்கைதா னசைவில்லாமற் செப்பமாய்
யாகத்தானே
பங்கமில் லாமற்றானே பழுதற வாங்குதன்றே 4

முகவாதனன்

நிறையது முக்கழஞ்சு நேரிய கவருமூன்று
வுறையுமா வளவுநீள மங்குலம் பத்திரண்டே
அறையுமிவ்வகையினாலே ஆகிய விதிதப்பாமல்
பொறையிலா நோய்தனக்குப் போதநீரட்டை
போலே 5

முள்ளுவாங்கி

இருமுளை நடுவேதானே ஏற்றமா முறுவலென்ப
தொருகழஞ் சொக்கக்கொண்டுகந்ததுவளமையாக
வருவினை யறுக்கக்கீற வளர்நகம் வாங்கச்சீவக்
குருமொழி முள்ளுவாங்கிக் குணமிது கூறினோ
(றுவோ)மே 6

ஆழிக்கோல்

பருமமா மாழிக்கோலே பலமதுமரையதாகும்
பொருமிய வளையம்பாதி பொருந்திய கரத்தில்பாதி
விரிவுள்ள அங்குலந்தான் விளம்பவே பத்துமாகும்
மருவிய னோய்தனக்கு மகிழ்ந்துநீ
ரெட்சைபோடே. 7

பிறைக்கோல்

ஈ(ன்ற)ண்ட மூன்றங்குலங் காம்பெழுத் தாணி
போலே

நீண்ட(நின்று) தன் பிறைக்கோ லங்குல மொன்ப
தாய்க்

காண்டிடு மிதனுட காம்பின் பருமையால்
தூண்டிடும் வியாதியின் துன்ப மறுக்குமே. 8

கத்திரிகை

மன்னிய அங்குல மெட்டரை யதினிறை
பன்னிய காற்பலம் பிந்ததியகால்சூ(க)ரி
மின்னிய கண்ணிரு வாய்திறம் வியாதியைக்
கன்னிய மயிர்களைக் கத்திரிக் (கோல) கையிதே. 9

பரகரைவாங்கி

*எட்டிரண்டங்குல மிசைதந்தபரகரை
வெட்டிதாய் முளை(னை)யொரு கொள(ள்)ப்
பருப்பாகவே
நட்டமா யித்திலே தெந்தந்தன்னிலே
குட்டமாய் வருபிணி விளக்கிடுங் கூறவே 10

முச்சலாகை

பொருமுனைதடித்த வாய்(யா)க்கொடு புடைப்பதா
மருவிய சத்தமும் வகுப்பு முள்ளதாம்
அருவிய நாற்கழஞ் சங்குலமேழதாம்
வருவினை யுள்ளதை வாங்கு தண்டாயுதம் 11

ஒட்டுக்கோல்

தண்டிய அங்குலம் பதினொன்று தலைகழஞ்
சண்டிய நீளமு மரைப்பல மாகிடும்
கண்டுறு போட்டுக் கோல்கடியாயுத
முட்டெனப் போடவே உறுவினையறுமதே 12

அட்டக்கோல்

அட்டக்கோலது பதினெட்டங்குல
தட்டித்தகடாய் அகலம்புளியிலை
மட்டுப்பாத்து வலியவியாதியைக்
கொட்டிக்கொட்டிக் குறுகப்போடுமே. 13

---

* " எட்டிரங்குல மிசைந்த பலமலரை " என்றும் பாடபேதம்.

நயனக்கத்தி

அண்டியஅங்குல மூன் றதனிறையரைமாவென்ன
மிண்டியகண்ணுமொன்றே விளங்கியமுனையு
மொன்றே
... ...
கொண்டுநீயூசியாலே நயனத்தில் குத்திவாங்கே 14

செப்புக்குழல்

ஒருசாணரைப்பல மேலைக்கனமாய்
விரிவாய்த்திரட்சியாய்க் குழலாய்புண்விட
வருவாயங்குல மாளுமிதுவே
திருவேசெப்புக் குழலின் செயலே 15

செப்புச் சலாகை

சாணரைக் கழஞ்சாஞ் செப்புச்சலாகை
ஊணுருபுண்ணில் துவாரத்திலோட்டியே
ஏனுறு தலையிற் கீறிவெதுப்பியே
காணுறக்காரங் கட்டுவதிண்ணே. 16

தளிகை (சலாகை)

பன்னிருகழஞ்சா மங்குலம்நாலு
மின்னியநெற்பிர மாணமதாகும்
நன்னியநாலு முலைக்கண்ணின்புறம்
உன்னியதளிகையை உரைத்திடுமுண்மையே. 17

இரும்புச் சலாகை

கருதிற்பெருமை கழஞ்சரைசாணாம்
மருவிச்சருவி வருவினைப் புண்களைக்
கருதித்துவாரத்திற் சலாகையைமூட்டியே
வெறுவக்கீறுவ திருப்புச்சலாகையே. 18

பஞ்சமக்கோல் அல்லது பஞ்சமுகச்செப்புச்சலாகை

அஞ்சுகண் ணறுகழஞ் சங்குலம் பதினொன்று
விஞ்சிய நோயெனும் வீக்கஞ் சூலையை
தஞ்சம தாகவே சக்கரம் போலவே
பஞ்சமக் கோலினா லாடசை போடவே. 19

சலாகை (வேறு)

ஒன்றரைக் கழஞ்சா யொன்ப தங்குலம்
மன்றல்சேர் மன்னரில் மருவு நோய்தனைக்
குன்றுறப் பார்த்துக் கொள்வெதுப்பிடு
தண்ணுறச் சொன்னதோல் சலாகையானதே. 20

கொம்பு

மாலுறு வாழைக்குருத்தெனப் போட்டாய்
மேலுறகொம்பு வளையம்ரெண் டங்குலம்
சாலப் போட்டுத்து வாரமொன் றாமது
மேலுறு கொம்பால் வீக்கம் வாங்குமே. 21

அபானக்குழல்

நாலிரண் டங்குலம் மூன்று பலமரை
ஆல அபானத் துவாரத் தளவிற்று
மேலுறு துளையாய்க் குழல்தனை யேற்றி
சாலவே தீப்புகை யெழத்தீய்க்குமே. 22

சலாகை (வேறு)

நாலுமூன்றங்குலம் நாற்கழஞ் சொன்றரை
வீறுதெண்டாற்புதம் வினைசெய் வாதமும்
வாலுநற் பிளவையும் வண்மைசேர் கிருமியும்
கூறிய வியாதியைக் கொல்சலாகையே. 23

புத்துமண் பத்து

உருவிலாப் புத்துமண்ணு முற்றதேயிருகழஞ்சு
தருமிருகாந்தங்கூட்டிச் சதைத்தரைத் துருட்டிமட்டு
இருவிரற் பருமையாக யிசைந்தவங்குலங்களேழாய்
வருமொரு சூலைவாதம் வாங்கிடரட்சை போடே.

தண்டுச் சலாகை

அண்டிடு மொன்பதே அங்குலம் கழஞ்சரை
தண்டிய திரட்சிதானீற்கும் போலவாம்
மிண்டிய தொண்டுப் பிளவையைத் தீய்த்திடத்
தண்டிய தொண்டுச் சலாகைய தாகுமே. 25

பிறுமாவின் குணம்

பிறுமாவென்னும் வீறுசத்திர மதுவேயங்குல
மஞ்சதாகும்
நிறையே கால்பலம் முனையே ஒருமாத்
தருமேவாய்க் குறுகது மையாகவே
பாதிப்பினப்பிறமொரு அங்குலமகலம்
சாதிச்சத்திரம் பிடிமூவங்குலம்
பாதிச்சத்திரம் விடுநீர்ப்பிளவையில்
கோதிக்குத்தி யிரண்டங்குலம் விடு
போதப் பிளவையில் பார்த்துவித்ததையே
மாரப் பிடித்து மூவங்குலம் விடு
சாலப் பருத்த பச்சையினால் விரல்
கீரிக்கடிகையி லோரங்குலம் விடு
காலில் துடைதனில் வரளைக் கஞ்சங்குலம்
மேவிச்சதைதனில் பாதிப்பக்கப்
பிளவைக் காரங்குலம் ஊழிக்குச்சிப்

கன்னப் பிளவையைக் கீறிக்குணம்பார்த்து
விடுமோரங்குலம் உனிற்பொருந்திய
நாசியிற்பீடத்தை உணித்திரவிடு
ஒருமாவங்குலம் வாயிற்புத்தை
வடுவாய்க் கீறிடு சாலநயனத்
தருவீசனத்தை நேசிச்சுண்டு
விடுசத்திரத்தாற் காவிற்கரட்டில்
வருகள்வன்தன்னைச் சோதித்துள்ளுறு
சதையறும்மென காலிற் சந்தில்
வருவிப்புருதியை ஆரத்திற்விடு
மங்குலம் நாலே மேனிதன்னில்
விளைசிலந்தியைத் தோலைக்கீறிடு
மொருமா வங்குலம் சாலத்தே நதந்
தனிலெழு வெட்டியை பூரித்துருண்டு
புடைத்தவிடத்தில் கீறிடு ஒருமா
வினையறுமெனதா லுடம்பிற் கழலை
தன்னைக் காரியமுறவரு சத்திரத்
தாலை கீறிடு சதையறு வினையறு
மென்னக் கூறினோம் பிறுமாக் குணச்சத்
திரத்தை மேல்வரு குட்டக் கிரந்திகள்
தீரவே பண்டிதா கேளுமிச் செய்கை
யாமங்கலவர் அவர் தொழிலாமே.

அகஸ்தியர் சஸ்திர விதி

ஸ்ரீ அமிர்தலிங்கம் பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்ட அகஸ்தியர் - நயனவிதி 500 என்ற புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

கத்திசத்திரம் கவின்குறும்பி வாங்கியும்
முகவா தனனுடன் முள்ளுவாங்கியும்
ஆழிக்கோலு மடுத்த பிறையுடன்
கத்திரிக்கையுடன் பரகரை வாங்கியும்
முச்சலா கையொடு முனிமொழி யோட்டும்
மட்டக்கோலும் மாறும் ஊசியும்
செப்புக் குழையும் சீரிய சலாகையும்
வட்டகை தன்னுடன் வளர்பஞ் சமுகமும்
செப்புச் சலாகையும் கொம்புங் குடோரியும்
வெங்கலக் குழலும் ஈயச் சலாகையுங்
காயக் கோலுங் கண்கத்தி தண்டும்
இவையிவை யாயுத மிருபத் தாறுஞ்
சிவனவ னருளால் திகழ்சத்ரா யுதமே.

26 வகைச் சஸ்திரங்களின் உருவங்கள்

அறைதருங் கத்தியா றங்குலநீளம்
அகலமோ ரங்குலம் ஆம்முனைவட்டம்
மயிர்க்கத்தி போன்று வழங்குமென்பர்.

சத்திரநீளஞ் சாற்றினா றங்குலம்
வேப்பிலைபோலும் விளங்கும் பல்பல்லாய்
நிறைகழஞ்சாறு நெடியதோர் பிளவை
கட்டி யிவற்றைக் கண்டமா யறுக்க
மெத்தவும் பயனாம் மேதினி மிசையே.

குறும்பி வாங்கியின் கூறே முங்குலம்
நிறையரைக் கழஞ்சு நெடுங்கைப்பிடியோ
யைந்தே யங்குல மாமெனப் பகர்வார்.

முகவாதனனோ முந்நான் கங்குலம்
முக்காற் கழஞ்சு நிறையென மொருவார்

முள்வாங்கி நீளம் மூவிரண் டங்குலம்
அகலமோ ரங்குலம் அணிநிறை கழஞ்சொன்
றறுக்கவங் கீறவும் அவிர்நகம் வாங்கவும்
பயனாம் என்று பணித்தனர் மேலோர்.

ஆழிக்கோல் பத்தோ அங்குலம் நிறையோ
ரரைப்பலமாகுமென் றரைந்தன ரறிஞர்

பிறைக்கோ லென்பது பேசின்மூ வங்குலம்
நிறைமூன்று கழஞ்சு நிகழெழுத் தாணிபோல்
நீண்ட பிறைக்கோல் மத்தியில் நிலவுறும்.

கத்திரி கைச்சீர் கழஞ்செட் டோடரை
அங்குலம் நிறைகாற் பலமேயாகும்.

பரகரைவாங்கியோ பதினாரங்குலம்
நிறையரைப் பலமென நிகழ்த்துவ ருணர்ந்தோர்.

முச்சிலாகைச்சீர் மொழியினே முங்குலம்
நிறைநான்கு கழஞ்சே நிலவுதன் வடிவோ
ஒரு மூன்று தகட்டுவா யுள்ளது பாரே.

முனிமொழி யென்பதோர் முக்யகருவியே

ஒட்டுக்கோ லங்குலம் ஒன்றொடு பத்தே
தலையொரு கழஞ்சரைப் பலமுடல் நிறையே.

அட்டக்கோ லீரொன் பானங்குலமே
காசெடையெட்டென கழறுவ ருரியோர்.

ஊசி மூவங்குலம் உரை நிறையரைமா

செப்புகுழை தான் திரட்சியாங் குழலே
ஒருசாணளவின் துயர் நிறை யரைப்பலம்
தகடோ லைக்கனம் சார்புண்ணில் விடுவது.

சலாகை அங்குலந் தானொரு நான்கே
அன்றியைந் ததன்நிறை யாறிரு கழஞ்சே.

வட்டகை யென்பதோர் வகையா யுதமே.

பஞ்சமுகமுமப் பரிசினதாமே.

செப்புச் சலாகை சிறந்ததோர் கருவியே.

கொம்பீரைந்தாங் குலமாம் வாழையின்
குறுத்தொப்பதுபூண் குலவிரண் டங்குலம்
மேனிவீக்கத்தை வீட்ட வல்லதே
கீறிக் கட்டியைக் கெட்ட செந்நீரை
வெளியிடத் தக்கமிகுபய னாயதே.

குடோரியே முரையங் குலம்நிறை காற்பலம்

வெண்கலக் குழல்தான் மேவுமெட் டங்குலம்
நிறைபலம் மூன்றோ டரையென நிகழ்த்துவார்.

ஈயச்சலாகை யியம்பின்மூ வங்குலம்
நிறையோ நான்கு கழஞ்சென நிலவிடும்.

காயக்கோல் நீளம் கழறினே முங்குலம்
நிறையிரு கழஞ்சு நெடிய பருமனோ
இரண்டங் குலமென விசைத்தனர் பெரியோர்.

தெண்டுசலாகை கொண்ட வங்குலமோ
ஒன்பதங் குலம்நிறை யோரரைக் கழஞ்சே
ஈர்க்குப் போலும் எழில்கனம் வாய்ந்ததே.

நயனக் கத்தியின் நலமூ வங்குலம்
நிறையொரு பணவெடை நிகழ்முனை ஊசியே.

இன்னசத் திரத்தி னேற்ற முணர்ந்து
அமுத நிலையினை யாய்ந்தறிந் தினிது
பண்டிதஞ் செய்யப் பழகிய ஒருவனே
சத்திரப் பண்டித ராமெனத் தக்கோர்
தாண்கடலுலகிற் சாற்றின ரம்மா.

மேற்கூறிய மூன்று விதமான சாஸ்திரவிதிச் சுவடிகளிலிருந்தும் தமிழ் வைத்திய முறைப்படி ஆயுத வகைகள் 26 என்று புலனாகிறது. இருந்தபோதிலும் அவைகளின் உருவம், உபயோகம் முதலியவைகளை மேடி செய்யுட்களிலிருந்து சரியானபடி அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இவைகள் ஒரு காலத்தில் பழக்கத்திலிருந்திருந்தால் அவைகளின் உருவங்களைச் சொல்லத் தேவையில்லை என நம்பி விட்டு விட்டனர் போலும்! கால வேறுபாடுகளினாலும், பழக்கவழக்க வேறுபாடுகளினாலும், இவை நாளடைவில் சீர்குலைந்து இப்போது அக்கருவிகளைக் கற்பனை செய்யக்கூட முடியாத நிலைக்கு வந்து விட்டோம். ஆயினும், கருவிகள் இலக்ஷணங்கள் பின் வருமாறு.

1. கத்தி

மூன்று விரற்கெடை அகலமுள்ளதாகவும், 3½" அங்குல நீளமுள்ளதாகவும் அதன் நுனி வட்டமாகவும் இருத்தல் வேண்டும். இதில் மற்றொரு வகை 6 அங்குல நீளத்திலும் 1 அங்குல அகலத்திலும் கூவரக்கத்தி போன்றிருக்கும்.

2. சத்திரம் (சிறிய ரம்பம்)

6 அங்குல நீளமுள்ளதும் வேப்பிலையின் ஓரத்தில் காணும் பற்களைப்போன்று, சிறு சிறு பற்களுள்ளதாக இருக்கும். இதனால் பிளவைகளைத் துண்டம் துண்டமாக

அறுக்கலாம். மேலும் இதனால் வட்டம் வட்டமாகவும் வேண்டாத மாம்ஸங்களைத் துண்டிக்கலாம். இதன் நிறை 6 கழஞ்சாகும். (சுமார் ¾ பலமாகும்) கட்டிகளையும் அறுக்கலாம்.

3. குறும்பிவாங்கி

7 அங்குல நீளத்தில் 1¼ வராகனெடையில் ஒரு பக்கத்து நுனியில் கரண்டி மாதிரி குழிவு ஏற்படுத்தி வழவழப்பாகச் செய்யவும். இதற்கு 5 அங்குல நீளமுள்ள மரத்தினாலான கைப்பிடி இடவும்.

4. முகவாதனன்

இக்கருவியின் நிறை 3 ¾ வராகனெடையாகும். 12 அங்குல நீளமுள்ளதாகவும், மூன்று சலாகைகளையுடையதாகவும் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு சலாகையும் வகைக்கு ¾ கழஞ்சு எடையிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

5. முள்ளுவாங்கி

இருமுனைக்கு நடுவில் ஒரு முள்ளுபோல் கூறான தட்டையானதுமான ஆணியை வைக்கவும். இதன் நிறை 1¼ வராகனெடை இருத்தல் வேண்டும். இதனால் கட்டிகளின் வாயை அறுக்கவும். கீறவும் உபயோகிக்கலாம். நகங்களையும் அறுக்க உபயோகிக்கலாம். இரண்டாவதான வகையில் இதன் நீளம் 6 அங்குலமும், அகலம் 1 அங்குலமும் உள்ள கருவி. நிறை 1¼ வராகனெடை இருத்தல் வேண்டும்.

6. ஆழிக்கோல்

இதன் நீளம் 10 அங்குலமாகும். இவ்வகை ஆயுதத்தின் நிறை ½ பலம். இதில் வளையம் உள்ள பாகம் 5 அங்குலமும், மற்ற பாகம் கைக்குள்ளடங்கும் வண்ணம் பிடியுடன் கூடியதாக 5 அங்குலமும் இருத்தல் வேண்டும்.

7. பிழைக்கோல்

இது 9 அங்குலமுள்ள ஆயுதமாகும். அதன் கூறான பாகம் மாத்திரம் எழுத்தாணியைப்போல் 3 அங்குல நீளம் இருத்தல் வேண்டும். அதன் கனமான தலை பாகத்தை அர்த்த சந்திரன் வடிவுள்ளதாகச் செய்து விடவும். இதன் நிறை 3¾ வராகனெடையாகும்.

8. கத்திரிகை

இதன் நீளம் 8 ½ அங்குலமும், நிறை ¼ பலமும் இருத்தல் வேண்டும். மயிர் முதலியவைகளைக் கத்தரிக்க உதவும்.

9. பரகரைவாங்கி (பற்கைவாங்கி)

16 அங்குல நீளமுள்ளதாகச் செய்யவும். அதன் முனையில் துவரம்பருப்பு உட்செல்லும்படியான ஒரு குழிவு இருக்கவேண்டும். இவ்வாயுதத்தின் நிறை ½ பலமாகும்.

10. முச்சலாக (முக்குச்சலாகை)

ஏழு அங்குல நீளமுள்ள மூன்று அலகுகளை (இரும்புத் தகடுகளை) உடையது. இக்கருவியின் நிறை 5 வராகனெடை இருத்தல் வேண்டும்.

11. முனிமொழி

இக்கருவிக்கு "மொழிப்பொட்டு" என்றும் பெயராகும். இதுவும் உபயோகமுள்ளதாகும்.

12. அட்டக்கோல்

இது 18 அங்குல நீளமுள்ளதாகவும் 8 வராகனெடை நிறை உள்ளதாகவும் இருக்கவும். இதனை புளிய இலை கனமுள்ள தகடாகத் தட்டி வைத்துக்கொள்ளவும்.

13. செப்புக்குழல்

ஒரு சாண் நீளமுள்ள செம்பு உலோகத்தினாலாகிய குழாயாகும். இதன் நிறை ½ பலம் இருக்கும். செப்புத் தகடு ஓலையின் பருமனுள்ளதாக இருத்தல் வேண்டும். இக்குழாயைப் புண்களில் விட்டுத் துழாவலாம். இதன் துவாரத்தின் வழியே எண்ணெய் முதலானவைகளையும் இடலாம்.

"ஒரு சாணரைப்பல மோலைக்கனமாய்
விடவாயொக்கத் திரட்சியாகக்
விடமேயெண்ணெய் திலவேயாறுங்
குணமேசெப்புக் குழலதன்செயலே"

என்று 43 நெ. சுவடி "வைத்தியத் திரட்டில்" கூறப் பட்டுள்ளது.

14. ஊசிவகைகள்

இவைகள் 3 அங்குல நீளமுள்ளதாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஊசியின் கனமும் அரை மா (சுமார் 8 குன்றிமணி எடை இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

15. சலாகை

இவ்விடத்தில் "தளிகைச் சலாகையை" எடுத்துக் கொள்ளவேண்டும். இதன் நீளம் நான்கு அங்குலம் இருக்கும். இதன் நுனிபாகம் நெல்லின் கனம் இருக்கவேண்டும். அதன் நுனி கூர்மையாக இல்லாமல் மொட்டையாக இருத்தல் நல்லது. மேலும், இவையே 5 அங்குல நீளத்திலும் செய்து வைத்துக்கொள்ளலாம். கட்டிகளின் ஆழத்தைத் தெரிந்துகொள்ளப் பிரயோஜனமுள்ளதால் "தளிகைச் சலாகை"யெனப் பெயர் வந்தது.

(b). இருப்புச்சலாகை (Director)

20 குன்றிமணி யெடையில் ஒரு சாண் நீளமுள்ள இரும்பினாலானச்சலாகை, புண்களின் துவாரத்தினுள் விட்டு மேலே அறுக்கலாம்.

(c). **சலாகை (வேறுவிதம்)**

60 குன்றிமணி நிறையில் 9 அங்குல நீளமுள்ள சலாகையாகும். இதனால் சூடுகள் போட உதவும். இதற்கு ஆதாரம் 43 நெ. சுவடியில்

"கண்ணுறப் பார்த்துக் கருதி வெதுப்பிடு
சொன்னவை சொன்ன சலாகைதன் செயலே"

என்று காணப்படுகிறது.

16. **வட்டகை**

இது ஒருவகைக் கருவி, உருவம், நிறை முதலியவைகள் காணப்படவில்லை.

17. **பஞ்சமுகச் சலாகை**

இதற்குப் "பஞ்சமக்கோலென்றும்" வேறுபெயர். பதினோறு அங்குல நீளத்தில் ஒரு செம்பினால் சலாகை தயாரித்து அதன் நுனியில் 5 கண்கள் (முளைகளைப் பொருத்தி) வீக்கும், சூலை முதலியவைகளின் மேல் வைத்துச் சக்கரம்போல் சுழற்றவும். இதன் நிறை 7½ வராக னெடை இருத்தல் வேண்டும்.

18. **செப்புச் சலாகை**

ஒரு சாண் நீளத்தில், அரையயேரைக்கால் வராகனெடையில் (20 குன்றிமணி நிறை) செம்பு உலோகத்தைக்கொண்டு இச்சலாகையசைச் செய்து வைத்துக்கொள்ளவும். இதைப் புண்களின் துவாரத்தினுட் செலுத்தி அதன் ஆழத்தைத் தெரிந்து கொள்ளலாம். தலையில் கீறி, அதனுள் இச்சலாகையைக்கொண்டு காரத்தை உட்செலுத்தலாம். (இம்மாதிரிப் பிரயோகங்கள் ஜன்னியிலும், பாம்பு முதலான விஷ ஜந்துக்கள் கடித்து மயங்கியவர்களுக்கும் பயன்படும்.)

19. காயக்கோல்

இதன் நீளம் 7 அங்குலமாகும். இதன் நிறை $^{1}/_{8}$ பலமாகும். இரண்டு விரல் பருமனுள்ளதாகச் செய்யப் பட்ட சலாகையாகும்.

20. தெண்டுச்சலாகை

ஈர்க்கின் பருமனுள்ளதாகவும் 9 அங்குல நீளமுள்ளதாகவும் செய்யப்பட்ட கருவி. இதன் நிறை 20 குன்றிமணியெடை இருத்தல் வேண்டும். இது பிளைவைப் புண்களைத் தீய்த்துவிட உபயோகமாகும்.

21. நயனக்கத்தி

இதன் நீளம் 3 அங்குலந்தானிருக்க வேண்டும். நிறை $3\ ^{1}/_{8}$ குன்றிமணியாகும். அதன் முனை கூராக இருத்தல் வேண்டும்.

இவ்வித நயனக் கத்தியைக் கண்களுள் குத்தும் போது குத்தும் பாகம் ஒரு நெல்லளவிலிருக்கும்படி விட்டுக் கத்தியின் மற்ற பாகங்களை நூலினால் சுற்றிவிடவும். அப்போதுதான் இச்சஸ்திரத்தினால் நேத்திர காசரோகத்தைக் குத்துகையில், அதிக ஆழத்திலுள்ள உருப்புகளைக் குத்தாமல் பாதுகாக்கும்.

பத்திநெல்லெடை விட்டப்பால் பலப்பட
நூலால்சுற்றிச்
சித்திரமாகக் குத்தி சிறந்ததோர் சலாகைவிட்டு
கத்தியே மூன்றுகாலஞ் சுழிதனில் நீலம்பாரில்
வெத்தியாய்த்தெளித்து நன்றாய் விரைவுடன் வெளி
யதாமே.

(அக. நயன விதி செய். 79)

22. ஒட்டுக்கோல்

இதன் நீளம் 11 அங்குலமாகும். இக்கருவியின் தலையின் நிறை 1¼ வராகனெடை இருக்கவேண்டும். இதன் உடலின் நிறை ½ பலமாகும்.

23. கொம்பு

10 அங்குல நீளத்தில் காளைமாட்டின் கொம்பைப் போல் அடிபாகம் விரிந்து நுனியில் வரவரச் சிறுத்தும் இருக்கவேண்டும். இதற்கு வாழைமுக்குறுத்தைப்போல ஒரு பூண் பித்தளையினால் இடவேண்டும். அதன் நீளம் 2 அங்குலம். சரீர லீக்கம், கட்டி முதலானவைகளைக் கிறி இரத்தத்தை வெளிவரச்செய்து இதி கொம்பை வைத்து உறிஞ்சவும்.

24. வெங்கலக்குழல் (Brass Flatus tube)

இதற்கே அபானக்குழல் என்ற பெயரும் உண்டெனத் தோன்றுகிறது. இது 8 அங்குல நீளமுள்ள உலோகத்தினாலான குழாயாகும். அபானத் துவாரத்திற்குள் நுழையும் வண்ணம் இருத்தல் வேண்டும். இதன் நிறை 3½ பலமாகும். இதைக்கொண்டு ஆஸன த்வாரத்திற்குள் புகை பிடித்துக்கொள்ளலாம்.

25. சயச்சலாகை

இது மூன்று அங்குலமுள்ள ஒரு ஆயுதம். இதன் நிறை 5 வராகனெடையாகும். இதனால் பிளவைகளையும் கிருமியுள்ள புண்களையும் ஆற்றிவிடலாம்.

26. குடோரி

இது 7½ அங்குல நீளத்தில் ¼ பலம் நிறையில் (கோடாரி) போன்ற ஒரு ஆயுதமாகும்.

இவைகளையன்றி பிறுமா என்று பெயருள்ள ஒரு ஆயுதம் உண்டென்றும், அதன் நீளம் 5 அங்குலம் என்றும் கூறுகிறார். அக்கருவியின் நிறை ¼ பலம் என்றும் காணப்படுகிறது. அதன் பிரயோஜனங்களைக் கூறும் செய்யுட்களின் பொருள் நன்றாக விளங்கவில்லை. மேலும் இச்சத்திரத்தை வைத்துக்கொண்டே முன்காலங்களில் பற்பல சஸ்திர சிகித்ஸைக்குச் சாத்யமான வியாதிகளையும் குணப்படுத்தியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.



ஓம் :

சரபேந்திரர் வைத்திய முறைகள்

விரணரோக சிகித்ஸை

1. விரணங்களுக்குப் "பாடாண எண்ணெய்"

சலாசத்து மரைப்பலம் பாடாண
மொருபலமுஞ் சம்பீரநீர்
உலாவரைத் துத்தமொரு துட்டிடையை
நேகவரைத் துரைசரக்கு
னிலாங்கவசம் பொதிந்துமிரண் டுமண்சே
லைசெய்து மிதைமணற்குட்
கலாவிவை மேலாவரளி நெருப்பிட்டு
மண்கருகக் கண்டெடுத்தே. 1

எடுத்தபின் பொடிசெய்து மொருநாழி
முத்தினெண்ணெ யிதிலும்போட்டு
அடுத்துரவிப் புடத்தில்வைத் தெடுத்துப்
புண்சிலந்தி யழுகுணிக்கும்
படு(ழு)த்துடையாக் கட்டிவரை புரைகளுக்கு
முதலான பலபுண்ணோய்க்குங்
கொடுத்திடு மேற்றவடச் சரபோசி
மகாராசன் கூறுவாரே. 2

(இதன்பொருள்)

சுத்திசெய்த சிலாசத்து ½ பலம்
,, வெள்ளைப்பாஷாணம் 1 பலம்

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக (4 சாமங்கள்) அரைத்து, ஒரே வில்லையாகத்தட்டிச் சுத்தி செய்த துத்தம் 1 வராகனெடையை ஷி சாறு விட்டு அரைத்து வில்லையின்மேல் பொதிந்து காயவைக்கவும்.

மறுநாள், வில்லையை எடுத்து அதற்குமேல் சீலைமண் இரண்டு தடவை செய்துகொண்டு காயவைத்து, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் மணலை நிறப்பி, அதற்குள் மேலே சொன்ன வில்லையை வைத்து மூடிவிடவும்.

பிறகு, பாத்திரத்திலுள்ள மணலுக்குமேல் வரளிகளை யடுக்கித் தீமூட்டவும். பாத்திரத்திலுள்ள மண் கருகியவுடன் தீயை யணைத்து, வில்லையையெடுத்துக் கல்வத்தி லிட்டுப் பொடி செய்து,

சுத்தமான ஆமணக்கெண்ணெய் 1 படியுடன் குழப்பி, வெயிலில் வைக்கவும். 10 நாட்கள் சென்றபின் இந்த எண்ணெயை எடுத்து

புண்	சிலந்தி
அழுகுணிப்புண்	பழுத்து உடையாத கட்டி
புரை	

முதலிய பற்பல விரணங்களுக்கும் மேலே தடவக் குணம் ஏற்படும்

2. புண்ணிற்குக் காரச்சீலை மருந்து

மஞ்சள் நன்றாய்ப் பொடிசெய்து மெலுமிச்சம்
பழச்சாறு வார்த்துநேக
மிஞ்சவரைத் ததைச்சீலை மேலூட்டி
யும்நிழலில் விரித்துலர்த்தி

வஞ்சமிலா திதைவைத்துப் புண்புரைக
டனிற்போட வாறிப்போகும்
தஞ்சைநகர் பெருமானுஞ் சரபோசி
மகராசன் சாற்றுமாறே. 3

(இ-ள்)

மஞ்சளை வேண்டிய அளவெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இத்தூளைக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாக மைபோலரைத்து, ஒரு வெள்ளைத் துணியில் ஊட்டி, நிழலில் காயவைக்கவும்.

இத்துணியை புண், புரை முதலியவைகளின்மேல் வைத்துக் கட்டவும். அல்லது உள்ளேசெலுத்தவும், புண்களும் ஆறிவிடும்.

3. மற்றொரு "காரச்சீலை"

தூரிசியதைப் பொடிசெய்து மெலுமிச்சம்
பழச்சாறுஞ் சொல்முசுக்கைக்
கரிசாலை நாயுருவி யிலைச்சாற்றி
னாலரைத்துச் சீலைமேலூட்டி
விரிநீழ லுலத்திட்டு மிச்சீலைக்
காரமதை விரணந்தீர
எரிபுண்ணில் மேற்றடவ நீர்வற்றும்
பின்சேர்வை யிடலாம் பாரே. 4

(இ-ள்)

துரிசை (1 பலம்) கல்வத்திலிட்டுப் பொடிசெய்து கொண்டு,

எலுமிச்சம்பழச்சாறு
முசுமுசுக்கைச்சாறு
கையாந்தகரைச்சாறு
நயுருவியிலைச்சாறு

இவைகளை விட்டுத் தனித்தனியே (ஒவ்வொரு) நாளுமரைத்து ஒரு வெள்ளைத் துணியிலூட்டி நிழலில் காயவைக்கவும்.

இச்சீலையினால் புண்களைக் கட்டவும். இதனால் நீர்வடிதல் நிற்கும். பின்பு சேர்வை (பிளாஸ்திரி)களை இடலாம்.

4. புண்களுக்கு வெள்ளாறுகு நெய்.

வெள்ளாறுகு மிடித்தண்ணீ ராங்குறுணி
பழந்தின்னி மேற்பாலைத்தோல்
சொன்னிபல மெண்ணான்கு மிடிபதக்கு
நீர்வார்த்து மெட்டொன்றாக
வள்ளியதாய்க் காய்ச்சிவடி முன்சாறு
நாழிநெய்யு மதில்நாழிப்பால்
நள்ளிவிட் டதிமதுரம் பாலைகுமி
ழிலாமிச்சு நன்னாரிவேரே. 5

வெட்டியவேர் கழந்தில்வேர் குங்கிலியம்
பொன்மெழுகு மிகுந்த கோட்டங்
கொட்டியதின் கிழங்குசந்தங் கச்சோல
முந்திரிகோ ரைக்கிழங்கும்
மட்டியல்லி மூலந்தா மரைவளையம்
வெள்ளாறுகு வனக்கச்சோலம்
இட்டிடந்த வகையொன்றுக் கிரண்டு கா
சொடையரைத் திடுகலந்தே. 6

முத்தினங்கள் சிறுகொதியா யிட்டெரித்து
நாலாநாள் முறைவடித்து
இத்தையிரு காசெடைகொள் ளிருநேரம்
புண்ணிலிடு மேகமாம் வீக்
கத்திலிடும் வைசூரிபுண் ரத்தபித்தங்
கிரந்தித்தீக் காயத்திற்கும்
பித்தச்சீதம்புரைக ளாறாத
புண்களெல்லாம் பெயர்ந்துபோமே. 7

(இ-ள்)

வெள்ளறுகுச்சாறு 1 மரக்காலுடன்

பழந்தின்னிப்பாலைப்பட்டை 32 பலத்தை எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து 2 மரக்கால் ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டிய கஷாயத்தையும் கலந்துகொள்ளவும். இதனுடன்,

பசுவின் பால் 1 நாழியும் (பட்டணம் படி ¼)
,, நெய் 1 ,, ,,

விட்டு ஒன்று கலந்து,

அதிமதுரம்	பாலைப்பட்டை
குமிழம்வேர்	இலாமிச்சம்வேர்
நன்னாரிவேர்	வெட்டிவேர்
கழந்தில்வேர் (கழற்சி)	குங்கிலியம்
பொன்மெழுகு	கோஷ்டம்
கொட்டிக்கிழங்கு	சந்தனத்தூள்
பூலாங்கிழங்கு	திராக்ஷப்பழம்
கோரைக்கிழங்கு	அல்லிக்கிழங்கு
தாமரையிலைச்சுருள்	வெள்ளறுகு
*அடவிக்கச்சோலம்	

---

* மலையாள மருந்துக்கடைகளில் கிடைக்கும். (காட்டுப்பூலா)

பழந்தின்னிப்பாலை, பழமுன்னிப்பாலை அதாவது கொடிப் பாலையாகும்.

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து மேற்சொன்னகஷாயம் விட்டு நன்றாகவரைத்து, நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி 3 நாட்களுக்குச் சிறுகச்சிறுக எரிக்கவும். 4வது தினத்தன்று நெய்யைப் பக்குவப்படுத்தி அடுப்பின் மேலிருந்து இறக்கி வடிக்கட்டிப் பத்திரப்படுத்தவும்.

இந் நெய்யைத் தினம் 2 வேளை இரு காசெடை (½தோலா) வீதம் உட்கொண்டு, வீக்கம், வைசூரிப்புண், இரத்தபித்தம், கிரந்தி, நெருப்புச்சுட்ட புண்கள், சீத பித்தம், ஆறாத புண் முதலியவைகளுக்கும் மேலே பூசவும். குணமுண்டாகும்.

5. புரை, புண்களுக்கு எண்ணெய்

கொடிவேலி வேரரைத்துச் சர்க்கரையுந்
தான்சலந்து கொள்பிசைந்து
அடை தட்டி நல்லெண்ணெயி லிதைப் போட்டுப்
பொன்னிறம்போ லாயெரித்து
வடியிதை புண்களுக்கும் புரைக்குள்ளு
மெண்ணெய் விட்டு வாட்டத்தீரும்
படிபுகழுஞ் சரபோசி மகராச
னிம்முறையும் பகருந்தானே. 8

(இ-ள்)

நரம்பை நீக்கிய கொடிவேலிவேர்
சர்க்கரை (வெல்லச்சர்க்கரை)

இவ்விரண்டையும் தண்ணீர்விட்டுக் கைபடாமல் அரைத்து அடைதட்டிக் காயவைத்துக்கொண்டு,

அதிலொன்றை நல்லெண்ணெயிலிட்டு அடுப்பின்மேல் வைத்து, எரித்துப் பொன்னிறமாகியவுடன் இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்.

இந்த எண்ணெயைப் புண் புரை இவைகளுக்கு இடவும். குணமுண்டாகும்.

6. புரை, புண், கடுப்பிற்கு மருந்து

பாதர தமிருபல மபினரைப்ப
லம்பூரம் பலமரைதான்
ஓதுபொரி யரிசிமாவு முக்குடனல்
லவெல்ல மொருகொட்டைப்பாக்
கீதம்மி யிடையில்வைத் துமிரதத்தாற்
குழம்பாக்கி யிதில்பின்றானு
சீதகர்ப்பூ ராதியரை பொரிமாவு
முறவாகச் சேர்த்தரைத்தே. 9

இருபத்தி னாலுருண்டை யிருவேளைக்
கிரண்டுங்கொள் ளிதுமுன்னான்கு
வருநாட்கள் பதிமூன்றாம் தினமாறப்
போட்டுமுத்தின் வார்க்குமெண்ணெய்
பெருகவே தலைதேய்த்து மரப்பிட்டு
வெந்நீராற் பெய்து மூழ்கு
முருங்கைக்கா யிலைச்சாறு மிளங்கீரை
யரைக்கீரை முழிநெய்க்கோலே. 10

கருவாடு மீருளியு மிவையெல்லா
முப்பிலியே கண்டுமுட்கொள்
இருபத்தி யத்துடனுஞ் சுடுநீரி
லுங்குளிக்க விருவேளைக்கும்

இருபதுநா ளிப்படியே கொடுத்துவரப்
புண்கடுப்பு மேகவீக்கம்
இருசூலைப் புரையோடு மிவைதீரச்
சரபேந்திர னியம்பினாரே. 11

(இ-ள்)

சுத்திசெய்த	பாதரஸம்	2 பலம்
,,	அபின்	½ பலம்
,,	*கர்ப்பூரம்	½ பலம்
பொரியரிசிமா		ஒரு உழக்கு
வெல்லம்		கொட்டைப்பாக்களவு

இவைகளை யெடுத்துக்கொண்டு முதலில் வெல்லத்தை அம்மியின் நடுவில் வைத்து, அதன்மேல் பாதரஸத்தைச் சிறிது சிறிதாக விட்டு அரைக்க அது குழம்பாகும். பின்பு, அபின், கர்ப்பூரம், மாமுதலியவைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து நன்றாக மசியும்வரை அரைக்கவும்.

இம்மருந்தை 24 உருண்டைகளாகச் செய்துகொண்டு, தினமும் காலையில் ஒரு உருண்டையும், மாலையில் ஒரு உருண்டையுமாக உட்கொள்ளவும். இவ்வாறு 12 நாள் உட்கொண்ட பிறகு 13வது நாளன்று ஆமணக்கெண்ணெய் தேய்த்து, அரப்பிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

பத்தியம்:

முருங்கையிலை, முருங்கைக்காய், இளங்கீரை, அரைக்கீரை, கருவாடு (இரா, நெற்றலி முதலிய மீன் வகைகள்) ஈர வெங்காயம் முதலியவைகளைக் கூட்டிக் கொள்ளவும்.

உப்புச் சேர்க்காமலிருக்கவும், தினம் 2 வேளை வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். இப்படி 20 நாளைக்குச் செய்யவும்.

---

* ரசகர்ப்பூரம் எனலாம்.

தீரும் வியாதிகள்:

புண், கடுப்பு, மேகம், வீக்கம், சூலை, புரை முதலியவை.

7. விரணம், சிலந்திக்கு உருண்டை

சித்திரமூ லமிரண்டு பலமைந்து
(பலம்) பரங்கிச் சேர்ந்த பட்டை
முத்துபுளி யம்புராணி சுட்டக்கரி
யொன்றேகால் மொழிபலந்தான்
வைத்தபெருங் கரந்தைச்சா றிட்டரைத்துக்
கடுக்காயின் மட்டுருட்டி
உத்திதனைக் கொள்சகலப் புண்சிலந்தி
போம்பத்திய மொழிந்துதானே. 12

(இ-ள்)

பாலில் வேகவைத்த

	கொடிவேலி வேர்ப்பட்டை	2 பலம்
,,	பரங்கிப்பட்டை	5 பலம்
	புளியம்புராணி சுட்டகரி	1¼ பலம்

இவைகளைக் கல்வத்திலிட்டுப், பெருங்கரந்தைச் சாறுவிட்டு, நன்றாக (4 ஜாமங்கள்) அரைத்துக் கடுக்காய்ப் பிரமாணமுள்ள உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

தினமும் ஒரு உருண்டை வீதம் உட்கொள்ளவும்.

புண், சிலந்தி இவை தீரும். இச்சா பத்தியமாக இருக்கவும்.

8. புண் களிம்பு

அரிதாரம் நவச்சாரம் வங்காளப்
பச்சைகெந்தி யாம்வெங்காரந்
துரிசிந்த வகையொன்றுக் கைந்துவரா
கனெடைதா னரைக்கரைத்துப்
பெரியசம் பீரமதைக் குடைந்துள்ளே
புகமூடிப் பேணிவைத்துத்
தரிமூன்று சீலைமண்செய் மூவரளிப்
புடமிட்டுத் தானெடுத்தே. 13

எடுகல்வத் திடுதாளி யிலைகையா
னிலைவேலியின் பருத்தி
யடையிந்த மூன்றுவகைச் சாற்றையிட்டு
மிருசாம மரைத்துத் தாலத்
திடுபுறம்பே வைபசுவின் வெண்ணெயிட்டு
மிழைத்துப்பின் சிமிழிலிட்டுத்
தொடுபுண்கள் புரையோடல் தன்னிலிடக்
காய்ந்துவிடுஞ் சுகந்தானாமே. 14

(இ-ள்)

சுத்திசெய்த	தாளகம்
,,	நவச்சாரம்
,,	வங்காளப்பச்சை
,,	கெந்தகம்
,,	துரிசு
பொரித்த	வெங்காரம்

இவைகளை வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டுத் தூள் செய்துகொண்டு, ஒரு பெரிய எலுமிச்சம் பழத்தை குடைந்து, அதற்குள்ளடைத்து, 3 தடவைகள் சீலைமண் செய்யவும். காய்ந்த பின்பு 3 வரளிகளை அடுக்கி அதனுள் இதை வைத்துப் புடமிடவும். ஆறியபின், புடத்தை விலக்கி, எலுமிச்சம்பழத்தையெடுத்துக் கல்வத்தில் வைத்துத்

தாளியிலைச் சாறு
கையாந்தகரைச்சாறு
வேலிப்பருத்திச்சாறு

இவைகளைத் தனித்தனியே விட்டு, 2 ஜாமங்கள் வீதம் அரைத்துக் கல்வத்தினொரு புறம்பில் வைத்து, வேண்டிய அளவு (சரிபாகம்) பசு வெண்ணெய் கூட்டி மறுபடியும் ஒன்று சேரும்படி அரைக்கவும். இக்களிம்பை யொரு சிமிழில் பத்திரப்படுத்தவும்.

புண்கள், புரையோடும் புண்கள் முதலியவைகளுக்கு மேலே தடவவும். இரணங்கள் காய்ந்து சுகமுண்டாகும்.

9. புண், சூலைகளுக்கு "இடி லேகியம்"

கொடிவேலிவேர் சேங்கொட்டைக் கருஞ்சீர
மோமமுள்ளி கொப்பரைக்காய்
குடிவெல்லம் வகையொன்று பலமொன்றாய்ச்
சேகரித்துக் கொண்டிதெல்லாம்
இடிலேகி யம்போலே செய்துகொட்டைப்
பாக்களவா யெடுத்துட்கொள்ளும்
படிபுளிப்புப் புகைதள்ளி யிருபதுநா
ளுண்சூலை பலபுண்போமே. 15

(இ-ள்)

சுத்திசெய்த கொடிவேலி வேர்ப்பட்டை
,, சேராங்கொட்டை
ஓமம் பூண்டு
கருஞ்சீரகம் கொப்பரைத்தேங்காய்
வெல்லம்

முதலிய சரக்குகளை வகைக்கு ஒரு பலம், வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டுப் பூணில்லா உலக்கையினால் மையாக இடித்து, லேகியம்போலச் செய்து வைத்துக் கொள்ளவும்.

இதிலொரு கொட்டைப் பாக்களவெடுத்துத் தினம் ஒரு வேளை வீதம் 20 நாளைக்கு உட்கொள்ளவும்.

பத்தியம்:

புளி, புகையிலை இவற்றை நீக்கவும்

தீரும் வியாதிகள்:

சூலை, புண்கள் முதலியன. கைகண்டது.

10. புண்களுக்கு எண்ணெய்

கள்ளியினீர் வசுவாசி நறுந்தாளி
தாளிசிறு கத்திரி யாகு
முள்ளவிலை தனிற்சாறு முத்தினெண்ணெய்
வேம்பினெண்ணெ யும்கலந்தே
துள்ளுகொதித் திட்டபின்பு சாதியின்காய்
வத்ஸநாபி துரிசுதானும்
உள்ளசெங்க தாரித்தோல் வகைக்கோர்நிட்
கந்தூளு மிட்டிறுத்தே. 16

(இ-ள்)

இலைக்கள்ளிச்சாறு (1 உழக்கு)
ஆடாதோடையிலைச்சாறு ,,

நறுந்தாளிச்சாறு	,,
நல்லதாளிச்சாறு	(1 உழக்கு)
சிறுகத்திரிச்சாறு	,,
வேப்பெண்ணெய்	,,
ஆமணக்கெண்ணெய்	,,

இவற்றையொன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கிச்

சாதிக்காய்	வத்ஸநாபி
துரிசு	செங்கதாரிப்பட்டை

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துத் தூள் செய்து எண்ணெயுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளவும்.

*இந்த எண்ணெயைப் புண்களுக்குப் போடவும். புண்களும் ஆறும். புழுவும் சாகும்.

11. மேகப்புண்ணிற்கு மருந்து

வசம்புள்ளி யுழலத்தி யிலைமூன்றுந்
தன்னிலொக்க வாங்கரைத்து
நிசங்கரைத்துக் குடிக்கப்போ மிருதார
சிங்கியுந்தா னிட்கங்கூட்டி
வசந்துரிசந் தளவாய்நல் லெண்ணெயைக்
குத்தியிட்டு மசியரைத்தே
நிசம்பூசப் புண்புரைகள் காய்ந்தும்போ
மிம்முறையும் நேர்த்தியாமே 17

*செய்யுளில் இந்த விஷயம் காணப்படாவிடினும் 72 நெ.சுவடியில் காணப்படுகிறது.

(இ-ள்)

உள்ளுக்கு

ஊழலத்தி இலை பூண்டு		வசம்பு

இம்மூன்றையும் சமனெடுத்து, அம்மியின்மேல் வைத்து, அரைத்துத் தண்ணீருடன் கலக்கிக் குடிக்கவும்.

மேலுக்குப் பூச

சுத்திசெய்த	மிருதார்சிங்கி	1	வராகனெடை
,,	துரிசு	1	,,

இவைகளை நன்றாக நுணுக்கி நல்லெண்ணெய்(¼ சேர்) விட்டு நன்றாக மைபோல அரைத்து அதனுடன் குழைத்து வைத்துக்கொள்ளவும்.

இதை மேலுக்குத் தடவப்புண், புரைகள் முதலியவை காயும்.

12. சிரங்கிற்குச் "சேர்வை" (பிளாஸ்திரி)

*துடிபூரஞ் சாம்பிராணி மனோசிலை
யோர்வகைக்கோர் துட்டெடைக்குப்
பொடிசெய்து மொன்றரைச்சேர் நறுநெய்யிற்
கலந்திட்டு போடக்கேளு
படிதவலைக் குள்ளிட்டுக் கிட்டி கட்டிக்
காய்ச்சிடுந்தீப் பத்தும்பின்பு
வடிகுண்டுச் சட்டிதனில் நிறையநீர்
இட்டதிலும் வாற்றிடாயே. 18

* தருடி என்னும் வடமொழிச்சொல்லின் திரிபு.

வாற்றிதனை யாறவிட்டுப்பின் வழித்து
வைத்திடுவாய் வலிசிரங்கின்
மேற்றடவி நாற்கடிகையூறவிட்டுப்
பின்குடித்து விடுவாய்மீளச்
சாற்றுதின மிருமூன் றுமிப்படியே
செய்திடுவாய் தடவிக்கொண்டு
மாற்றிடநீர்க் குளித்திடப்போஞ்சிரங்கு குண
மாமிது மகிழ்ந்துசெய்யே. 19

(இ-ள்)

ஏலக்காய்	ஆலத்திக்கர்ப்பூரம்
சாம்பிராணி	சுத்திசெய்த மனோசிலை

இவைகளை வகைக்கு ஒரு துட்டெடை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடிசெய்து,

பசுவின் நெய் 1½ சேருடனே குழப்பிக்கொண்டு, ஒரு தவலைக்குள் ஊற்றி, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து, ஒரு கிட்டியினால் கிளறவும். அது எரிய வாரம்பிக்கும்.

ஒரு குண்டுச் சட்டியில் குளிர்ந்த தண்ணீரை நிரப்பி அதில் மேலே சொல்லப்பட்ட மருந்தை ஊற்றவும்.

சிறிதுநேரஞ் சென்ற பின்பு அது நன்றாக ஆறியவுடன், வழித்து ஒரு பீங்கானில் பத்திரப்படுத்தவும்.

இதனைச் சிரங்குகளுக்குப் பூசி 4 நாழிகை நேரம் ஊறவைத்துப், பின்பு ஸ்நானம் செய்யவும். இவ்வாறு 6 நாளைக்குத் தடவிக் குளிக்கவும். சிரங்குகள் குணமாகும்.

13. புண், கிரந்திகளுக்குச் சாதிலிங்கச் சேர்வை

20, 21ஆவது செய்யுட்கள் உள்ள ஏடு சுவடியில் காணப்படாததால் 72 நெ. சுவடியிலிருந்து எடுத்த அதற்கான உரைகீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

துத்தம்	½	வராகனெடை
துரிசு	½	,,
வெங்காரம்	½	,,
வெள்ளைக் குங்கிலியம்	1	,,
படிக்காரம்	½	,,
மெழுகு	3	,,
சாதிலிங்கம்	2	,,

செய்முறை:

துத்தம், துரிசு, வெங்காரம், படிக்காரம் இந்நான்கையும் கரண்டியிலிட்டுப் பொரித்துக் கொள்ளவும். இவைகளை ஒரு அம்மியில் வைத்துவிட்டபின், அக்கரண்டியில் தேங்காயெண்ணெய் ஒரு உழக்கு வார்த்து, மெழுகைப்போட்டு தணலில் வைத்து உருக்கவும். ஒன்றான பின்பதை அம்மியின் மேலுள்ள சரக்குகளுடன் விட்டு சாதிலிங்கத்தையும், குங்கிலியத்தையும் சேர்த்து, நன்றாக அரைத்துச்சிமிழில் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது ஒரு வெள்ளைத் துணியில் தடவிப் புண்களில் போடப் புண்கள் ஆறும்.

14. பொரி கிரந்திக்குப் புகை

சூதமிரு நிட்கம் வங்கமிரண்டு
நிட்கமிதிற் சொல்வங்கத்தை
யோது கரண்டியிலிட்டு மூன்று திறம்
பூமியின்மேலுருக்கிச்சாய்த்து

யீதிரண்டுங் கூட்டியபின் செம்பரத்தைப்
பொடுதலை யினிலைகரிப்பான்
மாதுளசிச் சாறும்வெவ்வேறாக விட்டுக்
காய்ச்சிவிடமகாசத்தாமே. 22

சத்தியதாம் பின்னெடுத்துப் பதனஞ்செய்
புண்ணினுக்குத் தக்கதாக
வித்தைமுக்கா லரைநிட்கம் பிரமாணஞ்
சேலையிலே யிட்டுக்கட்டி
போத்துபுளி யந்தழலி லாறுதினம்
பனிரெண்டு பொழுதுதானுஞ்
சுத்தபுகை போட்டிடவு மந்திசந்தி
மறவாமற் சொல்லக்கேளே. 23

குளிர்ந்தநீர தனல்மூழ்கி யோருண்டை
புகைக்காட்டிக் கொள்நீர்ச்சோறும்
புழுங்கன்ன மீருளியு முப்பிலியா
யசனஞ்செய் போதிரண்டுங்
குளிர்ந்தநீர தினிலிருந் தைந்தாறு
தினங்கழித்துக் கொட்டையெண்ணெய்
வளர்தலைக் கிட்டப்பால் முழுகிருபா
னாட்பத்திய மாகுந்தானே. 24

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம் 2 வராகனெடையும்
,, வெள்ளீயம் 2 வராகனெடையும்

எடுத்துக்கொண்டு, முதலில் வெள்ளீயத்தை ஒரு இரும்புக் கரண்டியிலிட்டுத் தணலில் வைத்து உருக்கி 3 முறை (மண்) தரையில் சாய்க்கவும். நாலாவதுமுறை இது

உருகும்போது பாதரஸத்தை விட்டுத் தொந்திக்கவும். (குச்சியினால் கிளறி ஒன்றாகச் செய்யவும்.)

பின்பு அக்கலவையைச்

செம்பரத்தைச் சாறு
பொடுதலைச்சாறு
கையாந்தகரைச்சாறு
துளசிச்சாறு

முதலான சாறுகளுடனே தனித்தனியாகக் காய்ச்சவும். நல்ல சத்தாகும்.

பின்பு இதை பத்திரப்படுத்திக்கொண்டு, புண்ணிற்குத் தக்கபடி ¾ முதல் ½ வராகனெடைப் பிரமாணமெடுத்து, ஒரு வெள்ளைத் துணியில் முடிந்து புளியந்தணலில் போட்டுப் புகை பிடிக்கவும். இவ்வாறு 6 நாட்களுக்கு 12 பொழுது இடவும்.

குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தபின் உருண்டைகளைப் புகைக்கவும்.

பத்தியம்:

புழுங்கலரிசி நீர்ச்சோற்(பழையது)றை இருவேளைகளிலும் உப்பில்லாமல் சாப்பிடவும். 5 அல்லது 6 நாட்கள் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தபின் ஆமணக்கெண்ணெயைத் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யவும். பின்பு 20 நாளைக்குப் பத்தியமாக இருக்கவும்.

குறிப்பு:

72 நெ. சுவடியில், திராய், புளித்த பழுபாகலிலை, பாகற்காய் கூட்டவும் என்று காணப்படுகிறது.

15. சிரங்கிற்கு எண்ணெய்

எள்ளிணெண்ணெய் காற்படியில் வாழையின்கா
யிரண்டரைத் திடுகலந்துந்
தள்ளுமன்ற பதமாக வேயெரித்துச்
சிரங்குபடர் தாமரைக்குங்
கள்ளவண்டு கடிதன்னிற் பூசிடப்போ
மிம்முறைகை கண்டதாகும்
பிள்ளைவண்டு சிறகாற்று மாலையணி
தோட்சரபப் பெருமான்சொல்லே. 25

(இ-ள்)

சுத்தமான நல்லெண்ணெய் ¼ படி

எடுத்து, அதனுடன் (முற்றிய) வாழைக்காய் இரண்டை எடுத்து நன்றாக அரைத்துக் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடித்து இறக்கவும். (மணல் பதம்) இந்த எண்ணெயைச் சிரங்கு, வண்டுகடி, படர் தாமரை முதலிய இரணங்களுக்கு மேலே பூசவும். மிக்க குணம் தரும். கைகண்டது.

16. சிரங்கிற்கு மருந்து

அரிதாரங் கெந்திரசம் வகைக்கொரு
வராகனெடை யளவூமத்திற்
பரிசாறும் வாற்றரைத்து மெள்ளினெண்ணெய்
தனிற்போட்டுப் பருதிமுன்னம்
எரியாகப் புடமாக வைத்தெடுத்து
மேற்றடவி யிடுமோரன்னம்
பரிதியிட்டு மேதிச்சாணம்பூசிமுத்
திணங்குளிக்கப் படுபுண்போமே. 26

(இ-ள்)

சுத்திசெய்த ரஸம்
,, கெந்தகம்
,, தாளகம்

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடையெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து ஊமத்தையிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து, எள்ளெண்ணெய் (½ சேரில்) குழப்பிச் சூரிய புடமாக வைக்கவும். (10 தினங்கள் சென்றபின்) இதை சிரங்குகளுக்குத் தடவி, மோர் சாதம் சாப்பிடவும், எருமைச்சாணியிட்டுக் குளிக்கவும். இவ்வாறு 3 நாட்கள் செய்யச் சிரங்குகள் குணமாகும்.

17. புண், புரைகளுக்குப் புகை

பாதரத மூன்றுநிட்க மவலெருக்
கரியும் பாடாணந்தான்
ஓதியசேங் கொட்டைவகைக் கொருநிட்க
மிடைகூட்டி யுற்றமேனி
மூதுசெருப் படிச்சாற்றை விட்டரைத்துப்
பன்னிரெண்டு முருட்டுருண்டை
யீதுவைத்து மந்திசந்தி யாறுதினம்
புகைபோட்டு மிருந்துகேளே. 27

மீளொருநாள் விட்டுநன்னீர் தனில்மூழ்கி
மேற்குளிக்க வேழுநாட்க
றானொருபத் தியங்கேளும் பாகலிலை
திராயாகுந் தான்பாகற்காய்

---

* 72வது கவடியில் இம்மருந்திற்குப் புகை மருந்துச் சேர்வை என்ற பெயர் காணப்படுகிறது.

நீளுபுளி யிட்டுங்கொள் ளிதற்குப்புண்
கிரந்திகளும் நிணங்களாறுங்
கோளரியாய் பகையோட்டுஞ் சரபேந்திரன்
இம்முறையுங் கொடுத்ததாமே. 28

(இ-ள்)

சுத்திசெய்த	பாதரஸம்	3	வராகனெடை
,,	வெள்ளைப்பாஷாணம்	1	,,
,,	சேராங்கொட்டை	1	,,
வெள்ளெருக்கங்கரி		1	,,
அவல்		1	,,

இவைகளைக் கல்வத்திலிட்டு நசுக்கிக்

குப்பைமேனிச்சாறு
செருப்படிச்சாறு

இவ்விரண்டையும் தனித்தனியே விட்டு (மூன்று ஜாமங்கள்) அரைத்துப் பன்னிரண்டு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். காலையிலும், மாலையிலுமாகத் தினம் 2 தடவை இம்மாத்திரையைத் தணலிலிட்டுச் சிரங்கிற்குப் புகை பிடிக்கவும். இவ்வாறு 6 நாளைக்குச் செய்யவும்.

பின்பு ஏழாவது நாளன்று ஒன்றும் செய்யாமலிருந்து, மறுநாள் குளிர்ந்த ஜலத்தில் முழுகி ஸ்நானம் செய்யவும். இவ்வாறு 7 நாளைக்கு ஆழ்ந்து குளிக்கவும்.

பத்தியம்:

பாகற்காய், பாகலிலை, திராய் முதலியவைகளுடன் புளி சேர்த்துச் சமையல் செய்து சாப்பிடவும்.

இதனால் புண், கிரந்தி முதலியவைகள் ஆறும்.

18. புண்கள் ஆற மருந்து

வெள்ளறுகும் நல்லறுகு பெரியபாச்
சோற்றியிலை மேலிம்பூரா
உள்ளபுளி யிலைகையாந் தகரைமாம்
பட்டையிவை யோரொன்றுக்கு
விள்ளதிற்சா றுரியெண்ணெய் நாழிவிட்டு
மிலாமிச்சம் வேரதிங்கம்
நள்ளுசேவ கன்கிழங்கு கொடிவேலி
வேர்ப்பட்டை நாலுந்தானே. 29

ஓதிவைகள் வகையொன்றுக் கொருகாசி
னெடையரைத் துட்கலந்து
போதடுப்பி லேற்றியெரித் ததைப்பதமாய்
வடித்துப்பொன் போலவைத்து
மோதியபுண் கிரந்திகள் புரைகளுக்
கிடவாறும் முறையைத்தானே
நீதிமுறை வழுவாத சரபோசி
மகராசன் நிகழ்ந்ததாமே. 30

(இ-ள்)

வெள்ளறுகு	நல்லறுகு
பெரும்பாச்சோற்றியிலை	இம்புறாச்சமூலம்
புளி இலை	கையாந்தகரை
மாம்பட்டை	

இவைகளின் சாறு வகைக்கு ½ படி

சுத்தமான நல்லெண்ணெய் 1 படி

இவைகளையொன்று கலந்து, இதனுடன்

இலாமிச்சம் வேர் -	அதிமதுரம்
சேவகனார் கிழங்கு	கொடிவேலிவேர்ப்பட்டை

இந்நான்கு வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து அரைத்து ஒன்று கலந்து அடுப்பின் மேல்வைத்து, எரித்துப், பொன்நிறமான பதத்திலிறக்கவும்.

இந்த எண்ணெயைப் புண்கள், கிரந்திகள், புரைகள் முதலியகைளுக்கிட அவைகள் ஆறிவிடும்.

19. புண்களுக்கு எண்ணெய்

தென்னையெண்ணெ யொருநாழி யூமத்தின்
சலம்நாழி சிறுநாகந்
தண்ணிலுரி சேர்த்தெரித்துப் புண்சகலத்
திடத்தீருந்த மான்முத்தெண்ணெய்
யன்னதிலுங் காற்படியில் மயிற்துத்த
மிருநிட்க மளவாயிட்டுப்
பின்னியமூக் கரணைவே ரிட்டெரித்துப்
புண்ணிலிடப் பறக்குந்தானே. 31

(இ-ள்)

தேங்காயெண்ணெய்	1 படி
ஊமத்தையிலைச்சாறு	1 படி

இவைகளையொன்று கூட்டி

மண்புழு ½ படியுங்கூட்டி

அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்த எண்ணெயைப் புண்களில் போட அவைகளாறிப் போகும்.

ஆமணக்கெண்ணெய்	¼ படி
சுத்திசெய்த துருசு	2 வராகனெடை
மூக்கரட்டை வேர்	3 வராகனெடை

இவைகளை ஒன்று கலந்து அடுப்பின் மேல் வைத்தெரித்து, வடித்துப் புண்ணில்போட, புண்களாறும்.

20. புண்களுக்குப் புகை

பாதரதம் பலமூன்றுங் கருவங்க
மதிற்பாதி பலமுறுக்கிச்
சூதமதைப் பின்னிட்டு நிலஞ்சாய்ந்து
மரிதாரந் துரிசுதுத்தஞ்
சீதநெல்லிக் கெந்தகமுங் கெவுரியும் வெண்
பாடாணந் தெரிந்தவாறு
மோதிரண்டு காசிடையா மசமோதங்
கருஞ்சீர மொருவகைக்கே. 32

காசியிடையிம் மருந்தெல்லாம் பொடிசெய்து
மொருமிக்கக் கலந்தெருக்கும்
வீசிடுபா லிட்டரைத்து மேழுருண்டை
யாய்ப்பிடித்து மேலுருக்கிப்
பேசியகட் டியுமேழு பங்கெடுத்து
மேழுபிடிப் பட்டதைத்தான்
கூசுபுளி யந்தழலில் மூன்றுதினம்
புகையிட்டுக் கொள்ளுநாளே. 33

குளிர்ந்தநீர தனில்மூழ்கி யோருருண்டை
புகைகாட்டிக் கொள்நீர்ச்சோறும்
புழுங்கன்ன மீருளியு முப்பிலியா
யசனஞ்செய் போதிரண்டுங்

---

* இச்செய்யுள் முன்னமேயே கூறப்பட்டுள்ளது. 17ம் பக்கம் பார்க்க.

குளிர்ந்தநீ ரிதனிலிருந் தைந்தாறு
தினங்கழித்துக் கொட்டையெண்ணெய்
வளர்தலைக் கிட்டப்பால் முழுகிருபா
னாட்பத்திய மாகுந்தானே. 34

(இ-ள்)

சுத்திசெய்த	பாதரஸம்	3 பலம்
,,	கருவங்கம்	1½ பலம்

இவைகளை எடுத்து முதலில் ஈயத்தை ஒரு கரண்டியில் இட்டு உருக்கி, பின்பு பாதரஸத்தை விட்டுத் தொந்தித்துத், தரையில் சாய்க்கவும்.

சுத்திசெய்த	தாளகம்	2 வராகடை
,,	துரிசு	,,
,,	துத்தம்	,,
,,	நெல்லிக்காய்கெந்தகம்	,,
,,	கௌரீ பாஷாணம்	,,
,,	வெள்ளைப் பாஷாணம்	,,
கருஞ்சீரகம்		1 காசெடை
ஓமம்		,,

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடியாகும்படி அரைத்து, எருக்கம்பால் விட்டு மறுபடியும் அரைத்து 7 உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இம்மாதிரியே ஈயரஸக் கலவையையும் 7 பங்குகளாக உருட்டி மேல்சொன்ன உருண்டைகளுடனே சேர்த்து முடிச்சாகச் செய்து கொள்ளவும்.

3 நாளைக்குத் (தினமொன்றுக்கு இருவேளை வீதம்) புளியஞ்சிராய் தணலில் முடிச்சுகளைப் போட்டு ரணங்களுக்குப் புகைக்கவும்.

பத்தியம்:

குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தபின் உருண்டைகளைப் புகைக்கவும்.

தண்ணீர் விட்ட புழுங்கரிசிச் சாதத்தை வெங்காயஞ் சேர்த்துக்கொண்டு உப்பில்லாமல் சாப்பிடவும். தினம் 2 வேளையும் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்யவும்.

5 அல்லது 6 தினங்கள் கழித்து ஆமணக்கெண்ணெய் தேய்த்துக்கொண்டு தலைமுழுகவும்.

21. புண், புரைகளுக்குப் புகை

கருவங்க மூன்றுபல மந்தளவா
யிரதமிட்டுக் கலந்துருக்கித்
தரணிமேற் சாய்ந்திட்டு நெல்லியின்காய்
கெந்தகமுஞ் சார்வங்களாம்
வரும்பச்சை யொருவகைக் கிருபலந்துத்
தங்காந்த மாமிரண்டில்
ஒருவகைக்கு முப்பலமாய்ப் பொடிசெய்து
மாறுருண்டை யுருட்டிடாயே. 35

இடிமுடிந் ததைப்புளி யந்தழலிற்
புகைமூட்டி யிடாறுவேளை
தொடுமொருநாட் கழித்துமுத்தி னெண்ணெயரப்
பிட்டுத்துடைத் துவெந்நீரில்

கொடுமுழுகிப் பத்தியமீ ருள்ளியிராக்
கருவாடுக் கூனெற்றெலி
யிடுமுருங்கை யிலைகாயுப் பிலிக்கஞ்சி
யிருபதுநா ளாகுந்தானே. 36

(இ-ள்)

சுத்திசெய்த	பாதரஸம்	3 பலம்
,,	காரீயம்	3 பலம்

இவ்விரண்டையும் ஒரு கரண்டியிலிட்டு உருக்கித் தரையின் மேல் சாய்க்கவும். அதனுடன்

சுத்திசெய்த

,,	நெல்லிக்காய் கெந்தகம்	2 பலம்
,,	வங்காளப்பச்சை	2 பலம்
,,	துத்தம்	3 பலம்
,,	காந்தம்	3 பலமும்

சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து 6 உருண்டைகளாகச் செய்துகொண்டு புளியந்தணலில் போட்டுப் புண்ணிற்குப் புகையிடவும். இப்படி 3 நாளைக்கு 6 வேளை செய்யவும். நாலாவது நாள் ஒன்றுஞ் செய்யாமலிருந்து ஐந்தாவது நாளன்று ஆமணக்கெண்ணெய் தேய்த்துக்கொண்டு, வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். அப்போது தேய்த்துக் கொள்வதற்கு அரப்பை உபயோகிக்கவும்.

பத்தியம்:

வெங்காயமும், இராக் கருவாடு, நெற்றெலிக் கருவாடு, முருங்கையிலை, முருங்கைக்காய் முதலியவைகளைக் கூட்டவும். 20 நாளைக்கு உப்பில்லாமல் கஞ்சி குடித்து வரவும்.

22. வாய், நாக்கு, ஈறு முதலிய இடங்களில் வெந்த புண்ணிற்கு நெய்

வசுவாசி கிரம்பேல மிலவங்கஞ்
செண்பகப்பூ மாசிக்காயும்
நிசகோட்டஞ் சாதியின்காய் பத்திரியு
மரிதாகியு நேர்நாகப்பூப்
பசைதேற்றான் வித்ததிங்கந் திப்பிலிநற்
சீரகமும் பச்சைவெட்டு
முசந்துரை சந்தனங்க ளிலாமிச்சு
சித்தமட்டி யூரவெட்டிவேரே. 37

நன்னாரி வேர்முதியார் கூந்தலிவை
வேர்வகைகள் நற்பசும்பால்
தன்னிலொரு படிநெய்யு மளவொன்றுக்
கொருநிட்கஞ் சரக்கில்வேரைத்
துன்னுபசும் பாலதனா லரைத்துநெய்
தனில்போட்டுச் சொல்சரக்கை
மன்னுபொடி செய்துவைத்துக் காய்ந்தநெய்யிற்
றூவுகிண்டி மற்றுந்தூவே. 38

கிண்டிவர வரவுந்தூள் முகிந்தபின்
பதமாகக் கீழிறக்கிக்
கொண்டுநெய்யை யுள்ளினுக்குங் கொடுசிரத்தி
னுந்தேய்த்துக் கொள்மற்றானாள்
கண்டுதலை முழுகியே யிருநேரம்
நெய்தனைக்க ணைக்காய்தானும்
உண்டிடுநா ளொன்றுவிட்டு மறிநாளிற்
றலைக்கிடப்போ முட்டணந்தானே. 39

(இ-ள்)

ஆடாதோடை	கிராம்பு
ஏலக்காய்	இலவங்கப்பட்டை
செண்பகப்பூ	மாசிக்காய்
கோஷ்டம்	சாதிக்காய்
சாதிப்பத்திரி	கடுக்காய்த்தோல்
சிறுநாகப்பூ	தேத்தாங்கொட்டை
அதிமதுரம்	திப்பிலி
சீரகம்	ஈரச்சந்தனக்கட்டை
இலாமிச்சம்வேர்	சிற்றாமுட்டிவேர்
வெட்டிவேர்	நன்னாரிவேர்
முதியார்கூந்தல்வேர்	

இவைகளை வகைக்கு 1 வராகனெடை அளவெடுத்து இடித்துச் சூரணித்துக்கொள்ளவும். வேர் வகைகளைப் பசுவின் பால் விட்டரைத்துப்

பசுவின்பால்	1 படியுடனும்
பசுவின்நெய்	1 படியுடனும்

குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதமாகும்போது, கடைச்சரக்குகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்த மேலே சொன்னதூளை நெய்யுடனேதூவிக் கிளரவும். தூள் முகிர்ந்து பக்குவமானபின் நெய்யை இறக்கி வடிகட்டிக்கொண்டு,

உள்ளுக்குக் கொடுத்துத் தலையிலும் தேய்த்துக்கொண்டு மறுநாள் தலை முழுகவும்

தினம் 2 வேளாகளிலும் நெய்யை உட்கொண்டு ஒன்றை விட்டொருநாள் தலையில் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும்.

சகல உஷ்ணமும் தீரும். கைகண்டது.

23. தீராத புண், புரைகளுக்குப் புகை

இந்த முறையின் செய்யுட்கள் (40, 41) சுவடியில் காணப்படாததால் 72 நெ. சுவடியிலிருந்து அதற்கான உரை மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சுத்திசெய்த நாபி 1 வராகனெடை

நசுக்கி நல்லெண்ணெய் 1 சேருடனே போட்டு, அடுப்பின் மேலேற்றிக் காயவைத்து, அதனுடன் தலைமயிர் ஒரு நார்த்தங்காயளவு போடவும். தலைமயிர் நன்றாகத் தீய்ந்தவுடனே எண்ணெயை அடுப்பின் மேலிருந்து கீழிறக்கி, அதனுடனே குழைத்து வைத்துக்கொண்டு புண்களிலிடவும்.

புண்கள் ஆறிப்போகும்.

24. தீராத புண்கள், புரைகளுக்குப் "புகை"

வெள்ளெருக்குக் கரவீரங்கொடிக் கள்ளி
யிதுமூன்றும் வேரும்பட்டை
உள்ளதிது மேற்புறணி சீவிநன்றாய்த்
தட்டிவகைக் கொருவிளாங்காய்
கொள்வாயெ டுத்துவைத்துக் கொண்டிரத
மரைநிட்கங் கொடுசட்டிக்குள்
தள்ளுகுப்பை மேனியிலைச் சாறுவிட்டு
முறித்தெடுமுன் றட்டும்வேரே. 42

மும்மருந்து முறித்திட்ட விரதத்திற்
பிரட்டொன்பான் மூட்டுபங்கு
தம்மிலொரு சட்டியிலே வைத்துநிழ
லுலர்த்திட்டுத் தலைக்கெள்ளெண்ணெய்.

கம்முழுகச் சொல்லுமறு தினங்காற்றில்
லாதுதிரை கட்டிக்கொண்டு
விம்முபிளி யந்தழலி லடிப்போன
குந்தாணி மேலும் வைத்தே. 43

புகைத்திட்டு மொருபங்கை யுரவிலிட்டு
நல்லபுகைப் போட்டுமூன்று
வகைத்தினங்க ளந்திசந்தி தூபமிட்டு
நான்கானாள் வார்முத்தெண்ணெய
சிகைமுழுகந் திசந்தி புகைகாட்டி
யஞ்சாநாள் திகழ்வெந்நீரால்
மிமைமுழுகிப் புகைத்துமூன்றுநாளைக்கொ
ருக்கால்வெந் நீரில்மூழ்கே. 44

புழங்குவா யுட்குடிக்க வெந்நீரார்
புகையுப்பும் புளிகள் தள்ளி
இளங்கீரை முருங்கிலைக்காய் பிஞ்சாகும்
பத்தியமா யிருந்துட்கொள்ளு
மிளகுதூட் கூட்டிடவும் பதினைந்து
நாட்கழித்து மேற்புளிதான்
புழங்கிடப் புண்புரைபோஞ் சரபேந்திர
னிம்முறையும் புகன்றதாமே. 45

இ-ள்)

வெள்ளெருக்கு அரளி
கொடிக்கள்ளி

இம்மூன்று சரக்குகளின் வேரும், பட்டையும் தனித்தனியே ஒரு விளாங்காய் பிரமாணமெடுத்துக்கொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியை எடுத்து, அதில் ½ வராகனெடை சுத்திசெய்த பாதரஸத்தை விட்டுக் குப்பைமேனிச்சாறு

விட்டுச் சிறிதுநேரம் வைத்திருக்கவும். பாதரஸம் முறியும் அதனுடன் முன்சொன்ன மூன்று மருந்துகளையும் போட்டுப் புரட்டி 9 பங்குகளாகச் செய்துகொண்டு, நிழலில் உலர்த்தவும்.

நேயாளி முதல் நாளன்று நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து மறுநாள் காற்றுப்படாமல் திரைகட்டிக்கொண்டு, புளியஞ்சிராயினால் தீயை உண்டாக்கவும். அதன்மேல் ஒரு ஆடிப்போன குந்தானியை வைத்து, அதனுள்ளிருக்கும் தணலில் மேலே சொன்ன தூளப்போடவும். உரலில் ஒரு பங்கையும் போட்டுப் புகைக்கவும். அப்புகையை நன்றாகப் புண், புரைகள்இவற்றுள் செல்லும்படி பிடிக்கவும். இம்மாதிரி தினம் காலையிலும், மாலையிலும் செய்யவும். நான்கு நாட்கள் சென்றபின் ஆமணக்கெண்ணெய்த் தேய்த்துத் தலைமுழுகி முன் சொன்னபடிக்குக் காலையிலும் மாலையிலும் புகை பிடிக்கவும். 5வது நாளன்று வெந்நீரில் ஸ்நானம் செய்ய மற்ற மருந்துகளையும் புகைக்கவும் இம்மாதிரி 3 நாளைக்கொருதரம் வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும்.

பத்தியம்:

வெளிப்பிரயோகங்களுக்கும், உள்ளுக்கும், குடிக்க வெந்நீரையே உபயோகிக்கவும். உப்பு, புளி, புகையிலை இவைகளைத் தள்ளிவிடவும். இளங்கீரை, முருங்கையிலை, முருங்கைக்காய், முருங்கைப்பிஞ்சு இவைகளைக் கூட்டலாம். 15 நாடகள் சென்றபின் புளி சேர்த்துக் கொள்ளவும். மிளகுபொடி கூட்டிக்கொள்ளலாம்.

தீரும் வியாதிகள்:

புண், புரை முதலியன.

25. புண், புளவை, கிரந்திக்குச் "சேர்வை"

மலிதுத்தந் துரிசிருவ கைக்கிருவ
ராகனெடை வடிதூட்செய்தும்
அலகுபாக் கினளவாய் மெழுகிட்டு
நல்லெண்ணெயு மதிலோர்துளி
நலியவிட்ட தையுருக்கோ ருசட்டி
தனிற்றண்ணீ ரால்நிறைத்துப்
பொலியவதி லூற்றினா லாடைநிகர்
மேல்மிதக்கும் பொழுதெடுத்தே. 46

எடுத்தமூன் றுளைமெழு குடன்சேர்த்து
மொருகல்வத் திட்டரைக்கிற்
படுத்தரைப டாதிருந்தா லப்போது
மருந்தையனற் படவுங்காய்ச்சி
யடுத்தரை நேகவழித் தொருசிமிழி
னுள்ளாக வடைத்து வைத்துக்
கடுத்துபுண் புரைமேலும் போட்டுப்புண்
ணோய்தீர்க்கக் கருதுவாயே. 47

(இ-ள்)

துத்தம் 2 வராகனெடை
துரிசு 2 ,,

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுத் தூள் செய்து கொள்ளவும்.

மெழுகு ஒரு பாக்குப் பிரமாணமெடுத்து நல்லெண்ணெய் ஒரு துளிவிட்டு ஒரு கரண்டியிலிட்டு உருக்கிச் சட்டியில் குளிர்ந்த ஜலம் விட்டு அதிலூற்றவும். மெழுகு ஆடைபோல் மிதக்கும்.

முன் சொன்ன தூளை அதனுடன் சேர்த்து, ஒரு கல்வத்திலிட்டு நன்றாக அரைக்கவும். அரைபடாமலிருந்தால சிறிது அனலில் காட்டி இளக்கிக்கொள்ளவும். இம்மாதிரி நன்றாக அரைத்த விழுதை ஒரு சிமிழில் பத்திரப்படுத்திப் புண், புரைகள் முதலியவைகளுக்கு மேலே போடவும்.

26. புண்கள், புரைகளுக்குச் சேர்வை

முழிமஞ்சள் பொடிசெய்து வடிகட்டிக்
காசெடைதூள் முகந்தசூதங்
களஞ்சியரை வெற்றிலைநீர் தனில்முறித்து
மதைச்சேர்த்துக் காணேரண்டத்
துளக்கெண்ணெய் விட்டரைத்து மிருபணவே
டைசுண்ணத் துடனுங்கூட்டி
யிளகரைத் தோர்சிமிழி லிட்டடைத்து
வெற்றிலைமே லிட்டுக்கட்டே. 48

கட்டொதியன் றங்கொழுந்து மாகும்பின்
றுளசியினீர் காணும்பட்டை
யிட்டகுடி நீரதனாற் கழுவிவிட்டுங்
கவிழ்த்தும்பையி னிலையுமுள்ளி
நட்டவசம் பதுகூட்டி யரைத்தும்புண்
மேற்றடவு நல்லரம்பை
தொட்டபழத் தோலுலர்த்திச் சுடுநீருங்
சுண்ணமுட னொக்கக்கூட்டே. 49

கூட்டிநல்ல நீரதனாற் குழப்பியோர்
சேலைதனிற் கொள்ளத்தானே
ஊட்டிடுவீக் கத்தின்மேற் போட்டுமொரு
சாமம்போ யிராக்கழித்து

வாட்டுவெந்நீ ராற்கழுவி யிப்படிமுத்
தினமிட்டு வாரும் வெந்நீர்
ஆட்டியும்புண் புரைதீருஞ் சரபேந்திர
னிம்முறையை யரைந்ததாமே. 50

(இ-ள்)

வரளி மஞ்சளை இடித்து வஸ்திரகாயஞ் செய்துஅதில் ஒரு காசிடைத்தூள் எடுத்துக் கல்வத்திலிட்டு

பாதரஸம் 20 குன்றியும்

கூடவிட்டு வெற்றிலைச் சாற்றினால் முறித்து, நன்றாக அரைக்கவும். பின்பு ஆமணக்கெண்ணெய விட்டரைத்துக் கல் சுண்ணாம்பு 2 வராகனெடை கூட்டி நன்றாக அரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இதை ஒரு வெற்றிலையிலோ அல்லது ஒதியன் கொழுந்திலோ, தடவிக் கட்டவும்.

துளசிக் கஷாயத்தினால் கழுவிவிடவும்.

(2) கவிழ்தும்பை இலை பூண்டு
வசம்பு

இம்மூன்றையும் அரைத்துப் பூசவும்.

(3) வாழைப்பழத்தோலை உலர்த்திச் சுட்டு, நீறாகச் செய்து, சமன் சுண்ணாம்பு சேர்த்துத் தண்ணீர் விட்டுக் குழப்பி ஒரு துணியில் ஒரே சீராகத் தடவி, வீக்கத்தின் மேல் போடவும். ஒரு சாமங்கழித்து வெந்நீரினால் கழுவி விடவும். இவ்வாறு மூன்று நாட்கள் போட்டு வெந்நீர் வார்க்கவும்.

புண்கள், புரைகள் முதலானவை தீரும்.

51, 52 நெம்பர் செய்யுட்கள் சுவடியில் காணப்படவில்லை.

27. புண்களுக்குச் சேர்வை

குங்கிலிய மிருகழஞ்சி ருகடுக்கா
யதனின்றூட் கொண்டுதுத்தந்
தங்குதுரு சிரண்டுக்கு மிருகழஞ்சி
வைகள் பொடித் தானுஞ்செய்த
நங்கல்வத் திற்சூத மொருகழஞ்சு
துளசிவெற்றி லைநன்னீரால்
துங்கமுத்து வெள்ளையது கூட்டியரைத்
திடப்புண்கட் டுலைந்துபோமே. 53

(இ-ள்)

வெள்ளைக் குங்கிலியம்	2 கழஞ்சு
கடுக்காய்த்தூள்	2 கழஞ்சு
துத்தம்	1 கழஞ்சு
துருசு	1 கழஞ்சு
பாதரஸம்	1 கழஞ்சு

இவைகளைக் கல்வத்திலிட்டு, நன்றாகத் தூள்செய்து, துளசிச்சாறு, வெற்றிலைச் சாறு, இவைகளினால் தனித்தனியே ஒவ்வொரு ஜாமமரைத்து, முத்துவெள்ளையும் கூடச்சேர்த்து (2 கழஞ்சு) மறுபடியும் நன்றாக அரைத்துப்

புண்களுக்குப் போடவும். அவைகள் தீரும்.

28. புண், புரைகளுக்குக் காரக் களிம்பு

துரிசுபச்சைக் கர்ப்பூர மனோசிலைவெண்
பாடாணந் துளவொன்றாரந்
தெரியுமிவை யொன்றுபண வெடையொன்றோ
யிற்றுரிசி யும்பாடாணம்
மரியெருக் கம்பழுப்பு ரசங்குத்தி
வறுதண்ணீர் வாற்றரைத்துப்
பிரியசித் திரவெண்ணெய் தனைவிட்டுக்
குழப்பினதைப் பேணிவையே. 54

வைசிமிழி லெடுத்தடைத் தெந்தவகை
யாணிகட்கும் வரைகண்டிப்பு
கைசிறுகப் பணம்போலு மருந்தினைத்
தட்டுவிட்டுக் கடிகைகேளு
மெய்த்தறுபான் கழித்திட்டு யெடுத்தெரிபின்
முத்தெண்ணெய் மேலும்பூசு
செய்திடவே யாணிபுண்கள் புரைவரை
கண்டிப்புடன் றீருந்தானே. 55

(இ-ள்)

துரிசு	பச்சைக்கர்ப்பூரம்
மனோசிலை	வெள்ளைப்பாஷாணம்
தாளகம்	

இவைகள் தனித்தனியை 1 வராகனெடை

துரிசையும், வெள்ளைப் பாஷாணத்தையும் எருக்கம் பழுப்புச்சாறு ஊற்றி அனலில் வறுத்துக்கொண்டு, மற்ற சரக்குகளுடன் கூட்டிக் கல்வத்தில் வைத்து எருக்கம்பழுப்புச் சாறு விட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும்.

பின்பு இவைகளை ஆமணக்கெண்ணெயுடன் (வேண்டிய அளவு) குழப்பி வைத்துச் சிமிழில் பத்திரப் படுத்திக்கொள்ளவும்.

எவ்விதமான கால் ஆணிகளுக்கும் ஒரு பணம் அளவு இம்மருந்தை அவைகளுக்குத் தடவி, 60 நாழிகைகள் ஊரவைத்த பின் இதைக் கழுவி விடவும்.

அவ்விடத்தில் ஆமணக்கெண்ணெய் பூசவும்.

குறிப்பு:

இவ்விடத்தில் தாரம் என்பது அரிதாரமாகும்.

29. புண், புரை, சிரங்குகளுக்குச் "சேர்வை"

துரிசுசுட் டதுஞ்சுன்ன மஞ்சளின்றூ
ளிவைமூன்றும் தொட்டுவெண்ணெய்
மருவிடப் போட்டரைத்து வழித்தெடும்
புண்சிரங்கில் மலரப்பூசி
இருபின்பு மிலுப்பரப் பின்கட்டித்
தான்றேய்த்து மிட்டுமூழ்கி
வரும்போதிற் புண்சிரங்குங் காய்ந்துபோ
மிம்முறையை மதித்துச் செய்யே. 56

(இ-ள்)

பொரித்த துரிசு மஞ்சள்பொடி
சுண்ணாம்பு

இம்மூன்றையும் கல்வத்தில் வைத்துப் பொடி செய்து, சமனெடை வெண்ணெய் போட்டு நன்றாக அரைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது சிரங்குகளில் பூசி அரப்பினால் கழுவி ஸ்நானம் செய்யவும். அடிக்கடி கிளைக்கும் புண், சிரங்கு முதலானவைகள் குணமாகும்.

30. புண், புரை, சிரங்குகளுக்கு மருந்து

ஆலம்விழு தரைத்தொரு பாக்களவு
கஞ்சாச்சா றதிலுழக்கும்
மேலுநல் லெண்ணெயுழக் கிட்டதிலும்
வசம்பிரண்டும் வெள்ளையுள்ளி
கோலியொரு பூடுமிட்டு மிவைகூட்டி
வெயிலிலே கொள்ளவைத்துத்
தூலவுடல் தலைதேய்த்து மூன்றுதின
மரப்பிட்டுச் சுடுநீர்மூழ்கே. 57

(இ-ள்)

கஞ்சாச்சாறு	1 உழக்கு
நல்லெண்ணெய்	1 உழக்கு

இவ்விரண்டையும் ஒன்று கலந்து, அதனுடன்

அரைத்த ஆலம்விழுது	1 கொட்டைப்பாக்களவு
பூண்டு	1 பல்லும்
வசம்பு	2 துண்டும்

எடுத்து நன்றாக அரைத்து, ஒன்றாகக் கலந்து 3 நாளைக்கு வெய்யிலில் வைக்கவும்.

தலை, உடம்பு முதலிய இடங்களில் இந்த எண்ணெயை நன்றாகத் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும். இவ்வாறு 3 நாளைக்குச் செய்யவும்.

58, 59 நெம்பர் செய்யுட்கள் சுவடியில் காணப்படவில்லை.

31. பரங்கிப் புண்களுக்கு "மருந்து"

கானபரங் கிப்பட்டை யரைப்பலஞ்சுக்கு
வராகனெடை கணித்திருபான்
றானிரண்டு குராசானி யோமம்வரா
கனெடையொன்பான் சார்கிராம்பு
மானஞ்சுவ ராகனெடை கரில்வரா
கனெடையீ ராறுங்காமன்
மூன்றஞ்சுவ ராகனெடை சூரணித்தே
னிருபானாள் மூட்டுவாயே. 60

(இ-ள்)

பரங்கிப்பட்டை	½	பலம்
சுக்கு	22	வராகனெடை
குராசாணி ஓமம்	9	,,
கிராம்பு	5	,,
மிளகு	12	,,
திப்பிலி	15	,,

இச்சரக்குகளை காயவைத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இச்சூரணத்தில் ஒரு மூவிரல் கொள்ளுமளவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இவ்வாறு 20 நாட்கள் சாப்பிடவும்.

குறிப்பு:

72 நெ. சுவடியில் இம்மருந்திற்கு கீழ்க்கண்டவாறு:-

உப்பு, புளி இவைகளை 40 நாட்களுக்குச் சேர்க்கக் கூடாது என்று பத்தியம் கூறப்பட்டிருக்கிறது.

32. ஓட்டிய புண், புரைகளுக்கு உருண்டை

பாதரசந் திப்பிலியும் பாடாண
முடன்றுரிசு பகரின்னான்கும்
ஈதுவகைக் கொன்றுபண வெடையொன்றாங்
கடுக்காயு மிருமூன்றாகுங்
கோதகலு நல்லவெல்ல மருதாணிவெற்
றிலைகீருங் கொடுரசத்தை
நீதிபெற வேமுறித்துக் கூட்டியரைத்
துருண்டைசெய்து நிகழ்த்தக்கேளே. 61

நல்ல வெல்லந் தனிற்சேர்த்து முருட்டியிரு
நேரங்கொள் நாலுருண்டை
மெல்லவிழுங் கிதுதீர்க்கு மொட்டிப்புண்
புரையெல்லாம் வேகமாற்றுஞ்
சொல்லவுப்பும் புளிப்புகையி வைதள்ளிப்
பத்தியமாய்த் தொடங்குந்தஞ்சை
எல்லைநிகர் கலிக்குறும்பி னிருளோட்டுஞ்
சரபேந்திர னியம்பிதாமே. 62

(இ-ள்)

பாதரஸம்	திப்பிலி
வெள்ளைப்பாஷாணம்	துரிசு

இவைகள் வகையொன்றுக்கு ஒரு பணவெடை

கடுக்காய்த்தூள்	6	,,

இவைகளையொரு கல்வத்திலிட்டு,

மருதாணிச்சாறு, வெற்றிலைச்சாறு, வெல்லத் தண்ணீர்

இவைகளைத் தனித்தனியே விட்டு ஒவ்வொரு சாம. அரைக்கவும். ரஸம் நன்றாக முறிந்து ஒன்றாகிய பின், நல்ல வெல்லத்துடன் சேர்த்து 4 உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

நேரம் ஒன்றுக்கு 2 உருண்டைகள் வீதம் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

இம்மருந்து ஒட்டிப்புண், புரை முதலியவைகளை வெகு எளிதில் குணப்படுத்தும்.

பத்தியம்:

உப்பு, புளிப்பு, புகையிலை முதலானவைகளை நீக்கி விடவும்.

33. ஒட்டிய புண், புரைகளுக்கு மருந்து

தூதுவளை வேர்குறிஞ்சா வேரசம
தாகமிவை சொல்மேனிச்சா
றோதிரத முறித்துருண்டை கூட்டெருமை
வெண்ணெயிலு மூட்டி ரண்டு
போதுவிழுங் கிடுகைப்பும் புளிதள்ளி
ராமுள்ளி புரிநெற்றெலி
யோதுகுளத் துடகுறவை மீனதனைச்
சுண்டியிட்டு மொன்பானாளே. 63

பதினோரு நாள்முழுக வுட்குடிக்கக்
கொப்பளிக்கப் பாதங்கைகள்
இதின்சுத்தி செய்யவெந்நீர் தொடலாகும்
பத்தியமா யிருமற்றாநாள்

அதிரெண்டு வேளைகளு முழுகியிடும்
புண்புரைக ளாறிப்போகுஞ்
சதுரங்க சேனைபுடை சூழ்ந்துவரும்
சரபேந்திரன் தந்ததாமே. 64

(இ-ள்)

தூதுவளை வேர் குறிஞ்சாவேர்
ஓமம்

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்வத்திலிட்டுத், தெளிந்த குப்பைமேனிச்சாறு விட்டு நன்றாக அரைத்த பாதரஸத்தையுஞ் சேர்த்து உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

இவைகளைத் தினம் இருவேளைக்கு, எருமை வெண்ணெயுடன் முழுங்கவும்.

கசப்புப் பண்டங்களையும், புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் தள்ளவும்.

ராமுள்ளி, நெற்றெலி, குளத்துக் குறவை முதலான மீன் வகைகளைச் சுண்டி (வேகவைத்து) சாப்பிடவும்.

இவ்வாறு 9 நாளைக்கு மருந்து சாப்பிடவும். பதினொன்றாவது நாளன்று ஸ்நானம் செய்யவும். மற்ற நாட்களில் இரண்டு வேளைகளிலும் ஸ்நானஞ் செய்யவும்.

மருந்து சாப்பிடும்போது, உள்ளுக்குக் குடிப்புதற்கோ, கொப்பளிக்கவோ அல்லது கை, கால்கள் கழுவுவதற்கோ, வெந்நீரையே உபயோகிக்கவேண்டும்.

புண்கள், புரைகள் முதலானவை ஆறும்.

---

* கார்ப்புப் பண்டங்களையும் என்று 72 நெம்பர் சுவடியில் காணப்படுகிறது. ஆகவே அதையும் நீக்குவது நல்லது.

34. ஓட்டுப்புண், புரைகளுக்குப் புகை

நல்லசிறு காஞ்சோரிவே ரெருக்கவே
ரிருகழஞ்சு நறுங்கொழிஞ்சி
சொல்லதுவே ரிதுமூன்றுந் தூளிடித்து
வடிக்கட்டிச் சூதந்தன்னை
வல்லது பங்குசெய்து புளிச்சிராய்
கொண்டுமொரு மண்சட்டிக்குள்
புல்லனலி லிட்டதனைத் தழலாக்கி
யதிற்சட்டி பொருந்தக்காய்ச்சே. 65

காய்ந்தசட்டி தன்னிலொரு பங்கிரத
முப்புமிட்டுக் கஞ்சிகாய்ச்சி
மோந்துகுடித் ததன்பின்பு மவனைமுக்காட்
டால்மூடி மொழிமருந்து
வேய்ந்திடொரு பங்கிரத மிடுகடிகை
தனிற்புகையும் மேலெழும்பும்
மீந்தரைநா ழிகைசென்று பின்புமந்தப்
பொடிதன்னை மீட்டுவாயே. 66

மீட்டிடுவா யிப்படியே மூன்றுவிசை
பொடியிட்டு மேல்முக்காடு
போட்டவனைப் படுக்கவை பின்பெழுந்திப்
படியைந்து போதுதானும்
மாட்டுப்புகைப் போட்டிடவுங் காலையந்தி
தானிமுழுகி வரவுங்கைப்புக்
கூட்டுபுளி தள்ளியெட்டுத் தினம்பத்தி
யம்நடத்தக் குணமாந்தானே. 67

(இ-ள்)

சிறுகாஞ்சோரி வேர்	2 கழஞ்சு
எருக்கம்வேர்	2 ,,
கொழிஞ்சி வேர்	2 ,,

இம்மூன்று வகை வேர்களையும் வெயிலில் காயவைத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

பாதரஸம் (2 கழஞ்சு) எடுத்து 6 பங்குகளாகச் செய்துகொள்ளவும். புளியஞ்சிராயைத் தணலாக்கியொரு சட்டிக்குள் போட்டு அதன்மேல் மற்றொரு சட்டியை வைத்து அதில் ஒரு பங்கு ரஸத்தை விட்டு, உப்புப் போட்டுக் (அரிசி நொய்)க் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். பின்பு நோயாளியின் தேகத்தை ஒரு வஸ்திரத்தினால் நன்றாக மறைத்து, அப்புளியந் தணலில் முன் கூறிய சூரணத்தையும், ஒரு பங்கு ரஸத்தையும் போட்டுப் புண், புரை இவைகளின் மேல் படும்படி புகைக்கவும். அரைநாழிகை கழித்து மறுபடியும் சூரணத்தைப் போடவும்.

இவ்வாறு மூன்று முறை முக்காடு போட்டுக் கொண்டு புகையைப் புண், புரைகளில் செல்லும்படி புகைக்கவும். பின்பு முக்காட்டை நீக்காமல் நோயாளியைப் படுக்கச் சொல்லி எழுந்திருக்கச் சொல்லவும். இப்படி 5 நாளைக்குப் புகையைப் பிடிக்கவும். காலையிலும் மாலையிலும் சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவும்.

பத்தியம்:

கசப்புப் பண்டங்களையும், புளிப்புச் சுவையையும் நீக்கவும். இவ்வாறு 8 நாளைக்குப் பத்தியமாக இருக்கவும்.

35. புண்ணிற்குக் களிம்பு

துத்தமு டன்துரிசு வகைக்கொரு
வராகனெடை தூக்கியேலம்
மெத்தவெள்ளைக் குங்கிலியம் வகைக்கரை
வராகனெடை வீதமஞ்ஞைத்

துத்தமதைத் திருநீறு போல்நீற்றுச்
சேர்ந்திடுகா சுக்கட்டித்தான்
ஒத்தபண வெடைகூட்டி மருந்தெல்லாம்
பொடிசெய்து மொன்றில்வைத்தே. 68

புதுக்கொட்டாங் கச்சிதனிற் சூதமிட்டு
மேனிரசம் புரிதாம்பூலம்
இதுரெண்டுள் ளோரிலைச்சா றாவதிரு
துளிவிட்டு மேற்கமத்தித்
ததுசுண்ணக் கட்டிநிகர் பத்திவரும்
பக்குவத்தி லதின்முன்றாளும்
புதுவெண்ணெ யுடன்கூட்டி யொருகையால்
மத்தியது பொருந்தோட்டுள்ளே. 69

உள்பிடித்த பக்குவத்தில் வழிக்குமற்
றொருதண்ணீ ரூற்றிநன்றாய்
வெளப்படவே கழுவுவாய் பின்வழித்தோர்
சிமிழிலிட்டு விரணந்தீர்க்கக்
கள்ளமில்லை யிக்களிம்பு நேர்த்தியதாங்
கைமுறையைக் காசினிக்குள்
வள்ளலெனத் தஞ்சைநகர் வந்தசர
பேந்திரனம்சொல் வாய்மைதானே. 70

(இ-ள்)

காசுக்கட்டி	1	வராகனெடை
துத்தம்	1	,,
துரிசு	1	,,
வெள்ளைக் குங்கிலியம்	½	,,
ஏலக்காய்	½	,,

இவைகளை எடுத்துக்கொள்ளவும்.

மயில்துத்தத்தை வரளிக்குவியலில் வைத்து எரித்து, வெண்மையாகச் செய்துகொண்டு, அத்துடன் மற்ற சரக்குகளையும் சேர்த்துக் கல்லுரவிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

ஒரு புதுக்கொட்டாங்கச்சியில் பாதரஸத்தை விட்டு, அதனுடன் குப்பைமேனிச்சாறோ அல்லது வெற்றிலைச் சாறோ 2 துளிகள் விட்டு நன்றாகக் குழைக்கவும். அப்போது ரஸம் சுண்ணாம்புபோல் ஆகிக்கொட்டாங்கச்சியில் ஒட்டிக்கொள்ளும். அதனுடன் முன்னமே சொன்ன தூளைப்போட்டுப் புது வெண்ணெயும் (வேண்டிய அளவு) கூட்டி நன்றாகக் குழைத்துக்கொள்ளவும். தண்ணீர்விட்டு 2 அல்லது 3 தடவை கழுவவும். இக்களிம்பை ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி ரணங்களில் தடவ, அவைகள் ஆறும்.

36. உடம்புகளில் புண், புரைகளுக்குப் "படோலாதி கிருதம்."

பேய்ப்புடலும் பிரமியுஞ்ச மூலமா
யகிற்பட்டை பெருநாவற்றோல்
வேப்பமரத் தோலுமத்தி யாலுமித்தி
யரசுமிலை மென்முகிழ்தான்
மூப்பிலத்தை யடைமதுரங் கரிப்பாலை
வேர்காமன் மூலங்கூட்டி
தொப்பரம்பைத் தாமரையுங் கோரையினை
யின்கிழங்குந் தொக்கலாமே. 71

தாமரையின் வலையங்கள் சிவதைவேர்
வகையொன்று தான்பலங்கள்
ஆமெட்டாங் கூட்டியிடி யெண்மரக்கா
னீர்விடுத்து மதைநாலொன்றாய்

வேமதனைக் காய்ச்சிவடி நாழிநெய்யுங்
குறுணிப்பால் விடுமருந்து
மாமதுர மரமஞ்ச ளிந்துசந்து
மாலமுகிழ் மஞ்சளாமே. 72

ஆனவெள்ளோத் திரந்தேவ தாரநிம்
பலகோடு மத்திமொட்டும்
மானசிறு மூலகமு மஞ்சிட்டி
தாமரையின் வளையந்தாதுந்
தீனிமுந்தி ரிகைப்பழங் கடுரோணி
நாகுணந்தி திரிபலாதி
சீனக்கார மிலாமிச்சம் பெருங்குரும்பை
யுத்பலமுஞ் செய்யக்கேளே. 73

செய்கழஞ்சு கூட்டியும்பா லிட்டரைத்துக்
கலந்தும்பின் திகழ்மந்தாக்கினி
யெய்திடநாற் றினமெரித்து மஞ்சாநாள்
காய்ச்சிவடித் தெடுத்துவைத்து
உய்காலை மோர்கஞ்சி யுட்குடித்து
நசியஞ்செய் துடலிற்பூச
மெய்ப்புடனு டல்வீக்கங் கபவீக்கு
மண்டலத்துள் விட்டுப்போமே. 74

(இ-ள்)

பேய்ப்புடல்சமூலம்	பிரமிச்சமூலம்
அகில்பட்டை	பெருநாகப்பட்டை
வேப்பம்பட்டை	அத்திமொட்டு
ஆலமொட்டு	இத்திமொட்டு
அரசமொட்டு	இலந்தையடை

அதிமதுரம்	கரிப்பாலைவேர்
திப்பிலிமூலம்	வாழைக்கிழங்கு
தாமரைக்கிழங்கு	கோரைக்கிழங்கு
தாமரை இலைச்சுருள்	சிவதைவேர்

இவைகளை வகைக்கு 8 பலங்கள் வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, ஒரு பாத்திரத்தில் போட்டு 8 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி நான்கிலொன்றாக வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்தை வடிக்கட்டி, அதனுடன்,

பசுவின்நெய்	1 நாழி (சின்னபடி ½)
பசுவின் பால்	1 மரக்கால்

விட்டு ஒன்று கலந்து

அதிமதுரம்	மரமஞ்சள்தோல்
இந்துப்பு	ஆலமொட்டு
மஞ்சள்	வெள்ளிலோத்திரப்பட்டை
தேவதாரு	வேப்ப ஈர்க்கு
அத்திமொட்டு	திப்பிலி
மஞ்சிட்டி	தாமரையிலைச்சுருள்
தாமரைத்தாது	திராக்ஷைப்பழம்
கடுகுரோகிணி	நாகணந்தி வேர்
கடுக்காய்த்தோல்	தான்றித்தோல்
நெல்லிவற்றல்	படிக்காரம்
இலாமிச்சம்வேர்	பெருங்குரும்பை
அல்லிக்கிழங்கு	சந்தனத்தூள்

இச்சரக்குகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து, இடித்துப் பசுவின் பால் விட்டூறவைத்து, நன்றாக அரைத்து, நெய்யுடனே குழப்பிக்கொண்டு, அடுப்பின் மேலேற்றி, மந்தாக்கினியால் 4 தினங்கள் எரித்து,

5வது நாளன்று, பக்குவப்படுத்தி இறக்கவும். இதை வடிகட்டிக்கொண்டு, ஒரு ஜாடியில் பத்திரப்படுத்து 1¼ வராகனெடை வீதம், தினம் காலையில் மாத்திரம் உட்கொண்டு, மூக்கிலும் நஸ்யமாக இட்டு, உடம்பிலும் பூசிவர,

உடல் வீக்கம், கப வீக்கம் முதலானவைகள் 40 நாளில் தீரும்.

குறிப்பு:

நாகணந்தி - நேர்வாளவேர்.

37. பழம் புண், புரைகளுக்கக் களிம்பு

சங்கினது வேரிரதந் தாக்கியரை
வழித்துமேற் றானுங்கேளு
பங்கிடுடன் றடவுபத்துப் பதினைந்து
நாளினுட்குள் பழயபுண்ணுந்
தங்குகுழி விழுபுண்ணுஞ் சலக்கட்டுஞ்
சீழ்சொரிவுந் தடிப்புங்கூடப்
பொங்குபுரை யோடுதசை துற்றன்முத
லானதெலாம் போகுந்தானே. 75

(இ-ள்)

சங்கம் வேரைப் பாதரஸத்துடனே கூட்டிக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இம்மருந்தை 10 அல்லது 15 தினங்கள், குழிவிழுந்த புண்கள், சலக்கட்டு, சீழ்சொரியும் புண்கள், தடிப்பு, புரை, தசைவளர்ச்சி முதலியவைகளுடன் கூடிய புண்கள் முதலியவைகளுக்கு இட்டுவர, அவைகள் குணமாகும்.

38. ஓடிப்பாயும் புண்களுக்கு

ஒதிசங்க தாரியின்றோற் கொடிவேலி
யிண்டதின்வே றோதிச்சாறும்
வதிவெள்ளாட் டதினெய்யுஞ் சரிகூட்டி
வெள்ளையுள்ளி மணித்தக்காளி
யதன் வேரும் வசம்புவெண் குங்கிலியம்
ரசங்கெந்தி யரிசனந்தான்
இதன்வகைக்கு மரைக்காசெ டைகூட்டி
யுழக்காக்கி யெடுத்துவையே. 76

வைத்த நெய்யைப் புண்ணிட்டு நடந்துபார்
நாற்கடிகை மட்டிருந்தும்
ஒத்தெண்ணெய்க் குழாய்கொண்டு மூதிவிடு
சற்றுநடந் துடன்சுண்ணாம்பில்
உத்தகல்லுப் புகைகாட்டப் பலதழையிட்
டுக்காய்ச்சி யுட்புகைத்தே
சுத்தவிரா லித்தழையை யிடித்துவைத்
ததிற்கட்டுந் துளைப்புண்போமே. 77

(இ-ள்)

சங்கதாரிப்பட்டை	*கொடிவேலி வேர்
இண்டம் வேர்	ஒதியம்பட்டைச்சாறு

இவைகளைச் சமனெடை யெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்த சாறு (வகைக்கு ஒரு உழக்கு) எடுத்துக்கொள்ளவும். இவைகளுக்குச் சமன்,

வெள்ளாட்டு நெய் (நான்கு உழக்கு) விட்டு, இதனுடன்,

பூண்டு	மணித்தக்காளி வேர்
வசம்பு	வெள்ளைக்குங்கிலியம்
பாதரஸம்	கெந்தகம்

---

* பச்சைக் கொடிவேலி வேரைச் சாக்கிரதையாகக் கையாளவும்.

முதலான இச்சரக்குகளை ½ காசெடை வீதம் நிறுத்தெடுத்து, முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டுக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்ற சரக்குகளையும் போட்டுத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துச் சாறு கலந்த நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சி வடிக்கவும்.

இந்த நெய்யைப் புண், புரை முதலியவற்றிற்குள் விட்டு நோயாளியை நடக்கச் சொல்லவும். 4 நாழிகை சென்றபின், எண்ணெய் குழல்கொண்டு ஊதியபின் மறுபடியும் சற்று நடக்கச் சொல்லவும்.

வெந்த சுண்ணாம்புக்கல்லை ஒரு பாத்திரத்தில் போட்டு, அதனுடன் பலவிதத் தழைகளையும் கூடப் போட்டு, நெருப்பிலிட்டுப் புகைக்கவும். அதில்புண்களைக் காட்டவும்.

விராலித் தழையை அப்படியே இடித்துப் புண்களின் மேல் கட்ட அவைகள் ஆறும்.

39. புண்ணிற்கு "மருந்து"

கருவேலின் பச்சிலையை யுலர்த்தியிடித்
தப்பொடியைக் கலைவடிகொள்
வருபுண்ணி லதைத்தூவித் தூவியெலு
மிச்சையிரு வளையங்கீன்றே
சுருளவே சுடவைத்து விரணத்தி
லொற்றியொற்றித் துளிபிழிந்தால்
மருவிடப் பற்றியடை போற்பற்றும்
புண்புரைகள் மாறிப்போமே. 78

(இ-ள்)

கருவேலம் இலையை நிழலில் காயவைத்துக், கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இதைப் புண்களில் தூவித்தூவி, எலுமிச்சம் பழத்தை தணலில் வெதுப்பி, இருபாதிகளாகப் பிளந்து அதன் சாற்றைத் தூளின்மேல் ஒத்திட்டுச் சிறுகச் சிறுகப் பிழியவும். அடைபற்றினாற்போல் இம்மருந்து புண்களில் ஒட்டிக்கொள்ளும்.

புண்கள், புரைகள் தீரும்.

குறிப்பு:

72 நெம்பர் சுவடியில் *8* நாளையில் தீரும் என்று கூறப்பட்டிருக்கிறது.

40. புண்ணிற்கு "வரட்பாளக் கட்டு"

புண்ணைவளை யநெருக்கிப் பிடித்தாற்போற்
பாளமதைப் போட்டுக்கொண்டே
புண்ணின்வாய்ச் சரியாகச் சில்லிட்டுப்
பாளமதாற் போத்திக்கச்சாற்
றிண்ணிறுகக் கட்டிமேற் சீலைகத்
திரித்துடன் சீழ் தனக்குந்தானே
நண்ணிவருந் தங்காது வங்குவளைப்
புண்முதலாய் நடுங்கிப்போமே. 79

(இ-ள்)

புண்ணை வளையமாக நெருக்கிப் பிடித்தாற்போல் பாளத்தை மடித்து நெருக்கிப் போட்டுக்கொண்டு, புண்

வாயைமூடினாற்போலச் சில்லுப்போட்டு மேலேயும் பொத்தி கச்சாலே இழுத்துக்கட்டி மேல்சில்லைக் கத்தரிக்கோலினால் கத்தரித்துப் போடத் தனக்குந் தானே சீயுந் தங்காது, வங்கு, வளைவைத்த புண் முதலானவை ஆறிப்போகும். பத்துப் பதினைந்து நாளையிலே ஆறி வரும்.

குறிப்பு:

வரட்பாளம் என்பது என்னவென்று புலப்படவில்லை. மேற்கூறிய பொருள் 72 நெம்பர் சுவடியிலுள்ளபடி அம்படியே கூறப்பட்டுள்ளது. *(ஏடு நெம்பர் 10)*

41. உடையாத புண்ணருக்கு

பொடுதலையி னிலையரைத் தாவிநெய்யைக்
கூடவிட்டுப் பொழிந்தன்னெய்யைப்
படுகிரந்தி மேற்பூசிப் பின்மருந்தை
மேற்கட்டப் பரிந்துடைத்து
விடுமதுக் காமணக்கின் முத்தைமுலைப்
பாலிலரை மீட்டிப்புண்மேல்
இடுமாறுங் கிரந்திக்கும் வளையமாய்த்
தடவுசீலை யிடவொட்டாதே. 80

(இ-ள்)

பொடுதலை யிலையைப் பசுவின் நெய்விட்டு நன்றாக அரைத்து கிரந்திகளின்மேல் பூசி, அதன்மேல் கட்டிவிடவும். கிரந்திகள் பழுத்து உடையும்.

2. *கொட்டைமுத்தை முலைப்பால் விட்டு அரைத்து புண்கள் கிரந்திகள் முதலானவைகளைச் சுற்றிலும் வளையமாக இடவும்.

42. உடையாத புண்களுக்கு மருந்துகள்

பசரிகேழ் வரகுமாக் களிகிண்டிக்
கட்டிடச்சீழ் பரிந்துடைக்கும்
நிசமதுவெட் பாலைப்பாற் குழிவிழுந்த
புண்மீது நிறையவிட்டு
வசமந்த விலைதானே மேலுமிட்டு
மூன்றுதினம் வீழ்ந்திடாமற்
பிசகதிலாக் கட்டிட்டு மேற்றிறந்து
முடைந்துபோம் பின்னுந்தானே. 81

உடைந்தவாய் தனக்கந்தப் பாலைவிட்டு
மத்துளிரை யுறவேமூடி
தடைபந்த மாகவித்தப் படியைந்து
முறைகட்ட தன்வாய்மூடி
யடைந்தாறிப் போஞ்சிலந்தி யுடைந்துவாய்
மூடிவிட்டா லந்தப்பால்விட்
டிடைந்துத்தா மணிக்கொழுந்த ரைத்தொருகுன்
றியளவி தன்வாய்வையே. 82

வைத்துடன்மேற் போற்றியிட்டுக் கட்டிடுவாய்
திறந்துஞ்சீழ் வடிந்துபோகும்
மேய்த்திடுவேப் பங்கொழுந்து சற்றுமஞ்ச
ளுப்புடனே மிளகுதானும்

---

* கொட்டை முத்தின் ஓட்டை உடைத்துவிட்டுப் பருப்பமைாத்திரம் உபயோகிக்கவும்.

பத்துவெந்நீர் வார்த்தரைத்துப் புண்ணடைவாய்
வைசேலைப் பாளம் போட்டுக்
கைத்தநலங் கட்டுபுண்வாய் திறந்துவெளி
சீழ்பறியுங் காய்ந்தும் போமே. 83

(இ-ள்)

1. பசரி இலையையும், கேழ்வரகு மாவையும் ஒரு கரண்டியிலிட்டுச் சிறிது ஜலம் சேர்த்துக் களியாகக் கிண்டிப் புண், கட்டிகள் இவைகளின் மேல் வைத்துக் கட்டவும்.

அவை பழுத்து உடையும்

2. புண், கட்டிகள் இவைகளின் மேல் வெட்பாலைப் பாலை ஊற்றி, வெட்பாலை இலையையே மேலேயும் அரைத்து வைத்து மூன்று தினங்களுக்கு அவிழ்க்காமல் கட்டவும்.

கட்டிகள் திரண்டு, பழுத்து, உடையும். மறுபடியும் அந்தப் பாலையே உடைந்த துவாரத்தில் விட்டுத் துளிரை அரைத்து, 5 முறை கட்டவும். அதன் வாய்மூடிப் புண்ணும் ஆறிப்போகும்.

3. சிலந்தி உடைந்து வாய்மூடிவிட்டால், உத்தர மணிக்கொழுந்தை (வெட்பாலை)ப் பாலிலரைத்து ஒரு குன்றியளவு அதன் வாயில் வைத்து மேலே போத்திக் கட்டவும். அதன் வாய் திறக்கும். சீழும் சுத்தமாக வடியும்.

வேப்பங்கொழுந்து, சிறிது மஞ்சள், சிறிது உப்பு, பத்து மிளகு இவைகளை வெந்நீர் விட்டரைத்துப் புண்களின் வாயில் வைத்துப் பாளம் போட்டுக் கட்டப் புண்களின் வாய் பெருத்துச் சீழும் அதிகம் விழுந்து, புண்களும் ஆறும்.

43. புண் வாய்க்குக் "காரத்தினி"

நீர்ப்புங்கம்வேர் வெட்டிமேற்றோற் சீவிப்போட்
டுச்சதையை நேரிழைத்து
மார்த்துவைத்துப் பிழிந்தாவின் பாலதுபோற்
காணுமதி லட்டுசுக்கும்
பாத்துடனுஞ் சற்றுமஞ்ச ளுப்புமுத
ளாவிலொன்று பசுநெய்கூட்டிப்
போர்த்தவங்கு வளைக்கெல்லா மத்தனைக்கத்
தனைத்திரியும் புகட்டிடாயே. 84

புகலக்கே ளொருமாத மிருபானா
ளந்தநீர்ப் புங்குதன்னி
லிருதுவிர்மேற் பசுநெய்யைத் தடவிட்டு
மதிற்போட்டு விசித்துக் கட்ட
வகப்புண்போஞ் சீழ்ப்பரியா தடைத்திட்டா
லம்மூல மதைநசுக்கிப்
பகபுண்வாய் தனில்வைத்துக் கட்டிடச்சீழ்
பரிந்துவாய் படுத்துந்தானே. 85

(இ-ள்)

நீர்ப்புங்கம் வேரை வெட்டிக்கொண்டுவந்து, அதன் மேல்த்தோலைச் சீவி, அதனுடைய உட்சதையை ஒரு கல்லுரலிலிட்டிடித்துப் பிழியப், பசுவின் பால்போல் சாறு இறங்கும். இதனுடன்

கொஞ்சம் சுக்கும்
கொஞ்சம் மஞ்சளும்
கொஞ்சம் உப்பும்

சேர்த்து அரைத்து, இவைகளுக்கு நாலிலொன்று பசுவின் நெய்விட்டுக் குழைத்துக்கொள்ளவும். இதை ஒரு மெல்லிய துணித்திரியில் தேய்த்துப், புண், புரை முதலானவைகளுக்குள்ளே எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவு தூரம் வரை உட்செலுத்தவும்.

அதற்குமேல் நீர்ப்புங்கம் துளிரைப் பசுவின் நெய்யுடன் துவைத்து அதன்மேல் கட்டவும். இவ்வாறு 20 நாட்களோ அல்லது 1 மாதமோ கட்டிவரவும்.

உள்ளிருக்கும் புண்கள் ஆறிப்போகும். அப்பொழுதும் சீழ் வடியாமல் உள்ளேயே தங்கிவிட்டால், நீர்ப்புங்கம் வேர்ச்சதையை நசுக்கிப் புண்வாயில் கட்டவும். வாயின் துவாரம் பெரிதாகிச் சீழும் வடியும்.

44. புண் வாய்க்குத் திரி

நாயுருவி யிலைமஞ்சள் மிளகிட்டு
மரைத்துமே ரண்டெண்ணெய்தான்
றோய்வதுகு ழப்பிட்டுத் திரியாக்கி
யதலேற்றத் தூர்ந்துமூடும்
மேயதசை வளர்ந்துவரு மிம்முறையைத்
தஞ்சையையாள் வேந்தர்வேந்தன்
றாயினுநற் றயவுள்ள சரபோசி
மகாராச னரைந்ததாமே. 86

(இ-ள்)

நாயுருவி இலை
மிளகு
மஞ்சள்

இம்மூன்றையும் சமமெடுத்து நன்றாக அரைத்து ஆமணக்கு எண்ணெயுடன் குழப்பி வைத்துக்கொண்டு, திரியில் நனைத்துப் புண் புரைகளுக்குள் செலுத்தவும். அவைகளில் சதை முடி தூர்ந்துவிடும்.

45. விரணாந்தகத் தைலம்

ஆடாதோடை சிந்துவார முக்காவேளை
யூமத்து மமுக்கிராவேர்
பூடான தக்களியுஞ் செவ்வெருக்கும்
வச்சரவெ புட்கரமூலந்
தொடர்புங்குங் கரிசாலை பாகலின்வேர்
பெருமரத் தோற்றான் றிக்காய்
நாடாத காஞ்சோறிசா ரணைசிறுகாஞ்
சோறிவேர்நாய் வேளையாமே. 87

தேவதார மணித்தக்காளி கரில்சுக்கு
வெண்குன்றி தேர்ந்தவ்வேரும்
பூவ்வேலி யின் பருந்தி யிவையெல்லாஞ்
சேர்த்திடித்துப் பொடியுஞ்செய்து
கூவிலையை யிடிச்சாற்றிற் கொருபங்கு
நல்லெண்ணெயுங் கொச்சைநெய்தான்
ஆவிநெய்யு மிரண்டொன்றி லிருபங்குஞ்
சித்திரநெய் யாம்பங்கொன்றே. 88

இந்தவகை மூன்றினையுஞ் சாறுடன்சேர்
முற்பொடியு மிட்டுக் காய்ச்சி
வந்தபக்கு வத்திறக்கி வடிகட்டிக்
கொண்டதிலு மனோசிலைதான்
கெந்தகமு மரிதார மயிற்றுற்ற
மடற்றுற்றங் கிளந்தநாபி
நிந்தியெலிப் பாஷாணஞ் சாதிலிங்க
மாட்சிகமு நேர்வாளமுமே. 89

நிமிளையும்பா டாணமும ருந்திந்த
வகைகளிரு நிட்கந்தூக்கிக்
குமுறவே பொடிசெய்து கலந்திட்டுச்
சிலநேரங் கூர்நெருப்பில்
ஆமிரத மாய்க்காய்ச்சி டதையழுத்தமா
மொருபானை யதனுள்வைத்துத்
திமிர்விரணங் கிரந்திதீ ரவிந்தத்
தைலமுமேற் றேய்த்திடாயே. 90

(இ-ள்)

ஆடாதோடை	நொச்சி (வெள்ளை)
முக்காவேளை	ஊமத்தை
அமுக்கிராக்கிழங்கு	தக்காளியிலை
செவ்வெருக்கு	சதுரக்கள்ளிவேர்
புஷ்கரமூலம்	புங்கம்வேர்
கையாந்தகரை	பாகல்வேர்
பெருமரப்பட்டை	தான்றித்தோல்
பெருகாஞ்சோறிவேர்	சாறணைக்கிழங்கு
சிறுகாஞ்சோறிவேர்	நாய்வேளை இலை
தேவதாரு	மணித்தக்காளி இலை
மிளகு	சுக்கு
வேலிப்பருத்தி	வெள்ளைக்குன்றிமணிவேர்

இவைகளைச் சமனெடை எடுத்துக்கொள்ளவும். மருந்துச் சரக்குகளையும் வேர் வகைகளையும் காயவைத்து, இடித்துச் சூரணித்துக் கொள்ளவும். இலை வகைகளை அப்படியே இடித்துச் சாறு பிழிந்துகொள்ளவும். இச்சாற்றிற்குச் சம அளவு

சுத்தமான நல்லெண்ணெயும்

சுத்தமான ஆமணக்கெண்ணெயும்

விட்டு ஒன்று கலந்து, சாற்றிற்கு இருமடங்கு பசுவின் நெய்யோ அல்லது வெள்ளாட்டு நெய்யோ விட்டு, எல்லாவற்றையுமொன்று கலந்து அடுப்பின் மேலேற்றிச் சூரணங்களையும் போட்டுக் காய்ச்சவும். பக்குவத்தில் இந்த நெய்யை இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும்.

பின்பு,

மனோசிலை	நெல்லிக்காய் கெந்தகம்
தாளகம்	மயில்துத்தம்
மடல்துத்தம்	நாபி
எலிப்பாஷாணம்	சாதிலிங்கம்
நிமிளை (வெள்ளி)	நேர்வாளம்
ஸ்வர்ணமாக்ஷிகம்	வெள்ளைப்பாஷாணம்

முதலான மருந்துகளை வகைக்கு 2 வராகனெடை அளவு நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு, நன்றாகப் பொடி செய்து, முன்கூறிய தைலத்துடன் குழப்பிவைத்துக் கொண்டு, மறுபடியும் சிறிதுநேரங் கொதிக்கவைத்து, ஒன்றாகிய பின்பு இதை இறக்கவும். இத்தைலத்தை ஒரு அழுத்தமான பானையில் பத்திரப்படுத்தவும்.

விரணம், கிரந்தி முதலானவைகள் தீர மேலுக்கு உபயோகிக்கவும்.

46. புண்களுக்கு "எண்ணெய்"

உசிலந்தோ னயஞ்சீவி நல்லெண்ணெயுங்
குத்தியதை யுரப்பொரித்து
நசிபுண்ணிற் கட்டிடவு மாறியும்போம்
பாலொடுவி நல்லவுள்ளி
வசிசங்க தாரிகவு தும்பைவேம்
பாடமிது வகையிதின்வேர்
வசம்புகோ டகசலை கரிசாலை
கூட்டியெண்ணெய் வடித்திடாயே. 91

(இ-ள்)

1. உசிலைப்பட்டையை மெல்லியதாகச் சீவி, ஒரு கரண்டியிலிட்டு, நல்லெண்ணெய் விட்டுப் பொரித்துப் புண்களின் மேல் வைத்துக்கட்டவும். அவைகள் ஆறும்.

2. பாலொடுவிவேர், பூண்டு, சங்கதாரிவேர், வேம்பாடம் வேர், வசம்பு, கையாந்தகரை இலை, கோடகசாலை இவைகளை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடிக்கவும்.

குறிப்பு:

72 நெம்பர் சுவடியில் 2 நெம்பர் மருந்தில் "மூவிலை" என்ற சரக்கையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

47. புண்ணிற்குக் "கட்டு மருந்து"

தும்பையிலை மிளகுப்பு நறுக்கிட்டுப்
புண்ணில்வைத்துத் தூசாற்கட்டு
வெம்பியசீழ்ப் பிடிபடும்பின் குறிஞ்சாதான்
னின்முகிழ் விரியாதொட்டு
பம்புகொழுந் தைநறுக்கிப் புண்ணில்வைத்துக்
கட்டிடச்சீழ் பரிந்துகாயும்
பின்பு சுண்ணாம் பூமத்தை யிலைச்சாறுஞ்
சாரித்துப் பெரும்புண்காட்டே. 92

(இ-ள்)

1. தும்பையிலை
மிளகு
உப்பு

இம்மூன்றையும் சிறிதளவு எடுத்து நசுக்கிப் புண்களில் வைத்துக் கட்டவும். சீழ் தீரும்.

2. (சிறு) குறிஞ்சா இலை
விரியாத (சிறு) குறிஞ்சாக்கொழுந்து

இவ்விரண்டையும் நசுக்கிப் புண்களில் வைத்துக் கட்டச் சீழ்வடிந்து ஆறும்.

3. சுண்ணாம்புடன் ஊமத்தையிலைச் சாறுவிட்டுக் குழைத்துப் பெரும்புண்களில் போட அவைகள் ஆறும்.

குறிப்பு:

2வது மருந்தில் சொல்லப்பட்ட இருசரக்குகளுடன் மஞ்சளையும் சுண்ணாம்பையும் கூடச்சேர்த்துக் கட்ட வேண்டும் என்று 72 நெம்பர் சுவடியில் காணப்படுகிறது.

48. புண்களுக்கு எண்ணெய்

உத்தமதா ளிக்கொழுந்து சாரணையின்
கொழுந்துதன்னி லொருபிடிதான்
வந்தநிறை யாய்ப்பறித்து நல்லதண்ணீர்
விட்டவித்து வடித்துப்போட்டு
மித்ததிலுங் கடுகுமிள கிருவகைக்கொரு
காசுவீதம்பொரித்து
முத்தபொடிச் செய்துவெள்ளைப் பூடுமொரு
சிரங்கையா முன்னருக்கே. 93

நலமாக நறுக்கிடு மரப்பொடி
யாழாக்கினை நன்கரைத்துத்
திலவெண்ணெ யழக்கதனிற் கனல்காய
வைத்தவித்துத் தீர்மருந்தும்
பலவரைத் தம்மருந்துங் கூட்டியிட்டுக்
கொதிப்பித்துப் பதத்திறக்கிச்
சிலமூன்று நாளருந்திப் புண்ணிலடச்
சீழ்பரிந்து தீருந்தானே. 94

(இ-ள்)

உத்தமதாளிக்கொழுந்து
சாரணைக்கொழுந்து

இவைகள் வகைக்கு ஒரு பிடி பறித்துச் சுத்த ஜலம் விட்டு ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றி மற்றொரு பாத்திரத்தினால் கவிழ்த்து மூடி, அவித்துக் கொள்ளவும். இத்தண்ணீரை யிறுத்து அதனுடன்

மிளகு 1 காசெடை (விராகனெடை)
கடுகு 1 ,, ,,

இவைகளை வறுத்துப் பொடிசெய்து போட்டு.

வெள்ளைப்பூண்டு ஒரு சிரங்கையும்

எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அதனுடன் கலந்து, இரும்புத்தூள் ஒரு ஆழாக்கும் போட்டு, நல்லெண்ணெய் ஒரு உழக்குவிட்டு அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும். பதத்திலிதை இறக்கி 3 நாளைக்குச் சாப்பிடவும். புண்களிலும் இடலாம்.

சீழ் வடிந்து புண்களும் ஆறும்.

49. புண், சூலை, கை, கால் முடக்குக்குச் சூரணம்

சங்கதின்வே ரிடையொன்று வெள்ளறுகு
காலிடையுந் தனிப்பறங்கி
தங்குப்பட்டை நாற்பலமும் பொடுதலைகா
லிடையுஞ்சத் திரமருந்துந்

துங்கமிது காயவைத்து மிடிசேலை
வடிகட்டிச் சூரணத்தை
நங்கிதுகொள் போதிலவன் சிறுநீரில்
வெருகடித்தூ ணாட்டுவாயே. 95

நாட்டியது குழப்பிடந்தி சந்திபத்து
நாட்கொள்ள நலமதாகுங்
கூட்டிடும்போ தடைப்புள்ளே காற்றதுப
டாமலிரு கூறும்பத்தியம்
மூட்டியுப்பும் புளிதள்ளி யிளங்கீரை
மிளகுத்தூள் முன்வெந்நீரும்
ஊட்டியசோ றுங்கொள்ளலாஞ் சரபேந்தி
ரன்முறை யுரைத்ததாமே. 96

(இ-ள்)

சங்கங்கிழங்கு	1 பலம்
வெள்ளறுகு	¼ பலம்
பரங்கிப்பட்டை	4 பலம்
பொடுதலை	¼ பலம்

இம்மருந்துகளை வெய்யிலில் காயவைத்துக் கல்லுரலில் இட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

காற்று அதிகம் வீசாத ஒரு இடத்தில் இருந்து கொண்டு, நோயாளி தன்னுடைய சிறுநீரில், முன்தூளை மூவிரல் கொள்ளுமளவு போட்டுக் குழப்பிக் காலையிலும் மாலையிலுமாக 10 தினங்கள் சாப்பிடவும்.

50. புகுடக்கிரந்திக்கு மருந்து

பொங்குபுண்ணின் றக்கனையா யொன்றிரண்டு
காசினெடை புதியவவெள்ளைக்
குங்கிலியங் கொண்டுவந்து முத்தினெண்ணெ
யாலரைத்துக் குருபதத்திற்
றங்கிரதத் தாலரைக்க வொன்றினுக்குக்
கடிகையரைத் தானுஞ்சென்று
நங்குவழித் தொருசிமிழி லடைபச்சை
யுகின்பழுப்பு நல்லாமணக்கே. 97

தாளிராவ திற்றடவிக் கிரந்திப்புண்
வாயிலிட்டுத் தனிலிரத்தம்
இனியாம லரைநாழி புண்ணதின்வா
யிருவிரல்மே லேறக்கட்டி
களிமற்றா நாள்வழித்துப் பின்கழுவிப்
பாருசதை கட்டித்தூர்ந்து
நளியெட்டு நாளிற்புண் ணாறிவிடு
மிடியாது நலமாம்பாரே. 98

(இ-ள்)

வெள்ளைக் குங்கிலியம் 2 காசெடை

எடுத்துக் கல்வத்திலிட்டு ஆமணக்கெண்ணெய் சேர்த்து நன்றாக அரைத்து, பாதரஸம் ஒரு காசெடையும் சேர்த்து, மறுபடியும் ஒன்று சேரும்படி ஒரு சாமநேரம் அரைத்து, ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இக்களிம்பை, ஆமணக்கங் கொழுந்தில் தடவிக் கிரந்திகளின் வாயில்வைத்து இரத்தம் கசியாமல் ½ நாழிகை கட்டவும். இரு விரற்கெடை அளவு கட்டுக் கட்டவும்.

மறுநாள் இம்மருந்தை வழித்துவிட்டு கழுவிவிடவும்.

சதை வளர்ந்து புண்கள் தூர்ந்துபோம். 8 நாட்களில் குணமேற்படும்.

51. பெருஞ்சிரங்கு, சிறுசிரங்கு இவைகளுக்கு மருந்து

அரிசியுழக் கூறவைத் திடிமாவிற்
பதாயடை யாகத்தட்டிக்
கரியசீரகமுடனெல் லியின்காய்க்
கெந்தகமுங் காணற்சீரஞ்
சரியரைத்த தில்வைத்து முதற்பாதி
மாவையடை தனில்மருந்தைப்
பிரியாமல் மூடுழக்கு நெய்விடுத்து
வேகவைத்துப் பிறகெடுத்தே. 99

எடுத்தடையைப் பிளந்துநடு வைத்தமருந்
தைநெய்யி திற்கலந்து
தொடுவெய்யிற் புடம்வைத்து மோருடன்சோ
றுண்டுபின்னை சுட்டடைதின்
றடுத்தநெய்யு டற்றேய்த்து யுச்சியரப்
பிட்டுவெந்நீ ராதற்றண்ணீர்
விடுகுளித்திப் படிமுத்தி னஞ்செய்யச்
சிரங்கெல்லாம் விட்டுப்போமே. 100

(இ-ள்)

அரிசி ஒரு உழக்கு எடுத்துத் தண்ணீர் விட்டுப் பிசரி ஊறவைத்து இடித்துக்கொள்ளவும். இதனை இரு பங்கு (மொத்தை)களாகச் செய்து, ஒரு பங்கை அடையாகத் தட்டிக்கொண்டு, அதன்மேல்

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
சீரகம்
கருஞ்சீரகம்

இவைகளைச் சமனெடை எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து விழுதாக்கி வைத்து, பாக்கியுள்ள மாவினால் வேறு அடைசெய்து இதன்மேல் மூடி, ஓரங்களை நன்றாகச் சேர்த்து ஒட்டிக்கொள்ளவும்.

ஒரு இரும்பு வாணாயில் பசுவின் நெய்யொரு உழக்கு விட்டு, அதில் மேலே சொன்ன அடையைப் போட்டுப் பொரித்துக் கொள்ளவும். நன்றாக வெந்தபிறகு இந்த அடையைப் பிளக்க, அது பெட்டியும் மூடியுமாக ஆகும். அடையைத் தின்றபின், உள்ளிருக்கும் சரக்குகளை அரைத்து, மீதியுள்ள நெய்யுடனே குழப்பிச் சூரிய புடம் வைக்கவும். காலையில் இந்த நெய்யை நோயாளி உடம்பில் தேய்த்துக்கொண்டு, மத்தியான வேளையில் அரப்புத் தேய்த்துக்கொண்டு வெந்நீரிலோ அல்லது குளிர்ந்த ஜலத்திலோ ஸ்நானம் செய்யவும். இவ்வாறு 3 நாட்களுக்குச் செய்யவும்.

பத்தியம்:

மோர் சாதம் சாப்பிட்டபின் அடையைச் சாப்பிடவும்.

52. சிறு, பெருசிரங்குகளுக்கு எண்ணெய்

முத்தினெண்ணெ யுழக்கடுப் பிற்புகையைக்
காயவிட்டு மேலிறக்கி
யத்திலொரு பிடியுப்பும் போடவது
பொங்கிவரு மதைக்கோலாலே
சுத்திநன்றாய்க் கலக்கிட்டு வடித்துக்கொள்
மோருடனே சோறுமுண்டு
பத்தியுடற் றனின்றசோர வரப்பிட்டு
நாற்றினங்கள் படக்குளித்தே. 101

(இ-ள்)

ஆமணக்கெண்ணெய் ஒரு உழக்கு எடுத்து அடுப்பின் மேலேற்றி கொதிக்க வைக்கவும். புகையும் வரை அப்போது அதை அடுப்பின் மேலிருந்து இறக்கி, அதில் ஒருபிடி உப்புப் போட்டாலது பொங்கும். அச்சமயத்தில் அதை ஒரு குச்சியினால் நன்றாகக் கலக்கவும். பின்பு வடிக்கட்டி, மோர் சாதம் சாப்பிட்டபின் இந்த எண்ணெயை உடம்பில் தடவிக்கொண்டு, அது உள்ளுக்குச் சோரும்படி நன்கு தேய்க்கவும். ஸ்நானம் செய்கையில் அரப்பைத் தேய்த்துக்கொண்டு முழுகவும். இவ்வாறு 4 நாட்கள் செய்யவும்.

சிரங்குகள் ஆறும்.

53. சகல விரணங்களுக்கும் "சங்கம்வேர் பற்பம்."

சங்கத்தின் வேர்வெட்டி வந்து நிழலிலுலர்த்தி
திடிதூளைத் தானுங்கொச்சை
யங்கநெய்யிற் கலந்துண்ணச் சூலையுட
னிருமலும்போ மதிற்றேன் கூட்டி
உங்கவிட மீளுடலும் பெருத்திடும்
பசும்பாலி லுண்ணும்போது
மங்கையர்கள் பெரும்பாடு மருந்தீடுந்
தீரும்வெல்ல மற்றும்பாலே. 102

கூட்டியுண்ணப் பித்தமும்போ மேதிவெண்ணெ
யுட்கொள்ளவும் கூர்வாதம்போம்
ஈட்டியதூட் டனைக்கொண்டு மழுவெடுக்க
லாம்பச்சை யிந்தவேரை

யோட்டியரை குழிப்புண்ணிற் கட்டிடப்போம்
வயிற்றுக்குள் ளகட்டிக்
காட்டியவேர் கல்லுப்புங் கொண்டந்திப்
பொழுதிலையுங் கல்லுப்போடே. 103

அரைத்துண்ணு மண்டலங்க ளரைதான்பத்
தியஞ்செய்யக் கட்டின்கட்டி
கரைந்துபோம் புளிப்புகை யிலைகைப்புந்
தள்ளிக்கொள் கடலடுத்த
தரையாளு மன்னவருஞ் சதுர்மறை
வீதிவேள்வித் தலைமையோரும்
வரையில்லாக் கலையோரும் புகழ்செங்கோற்
சரபேந்திரர் வகுத்ததாமே. 104

(இ-ள்)

சுங்கம் வேரை வேண்டிய அளவெடுத்து நிழலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள் செய்து, வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும்.

இருமல் தீரவும் சூலை தீரவும்:

(வெருகடி தூள்) எடுத்து வெள்ளாட்டு நெய்யில் சாப்பிடவும்.

உடம்பு பெருக்க:

தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

ஸ்திரீகளின் பெரும்பாட்டிற்கும் (அதிகமான மாதவிடாய்) மருந்தீட்டிற்கும்:

பசுவின் பாலில் சாப்பிடவும்.

---

* இந்த செய்யுள் சுவடியில் 137ம் நெம்பர் செய்யுளாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பித்த ரோகங்கள் தீர:

பசுவின் பாலில் வெல்லம் போட்டுக்கொண்டு மூடி தூளைப் போட்டுப் பருகவும்.

வாத நோய்கள்:

எருமை வெண்ணெயுடன் குழைத்துச் சாப்பிடவும்.

இந்தப் பொடியை உட்கொண்டு கொதிக்கும் இரும்பையும் எடுக்கலாம்.

குழிப்புண்களுக்கு:

இதன் பச்சை வேரை எடுத்து அரைத்துக் குழிப் புண்களில் வைத்து கட்ட அவைகள் ஆறும். ஒட்டிய புண்களும் தீரும்.

வயிற்றுக்குள் கட்டி இருந்தால்:

இந்த வேரைக் கல்லுப்புடனே காலை வேளைகளில் சாப்பிடவும். சாயங்காலத்தில் சங்கம் இலையைக் கல்லுப்புடன் அரைத்துச் சாப்பிடவும்.

இவ்வாறு ½ மண்டலம் (20 நாட்கள்) சாப்பிடவும். கட்டிகள் கரையும்.

பத்தியம்:

புளிப்புப் பதார்த்தங்கள், புகையிலை, கசப்புப் பண்டங்கள் முதலியவைகளை நீக்கவும். கைகண்டது.

குறிப்பு:

இம்மருந்திற்குச் சங்கம் வேர் பற்பம் என்ற பெயருக்குப் பதிலாக சங்கம் வேர் கற்பம் என்று இருந்தால் அது பொருத்தமாக இருக்கும்.

54. கிரந்தி முதற் குஷ்டத்திகு எண்ணெய்

நாழிமுத்தி னெண்ணெயிலுஞ் சின்னிசங்கங்
குப்பியின் வேர் நற்சங்கின்வேர்
கேழெலுமிச் சங்காயள வரைத்துக்
கூட்டியெரி கிண்டிவிட்டுத்
தாழியிலு மிறுத்துவைத் துள்ளுக்குங்
கொடுவிரணந் தனிலுல்பூசு
வாழிதலை யினுந்தேய்த்து மரப்பிட்டுங்
கழுவுவெந்நீர் வார்த்துக்கொள்ளே. 105

பகல்முழுகிப் புளிப்புப்புங் கடுகுப்பூ
சினிக சப்பு மானெய்மோரும்
புகையிலைத யிருடனுமி துகள் தள்ளிப்
பத்தியஞ்செய் போதில்தீருந்
தகரைவிரை யுரியுங்கார் போகவரி
சியுமுரியாய்த் தழைத்தவங்கம்
மிகவிரையு முரியுந்தா னீரிலரைத்
தெண்ணெயிலும் விடவுங்கேளே. 106

*நானாழி யிற்குழப்பிச் சேங்கொட்டை
பலமொன்றை நறுக்கிநாலாய்
வேனாகப் போட்டெரித்து மெழுகுபத
மானவுடன் னிரண்டுநிட்கந்
தானாகு மிதாரம் பொடிசெய்து
தூவுகிண்டித் தானிறக்கி
மேனாளாம் பனிரெண்டும் பத்தியமாய்த்
துட்டெடைகொள் வெம்மைக்கி நெய்யே. 107

* இது 101ம் நெம்பர் செய்யுளாகச் சுவடியில் காணப்படுகிறது.

(இ-ள்)

ஆமணக்கெண்ணெய் 1 படியுடன்

சின்னிவேர்	சங்கங்குப்பிவேர்
சங்கம் வேர்	

இம்மூன்றையும் எலுமிச்சையளவெடுத்து அம்மியின் மேல் வைத்து நன்றாக வரைத்து எண்ணெயுடன் குழப்பிக் கொண்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி, ஒரு பானையில் வடித்துக்கொள்ளவும்.

இந்த எண்ணெயில் ஒரு துட்டெடை எடுத்து உள்ளுக்குக் கொடுத்துப் புண்கள் மேலும் பூசவும். மேலும் இந்த எண்ணெயைப் பகல் பொழுதில் தலையில் தேய்த்துக்கொண்டு அரப்பிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

அன்றைய தினம், புளிப்புச் சுவையுள்ள பண்டங்கள், உப்பு, கடகு, பூசினிக்காய், கசப்புப் பதார்த்தங்கள், பசுவின் நெய், மோர், புகையிலை, தயிர் இவைகளை நீக்கி விடவும்.

தகரையிலை	½ படி
கார்போகரிசி	½ படி

இவ்விரண்டையும் தண்ணீர் விட்டரைத்து (ஆமணக்கெண்ணெய் 4 படியுடன் குழப்பி) அதனுடன்,

சுத்திசெய்த சேராங்கொட்டை 1 பலத்தை எடுத்து அவைகள் ஒவ்வொன்றையும் நான்காய்ப் பிளந்து எண்ணெயுடன் போட்டு யாவற்றையும் ஒன்று கலந்து அடுப்பின்மேல் ஏற்றி எரித்து, மெழுகு பதமாகும்போது சுத்தி செய்த தாளகம் 2 வராகனெடை எடுத்துக் கல்வத்திலிட்டு நுணுக்கி, அதனுடன்கலந்து, பதத்திலிறக்கவும். தினம்காலை

வேளையில் ஒரு துட்டெடை வீதமெடுத்து 12 நாளைக்கு உட்கொள்ளவும்.

அதன் கடுகைப் புண்களின்மேல் பூசவும்.

உஷ்ணம் மிகுதியானால் பசுவின் நெய் கூட்டவும்.

குறிப்பு:

72 நெம்பர் சுவடியில் பத்தியம் - "அமுது மாத்திரம் " எனக் காணப்படுகிறது. "தகரை விதைக்குப் " பதில் கத்திரி நாயகம் விதை என்றும் காணப்படுகிறது.

55. உடரலை, கால், கைப் புண்களுக்கு எண்ணெய்

ஓதிசெங்கத் தாரிநிம்ப மாவரைசங்
கின்றோலோ டுங்கார்த்தி
யதின்மூம ருதிறோ லிலவங்கப்
பட்டையுட னவின்மருந்து
மதிகருஞ் சீரகமும் விடமூங்கி
லிலைமூன்று வசம்புதானுந்
துதிவெள்ளை முப்பூண்டு மிதுவெல்லாம்
மோரளவாய்த் தூக்கித்தட்டே. 106

தட்டிடுநல் லெண்ணெயிலு மதைப்போட்டுப்
பொன்னிறமாந் தான்பதத்திற்
றொட்டிறகத்திக் கொண்டுபுண்ணி னளவுக்கோர்
சேலைகிழித் தோய்த்துப் போட்டு
விட்டசஞ் சரகெண்ணெ யிற்பொரித்துப்
புண்ணாற்று மேலிற்கட்டு
மொட்டுபறங் கிப்புண்ணுக் கிடுநாவி
நெறிவிடத்தி லூட்டிப்போடே. 109

(இ-ள்)

ஒதியம்பட்டை	செங்கதாரிவேர்ப்பட்டை
வேப்பம்பட்டை	ஆவரம்பட்டை
சங்கம்பட்டை	கலப்பைக்கிழங்கு
மருதம்பட்டை	இலவங்கம்பட்டை
கருஞ்சீரகம்	விஷமூங்கிலிலை
வசம்பு	வெள்ளைப்பூண்டு

இவைகளை வகைக்கு (1 வராகனெடை) வீதமெடுத்து அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் சேர்த்தரைத்து,

சுத்தமான நல்லெண்ணெய் (1 சேரில்) குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பொன்னிறமாகும்வரை எரித்து வடிகட்டிக்கொள்ளவும்.

இதில் ஒரு துணியைத் தேய்த்து புண்ணின்மேல் வைத்து அதற்குமேல் இந்த எண்ணெயிலே பொரித்த அரசந் துளிரையும் கட்டவும்.

புண்கள் ஆறும். பறங்கிப் புண்களானால் நாபியையும் நிர்விஷத்தையும் இந்த எண்ணெயில் பொரித்துக் கட்டவும்.

கலப்பைக் கிழங்கு நிர்விஷம், நாபி முதலான விஷ சரக்குகள் மேற்கூறிய எண்ணெய் வகைகளில் சேர்ந்திருப்பதனால் உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது.

56. கிரந்திக்குச் சேர்வை

புனைகருஞ் சீதாரி பலமிரண்டுந்
தூட்செய்து புகல்கரண்டி
தனிலெண்ணெ யிட்டதிலே தூளையிடு
கொதிகண்ட தருணந்தன்னில்

நனியொரு பணவெடை தான்றுருசி
யிட்டதனை நல்லநீரில்
முனையூற்றிப் பிசைந்திட்டால் வெண்ணெய்வரு
மதைச்சிமிழில் மூடிவையே. 110

வைத்திதனை நுணாவினிலை யிற்றடவிப்
போடவுமே வரிகிரந்தி
உத்திதெல்லா மாறிவிடுங் கலப்புறத்திற்
சங்குகொண்டு மூமத்தின்னீர்
குத்தியிழைத் தோர்சிமிழிற் கொண்டுநுணா
விலையிலிடக் குணமதாகும்
மத்திலா ரையினீரிற் கலப்புறஞ்
செம்பிழைத்து வழித்திடாயே. 111

(இ-ள்)

கருஞ்சீதாரி (கருமை நிறமுள்ள செம்புளிச்சை) - 2 பலமெடுத்துக் காயவைத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு இரும்புக் கரண்டியில் நல்லெண்ணெய் விட்டு, அதில் இத்தூளையிட்டுக் கொதிக்க வைக்கவும். அது நன்றாகக் கொதிக்கையில் துருசு ஒரு வ ராகனெடை சேர்த்து மத்தித்துக் குளிர்ந்த தண்ணீரில் விடவும். பின்பு தண்ணீரை வேகமாக அலசி வந்தால், அம்மருந்து வெண்ணெயைப் போலத் திரளும்.

இதை ஒரு சிமிழில் பத்திரப்படுத்திக்கொண்டு வேண்டும்போது ஒரு நுணா இலையிலிதைத் தடவிப் புண்களின மேல் போடவும்.

ஒரு வெங்கலப் பாத்திரத்தின் அடியில் ஊமத்தையிலைச் சாற்றைவிட்டு, ஊது சங்கினால் இழைத்து, வரும் விழுதை ஒரு நுணா இலையில் தடவிக் கிரந்திகளுக்குப் போடவும்.

மேற்சொன்னபடி கலப்புறத்தில் வல்லாரை இலைச் சாற்றை ஊற்றிச் செம்பினாலிழைத்து வரும் விழுதை நுணாயிலையில் தடவிப் போடவும். குணம்தரும்.

57. ஆறாத அழுகுணிப் புண்களுக்கு மருந்து

கூறிய பேய்ப் பீர்க்கின்விரை பலமொன்று
வறுத்துந்தூட் கூட்டுஞ்சுண்ணம்
பூரியவொட் டடைமுத்தி ணெண்ணெயிலுங்
குழைத்தழிபுண் ணிற்போடுந்
தீருமிது புளிதள்ளு மாவிலங்கின்
வேர்பட்டை சேர்வசம்புந்
நூருள்ளியுரு யெள்ளெண்ணெய் தனிற்போட்டுத்
திரிலவை தொடாமற்பூசே. 112

(இ-ள்)

பேய்ப்பீர்க்கம் விதை ஒரு பலம் எடுத்துச் சட்டியிலிட்டுக் கருக வறுத்துக்கொள்ளவும். இதற்குச் சரியெடை ஒட்டடையும், சுண்ணாம்பும் கூட்டி விளக்கெண்ணெய் வேண்டிய அளவு விட்டுக்குழைத்து வைத்துக் கொள்ளவும். வேண்டும்போது ஒரு துணியில் தடவி விரணங்களுக்குப் போட்டு அன்றைய தினம் புளியின்றிச் சாப்பிடவும்.

புண்கள் ஆறும்.

2. வசம்பு பூண்டு
மாவிலிங்கம் வேர்ப்பட்டை

இவைகளை நசுக்கி நல்லெண்ணெயுடன் கலந்து, சூரிய புடமாக வைக்கவும்.

இதைக் கோழி இறகினால் புண்களுக்குத் தடவவும்.

புண்கள் ஆறிவிடும்.

58. கன்னக்கிரந்தி, காளான், கரப்பான் முதலியவைகளுக்கெண்ணெய்

கருஞ்சீர மொதியந்தோற் பூதகரப்
பான்பட்டைக் கார்த்திமூல
மருதந்தோ லவின்வெளிச் சைப்பிசினி
நீர்ப்பூலா வளரும்பட்டை
தருமிவைக டனைநேக வரைத்தெண்ணெய்
தனிற்கூட்டித் தானெரித்துப்
பருங்கன்னக் கிரந்திகுங் கரப்பானுக்
கிடத்தீரும் பண்பாய்த்தானே. 113

(இ-ள்)

சுருஞ்சீரகம்	ஓதியம்பட்டை
பூதகரப்பான்பட்டை	கலப்பைக் கிழங்கு
மருதம்பட்டை	அபின்
வெளுச்சைப்பிசின்	நீர்ப்பூலாப்பட்டை

இவைகளை வகைக்குச் சரியெடை எடுத்து நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடனே கூட்டி, ஒரு நாள் சென்றபின் அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இத்தைலத்தைக் கன்னக் கிரந்திக்கும், கரப்பானுக்கும் தடவவும்.

குறிப்பு:

இத்தைலத்தில் கலப்பைக்கிழங்கு சேர்ந்திருப்பதால் வாயில் படாமல் சாக்கிரதையாக உபயோகிக்கவும்.

சரக்குகள் 1 வராகயெடையானால் எண்ணெய் 1 சேர் எடுத்துக் கொள்ளவும்.

வெளிச்சைப் பிசினுக்குப் பதில் விளாம்பிசின் சேர்த்துக்கொள்ளவும்.

59. காளான், கன்னக் கிரந்தி, கரப்பானுக்கு எண்ணெய்

எள்ளினெண்ணெய் வேம்பினெண்ணெ யோரளவா
யிட்டதனி லிரதமொன்று
தள்ளுபச்சை நாபியொரு பணவெடையுங்
குங்கிலியந் தாக்கிடாறு
விள்ளுபண வெடையபினு மூன்றுபண
வெடையைந்து வெளுத்தைக்கண்டு
வெள்ளையுள்ளி முப்பூண்டு மைந்தலகு
பாக்குடனே மிளகைந்தாமே. 114

ஐந்துகடுக் காய்வசம்பு மூன்றாகு
மேற்கிளுவை யாடாதோடை
நந்தவுரி யாவரையுங் குன்றிமணி
தான்கொழுஞ்சி நவின்றவோர்கள்
முந்தரைத்து மெண்ணெயிலே கலந்திட்டுக்
காய்ச்சிபத மொழிமேகம்போல்
அந்தநிற மாயிறக்கி யுட்கொள்ள
விரணமெல்லாம் மாறிப்போமே. 115

(இ-ள்)

சுத்தமான	எள்ளெண்ணெய்	1 சேர்
,,	வேப்பெண்ணெய்	1 சேர்

இவற்றையொன்று கலந்து,

சுத்திசெய்த	பாதரஸம்	1	பணவெடை
,,	நாபி	1	,,
குங்கிலியம்		6	,,
அபின்		3	,,
வெளிச்சைப்பிசின்		5	,,

வெள்ளைப்பூண்டு	3 (எண்ணிக்கையில்)
களிப்பாக்கு	5 பணவெடை
கடுக்காய்த்தோல்	5 ,,
வசம்பு	3 ,,
கிளுவை வேர்	
ஆவாரை வேர்	
ஆடாதோடை வேர்	
அவுரிவேர்	
குன்றிமணி வேர்	
கொழுஞ்சி வேர்	

முதலில் கடைச்சரக்குகளைக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, பின்பு ரஸத்தைச் சேர்த்து, எண்ணெய் வகைகளுடனே கலந்து, அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சவும். மேகத்தின் நிறம்போலான பின், எண்ணெயைக் கீழே இறக்கிவிடவும்.

இதனைத் தினம் ஒரு ஸ்பூன் உட்கொள்ள விரணங்கள் தீரும்.

குறிப்பு:

(1) வேர் வகைகளையும் 3 பணவெடை எடுத்துக் கொள்ளவும்.

(2) இம்மருந்தில் நாபி சேர்ந்திருப்பதனால் இந்த எண்ணெயைக் குறைந்த அளவில் உபயோகிக்கவும்.

60. புண், கிரந்தி, சூலை, மேகவகை, கழிச்சல் முதலியவைகளுக்குக் கருங்கோழிச் சூரணம்

ஒரு பெரும் பானைதனிற் கான்சதிரக்
கள்ளிதனை யுறுபாக்குப்போல்
அரியதை யுள்ளடைத்துப் பானையின்வாய்
வேடுகட்டி யதனிற்கேளு

மிரியல்சீரகஞ்சுக்கு மசமோதந்
திப்பிலியு மிவைவகைக்கு
முரியரைப் பலவீதஞ் சாதியின்காய்
பத்திரியு முதுகிராம்பே. 116

குரசானி யோமமிவை வகைக்கோரு
வராகனெடை கோட்டத்தோடும்
பரவதிங்கங் கடுரோணி வகையொன்று
மூன்றுநிட்கம் பனிரெண்டடுந்தான்
தரமிடித்துக் கருங்கோழி தன்குடல்கால்
மயிருடனே தலையும்போக்கிக்
கரமருந்த தில்வைத்து மிளையாடி
வேட்டதின்மேற் கலந்துவையே. 117

எரியிட்டு நாற்சாமம் வெந்தெடுத்து
மென்பதத்தி லிடித்துலர்த்தி
பரியவடிக் கட்டிருபான் றினமுவெரு
கடியளவு படவுட்கொள்ளச்
சொரிசிரங்க ரிகிரந்தி யரையாப்புப்
புரைபுண்ணுஞ் சூலைக்கட்டும்
பெரியமே கங்களிவை சகலமும்போ
மிம்முறையைப் பேணிச்செய்யே. 118

(இ-ள்)

சதுரக்கள்ளியை (சுமார் ஒரு வீசை) கொண்டுவந்துச் சிறு சிறு பாக்களவாக அதை வெட்டி, ஒரு பெரும் பானையிலிட்டு, (சுமார் 3 மரக்கால்) ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றவும். பானையின் வாய்க்கு ஒரு வெள்ளைத் துணியினால் வேடுகட்டவும். பின்பு,

மிளகு	சீரகம்
சுக்கு	ஓமம்
திப்பிலி	

இவைகள் வகைக்கு ½ பலம்

சாதிக்காய்	சாதிப்பத்திரி
கிராம்பு	குராசாணியோமம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

கோஷ்டம்	அதிமதுரம்
கடுகரோகிணி	

இவைகள் வகைக்கு 3 வராகனெடை வீதமும் எடுத்து எல்லாவற்றையுமொன்று கலந்து, கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும்.

ஒரு கருங்கோழியைக் கொண்டுவந்து அதன் தலை, கால், மயிர், குடல் முதலான உறுப்புக்களை நீக்கி, முன் சொன்ன சூரணத்தை அதன் வயிற்றுக்குள் திணித்துத் தைத்துவிடவும்.

பின்பு இதை மேற்கூறிய வேட்டின்மேல் வைத்து மூடி, அப்பானையை அடுப்பின்மீதேற்றி, 4 ஜாமத்திற்கு எரிக்கவும். மாம்ஸம் நன்றாக வெந்தபின், எலும்புகளை நீக்கிவிட்டுச் சிறு சிறு துண்டுகளாக்கி, நிழலில் உலர்த்தவும். பின்பு, அத்துண்டுகளைக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இச்சூரணத்தில் தினம் மூவிரல் கொள்ளுமளவெடுத்து, உட்கொள்ளவும். இம்மருந்தை 20 நாளைக்கு உபயோகிக்கச்

சொரிசிரங்கு	கிரந்தி
அரையாப்பு	புரை
புண்	சூலைக்கட்டு

மேகரோகங்கள் முதலியவைகள் தீரும்.

61. துரவிய கன்னக் கிரந்திக்கு மருந்து

முருக்கிதழுங் கெந்தகமுந் திலவெண்ணெய்
நிம்பவெண்ணெய் முற்கலந்தும்
எரியிட்டுப் பதத்திறக்கிப் புண்ணிலிடச்
சேலையிலே யிட்டும்போடு
மரிபட்டும் பாரித்து வற்றியிடும்
பின்னுலர்ந்து வருமேகங்கள்
அரிகிரந்தி கன்னப்புண் புரைதீர்ந்துஞ்
சீராகு மடுத்துச்செய்யே. 119

(இ-ள்)

முருக்கிதழ் நெல்லிக்காய்க்கெந்தகம்

இவ்விரண்டையும் (வகைக்கு 1 பலமெடுத்துக்) கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து

வேப்பெண்ணெய் ஒரு சேரும்
நல்லெண்ணெய் ஒரு சேரும்

எடுத்து ஒன்று சேர்த்து அதில் குழப்பி அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்திலிறக்கி வைத்துக்கொண்டு, ஒரு சிறு துணியில் தோய்த்துப் புண்களில் போடவும். அவைகள் வற்றி உலர்ந்து போகும். மேகங்கள், அரிகிரந்தி, கன்னப்புண் புரைகள் முதலியவைகளுந் தீரும்.

62. கிரந்தி, சூலைக்கு, "வல்லாதி லேகியம் "

பதின்பலம் வல்லகியுஞ் செங்கலின்றூள்
தனிலுநீர் பார்விடுத்தும்
அதிலுமறு பதுநாழி யூறவிட்டுப்
பின்னெடுத்து மலம்பிப்போட்டும்
இதையுலர்த்தா வின்பாலி ரண்டுபடி
தனைவிட்டு மிதமாய்ச்காய்ச்சும்
முதியகாற் படிநீரிற் சாதியின்காய்
பத்திரியு மூட்டுவாயே. 120

ஓமமில வங்கமிரு சீரகமுஞ்
சிறுலவங்கத் துள்ளபட்டை
மாமிளகுங் கத்தூரி மஞ்சளது
மேலமுடன் வாய்விளங்கம்
நாமமிது வகையொன்று பலங்களாய்
பசுவின்பா னல்கரைத்து
நேமமிது முன்பாலிற் கலந்துகொள்
ளாறுபலம் நேர்பரங்கி. 121

பட்டைசக்கைத் தூளிடித்துப் பாலிலிட்டுப்
பழவெல்லம் பலம்பத்திட்டு
சுட்டநெய்யுங் கூட்டிவிட்டு லேகியமாம்
பதங்கண்டு துப்புமிட்டுத்
திட்டமுடன் பாகஞ்செய் புன்னைக்கா
யளவாகத் தின்னும்போது
குட்டமுடன் சூலைகள்போ மிருபதுநா
ளந்திசந்தி கூடத்தானே. 122

(இ-ள்)

செங்கல் மாவு (1 படியில்) வேண்டிய அளவு எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு அதில் (செங்கள் தூள் முழுகும் வரை)

தண்ணீர் விட்டு அதனுடன் மூக்கு வெட்டிய சேராங்கொட்டை 10 பலத்தைப் போட்டு 60, நாழிகை ஊறவைக்கவும். மறுநாளதை எடுத்து நன்றாக அலம்பி உலர்த்திக்கொள்ளவும். பின்பு 2 படி பசுவின் பாலை அடுப்பின் மேலேற்றி கால்படியாகும் மட்டும் காய்ச்சிக் கொள்ளவும். இதனுடன்,

சாதிக்காய்	சாதிப்பத்திரி
ஓமம்	கிராம்பு
சீரகம்	கருஞ்சீரகம்
சன்னலவங்கப்பட்டை	மிளகு
கஸ்தூரி மஞ்சள்	ஏலக்காய்
வாயுவிளங்கம்	

இவைகளை வகைக்கு ¼ பலம் எடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்துக் காய்ந்துகொண்டிருக்கும் பாலில் கலந்து, சுத்திசெய்த பரங்கிப்பட்டை 6 பலத்தை இடித்து வஸ்திரகாயஞ் செய்து, அதிலிட்டுப் பழைய வெல்லம் 10 பலமும் போட்டு, சேராங்கொட்டைகளின் விதைகளையும் நீக்கிவிட்டு, அம்மியிலிட்டு அரைத்து விழுதாக்கி அதனுடன் போட்டு, நெய்விட்டுக் கிளறி லேகிய பதத்திலிறக்கவும். ஆறியபின் வேண்டிய அளவு தேனைவிட்டுக் குழப்பி வைத்துக்கொள்ளவும்.

தினம் 2 வேளை (காலையிலும், மாலையிலும்) பின்னைக் கொட்டையளவெடுத்துச் சாப்பிடவும். 20 நாளைக்கு உட்கொள்ளவும்.

இதனால் குஷ்டம், சூலை, முதலான ரோகங்கள் தீரும்.

குறிப்பு:

பரங்கிச் சக்கையை இடித்துத் தூளாக்கிப் பசுவின் பாலில் புட்டவித்துக் கொள்ளவும்.

63. கிரந்தி, சூலைகளுக்கு "வல்லாதி லேகியம்"

வல்லகியும் பலம்பத்து மசமோதங்
கருஞ்சீர மரமஞ்சள்தான்
சொல்லுமெள்ளுங் குராசானி குடசரிசி
கொடிவேலி சூழ்கார்போக
நல்லரிசி வகையொன்றும் பலமொன்றா
யிரும்புலக்கை நாட்டிடிக்கக்
கல்லுரலிற் பலமொன்றுங் கொப்பரைக்காய்
பனங்கட்டி கணக்காய்த்தானே. 123

இருபதுங்க லந்திட்டு மையதனைப்
போலிடித்து மெடுத்துக்கொண்டு
தருமிச்சாப் பத்தியமாய்க் கழற்காயி
னளவந்தி சந்திகொள்ள
மருவுத்த புண்கிரந்திச் சூலைபுரை
யரையாப்பு வரட்சியோடுங்
கருவுத்த விரணமெல்லாந் தீர்ந்துவிடுஞ்
சரபேந்திரன் கணித்ததாமே 124

(இ-ள்)

முன்கூறியபடி செங்கல் தூளில் ஊறவைத்துச் சுத்திசெய்து கொட்டை நீக்கிய சேராங்கொட்டை 10 பலம்

ஓமம்	கருஞ்சீரகம்
மரமஞ்சள்தோல்	எள்ளு
குராசானி ஓமம்	வெட்பாலையரிசி
கொடிவேலி வேர்ப்பட்டை	கார்போகரிசி

முதலிய சரக்குகளை வகைக்கு ஒரு பலம் வீதமும் எடுத்து எல்லாவற்றையு மொன்றுகலந்து, கல்லுரலிலிட்டு, இரும்பு உலக்கையினால் நன்றாக இடிக்கவும். அதனுடன்,

கொப்பரைத்திருகல்	1 பலமும்
பனைவெல்லம்	20 பலமும் போட்டு

மறுபடியும் நன்றாக ஒன்று சேரும்படி மைபோலிடிக்கவும்.

இதில் கழற்சிக்காயளவெடுத்துத் தினம் காலையிலும், மாலையிலும் உட்கொள்ளப் புண்கள், கிரந்தி, சூலை, புரை, அரையாப்பு, வரட்சி, விரணங்கள் முதலியவைகள் தீரும்.

இச்சா பத்தியமாக இருக்கவும்.

64. கிரந்திக்கு மருந்து

கூவிளைவே ரிலைவெக்கா வளைவேரும்
வசம்புள்ளிக் கூட்டியெண்ணெய்
பாவனைசெய் பூதகரப் பானுமிட்டுக்
கொதுப்பித்துப் பண்பாய்க்கொள்ள
நோவுகிரந் திகடீருஞ் சங்கங்குப்
பியின்பட்டை நொருக்கிச் சாற்றில்
தாவசுவத் தெலும்பிழைத்துப் புண்ணிலிட
முத்தினத்திற் சாந்தமாமே. 125

(இ-ள்)

வில்வ இலை	வில்வவேர்ப்பட்டை
வெள்ளை வேர்	பூண்டு
வசம்பு	பூதகரப்பான்பட்டை

இவகைளை நன்கு அரைத்து (நல்லெண்ணெயுடனே) கூட்டிக் குழப்பி, அடுப்பின்மேலேற்றிக் கொதிக்க வைத்துப் பக்குவத்திலிறக்கவும். இதில் ஒரு ஸ்பூன் அளவெடுத்துத் தினம் காலையில் உட்கொள்ளவும். கிரந்திகள் தீரும்.

(2) சங்கங்குப்பியின் பட்டையை எடுத்துக் கல்லுரலிலிட்டுச் சிறிது ஜலம் விட்டு இடித்துச் சாறுபிழிந்து சந்தணக் கல்லிலிட்டு அதில் குதிரையின் எலும்பை இழைத்து விழுதாக்கிப் புண்களின்மேல் தடவவும். 3 நாளைக்குள் புண்கள் தீரும்.

குறிப்பு:

நல்லெண்ணெய் 1 சேருக்கு, பச்சிலைச் சரக்குகள் ஒரு வராகனெடை எடுத்துக் கொள்ளலாம்.

65. பச்சுடம்பிற் கிரந்தி, கரப்பான் முதலியவைகளுக்கு எண்ணெய்

திருத்துழாய் குழிமிட்டான் தும்பையிண்டு
சங்குகம்பந் திராய்பாவட்டை
முருக்காடா தோடைவன மல்லிகையுந்
தூதளைசெம் முள்ளிகோழி
வருமவரை கோழிமுள்ளான் கஞ்சாங்கோ
ரையுமிலைகள் வகைநறுக்கி
யிருசிற்றா மணக்கெண்ணெ யதனிலிட்டுக்
கருஞ்சீர மீருள்ளிநீரே. 126

வசம்புள்ளி வெளுத்தபிசி னிவைநறுக்கி
மேற்கலந்து வைத்துவெய்யில்
வசம்புடஞ் செய்தெண்ணெய் தனைநக்கக்
கிரந்திப்புண் வளர்கரப்பான்
நிசந்தீரும் வில்வயிலை காடியநீ
ரால்நறுக்கி நேரெள்ளெண்ணெய்
வசம்புள்ளி பிசைந்திட்டு வெய்யில்வைத்துப்
புண்ணிலிட மாறுந்தானே. 127

(இ-ள்)

துளசியிலை	நத்தைச்சூரியிலை
தும்பையிலை	இண்டங்கொழுந்து
சங்கு இலை	†கம்பந்திராய் இலை
பாவட்டையிலை	முள்முருக்கிலை
ஆடாதோடையிலை	காட்டுமல்லிகையிலை
தூதுவளையிலை	செம்முள்ளியிலை
கோழியாவரையிலை	*கோழிமுள்ளானிலை
கஞ்சாங்கோரையிலை	

முதலான பச்சிலை வகைகளைச் சமனெடையெடுத்து நறுக்கி, சிற்றாமணக்கெண்ணெயில் ஊறப்போட்டு,

கருஞ்சீரகம்	பூண்டு
வெளுத்தபிசின்	வசம்பு

இவைகளையும் கல்லுரலிலிட்டு இடித்து முன்சொன்ன, எண்ணெயுடன் சேர்த்துப் பிசைந்து, வெய்யிலில் வைக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூன் எடுத்துத் தினம் ஒரு வேளை காலை வேளைகளில் உட்கொள்ளவும்.

கிரந்தி, கரப்பான் முதலானவை தீரும்.

வில்வ இலை, வசம், பூண்டு இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டுக் காடிவிட்டு நசுக்கி, நல்லெண்ணெயுடன் சேர்த்து வெய்யிலில் வைக்கவும்.

---

† கம்பந்தராய் என்பது பம்பந்தராயாகும். இது தரையில் அதகம் படராது. இதன் இலைகள் பெருத்திருக்கும்.

* கோழி முளையான் - முக்குளிக்கீரை.

10 நாட்கள் சென்ற பின் இதனைப் புண்களுக்கு இடவும்

1, 2 மருந்தில் பச்சிலை வகைகள், கடைச்சரக்கு முதலியவைகள் வகைக்கு 1 வராகனெடையானால் எண்ணெய் 1 சேர் எடுத்துக்கொள்ளவும்.

66. தீப்படும் புண்களுக்கு " எண்ணெய் "

முன்னைநறு வலிக்கொழுந் தெண்ணெயிலுங்
கொதிப்பித்து மோதப்பூசுந்
தன்னிலுமா றாதபுண்ணிற் பேயத்தி
வேர்விட்டுணு தன்கிராந்தி
பின்மருதந் தோலுடனே மூன்றுமரைத்
திதைப் புண்ணிற் பேணிப்பூச
நன்னயமா யாறிவிடுஞ் சரபேந்திர
னிம்முறையை நவின்றதாமே. 128

(இ-ள்)

முன்னைக்கொழுந்து நறுவலிக்கொழுந்து

இவ்விரண்டையும் வகைக்கு (எலுமிச்சையளவு எடுத்து) நல்லெண்ணெய் (2 சேருடன்) கூட்டிக் காய்ச்சிப் பசமாக இறக்கித் தீச்சுட்ட புண்களுக்கிட அவைகள் மாறும்.

பேயத்தி வேர் விஷ்ணுக்கிரந்திவேர்
மருதம்பட்டை

இவைகளைத் தண்ணீர்விட்டு நேகவரைத்து, ஆறாத புண்களின்மேல் பூசிவர அவைகள் ஆறிப்போகும்.

67. தீப்பட்ட புண்களுக்கும், வைகூரிப் புண்களுக்கும் எண்ணெய் வகைகள்.

ஆலரசு மிரலியத்திப் பட்டையொரு
வகைபத்து மாம்பலந்தான்
மேலிடித்து நாலுமரக் கானீரிட்
டேகுறுணி வீதங்காய்ச்சி
யேவடித் ததிமதுர மஞ்சிட்டி
பாலைமுகி ழிலாமிச்சம்வேர்
கோலநன்னா ரியிலவேரும் வெள்ளறுகுக்
கருஞ்சீரங் கொள்ளக்கேழே. 129

கொள்ளுமிது வேம்பாடந் தூள்வகைக்கு
நாற்கழஞ்சாய் கோர்த்தரைத்து
எள்ளினெண்ணெய் நாழியிலே கலந்தெரித்
ததையும்வடித் தெடுத்துவவைத்து
உள்ளினுங்கொள் மேற்றடவிக்குளித்துவர
வைகூரிப்புண் ணுடன்றீப்பட்டுத்
துள்ளிபுண் டுருமுறை சரபோசி
மகராசன் றொகுத்ததாமே. 130

(இ-ள்)

ஆல்	அரசு
கொன்றை	அத்தி

இவைகளின் பட்டைகளை வகைக்கு 10 பலம் வீதமெடுத்து, நன்றாக நறுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாக வற்றவைத்து, அதனுடன்

அதிமதுரம்	மஞ்சிட்டி
நல்லபாலைமொட்டு	இலாமிச்சம்வேர்

நன்னாரிவேர் வெள்ளறுகு
வேம்பாரம்பட்டைத்தூள் கருஞ்சீரகம்

இவைகள் வகைக்கு 4 கழஞ்சு (5 வராகனெடை) வீதம் எடுத்து, இடித்து, மேற்கூறிய கஷாயம் விட்டு நன்றாக அரைத்து,

நல்லெண்ணெய் 1 நாழி (1¼ சேர்)யும் விட்டு ஒன்று கலந்து, அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக வடித்து இறக்கவும்.

இந்த எண்ணெயை உள்ளுக்குங் கொடுத்து, மேலுக்கும் பூசி ஸ்நானம் செய்ய,

தீப்பட்ட புண்கள், வைசூரிப் புண்கள் முதலானவைகள் தீரும்.

68. புற்று வளர்ந்த புண்களுக்கு மருந்து

சர்க்கரைகொ டிவேலி வே ரரைத்துப்
புண்ணிலிடத் தானுந்தீரும்
வருசாதிக் காய்தனைச்சுட் டெண்ணெயிலு
மதித்திட்டால் வளர்புற்றுப்போந்
தருமெலியின் புழுக்கைசிறு நீரிலுரைத்
தேதடவத் தளரும்புற்று
திருமதுரந் தேனிலிடப் பருத்திக்காய்ச்
சாற்றிலிடுந் திப்பிலிதானே. 131

(இ-ள்)

(1) ஈரமான (பச்சைக்) கொடி வேலி வேரைத் தண்ணீர் விட்டு ஒரு சந்தனக் கல்லில் கைபடாமலிழைத்து, அதனுடன்

சரி எடை சர்க்கரை (வெல்லச் சர்க்கரை) சேர்த்து ஒரு குச்சியினால் குழைத்து புண்களில் போடவும். புண்கள் ஆறும்.

(2) சாதிக்காயைச் (ஒரு இரும்புக் கம்பியில் சொருகி விளக்கெண்ணெய் விளக்கில்) சுட்டு நல்லெண்ணெயில் குழைத்து புற்றின்மேல் பத்தாகப் போடக் குணமுண்டாகும்.

(3) எலிப் புழுக்கையைக் கோமூத்திரத்தினாலரைத்துப் புற்றுகளின் மேலே தடவ அவை தளரும்.

(4) திமதுரத்தைத் தேனிலிழைத்து மேலே பூசினாலும் குணமுண்டாகும்.

(5) திப்பிலியைப் பருத்திக்காய்ச் சாற்றிலுரைத்துப் போட்டாலும் புற்றுகள் தீரும்.

குறிப்பு:

இவைகளைத் தவிர, 72 நெம்பர் சுவடியில்

"சாணாக்கிச்சாறு	½ படி
குறிஞ்சாச்சாறு	½ படியும்

மிதுவாய் வாய் பேசாமலிடவுந் தீரும். கைகண்டது. "
என்ற முறை 6வதாகக் கூறப்பட்டுள்ளது.

69. புண், புரை, வாய் விளங்காப் புண்களுக்கு மருந்து

வாய்விளங்காப் புண்ணதனைக் கீழறுத்து
வெளியாக்கி வாயிற்சீயுந்
தோயிரத்தக் கையதனால் வழித்தெறிந்து
குங்கிலியத் தூளுழக்கு

மீயிரண்டு காசளவப் போதுசுட்ட
சுண்ணமுட னெண்ணெயோர்கா
சாயளவு குத்திவிர லாலிழைத்துப்
புண்வளைக டன்னிலூட்டே. 132

உள்ளினுக்குஞ் செலுத்திப்புண் வாய்நிரம்பத்
தடவிவிட்டு முடனேகட்டிக்
கொள்மூன்றா நாளவிழ்த்துப் பாரிரத்தஞ்
சீழ்வற்றிக் குணத்திலாறும்
விள்ளிரத்தக் களிம்பிலே மருந்திட்டாற்
குணங்காட்டும் வெட்டுக்குத்து
நள்ளிரத்தக் களியிடவுஞ் சரபேந்திர
னிம்முறையும் நவின்றதாமே. 133

(இ-ள்)

புண்ணில் வாய் ஊசித்துவாரம்போல் காணப்படாமல் இருந்தால், புண்ணின் அடித்தளம்வரை, ஒரு கத்தியினால் அறுத்து, வெளியாக்கி சீழையும் இரத்தத்தையும் கையினால் (பஞ்சினால்) வழித்துவிடவும். பின்பு,

வெள்ளைக் குங்கிலியம்	ஒரு உழக்கும்
அப்போதே சுட்ட சுண்ணாம்பு நீறு	2 காசளவும்
நல்லெண்ணெய்	ஒரு ,,

விட்டு நன்றாக குழைத்து, அப்புண்ணிலும் புரைகள் இருந்தால், அதற்குள்ளேயும் செலுத்தவும். புண்ணின் வாயிலும் நிரம்ப விட்டுப் (பஞ்சு வைத்துக்) கட்டி விடவும். மூன்றாம் நாள் கட்டைஅவிழ்த்துவிட்டுப் பார்க்க இரத்தமும், சீழும் வற்றிப் புண்களும் ஆறியிருக்கும்.

இரத்தம் அதிகமாக வருகிற புண்களில் மேற் சொன்ன மருந்தை விட்டால் குணம் அதி சீக்கிரத்திலேற்படும். ஆகவே இது வெட்டுக் காயங்களுக்கு மிகவும் நல்ல மருந்தாகும்.

70. வாய்ப் புண், வெடிகளுக்கு மருந்து

புகையுறையைக் காடிநீர்க் கடாயமிட்டு
இந்துப்பும் பூந்தேன்விட்டு
நகைப்புண்வா யிற்றடவித் தேய்த்திடவு
மிப்படிச்செய் நான்குவாரம்
தகைபத்துத் தரமிட்டுக் கொப்பளிக்கப்
பட்சமொன்று தானே தீரு
முகையொள்ளு மதுரஞ்சுக் குடன்குடி
நீர்தேனு முன்னிந்துப்பே. 134

கூட்டிமுன்னைப் படி தேய்த்துக் கொப்பளிக்க
வாய்ப்புண்வெடி குணமாய்த்தீருங்
காட்டியமஞ் சளுந்தேவ தாரமுடன்
சரிகொண்டு கடாயமிட்டு
நாட்டியதேன் சைந்தவ முன்படி
தேய்த்திடப்போம் நாற்றம்வாய்ப்புண்
மீட்டியதிப் பிலியேலஞ் சைந்தவங்
கடுக்காய்கோ மியத்தரைத்தே. 135

(இ-ள்)

புகைபடிந்த ஓட்டடையுடன் வேண்டிய அளவு காடிவிட்டு, ஊறவைத்து, மறுநாளிகை அடுப்பின்மேல் ஏற்றிக் கஷாயம் செய்யவும். இதனுடனன், இந்துப்பும் தேனும் கூட்டிக் குழைத்து வாயிலிருக்கும் புண்களில் தடவவும். இதையே தினம் நான்கு முதல் பத்து தடவை வாயில் விட்டுக் கொப்பளிக்கவும். 5 நாட்களில் குணம் உண்டாகும்.

அதிமதுரம் எள்ளு
சுக்கு

இம்மூன்றையும் ஒன்றிரண்டாக இடித்துத் தண்ணீர் விட்டுக் கஷாயம் செய்து, தேனும் இந்துப்பும் முன்போல் சேர்த்து, வாயிலுள்ள புண்களிலும் தேய்த்துக் கொப்பளிக்கவும். வாய்ப்புண்கள் தீரும்.

மஞ்சள் தேவதாரு

இவ்விரண்டையும் சமனெடை எடுத்துத் தண்ணீர் விட்டுக் கஷாயஞ் செய்து, தேனும் இந்துப்பும் போட்டுப் புண்களில் தேய்த்துக் கொப்பளிக்கவும்.

வாய் நாற்றம், வாய்ப்புண்கள் தீரும்.

திப்பிலி ஏலக்காய்
கடுக்காய்த்தோல் இந்துப்பு

இவைகளைச் சரியெடை எடுத்துப் பசுவின் மூத்திரம் விட்டு அரைத்து வாயிலடக்கி இருக்கப் புண்களும், வாய் நாற்றங்களும் தீரும்.

71. மேக விரணங்களுக்குச் சேங்கொட்டை எண்ணெய்

வெள்ளையுள்ளி கருஞ்சங்கு நிலவாரை
புடபத்திரி மேல்வசம்பும்
வெள்ளைசங்க தின்மூலம் வகைக்கிரு
பலங்கொண்டவ் வேரும்பட்டை
கள்ளச்சேங் கொட்டையினும் நஞ்செடுத்த
தைவெட்டிக் கண்டந்தன்னை
யுள்ளபடி யொன்றரையா யெண்ணெதனி
லிட்டடுப்பி லுடனேகாய்ச்சே. 136

காய்ச்சிடுவாய் பக்குவத்தி லிறக்கியே
யிதையருந்துங் காலை தன்னில்
வாய்ச்சதிலே குட்டமுடன் விஸர்ப்பிகளு
மேகவெடி வரட்சிதேகம்
பூச்சிவெடி யிரத்தங்கள் சீழ்களுடன்
விழுநோய்கள் புரைகள்புண்ணும்
போச்சுதென்று முலகோராற் புகழ்சரபப்
பெருமானும் புகன்றதாமே. 137

(இ-ள்)

வெள்ளைப்பூண்டு	கருஞ்சங்குவேர்
நிலவாரை	புடபத்திரி
வசம்பு	வெள்ளைச்சங்கம்வேர்

இவைகள் வகைக்கு 2 பலம்

மூக்குகளை வெட்டிச் சுத்திசெய்த சேங்கொட்டை	1½படி (சுமார் $2^{1}/_{8}$ சேர்)

இவைகளை அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து

நல்லெண்ணெய்	10 சேரில்

குழப்பி அடுப்பின்மேல் வைத்து எரித்து பதத்தில் இறக்கவும்

இத்தைலத்தில் (காலணா அளவு) எடுத்துத் தினம் அதிகாலையில் சாப்பிட்டு வரவும்.

குஷ்ட ரோகங்கள்	விசர்ப்பம் (அக்கி)
மேகவெடிப்பு	தேகவரட்சி

விரணம் 7

பூக்களினாலேற்பட்ட வெடிப்புகள்

இரத்தம், சீழ் முதலியவைகள் அதிகமாக வடியும் ரோகங்கள்

புண்கள் புரைகள்

முதலான ரோகங்கள் தீரும்

குறிப்பு:

புடபத்திரி என்பது கீரைப்பாலை

72. சிறங்குகளுக்கு மருந்து

எருமைப்பாற் பச்சையிலு முறைக்குத்தி
நிலவாகை யின்வேர்தன்னை
பெருமானே மாய்ப்பிடுங்கி யரைத்துமுன்
றோய்தயிரிற் பிசரிவெய்யில்
மருவவே புடம்வைத்து மோருஞ்சோ
றும்நிரம்ப வசனஞ்செய்தும்
இருமுடம்பி லிட்டாற வரவுந்தேய்த்
திடுபின்னு மியம்பக்கேளே. 138

இயம்புச்சி வேளையிலு மரப்பிட்டுத்
தேய்த்துவெந்நீ ரில்லாவிட்டாற்
சுயம்புநீர திற்குளித் திப்படியும்
நாலுதினஞ் சுகமுழுக்கு
வியஞ்சொறி சிறங்காதி யுதிர்ந்துபோ
மிந்தமுறை மேதினுக்கு
நயம்பெற வேயுதவி செய்துவைக்கச்
சரபேந்திரன் நவின்றதாமே. 139

(இ-ள்)

காய்ச்சாத எருமைப்பாலில், எருமைமோர் பிறைக்குற்றித் தோயவைக்கவும். பின்பு

நிலவாகை வேரை (இரு சுண்டைக்காயளவு) வாய் பேசாமல் பிடுங்கிவந்து, அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டரைத்து, முன் தயிரில் குழப்பி, வெய்யிலில் வைக்கவும். காலையில் வேண்டிய அளவு மோர் சாதம் சாப்பிட்டுவிட்டுத் தேகத்தில் சிறங்குகள் உள்ள இடங்களில், முன் சொன்ன மருந்ததைத் தேய்த்து மத்தியானம் வரை நன்றாக ஊறி, அரப்பிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும். வெந்நீர் கிடைக்காவிட்டால் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யலாம் இவ்வாறு 4 நாளைக்குச் செய்யவும்.

சொறி சிரங்குகள் தீரும்.

73. சொறி, சிரங்கிற்கு மருந்து

பாதரத மூன்றுபண வெடைகொண்டு
வெற்றிலைநீர்ப் படமுறித்துச்
சீதகெந்தி கௌரீபா டாணமுடன்
பொடிநேகச் செய்துபோட்டு
யீதிலுரி நல்லெண்ணெயும் விட்டுமத்தித்
திடுவெய்யி லிதைப்புடஞ்செய்
ஓதியநீ ரசனஞ்செய் துண்டதின்பின்
எண்ணெய்தனை யுடன்மேற்பூசே. 140

பூசியொரு சாமமட்டும் வெய்யிலிலே
யிருந்தும்பின் பொலிமரக்கால்
நேசமுறத் தேய்த்திடவுங் குளிர்ந்தநீ
ருட்குளித்து நெடுமோரன்னம்

போசனஞ்செய் திப்படியே நாலுதினங்
குளித்திட்டாற் போஞ்சிரங்கு
மாசறவே புண்புரைக டீருமுறை
சரபேந்திரன்வரைந்ததாமே. 141

(இ-ள்)

பாதரஸம் 3 பணவெடை (10 குன்றிமணி) எடுத்துக் கல்வத்திலிட்டு வெற்றிலைச் சாறுவிட்டு முறித்துக் கொள்ளவும். அதனுடன்

நெல்லிக்காய்க் கெந்தகம்
கௌரீ பாஷாணம்

இவைகளும் வகைக்கு 3 பணவெடை வீதமெடுத்து நன்றாக கூட்டி அரைத்து, நல்லெண்ணெய் $^{1}/_{2}$ படியும் விட்டு (பட்டணம் படி $^{1}/_{8}$)க் குழப்பிச் சூரியபுடம் வைக்கவும்.

காலையில் பழயமுது சாப்பிட்டு, மேலே கூறிய எண்ணெயை உடம்பு முழுவதிலும் தேய்த்து, ஒரு சாமம் வெய்யிலில் நின்று ஊறிக் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவும். மறுபடியும் மோர்சாதம் சாப்பிடவும். இவ்வாறு நான்கு நாட்களுக்குச் செய்யச் சொறி, சிரங்கு முதலானவைகள் தீரும்.

74. புண், புரைகளுக்குத் திரிவகைகள்

உப்புமொரு மிளகுவேப்பங் கொழுந்தங்கூட்
டியரைத்து டன்புண்வாயில்
அப்பியதை வைத்திருக்க வங்கிடிந்து
வெளிகாணு மன்றிச்சேலை
வேப்புமுத்தா மணிப்பாலும் மூட்டுதிரி
தனையேற்ற வெளியுங்காணுந்
தப்புரையி லாமுறையைச் சரபோசி
மகராசன் றந்ததாமே. 142

(இ-ள்)

உப்பு	ஒரு கல்
மிளகு	ஒன்று
வேப்பங்கொழுந்து	கழற்சியளவு

இவைகளை நன்றாக அரைத்து விழுதாக்கிப் புண்வாயில் கட்ட அதன் வாய் பெரிதாகும்.

75. புண்,புரைகளுக்கு மற்றொரு திரிவகை

நாயுருவி வேப்பமுத்தா மணிமேனி
நொச்சிலிலை நன்கொழுந்து
தோயரைத்து மிதைச்சேலை மேற்றடவித்
திரியாக்கித் துளையிலேற்று
நீயொருநா ளிரண்டுநாள் தானெரிந்து
விடுமெரிவு நில்லாதாகிற்
றோய்திரியில் முத்தினெண்ணெய்ப் பசுவின் நெய்
தடவிவிடச் சுகமதாமே. 143

ஆவாரையின் கொழுந்தரைத்தா வினெய்யிற்
குழைத்திட்டா லாங்குளுத்தி
மேலியதே னதைக்காய்ச்சக் கயறுபோ
லாகுமிதை விட்டேற்றப்புண்
தாவுடைய விடமெல்லா மேறிவிடும்
புரையோட்டந் தனக்குத்தானே
நோவுகரைந் தோடியும்போ மிம்முறையைச்
சரபேந்திர னுவன்றதாமே. 144

(இ-ள்)

நாயுருவிக்கொழுந்து	வேப்பங்கொழுந்து
உத்தாமணிக்கொழுந்து	நொச்சிக்கொழுந்து
குப்பைமேனிக்கொழுந்து	

இவகைளைத் தண்ணீர் விட்டு நேகவரைத்து, ஒரு வெள்ளைத் துணியில் ஓரே சீராகத் தடவித் திரியாகத் திரித்து வைத்துக்கொள்ளவும்.

இத்திரியைச் சிறு துவாரமுள்ள புண்களிலோ, புரைகளிலோ ஏற்றி வைக்கவும். இவ்வாறு நாள்முழுதுமோ அல்லது இரண்டு நாட்களோ அவ்விடத்திலே வைத்திருக்கப் புண் வாய் எரிந்து பெரிதாகும். எரிச்சல் தாங்க முடியாமலிருந்தால் திரியில் ஆமணக்கெண்ணெயோ அல்லது பசுவின் நெய்யோ தடவிப் பிறகு உட்செலுத்தவும்.

ஆவாரைக் கொழுந்தைப் பசுவின் நெய்யில் குழைத்துப் புண்களில் தடவக் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

சுத்தமான தேனை அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சிவர, அது பாகாக்கி கயறு போலிறுகும். இதைத் திரியாகத் திரித்து வைத்துக்கொண்டு, புண்கள், புரைகள் முதலியவைகளில் ஏற்றவும்.

புரைகள் தானாகவே கரைந்து போகும்.

76. தோடகச் சிறங்குகளுக்கு மருந்து

தென்னையின்கா யுடைத்தொற்றை மூடிதனைத்
தனிப்பாலாய்த் திருகிவாங்கித்
தன்னிலுமே சுண்ணமிட்டுச் சாரித்துச்
சிரங்கதின்மேற் றடவிக்கொண்டு
பின்னையந்தி தனில்வெந்நீ ராற்குளித்து
மொருமூடி பிழிந்துபாலைச்
சொன்னபுண்ணிற் றடவிந்தப் படிமூன்று
தினங்குளிக்கச் சுகமதாமே. 145

(இ-ள்)

ஒரு முற்றிய தேங்காயை இரண்டாக உடைத்து, ஒரு மூடியைத் திருவிப் பால் பிழிந்து, சுண்ணாம்பு (சுண்டைக்காயளவு) சேர்த்து நன்றாகக் குழப்பி சிறங்குகளில் போடவும். சாயங்காலம் வெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

மீதியிருக்கும் தேங்காய் மூடியைத் திருவிப் பால் பிழிந்து புண்களில் தடவி வரவும்.

இவ்வாறு 3 நாட்கள் செய்யச் சிறங்குகள் மாறும்.

77. சிறங்கு, சொறி, சுடிவிடங்களுக்கு எண்ணெய்

திலவெண்ணெய் கருஞ்சீராங் கார்போக
வரிசியுடன் றேங்காய்ப்பாலுங்
சலமெட்டிக் கொட்டைபத்தும் பொடிசெய்து
எண்ணெயிலுந் தாக்கிக்காய்ச்சி
நல்பதந் தனில்வடித் ததின்கடுகி
லிரதமோடு நல்லகெந்தி
பலவரி தாரமிவை வகைக்கொரு
வராகனெடை படவரைத்தே. 146

அரைத்துமுத்தி னெண்ணெயிலே யிட்டருண
புடமாக்கி யதையெடுத்து
அருப்பமுதன் சோறுண்டு மதன்பிறகு
எண்ணெயிட்டு மந்திநேரம்
அரப்பிட்டு மிளவெந்நீ ரதில்மூழ்க
மூன்றுதின மப்படிச்செய்
சொறிந்திட்டச் சிறங்காதி தீருமுறை
சரபேந்திரன் சொன்னதாமே. 147

(இ-ள்)

தேங்காப்பால்	½ சேர்
நல்லெண்ணெய்	½ சேர்
கருஞ்சீரகம்	½ பலம்
கார்போதவரிசி	½ பலம்
*சலவெமட்டிக்கொட்டை	10

கடைச்சரக்குகளை வகைக்குத் தேங்காய்ப்பால் விட்டு நன்றாக அரைத்து எண்ணெயுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக வடித்துக்கொண்டு, அதன் கருதை,

சுத்திசெய்த	பாதாலம்	1	வராகனெடை
,,	கெந்தகம்	½	,,
,,	தாளகம்	1	,,

முதலிய சரக்குகளுடன் நேத அரைத்து, எண்ணெயுடனே குழப்பிச் சூரியபுடம் வைக்கவும்.

வேண்டும்போது நோயாளி மோர் சாதம் சாப்பிட்ட பின், புண்களில் மேற்கூறிய எண்ணெயைத் தடவி, நன்றாக ஊறிச் சாயங்கால வேளையில் வெதுவெதுப்பான வெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

இவ்வாறு 3 நாளைக்கு ஸ்நானம் செய்ய வெரறி, சிரங்கு முதலியவைகள் தீரும்.

---

*சலவெமட்டிக்கொட்டை - தீரடிமுத்து

78. சொறி, சிறங்குகளுக்கு மருந்து

துளபத்தி னிலையரைத் திருநிட்கம்
பாதரதஞ்சோரவிட்டே
இளகரைத்தா வின்வெண்ணெ யிதுகூட்டி
மத்தித்து மெடுத்துவைத்து
உள்புரை புண்களிலுந் தடவந்தி
வேளையிலு முடல்வெந்நீரிற்
குளியாடச் சொறிசிறங் கனுகூல
மாய்த்தீருங் குணமாந்தானே. 148

(இ-ள்)

துளசியிலை ஒரு எலுமிச்சையளவெடுத்து, அதனுடன் 2 வாரகனெடை சுத்திசெய்த பாதரஸத்தை விட்டுக் கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்து, எலுமிச்சையளவு பசுவின் வெண்ணெய் சேர்த்துக் குழைத்து வைத்துக் கொள்ளவும்.

இக்களிம்பைப் புண்கள், புரைகள், சொறி, சிறங்கு முதலியவைகளுக்குப் போட்டுச் சாயங்கால நேரங்களில் வெந்நீரில் ஸ்நானம் செய்யவும். அவைகள் தீரும்.

79. புண், புரைகளுக்கு மருந்து

சுடலையுள் ளெலும்பெடுத்த தைப்புளியந்
தழலிலுஞ் சுட்டுக்கொண்டே
உடன்கலத் தின்புறத்தி லெலுமிச்சம்
பழச்சாற்றா லுரைத்துக்கொண்டு

இடவெண்ணெய் கூட்டியொரு சிமிழில்வைத்
திதைப்புண்ணி லிட்டாறிறீரும்
அடலரச ரிகலடக்குஞ் சரபோசி
ராசனுரை யாகுந்தானே. 149

(இ-ள்)

சுடலையில் கிடக்கும் ஒரு எலும்பை எடுத்துப் புளியம் புரணிக்குள் வைத்துக் கொளுத்தி விடவும். பின்பு ஒரு உண்கலத்தில் (வெங்கலப் பாத்திரத்தில்) எலுமிச்சம் பழச்சாறு விட்டு, அதனுடன் எலும்பையுரைத்து விழுதாக்கிச் சரியெடை பசுவின் வெண்ணெய் கூட்டி, மத்தித்துக்கொள்ளவும். இதைப் புண்களிலிட அவைகள் ஆறும்.

80. புண்ணிற்கு மருந்து

விடந்தீஞ்சா னிலைச்சாறுங் கெந்தகமும்
பலமொன்று மிதிநெல்லிக்காய்
யுடகெந்தி யிருநிட்கம் பொடிசெய்து
திலவெண்ணெ யொருவீசஞ்சேர்
அடவிட்டுக் கனலிலே துழாவிட்டுக்
காய்ச்சியொரு வகலச்சட்டி
யிடந்தண்ணீர் தனிலூற்றி வழிபுண்ணிற்
போடவும்புண் ணேகுந்தானே. 150

(இ-ள்)

விடந்தீஞ்சானிலைச்சாறு விட்டு நன்றாக
அரைத்த குழாய் கெந்தக விழுது 1 பலம்

நெல்லிக்காய் கெந்தகத்தூள் 2 வராகனெடையும்

எடுத்து, நல்லெண்ணெய் வீசஞ்சேருடன் குழப்பி அனலில் வைத்துக் கெந்தகம் எரிந்துவிடாமல் காய்ச்சவும். பின்பு அதை அப்படியே அகலமான வாயுள்ள ஒரு சட்டியிலிருக்கும் குளிர்ந்த ஜலத்தில் விட்டு அலசவும். அது வெண்ணெய் போலாகும். இதையொரு சிமிழில் வைத்துப் புண்களுக்குப் போடவும்.

புண்கள் வெகு எளிதில் ஆறிவிடும்.

குறிப்பு:

விடந்தீஞ்சான் - நஞ்சுமுறிச்சான்

81. புண்களுக்குப் புகை

கருவங்க முப்பத்துப் பணிவெடைதா
னுருக்கிக்க லக்குஞ்சூதந்
தருநாற்பான் பணிவெடைதன் னில்விட்டுக்
கட்டிசெய்து அதன்பின்கேளு
துருசேழு பணிவெடைய ரிதாரம்
பணிவெடை தூக்கிமூன்று
எருக்கதின்க ரிமுப்பான் பணிவெடைபா
டாணந்தா னிடுபன்மூன்றே. 151

மிளகைவி யொருவகை பதிமூன்று
பணிவெடை வீதங்கூட்டி
யுலவெல்லா மருந்தினைப் பருத்திச்சா
றிட்டரைத்து மொன்பதுண்டை
வளமாகச் செய்முழுப் புகைக்காட்ட
முக்காலா மாண்புகைக்கும்
அளவாறு வுண்டைபுகை கால்புகைக்கு
மூன்றுருண்டை யாகுந்தானே. 152

யாகுமிது புகைக்குநாட் டயிருஞ்சோ
றுண்டுபின்னை யாட்டிக்கொள்ள
லாகுநல்ல சலத்தினுட கழுத்தளவு
புதையவே யதிற்குளித்து
வாகுபுகை காட்டிடவும் புண்கிரந்தி
முதலாக மாறிக்காய்ந்தும்
போகுமிது முறைநேர்த்திச் சரபோசி
மகராசன் புகன்றதாமே. 153

(இ-ள்)

சுத்திசெய்த கருவங்கம் 30 பணவெடை ($3^1/_8$ வராகனெடை) உருக்கி, அதனுடன் பாதரஸம் 40 பணவெடை ($4^1/_8$ வராகனெடை)யைத் தொந்திக்கவும். பின்பு அதனுடன்,

துருசு	7	பணவெடை
அரிதாரம்	3	,,
எருக்கங்கரி	30	,,
வெள்ளைப்பாஷாணம்	13	,,
மிளகு	13	,,
கடுகு	13	,,

இம்மருந்துகளை ஒன்றாகச் சேர்த்துத் தூளாக்கிக் கல்வத்திலிடவும். பின்பு பருத்திக்காய்ச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நன்றாக அரைக்கவும். அரைத்த விழுதை 9 உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

புகை பிடிக்கும் நாட்களில், நோயாளி தயிர்சாதம் சாப்பிட்டபின், குளிர்ந்த ஜலத்தில் முழுகிக் குளிக்கவும். பின்பு, புகையிடவும்.

உடம்பு முழுவதும் புகை காட்ட வேண்டுமானால் 9 உருண்டைகளையும் உபயோகிக்கவும். முக்கால்வாசி

உடம்பிற்குப் புகை பிடிக்க வேண்டுமெனில் 6 உருண்டைகளை உபயோகிக்கவும். சொறி, சிறங்கு, புண் முதலியவைகள் மிகக் குறைவாக இருந்தால் குறைவாகப் புகையிடவும். அதாவது 3 உருண்டைகளைப் புகைக்கவும்.

குறிப்பு: உடம்பு முழுவதும் புண்கள் இருந்தால் புகை பிடிக்கும் முறை:

ஒரு கட்டிலில் நோயாளியைத் துணியில்லாமல் படுக்கவைத்துத் தலையைத் தவிர மற்ற பாகங்களை நன்றாக மூடும்படியானதும், கட்டிலின் கீழ்ப்பக்கத்திலுள்ள வெளிகளை அடைக்கும்படியானதுமுள்ள ஒரு பெரிய துப்பட்டியினால் மூடிவிடவும். பின்பு, கட்டிலின்கீழே ஒரு குமிட்டியிலோ அல்லது அகலிலோ தணலை வைத்து அதில் புகை உண்டாக்க வேண்டிய மருந்துச் சரக்குகளைப் போடவும். இப்போது அம்மருந்துகளிலிருந்து எழும்பும் பகை கட்டிலின்துவாரங்களின் வழியாக வந்து நோயாளியின் உடம்பில் நன்றாகப்படும். குறிப்பிட்ட நேரஞ் சென்றபின் நோயாளியை எழுப்பி, வெளிக்காற்று உடம்பில் படும்படியாக இருக்கச் செய்யவும். வியர்வை அதிகமாகக்காணும். புண்களும் தீரும்.

மேலே சொன்ன மருந்தில் பாஷாணம், இரஸம் முதலான சரக்குகள் இருப்பதனால், மருந்தைக் குறைந்த அளவில் உபயோகிக்க வேண்டும். மேலும் மேற்கூறிய புகை வேறொருவர் மேலும் படாதபடி பார்த்துக்கொள்வதும் அத்யாவசியமாகும்.

82. புண், பரைகளுக்கு எம்ணெய்

தென்னை யெண்ணெய புங்கதின்பாற் கலந்துபூ
நாகமிட்டுச் சேருஞ்சூதந்
தன்னையிளம் பருத்தியா மிலைச்சாற்றால்
முறித்தொக்கத் தாக்கெரித்துப்

பின்னைவடித் ததைப்புண்ணிற் றடவிவிடக்
காய்ந்துவிடும் பெருந்தேங்காய்நெய்
தன்னில்வட விழுதரைத் தெரிவடி
புண்ணிலிடச் சருகாய்ப்போமே. 154

(இ-ள்)

தேங்காயெண்ணெய்	1 சேர்
புங்கம்பால்	1 சேர்
பூநாகம் (மண்புழு)	பாதரஸம்

இவைகளை வகைக்கு ஒரு தோலா வீதம்.

எடுத்துக் கல்வத்திலிட்டுப் பருத்தியிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து, மேற்கூறிய சாறுகலந்த எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும்.

இந்த எண்ணெயைப் புண்களிலிட அவைகள் சீக்கிரமாக ஆறிவிடும்.

2) ஆலம் விழுதைத் (சுமார் 1 தோலா) தண்ணீர் விட்டு நேக அரைத்துத் தேங்காயெண்ணெயுடன் (1 சேர்) குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இதையும் புண்களிலிட அவைகள் ஆறும்.

83. தீப்பட்ட புண்களுக்கு எண்ணெய்

திலவெண்ணெ யொருநாழி காயவைத்து
நாரங்கத் தின்காய்மட்டமாய்
தலைரோம மிட்டுநன்றாய்த் தீய்ந்து வரும்
போதெடுத்துத் தானரைத்துச்
சொலுமெண்ணெ யுட்கலந்து தான்குழைத்து
வைத்துந்தீச் சுட்டபுண்ணில்
உலவிதுபோடப்புண்க ளாறிவிடுஞ்
சரபேந்திர னுரையிதாமே. 155

(இ-ள்)

நல்லெண்ணெய்	1 படியை

அடுப்பின் மேலேற்றிக் காயவைத்து, அதனுடன் தலைமயிர் ஒரு நாரத்தங்காயளவு எடுத்துப் போடவும். அது தீய்ந்துவரும் சமயம் பார்த்து அடுப்பின் மேலிருந்து சட்டியைக் கீழிறக்கி ஆறியபின், கல்வத்திலிட்டு நன்றாக ஒன்றுசேரும்படியாக அரைத்து வைத்துக்கொள்ளவும்.

இந்த எண்ணெயைத் தீச்சுட்ட புண்களின்மேல் துவளையிட, அவைகள் வெகு எளிதில் ஆறும்.

84. புண்களுக்கு மருந்து

சூதம்வெள்ளைக் குங்கிலிய மரிதகிக்
காய்மிளகுஞ் சொல்லும்வேலி
ஓதுபருத் தியின்வேரும் பாக்களவு
சீவியதனுற் றிலைச்சாறு
ஈதரைத்துக் கொண்டெருமை வெண்ணெயிட்டு
மரைத்தம்மி யிலும்பாலுண்ண
மோதிவழித் தோர்சிமிழி லூமத்திற்
றடவிடப்புண் மூடிப்போமே. 156

கெந்திவெள்ளைக் குங்கிலிய மிரதம்வங்கா
ளப்பச்சைக் கேடில்குக்கில்
முந்திவெண்க லிவையொன்று கழஞ்சுகொண்டு
பொடிமேதி மொழிந்தவெண்ணெய்
தந்தரைத்து வழித்துவைத் தரசிலை
முருக்கிலைமேற் றடவித்தானும்
நொந்தபுரைப் புண்ணிடவு மிந்தமுறை
சரபேந்திர னுவன்றதாமே. 157

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
சுத்திசெய்த குங்கிலியம்
மிளகு
கடுக்காய்த்தோல்
வேலிப்பருத்தி வேர்ப்பட்டை

இவைகளை வகைக்கு ஒரு பாக்களவெடுத்துக் கல்வத்திலிட்டு வேலிப்பருத்தி இலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும். இதற்குச் சரியளவு எருமை வெண்ணெய் கூட்டி, மத்தித்துக்கொண்டு,

ஊமத்தையிலையில் தடவிப் புண்களில் போடவும். அவைகள் மாறும்.

கெந்தகம்	வெள்ளைக்குங்கிலியம்
பாதரஸம்	வங்காளப்பச்சை
குக்கில்	வெள்ளைப்பளிங்குக்கல்

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து, சரியெடை எருமை வெண்ணெயும் கூட்டி புரைத்துக்கொள்ளவும்.

இதை அரசந்துளிர், முருக்கிளைத்துளிர் தலானவைகளில் தடவிப் புண்கள், புரைகள் தலியவைகளுக்குப் போடவும்.

85. புண், புரைகளுக்குப் பூச்சு மருந்து

புலிதுடக் கித்தண்டின் மேற்புரணி
சீவிமஞ்சட் பொடித்தண்டூலம்
மலியரை புரையோடு மிடத்தள
விட்டுப்புண் வாயைவிட்டு

நலிசுற்றிப் பூசிடுவாய்ப் புரைதூர்ந்து
காய்ந்துவிடும் நாநிலத்திற்
கலிபோக்குங் கொடையாளன் சரபோசி
மகராசன் கண்டதாமே. 158

(இ-ள்)

இண்டந்தண்டைக் கொண்டுவந்து அதன் மேல் புராணியைச் சீவிவிட்டு, மஞ்சளும், அரிசியும் சமனெடைப் போட்டு அரைத்து, புரைபோகிற அளவிற்கு, புண்ணின் வாயை விட்டு சுற்றிலும் பூசவும். புரைகள் தூர்ந்துவிடும். கைகண்டது.

86. புண், புரைகளுக்கெண்ணெய்

சித்தரத்தை வேம்பாடந் தோற்கொன்றைப்
பிசின்மூன்றுந் தெரிதூட்செய்து
வைத்திடுதல் கொள்ளெண்ணெயினுங் கொதிப்பிறுப்
புண்புரையிற் பற்பிலூற்றி
மத்திக்கவுஞ் சுகலப்புண் புரையாறிப்
போகுமென்று மண்டலத்தில்
உத்தமனுக்குதவுஞ் சரபோசி
மகராசனுரையிதாமே. 159

(இ)-ள்)

சித்தரத்தை வேம்பாடம்பட்டை
கொன்னைப்பிசின்

இம்மூன்றையும் சமனெடை (வகைக்கு 1 தோலா) எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து நல்லெண்ணெயுடன் (1 சேர்) குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து

இறக்கவும். இத்தைலத்தை, புண்கள், புரைகள் முதலியவைகளுள்ளே செலுத்தவும். அவைகள் நாற்பது நாட்களுக்குள் ஆறிவிடும். கைகண்டது.

87. புண், புரைகளுக்குப் புகை

கருவேலின் பிசினழிஞ்சி லின்வேருஞ்
சிவன்வேம்புங் காண்சமூலம்
முருங்கைவே ரெருக்கம்வே ரிவையஞ்சுஞ்
சமனாக மூட்டிடித்து
நொருச்சூர ணஞ்செய்து யெடுத்துவை
செந்தழலி னோக்கமாக
வெருகடிப் பிரமாணம் புகையிட்டுப்
பிடிக்கப்போம் விரணந்தானே. 160

(இ-ள்)

கருவேலம்பிசின்
அழிஞ்சில்வேர்
சிவனார்வேம்புச்சமூலம்
முருங்கைவேர்
எருக்கம்வேர்

இவைகளைச் சமனெடை எடுத்துக் காய்ந்தபின், சூரணித்து வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு வெருகடியளவு எடுத்துத் தணலிலிட்டு, விரணங்களுக்குப் புகைபிடிக்கவும்.

விரணங்கள் ஆறிவிடும்.

88. ஆறாத புண்களுக்கு எண்ணெய்

தேங்காய்ப்பால் வேம்பினெண்ணெய் பொடுதலை
கோடகசாலை சிறுபுட்பாதம்
வாங்குவட்டக் கிலுகிலுப்பை யின்சாறும்
வடிமெழுகு மதுரந்தானும்
நாங்கூழும் பூதகரப் பான்பட்டை
வேம்பாடம் நல்லபட்டைப்
பாங்குடனே கூடிவடித் தாறாத
புண்ணிலிடப் பறக்குத்தானே. 161

(இ-ள்)

தேங்காய்ப்பால்	½ சேர்
வேப்பெண்ணெய்	,,
பொடுதலைச்சாறு	,,
கோடகசாலைச்சாறு	,,
சிறுபுள்ளடிச்சாறு	,,
வட்டக் கிலுகிலுப்பைச்சாறு	,,

இவைகளை யொன்று கலந்து

அதிமதுரம்	நாங்கூழ்ப்பூச்சி (மண்புழு)
வேம்பாடம்பட்டை	பூதகரப்பான்பட்டை

இவைகள் வகைக்கு (1 வராகனெடை) கூட்டி இடித்து மேற்கூறிய சாறுகளில் ஏதேனுமொன்றை விட்டு நன்றாக அரைத்துச் சாறுகலந்த எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இதை வடிக்கட்டி ஆறாத புண்களிலிட அவைகள் வெகு எளிதில் ஆறும்.

89. புண், புரைகளுக்குக் காரச்சீலை

மேனியிலை யொருபிடி யிருபிடியூ
மத்திலையு மேற்றுவைத்துந்
தானிதிநீர் கொள்களிம்பு பத்துகலஞ்
செம்புகொண்டுந் தனையிழைத்து
மானிருகச் செய்துகொண்டு சல்லாவல்
லதுபரும டியிற்றோய்த்து
வான்காய வைத்தெடு புண்புரைக
ளோடிடத்தில் வகையைக்கேளே. 162

வகைபச்சைக் கோரையினி லிதழெடுத்துப்
புண்புரையின் வழிசோதித்து
மிகையளவிம் மாத்திர மென்றறிந்து
காரமடி மேற்கிழித்து
தகைச்சலா கைத்தலையி லோட்டியரைப்
புரைவழிக டன்னிலேற்றிப்
புகைவிடுங் கோரையைத் தானெடுத்திடு
மூன்றுதினம் போடுந்தானே. 163

போட்டிடவு நாள்வரையிற் புரைதூர்ந்து
வருங்காய்ந்து போகும்புண்ணுங்
கூட்டுடனே குடியேகும் பத்தியமா
யிருந்திட்டுக் கூர்திருக்கை
கூட்டிடவுஞ் சுறாக்கருவா டுகொள்ளுங்
கைமுறையாங் குவலயத்தில்
நீட்டியசெங் கோன்முறைமை நெறிநாட்டுஞ்
சரபேந்திர னிகழ்ந்ததாமே. 164

(இ-ள்)

குப்பைமேனி ஒரு பிடி
ஊமத்தை இலை ஒரு பிடி

இவைகளை நசுக்கிச் சாறுபிழிந்து ஒரு களிம்பேறும் பாத்திரத்தில் (செப்புப் பாத்திரத்தில்) ஊற்றிவைக்கவும். 2 அல்லது 3 நாட்கள் சென்றபின் அக்களிம்பை மறுபடியும் வேறொரு செப்புப் பாத்திரத்தினால் இழைத்துக் கெட்டியாகச் செய்துகொள்ளவும். ஒரு சாண் அகலமும் ஒரு முழ நீளமும் உள்ள மெல்லிய வெண்மையான துணியில் அவ்விழுதைத் தடவிக் காயவைத்துக் கொள்ளவும்.

கோரைப் புல்லின் கொழுந்தை எடுத்து மெல்லியதாகக் கிழித்துக்கொண்டு, புரைகளுக்குள்ளே விட்டு அது எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவு உட்செலுத்தவும். அதன் வழிக்குத் தகுந்தபடி மேற்கூறிய காரச்சீலையைக் கிழித்து ஒரு சலாகையில் புரைகளுக்குள்ளே நன்றாகச் செலுத்திக் கோரைப்புல்லை வெளியே எடுத்துவிடவும். இம்மாதிரி 3 தினங்கள் செய்யவும்.

குணமில்லையெனில், இன்னும் சில நாட்கள் செய்தால் புரைகள் தானாகவே தூர்ந்துவிடும். புண்களும் ஆறிவிடும்.

பத்தியம்:

திருக்கைமீன், சுறாக்கருவாடு இவைகளை வேண்டிய அளவு உபயோகிக்கவும்.

90. தீராத புண், புரைகளுக்கு எண்ணெய்

சின்னமுத்தி னெண்ணெயுரி யெருமுட்டைச்
சாம்பல்வடிச் சேலையிட்டுப்
பின்கலந்து கொதியிட்டுக் காய்ச்சிவைத்துச்
சேலையிலே பெய்துகொண்டு

சொன்னபுரை புண்களின்மேற் போடப்போந்
தீராதத் தொந்தப்புண்கள்
வின்னமுள புரைமாறு மிம்முறையைச்
சரபேந்திரன் விதித்ததாமே. 165

(இ-ள்)

சிற்றாமணக்கெண்ணெய் ½ படியுடன்

வஸ்திரகாயஞ் செய்த எருமுட்டைச் சாம்பல் (துல்யமான விபூதி) ஒரு சிரங்கை கலந்து அடுப்பின்மேல் வைத்துக் கொதிக்க வைத்து இறக்கிக்கொள்ளவும்.

இத்தைலத்தில் துணியை நனைத்துப் புண்கள், புரைகள் முதலானவைகளுக்கும், ஆறாத விரணங்களுக்கும் போட, அவைகள் ஆறும்.

91. பறங்கிச் சிரங்குகளுக்கு மருந்து

ஆயிலின்றொ லெலுமிச்சங் காயளவா
மிதையரைத் தந்தண்ணீரிற்
றோய்வதுக லந்திட்டு மொருசிரங்கை
யளவாகச் சுண்டித்தின்ன
மெய்யிந்தப் படியாகப் பன்னிருநாட்
டின்றுகைப்பு மேற்புளிப்பு
நீயிகழ்ந்து தவிரன்னம் வெந்நீருங்
கொள்ளமுறை நேர்த்தியாமே. 166

(இ-ள்)

ஆயில்யப்பட்டையை ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்து, நசுக்கி அம்மியின்மேல் வைத்து அரைத்துத் தண்ணீரில் குழப்பிக் கொள்ளவும். பின்பு இதை ஒரு இரும்புக்

கரண்டியில் விட்டு அடுப்பின்மேல் வைத்துக் கிண்டிக் காந்தாமலிறக்கவும். இம்மருந்தை அப்படியே உட்கொள்ளவும். இவ்வாறு 12 நாளைக்குச் சாப்பிடவும்.

பத்தியம்:

கசப்புப் பதார்த்தங்கள், புளிப்புப் பதார்த்தங்கள் முதலானவைகளை நீக்கிவிட்டு வெந்நீர் சாதம் மாத்திரமே சாப்பிட்டு வரவும்.

(வியாதியுள்ள ஸ்திரீகளின் சேர்க்கையினால் உண்டான) பறங்கிப் புண்கள் தீரும்.

92. சிரப்புண், சிறங்குகளுக்கு "எண்ணெய்"

அலரிவேர்ச் சிறிதாகக சீவியுள்ளி
வசம்பிட்டு மதைநறுக்கித்
திலவெண்ணெய் தனிற்போட்டுப் பருதிமுன்
புடமிட்டுச் சிரத்திற்றேய்ந்து
நலமூன்று நாளிருந்து மரப்பிட்டு
முழுகப்போம் நவில்பழுப்பை
பலசுட்டா மணக்கெண்ணெய் தனிற்குழைத்
தப்பரப்புப் படமுழுக்கே. 167

ஆடுதின்னாப் பாளையது சமூலமு
நறுக்கியிட்ட திலும்வெள்ளைப்
பூடுவசம் பதுதட்டி நல்லெண்ணெயி
லெரித்ததைப் பூசரப்பும்
போடுதலை முழுகப்போங் கரிசாலைசங்
கங்குபர்பிப் போதமேனி
ஓடுவெற்றி லையுமிவை சாறுகொண்டு
மரிசனமு மொக்கக்கூட்டே. 168

கூட்டுவது மிளகின்றூ ணல்லெண்ணெயிற்
கலந்துமிதைக் கொண்டடுப்பின்
மாட்டியெரித் ததைவைத்து வருநாள்க
ளன்றையன்று மாந்தலைக்கு
யாட்டிமுழு கிடத்தேய்த்து மிலுப்பரப்புக்
கட்டித்தானாகுமிட்டு
வாட்டிளவெந் நீரதனில் முழுகுவாய்
புண்சிறங்கு மாறிப்போமே. 169

(இ-ள்)

அரளி (சிகப்பு) வேரைச் சிறிது சிறிதாகச்சீவி (1 வராகனெடை எடுத்து, அதனுடன் வசம்பு, வெள்ளைப் பூண்டு இவ்விரண்டும் சரியெடை கூட்டி. நன்றாத அரைத்து நல்லெண்ணெயுடன் குழப்பிச் சூரியபுடம் வைக்கவும்.

இத்தைலத்தைத் தலையில் தேய்த்து நன்றாக ஊறி, ஸ்நானம் செய்யும்போது அரப்பை உபயோகிக்கவும். இவ்வாறு மூன்று நாளைக்குச் செய்யவும்.

அரளிப் பழுப்பை அடுப்பில் சுட்டுக் கரியாக்கி ஆமணக்கெண்ணெயுடன் குழைத்து வைத்துக்கொள்ளவும். இதைப் புண்களின்மேல் பூசி, நன்றாக ஊறிய பின் அரப்பை உபயோகித்துக் கழுவிவிடவும்.

ஆடுதீண்டாப்பாளைச் சமூலம்
வெள்ளைப்பூண்டு
வசம்பு

இவைகளைச் சரியெடை (1 வராகனெடை) எடுத்து நறுக்கிக் கல்லுரலிலிட்டுப் பஞ்சு போலிடித்து நல்லெண்ணெய் (ஒரு சேரில்) குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்து, மெழுகு பதத்தில் இறக்கவும். இதையும் புண்

புரைகளில் தடவி ஊறியபின், அரப்பினால் கழுவிவிடவும். தலையில் உள்ள புண்களுக்குத் தலையில் தேய்த்து முழுகவும்.

கரிசலாங்கண்ணி
சங்கங்குப்பி
குப்பைமேனி
வெற்றிலை

இவைகளின் சாறு வகைக்கு ஒரு சேர்

நல்லெண்ணெய் ஒரு சேர்

இவைகளை ஒன்று கலந்து அதனுடன் மிளகுத் தூள், மஞ்சள் இவ்விரண்டையும் வகைக்கு1 வராகனெடை வீதமெடுத்து அரைத்துக் குழப்பவும். பின்பு அதை அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் வடிக்கவும்.

இத்தைலத்தைத் தினந்தோறும் தலையில் தேய்த்துக்கொண்டு அரப்பிட்டு வெந்நீரில் முழுகவும். புண் சிரங்கு முதலானவைகள் தீரும்.

93. புண்களுக்கு மருந்து

திராய்வேரும் பருத்தியிலை பழம்புளி
யரைத்துநீர் சேர்த்தரைத்துப்
பராய்குடித் திடத்தீரும் பருத்தியிலை
வரட்சுண்டி பார்திராயும்
வராய்மூன்று மரைத்துப்புண் டனிற்பூசு
மிதுதீரும தூமத்தின்காய்
தராயுமிக்காந் தலிலே சுட்டரைத்து
நெய்விழுதிற் றான்குழைத்தே. 170

படுவன்புண் வாயில்வைக்கத் தீருமெருக்
கதிலுதிரும் பழுப்பரிந்து
கடுகவறுத்துப்பிட்டு மோரூற்றிப்
பின்குடிக்கக் காய்ந்துபோம்புண்
இடுசாரைப் பாம்புலர்த்திக் கண்டமுடன்
கழல்வேரு மிதன்கொழுந்தும்
தொடுமுள்ளி வசம்பிட்டு மெண்ணெய்பண்ணி
நக்கிடும்புண் டுலைந்துபோமே. 171

முத்தியதேங் காயிளநீ ரூத்தியிட்டே
யெருக்கம்பால் மூட்டுழக்குங்
குத்துபுழுங் கரிசியோர் பிடியிட்டெண்
ணாளெருவின் குப்பைமேட்டில்
உத்துபுதைத் ததைவைத்து மெடுத்தரைத்
துடனுருட்டி யுண்ணத்தீரும்
வித்தகஞ்சேர் சரபோசி மகராச
னிம்முறையை விதித்ததாமே. 172

(இ-ள்)

திராய்வேர் பருத்தியிலை
பழம்புளி

இம்மூன்றையும் வகைக்குச் (சுண்டைக்காயளவு எடுத்து) அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துக் குடிக்கவும். புண்கள் ஆறிவிடும்.

பருத்தியிலை வரட்சுண்டியிலை
திராய் இலை (ஆடுதீண்டாப்பாளையிலை)

இம்மூன்றையுஞ் சமமெடுத்து அம்மியின்மேல் வைத்து அரைத்து விழுதாக்கிச் சிறங்கு, புண்கள் முதலியவை களின்மேல் போடவும்.

ஊமத்தங்காயை உமிக்காந்தலில் சுட்டுக் கரியாக்கி, அம்மியின்மேல் வைத்து, நுணுக்கி, நெய்யுடன் குழைத்துப் படுவன் என்ற புண்ணின் வாயிலிடவும். அவை தீரும்.

உதிர்ந்த எருக்கம்பழுப்பை ஒரு சட்டியிலிட்டு, அடுப்பின்மேல் வைத்து வருத்துக் கரியாக்கி, உப்புச் சேர்த்துக் கீழிறக்கி, மோர்கூட்டிக் குடிக்கவும். புண்கள் காய்ந்துபோய்,

உலர்ந்த சாரைப்பாம்பின் மாம்ஸத்துண்டுகள்
கழற்சிக்கொடிவேர்
கழற்சிக்கொழுந்து
வெள்ளைப்பூண்டு
வசம்பு

இவைகளை (வகைக்கு 1 வராகனெடை) வீதமெடுத்து, நன்றாக அரைத்து நல்லெண்ணெய் 1 சேருடனே குழப்பி அடுப்பின்மேல் ஏற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு காலணா அளவெடுத்துத் தினம் ஒரு வேளை சாப்பிட்டு வரவும். புண்கள் தீரும்.

ஒரு முற்றிய தேங்காயைக் கொண்டு வந்து அதன் கண்ணைப் பொத்து இளநீரைக் கீழே ஊற்றி, அதனுள்ளே எருக்கம்பால் ஒரு உழக்கு விடவும். பின்பு, அதனுடன் புழுங்கலரிசி ஒரு பிடியும் போட்டு, தேங்காயின் துவாரத்தை ஒரு ஆப்பினால் அடைத்து எரு (கூணி) சேர்ந்திருக்கும் குப்பை மேட்டிற்குள் 8 நாளைக்குப் புதைத்துவிடவும்.

9வது நாளன்று அதை எடுத்து உடைத்துச் சரக்குகளைத் தேங்காயுடன் சேர்த்தரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் தினம் ஒரு உருண்டை வீதம் சாப்பிடப் புண்கள் தீரும்.

குறிப்பு:

கடைசி மருந்தில் எருக்கம்பால் சேர்ந்திருப்பதால் வயிறு கழியும். ஆகவே அதைச் சாக்கிரதையாக உபயோகிக்கவும்.

94. புண்களுக்கெண்ணெய்

ஆத்தியின்காய் சீவினதோல் வேம்பாட
வேர்முழல்வே ராகுமுள்ளி
போத்தியகோ டகசாலை கரிசாலை
முத்தக்காசு புதுவசம்புஞ்
சேர்த்திடுவாய் நல்லெண்ணெயி லடுப்பேற்றி
யெரித்திட்டுத் தெளிபதத்தில்
ஆத்திவடித் திதைப் புண்மேற் றடவிடும்
விரணமெல்லா மாறிப்போமே. 173

(இ-ள்)

கோடகசாலை	கரிசாரங்கண்ணி
கோரைக்கிழங்கு	வசம்பு
வெள்ளைப்பூண்டு	வேம்பாடம்பட்டை
ஆத்திக்காய் சீவினதோல்	
முழல்வேர் (கழற்சிக்கொடி வேர்)	

இவைகளை வகைக்கு வராகனெடை வீதமெடுத்து, அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்து, நல்லெண்ணெய் (1½ சேரில்) குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இதைப் புண்ணில் இடவும். அவை ஆறிப்போம்.

95. கிரந்திக்கு மருந்து

மாட்டிறைச்சி நெய்யுடனே களிம்புபற்
றியசெம்பில் வங்கப்பச்சை
போட்டுமொரு காசெடையும் பதினைந்து
நாழிகைதான் போதரைத்து
கூட்டெலுமிச் சங்காயி னளவிட்டு
நெய்யதுதான் கொடும்புண் வாயில்
மூட்டுபத்தியமிருக்கக் குணமொன்றுஞ்
சரபேந்திரன் மொழிந்ததாமே. 174

(இ-ள்)

ஒரு களிம்பேறிய செப்புப் பாத்திரத்தில் மாட்டிறைச்சியைப் போட்டுச்சிறிது நெய் சேர்த்து, வங்காளப் பச்சை ஒரு வராகனெடையும் போடவும். பின்பு இதைக் கல்வத்திலிட்டு 15 நாழிகை (6 மணி நேரம்) நன்றாக அரைத்து, கெட்டியான நெய் ஒரு எலுமிச்சங்காயளவு கூட்டி மத்தித்து வைத்துக்கொள்ளவும்.

இக்களிம்பைக் கிரந்தியின் வாயில் போடவும்.

அன்றைய தினம் (பழையமுது, நல்லெண்ணெய், வாயு பதார்த்தங்கள்) முதலியவைகள் கூட்டாமல் இச்சாபத்தியமாக இருக்கவும்.

96. சோபமான கிரந்திக்கு மருந்து

வசுவாசி சடைச்சிவேர் சிறுவழு
துணைவேரு மலியிம்பூரா
இசைவேரு மொருவகைக் கொருநாழி
நெல்லினெடை சங்கும்பாலை

பசுந்தூது வளைவேரு மோரொன்றுக்
கொருபலமாய் பதக்குத்தண்ணீர்
வசமிட்டு மிருநாழி யாய்க்காய்ச்சி
யிதில்தூது வளைசெம்முள்ளி. 175

பாலையிலை வசுவாசி யிலைச்சாறு
வகைநாழி படவிடுத்தே
காலிதரு பாலுநெய்யும் வகைக்கோரு
நாழிவிட்டுக் கதிரோன் வெய்யிற்
பாறுமொரு தினம்வைத்து நாலிலொன்றாய்க்
காய்ச்சுகற் கம்பாரதிங்கம்
ஏலநற்சீரகமாஞ்சிற் செங்கழூநீர்
சிறுதேக்கு மிடாத்தியாமே 176

கோட்டங்கற் கடசிங்கி கடுரோணி
திப்பிலியுங் கூற்வகைக்கு
நாட்டவொரு கழஞ்சாகப்பொடிசெய்து
பசுவின்னெய் நாழிக்குள்
மூட்டடுப்பி லெரிபதத்தில் வடித்துக்கொள்
கிரந்தியும்புண் முதல்மேகத்தில்
வாட்டுவிர ணங்கள்போஞ் சரபேந்திர
னிம்முறையும் வகுத்ததாமே. 177

(இ-ள்)

ஆடாதோடை சிறுவழுதுணை வேர்
சடைச்சி வேர் இம்புறா வேர்

இவைகள் வகைக்கு நாழி நெல்லெடை (6 பலம்)

சங்கம் வேர் *பாலைவேர்
தூதுவளைவேர்

இவைகள் வகைக்கு ஒரு பலம்

* வெப்பாலை வேர் எனலாம்.

மேற் சரக்குகளைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்தில் இட்டு, 2 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி 2 படியாகும் வரை வற்றக் காய்ச்சவும். கஷாயத்தை வடிகட்டிக் கொண்டு அதனுடன்,

தூதுவளைச்சாறு	1 படி
செம்முள்ளிச்சாறு	1 படி
பாலையிலைச்சாறு	1 படி
*ஆடாதோடைச்சாறு	1 படி
பசுவின் பால்	1 படி
பசுவின் நெய்	1 படி

இவைகளை ஒன்று சேர்த்து, ஒரு நாள் முழுதும் வெய்யிலில் வைக்கவும். மறுநாள் இதை அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து, நாலிலொன்றாகச் சுண்டியபின்,

அதிமதுரம்	செங்கழுநீர்க்கிழங்கு
ஏலக்காய்	கண்டுபாரங்கி
சீரகம்	ஆத்திப்பூ
ஜடாமாஞ்சில்	கோஷ்டம்
கற்கடசிங்கி	கடுகரோகிணி
திப்பிலி	

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து, இடித்து வஸ்திரகாயஞ்செய்து, அடுப்பின் மேலிருக்கும் சாறு கலந்த நெய்யுடனே குழப்பி, எரித்துப் பதத்தில் நெய்யை வடிக்கவும். இந்நெய்யில் ஒரு தேக்கரண்டி அளவெடுத்து பாலுடனே சாப்பிட்டுவர

வீக்கத்துடன் கூடிய கிரந்தி, புண்கள், மேகவிரணங்கள் முதலியவை தீரும்.

---

* ஆடாதோடைச்சாறு - குறுணி என்று 72 நெம்பர் சுவடியில் காணப்படுகிறது.

97. கிரந்தி, இரதம், பாடாணம் முதலியவை களுக்கு முறிவு மருந்து

சார்பரங்கி பட்டைபல மிரண்டரை
திப்பிலியுந் தானும்பஞ்சம்
ஆர்திரவிய மிரண்டுமொரு பலமாய்க்கூட்
டியிடித்த தைச்சிமிழ்க்குள்
நேரடைத்துக் கொண்டுபெருங் கிரந்திக்குத்
திருத்துழாய் நீரோர்துட்டு
சேருட்கொள் சூதமுறி பாலாலும்
பாடாணந் தின்வெந்நீரே. 178

(இ-ள்)

சுத்திசெய்த பரங்கிப்பட்டை	2½ பலம்
திப்பிலி	1 பலம்
பஞ்சத்திரவியம் (அதாவது ஏலம்) கிராம்பு, சீரகம், கோஷ்டம், சண் பகமொட்டு)	

இவைகள் வகைக்கு 2 வராகனெடை

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து, சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பெருங்கிரந்திக்கு:

துளசிச் சாற்றில் 1 வராகனெடைச் சூரண முட்கொள்ளவும்.

பாதரஸ முறிவுக்கெனில்:

பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

பாடாணத்திற்கு முறிவானால்:

வெந்நீருடன் சாப்பிடவும். குணமாகும். கைகண்டது.

98. எல்லாக் கிரந்திகளுக்கும் பிட்டு

கொடிவேலி மூலமதை வெந்நீரா
லரைத்துமொரு கொட்டைப்பாக்கின்
வடிவளவெந் நீருள்ளங் கரைகுறுவை
யரிமாவில் வார்த்துச் சேர்த்துச்
குடுவையின்வாய் வேடுகட்டி யதில்வைத்துப்
பிட்டாக்கிக் கூட்டெள்ளெண்ணெய்
நெடியபனங் கட்டியுட னிரவுண்டு
வதிகால நீர்ச்சோறுண்ணே. 179

(இ-ள்)

சித்திரமூல வேர்ப் பட்டையையொரு கொட்டைப் பாக்களவெடுத்து அம்மியின்மேல் வைத்து, வெந்நீர் விட்டுக் கைபடாமல் அரைக்கவும். இதைக் குறுவையரிசி மாவு (¼படியுடன்) கூட்டி வெந்நீர் விட்டுப் பிசைந்து கொள்ளவும். ஒரு வாய் அகன்ற குடுவையில் தண்ணீர் விட்டு அதற்கு வேடுகட்டி அதன்மேல் முன் பிசைந்த மாவை வைத்து, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும். இன்னொரு பாத்திரத்தினால் ஆவி வெளியே போகாமல் மூடிவைத்துப் பிட்டாகச் சுடவும்.

பின்பு, குடுவையைக் கீழேயிறக்கி, மாவைத் தனியே ஆறவைத்து, நல்லெண்ணெயும் பனை வெல்லமும் வேண்டிய அளவு கூட்டியிடித்து, நோயாளியை, இரவு நேரத்தில் சாப்பிடச் சொல்லவும். மறுநாள் அதிகாலையில் பழயமுது சாப்பிடவும். கிரந்திகள் தீரும்.

குறிப்பு:

72 நெம்பர் சுவடியில் "8 நாட்களுள் கிரந்திப் புண்கள் தீரும்" என்று காணப்படுகிறது.

99. படுவனுக்கு மருந்து

கொடிவேலி வீழிசெங்க தாரிபொன்னாங்
காணியிவை கூறுமூலங்
கடிநொச்சிற் கொழுந்துவெள் வெங்காய
முழிமஞ்சட் கத்தூரி மஞ்சட்
கொடிமிளகு செண்பகப் பூவசம்பு
மிவைக்கூட்டிக் கோவினெய்தான்
யிடுவிருபங் குமுத்தி னெண்ணெயொரு
பங்கிட்டு மெரித்திடாயே. 180

எரித்துள்ளுங் கொள்மேலு மத்தினிலை
யிற்றடவி யிட்டுங்கட்ட
வரிசிற்றா மணக்கதன் பசுங்காயுஞ்
சங்குமிட்டு வளமரைத்தே
புரிவெண்ணெயிற் குழைத்துப் பருப்படு
வன்முகத்திற் பூசிவைக்கப்
பெரியகட்டி சிலந்திமுதற் காய்ந்துபோ
மிம்முறையைப் பேணிச்செய்யே. 181

(இ-ள்)

கொடிவேலிவேர்	வீழிவேர்
செங்கதாரி வேர்	பொன்னாங்காணி வேர்
நொச்சிக்கொழுந்து	வெள்ளை வெங்காயம்
மஞ்சள் (வரளி)	கஸ்தூரி மஞ்சள்
மிளகு	செண்பகப்பூ
வசம்பு	

இவைகள் வகைக்கு (½பலமெடுத்து) அம்மியின் மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நேக அரைத்து,

பசுவின் நெய்	11பலமும்
ஆமணக்கெண்ணெய்	5½ பலமும்

விட்டு, ஒன்றாகக் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்த நெய்யில் தினம் 1 தேக்கரண்டியளவெடுத்துச் சாப்பிடவும்.

இந்த நெய்யை ஊமத்தையிலையில் தடவிப் படுவனில் கட்டவும். குணமாகும்.

சிற்றாமணக்கங்காய்
சுட்டசங்கு

இவ்விரண்டையும் சமனெடை எடுத்து அம்மியின் மேல் வைத்து அரைத்துப் பசுவின் வெண்ணெயுடன் குழைத்துப்

பரு, படுவன், பெரியகட்டி, சிலந்தி முதலாவைகளின் முகத்தில் பூசவும். அவை உடைந்து ஆறிவிடும்.

100. உண்ணாக்குக் கரைய மருந்து

வெள்ளையுள்ளி வல்லகியின் றயிலமொன்றுங்
காற்பணவெ டையிரண்டும்
உள்ளதொன்றாய்க் கலந்திட்டு விரற்கொண்டு
மூன்றுதின முண்ணாக்கிட்டால்
விள்ளுகரைத் துங்குணமா முவரிமண்
ணொட்டடையும் வெண்சுண்ணாம்பும்
முள்ளுத்தா மணிரசத்தா லரைத்துண்ணாக்
கினில்வைக்க முளைத்திடாதே. 182

(இ-ள்)

வெள்ளைப்பூண்டுத் தைலம் ¼ பணவெடை
சேங்கொட்டைத் தைலம் ¼ பணவெடை

இவ்விரண்டையுமொன்றாகக் கலந்து, விரலில் தோய்த்து, மூன்று நாளைக்கு, தினம் இருவேளை உள் நாக்கில் தடவவும். அது கரைந்துபோம்.

(2) உவர்மண்
வெள்ளைச்சுண்ணாம்பு
ஒட்டடை

இம்மூன்றையுஞ் சமனெடை எடுத்து கல்வத்திலிட்டு, உத்தாமணிச்சாறுவிட்டு நன்றாக அரைத்து, பஞ்சில் தோய்த்து உள்நாக்கில் வைக்கவும். அவை தீரும்.

குறிப்பு:

(1) இரண்டாவதாகக் காணப்படும் முறை ஏற்கனவே சரபேந்திரர் சிரோ ரோக வைத்ய முறையில் கூறப்பட்டுள்ளது. அசசெய்யுள் கீழ்வருமாறு:-

உவருமண்சுண்ணாம்பு ஒட்டடையும்
உற்பனவே லிப்பருத்திச் சாற்றைவிட்டு
கவனமாயரைத்து வுண்ணாக்கு தனில்வைக்க
கனத்தவுண்ணாக் கதுவளரா
தொருக்காலுந்தான்
அவனிதனக் குபகார மாகத்தானே
அருந்தவத்தோர் சொன்னமுறை
யவைகளெல்லாந்
தவமதனாற் சிவகிருபை பெறுகெம்பீரச்
சரபேந்திரன் நிச்சயித்த முறையிதாமே.

(சர. வை. மு. சிரோ. சிகி. பக்கம் 140, செய்யுள் 221)

சேங்கொட்டைகளைச் சுத்திசெய்து ஒரு பானையிலிட்டுக் குழித்தைலமாக இறக்கிக்கொள்ளவும்.

101. எழுச்சி, வீக்கம், புண்களுக்கு மருந்து

புண்ணெழுச்சி வீக்கமுற்றாற் கரந்தையை
யாமணக்கிற் பிறந்தமுத்தின்
எண்ணெய்குத்தி யதைவாட்டிக் கட்டிடவும்
வாடிவிடு மில்லாவிட்டால்
மண்ணின் மணித் தக்காளி யினிலையரைத்
ததைமூன்று வாரம்பூசக்
கண்ணுடைந்து வீக்கமெல்லாங் காய்ந்துபோ
மிம்முறை கைகண்டதாம். 183

(இ-ள்)

(1) சிவகரந்தையிலையில் ஆமணக்கெண்ணெய் தடவி அனலில் காட்டி எழுச்சியின் மேலே வைத்துக்கட்டவும். வீக்கம் வாடும்.

(2) மணித்தக்காளியிலையைத் தண்ணீர் விட்டரைத்து எழுச்சி வீக்கத்திற்கு மேல் 21 நாட்கள் பூசவும். அது உடைவதுடன் புண்களும் ஆறிவிடும்.

102. குதிப்புற்றுக்கு மருந்து

புளியம்பட் டைபதக்கிட்டுத் தூணிநந்நீர்
வார்த்ததனைப் புழுங்கக்காய்ச்சி
களிகுதிப்புற் றதனிலுஞ் சுடவிட்டுப்
புளிச்சிராய்க் கனலுண்டாக்கி
யளியொரு காசினெடை துத்தமதைப்
பொடிசெய்து மதனிலிட்டுத்
தெளிபுகைய திற்காட்டத் தூணிதண்ணீர்
நாலுதினஞ் செய்புகைத்தே. 184

(இ-ள்)

புளியம் பட்டைத்தூள் இரண்டு மரக்காலளவெடுத்து, 4 மரக்கால் ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு படியாகக் கஷாயமெடுத்து, குதிகாலிலுள்ள புற்றில் தாரையாக விடவும். பின்பு, புளியஞ்சிராய் கணலில் துத்தம் ஒரு காசளவு பொடி செய்து போட்டு, அதன் புகையில் குதிகாலைக் காட்டவும். இவ்வாறு 4 நாளைக்கு 4 மரக்கால் கஷாயமிடவும். புற்று குணமாகும்.

103. காதிற்குச் சமீபமாக உண்டான எழுச்சிக்கு மருந்து

மேதிவெண்ணெய் மண்சுவரி லெறிந்திரு
நாழிகைதா மித்தெடுத்தே
யோதுநிரை யெருக்கம்பா லூட்டி வெண்ணெய்
சிக்கெனப்புண் ணுறுமெழுச்சி
மீதப்பத் தகடுசெய் தெருக்கிலை
யேழடுக்கி மேலுங்கட்ட
சூதுதிறம் படுமூன்று முறைகட்டு
மவிழாமற் சுகமதாமே. 185

(இ-ள்)

எருமை வெண்ணெயை ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்துச் சுண்ணாம்படிக்காத மண்சுவரில் எறியவும், 2 நாழிகை (சுமார் ¾ மணி) சென்ற பின்பு அதை எடுத்து அதில் எருக்கம்பாலைக் கறந்து நன்றாக மத்திக்கவும். இதை எழுச்சிப்புண் இருக்குமளவும் ஒட்டப்பம்போலே தகடாகத் தட்டி அதன்மேல் ஏழு எருக்கிலைகளை வைத்துத் துணியினால கட்டிவைக்கவும். மூன்று நாட்கள் வரைக்

கட்டை அவிழ்க்கக்கூடாது. இவ்வாறு மூன்று முறை கட்ட எப்படிப்பட்ட எழுச்சிகளும் அமுங்கும்.

குறிப்பு:

மருந்தை அப்பியவுடன் எழுச்சிக்குள்ளிருக்கும் இரத்தமெல்லாம் பட்டு நூறு தேள் கொட்டினாப்போலே கடுக்கும் என்று 72 நெம்பர் சுவடியில் காணப்படுகிறது.

104. பித்தவெடி, வாய்ச்சூலைகளுக்கு மருந்து

குங்கிலிய மாம்பிசினி மெள்ளினெண்ணெய்
தனிலிட்டுக் கொண்டெரித்துப்
பொங்குபித்த வெடிப்புள்ளும் பூசிடப்போம்
வாய்ச்சூலை போக்கவெள்வேல்
நங்கருவே லெருக்கவேர்ப் பட்டையுடன்
றுளாய்கூட்டி நறுங்கடாயந்
தங்கிடநா லாறுதின மடிக்கடி
கொப்பளிக்கச் சாந்தமாமே. 186

(இ-ள்)

வெள்ளைக் குங்கிலியம்
மாம்பிசின்

இவ்விரண்டையும் சமனெடுத்து நல்லெண்ணெயுடன் கலந்து, அடுப்பின்மேல் வைத்துச் சிவந்த பதத்திலிறக்கவும். இதைப் பித்த வெடிப்புகளுக்குப் பூசவும். அவைகள் தீரும்.

(2) வாயில் புண்கள், வலி, முதலியவை இருந்தால்

வெள்வேலம்பட்டை
கருவேலம்பட்டை
எருக்கவேர்ப்பட்டை
துளசி

இவைகளைச் சமனெடையெடுத்து நசுக்கிக் கஷாயம் செய்து தினம் 3 தடவை கொப்பளிக்கவும். இவ்வாறு 4 அல்லது 6 நாட்கள் செய்யவும். வாய்ச்சூலை முதலானவை தீரும்.

105. தொண்டைப்புண், வீக்கத்திற்கு மருந்து

வெட்பாலை யரிசிமஞ்சள் மரமஞ்ச
ளிந்தினிப்பு மிளகிவ்வைந்தும்
ஒப்பாகவுங் கூட்டி வெந்நீ ரும்கழஞ்சு
மருவாளி யுடனரைத்து
வெப்பாநீ ரதிலிரவிற் கொள்ளவும் போம்
கடுக்காயும் வேப்பம்வித்துஞ்
செப்பாத நற்கெந்தித் தேனிலரைத்
துண்வீக்கந் தீருந்தானே. 187

(இ-ள்)

(1) வெட்பாலையரிசி
மஞ்சள்
மரமஞ்சள்
இந்துப்பு
மிளகு

இவைகளைச் சமனெடை (1¼ வராகனெடை) எடுத்துத் தூள்செய்து, அதனுடன் பச்சைக்கற்பூரம் 1¼

வராகனெடையும் கூடப்போட்டுக் கலவத்திலிட்டு, வெந்நீர் விட்டு நன்றாக அரைத்து இரவில் உட்கொள்ளவும்.

தொண்டைப் புண்கள் தீரும்.

(2) கடுக்காய்த்தோல்
வேப்பங்கொட்டை
சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்

இவைகளைச் சமனெடுத்துத் தேன் விட்டரைத்துட் கொள்ள தொண்டைக்குள் ஏற்படும் வீக்கம், புண் முதலானவைகள் தீரும்.

106. தொண்டைத் தூறுக்கு மருந்து

புங்கதின்வேர்ப் பட்டைமஞ்சட் சரிதூட்செய்
தேனிலுணப் புண்களாறும்
புங்கவிதை யிருகாசி னெடைவெந்நீர்
தன்னிலரை புகட்டத்தீரு
தங்குதொண்டைத் தூறினுக்கு முருங்கைத்தோற்
சிவன்வேம்புந் தனிவேம்பின்றோற்
சங்கதின்றோ லாதண்டைக் கடாயத்துள்
வெங்காரந் தாக்கிக்கொள்ளே. 188

(இ-ள்)

(1) புங்கம்வேர்ப்பட்டை
மஞ்சள்

இவ்விரண்டையும் சரி எடை எடுத்துச் சூரணித்துத் தேனில் உட்கொள்ளவும்.

தொண்டைப்புண்கள் ஆறும்.

(2) புங்கம் வித்து 2 வராகனெடை எடுத்து வெந்நீர் விட்டரைத்து, உட்கொள்ளவும்.

(3) முருங்கைப்பட்டை
சிவனார்வேம்பு வேர்ப்பட்டை
வேப்பம்பட்டை
சங்கம்வேர்ப்பட்டை
ஆதண்டை

இவைகளைச் சரி எடையெடுத்து ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு ஜலம் விட்டு நாலிலொன்றாகக் கஷாயம் செய்து அதனுடன் வெங்காரத்தைப் பொரித்துப்போட்டு உள்ளுக்குச் சாப்பிடவும்.

குறிப்பு:

72 நெம்பர் சுவடியிலிருந்து பாக்கி பாகத்தைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

"இவ்வாறு 8 நாளைக்கு உட்கொள்ளவும். தொண்டைத் தூறு தீரும். கைப்பு, புளிப்புப் பதார்த்தங்களைத் தள்ளவும்."

107. துன்மாங்கிடங் கரைய தெய்

நெருஞ்சிவேர் சிறுபூளை வேருமொன்றுக்
கைநான்காம் நிறைபலந்தான்
சரியிடி முக்குறுணி நீருமிட்டு
நாழியதாய்த் தழலிற்காய்ச்சி
குருவடித் திதற்குமேல் வாய்விளங்கங்
கடுரோணி கூட்டிந்துப்பும்
புரிசுக்குச்சித்திரத்தை பேரரத்தை
சிறுமூலம் புகலொன்றுக்கே. 189

பலங்காலா முன்குடிநீ ரிட்டரைத்து
மிருளிநீர் பாரோர்நாழி
எலுமிச்சம் பழச்சாறு முரியானெய்
படியொன்று மிவைகடாயங்
கலமெழு காம்பதத்தில் வடித்ததி
லிருநிட்கங்காண் வெங்காரம்
நலம்பொரித் துட்கலந்து துட்டிடைகொள்
மாங்கிடங்கள் நசித்துப்போமே. 190

(இ-ள்)

நெருஞ்சிவேர்	20 பலம்
சிறுபூளை வேர்	20 பலம்

இவைகளைத் துண்டுகளாக்கிக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து 3 மரக்கால் ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி, 1 படியாகும்வரை வற்றக் காய்ச்சி இதை வடிக்கட்டிகொள்ளவும்.

வாயுவிடங்கம்	கடுகரோகிணி
இந்துப்பு	சுக்கு
சிற்றரத்தை	பேரரத்தை
திப்பிலி	

இவைகளை வகைக்கு பலம் வீதமெடுத்து, இடித்துச் சூரணஞ் செய்து, மேற்கூறிய கஷாயம் விட்டரைத்து, அதனுடன்

வெள்ளைப்பூண்டுச்சாறு	1படி
எலுமிச்சம்பழச்சாறு	½ படி
பசுவின் நெய்	1 படி

முதலியவைகளைச் சேர்த்து கஷாயத்தையும் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும்.

இறக்கி வடிகட்டியபின் பொரித்த வெங்காரம் 2 வராகனெடை கூட்டிக் கொள்ளவும். இந்நெய்யில் ஓர் துட்டெடை எடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

அதிமாம்ஸ வளர்ச்சி தீரும்.

108. துர்மாங்கிடங் கரைய மருந்து

நாணல்விதை பலகரை சுட்டபொடி
பொரிக்காரம் நலம்பொரித்துக்
காணுசமன் பொடிசெய்து பேரகத்தி
யிலையவி கடாயமாதற்
பூணெலுமிச்சம்பழநீ ராதலரைச்
சிரங்கையிற் பொடியைக்கூட்டி
யூணுதுன்மாங் கிடக்கட்டுஞ் சலக்கட்டுங்
கல்லடைப்பு முடைந்துபோமே. 191

(இ-ள்)

நால்விதை
சுட்ட சங்கின் தூள்
சுட்ட வெங்காரம்

இவைகளை சமனெடை எடுத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதில் அரைச்சிரங்கைத் தூளெடுத்து

பேரகத்தி இலையை வேகவைத்த தண்ணீரிலோ அல்லது எலுமிச்சம்பழச் சாற்றிலோ, குழப்பிச் சாப்பிடவும்.

மாம்ஸ அடைப்பினால் ஏற்பட்ட சலக்கட்டும், கல்லடைப்பும் தீரும்.

109. துர்மாங்கிடங் கரைய மருந்து

ஒருத்தலைப் பூண்டதுமூன் றொருபிடியு
மசமோத முயர்ந்தகாயம்
பருத்திவிற் றளவிட்டு மிதையெல்லாம்
வறுத்திட்டும் பண்ணுந்தூளாய்த்
திருத்தாவின் வெண்ணெய்தனிற் கலந்துண்ணத்
தசையடைப்புத் தெரித்துப்போகும்
வருத்துகலிக் கோர்குடையா னிழற்றுசர
போசிமன்னன் வகுத்ததாமே. 192

(இ-ள்)

ஒருதலைப்பூண்டு 3 எண்ணிக்கையில்
ஓமம் ஒரு பிடி
உயர்ந்தரக பெருங்காயம்
ஒரு பருத்திக்கொட்டை அளவு

இவைகளைச் சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றிப் பொன் வறுவலாக வறுத்துத் தூளாக்கிப் பசுவின் வெண்ணெயுடன் கலந்து உட்கொள்ளவும்.

தசையடைப்பு நீங்கும்.

110. துன்மாங்கிடத்திற்குக் கருங்கோழிச் சூரணம்

பிரண்டையைச் சமூலமாய்க் காயவைத்து
தூளிடித்துப் பின்வடிக்கொள்
அரைப்படியாம் பரங்கிப்பட் டைப்பல
மொன்றோம மரைப்பலந்தான்

பெருங்காயஞ் சாதியின்காய் பத்திரியும்
வகைக்கைந்து பெறவேநிட்கங்
கரில்சுக்கு வெள்ளையுள்ளி சிறுமூலம்
வகைக்கரை காண்பலந்தான் 193

மருந்தெட்டுஞ் சமன்கூட்டி வேம்பினிலை
நொச்சியிலை மலாவகந்தான்
பெருந்தும்பைக் கொழுஞ்சியிலை பொடுதலையிவ்
வகைச்சாறும் பிசைந்துவாங்கி
ஒருகுறுணி பானையிட்டுச் சரக்கெல்லாஞ்
சேர்த்தரைத்து முரைக்கக்கேளுக்
கருங்கோழிக் குடல்போக்கி வயிற்றுள்ளே
யிடுதைத்துக்காண்சாற்றுள்ளே. 194

போட்டடுப்பி லேற்றியெரி புகச்சாறு
வற்றியபின் புகல்பிரண்டை
யாட்டுப்பொடி தூவெள்ளெண் ணெயதுவிட்டுப்
பனங்கட்டி யானதிட்டு
மூட்டுகிண்டி யெலும்பொதுக்கிப் பதனமா
யிதைவைத்து மொழிகழற்காய்
நாட்டளவுண் கோழிமுருங் கவரைதூ
தளைப்பருப்பு நலமாய்க்கூட்டே. 195

(இ-ள்)

பிரண்டையைக் கொண்டுவந்து சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்த தூள் ½ படியுடன்

சுத்திசெய்த பரங்கிப்பட்டை	1 பலம்
ஓமம்	¾ பலம்
பெருங்காயம்	5 வராகனெடை
சாதிக்காய்	5 ,,
சாதிப்பத்திரி	5 ,,

மிளகு	½ பலம்
சுக்கு	½ பலம்
வெள்ளைப்பூண்டு	½ பலம்
திப்பிலி	½ பலம்

இவைகளை யொன்றாகக் கூட்டிக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்பு, ஒரு கருங்கோழியைக் கொண்டுவந்து அதன் தலை, கால் முதலியவைகளையும் அதன் வயிற்றைக் கிழித்துக் குடல்களையும் நீக்கி, அதற்குள் மேற்சொன்ன சூரணத்தைத் திணித்துத் தைத்துவிடவும்.

ஒரு வாயகன்ற சட்டியில்

வேப்பிலைச்சாறு
நொச்சியிலைச்சாறு
பிண்ணாக்கிக்கீரைச்சாறு
பெருந்தும்பைச்சாறு
கொழுஞ்சியிலைச்சாறு
பொடுதலைச்சாறு

இவைகளை வகைக்கு 1 மரக்காலெடுத்து ஒன்று கலந்து, அக்கருங்கோழியை அதிலிட்டு அடுப்பின்மேலேற்றி, சாறு வற்றும்வரை கொதிக்க வைக்கவும். பின்பு, இதைக் கீழிறக்கி ஆறவைத்து, எலும்புகளை நீக்கிவிட்டுக் கல்லுரலில் இட்டிடித்து வேண்டிய அளவு பனவெல்லமும் நல்லெண்ணெயும் கூட்டி இடித்துக்கொள்ளவும்.

இதில் ஒரு கழற்சிக்காய் அளவு எடுத்துத் தினம் ஒரு வேளை சாப்பிடவும்.

குறிப்பு:

கோழிக்கறி, முருங்கைக்காய், அவரைக்காய், தூதுவளங்காய், துவரம்பருப்பு முதலியவைகளை வேண்டிய அளவு கூட்டிக்கொள்ளவும்.

111. பவுத்திரம், கழலை, உடையாத சிலந்திகளுக்கும் காரம்

சவுட்டுமண் கொண்டுவந்தோ ரெலுமிச்சங்
காயளவா யதனைச்சுட்டு
தெவுட்டொரு பாக்களவு சுண்ணாம்புங்
கூட்டிபொடி செய்துஞ்சட்டி
துவட்டுமரை மாகாணி முத்தினெண்ணெய்
விடுகொதித் துடனிறக்கு
பவுத்திரமா றாதபுண் ணுடையாத
கழலையிடப் பறந்துபோமே. 196

(இ-ள்)

உவர்மண் ஒரு எலுமிச்சங்காயளவெடுத்து, ஒரு இரும்புப் பாத்திரத்திலிட்டு, அடுப்பின் மேலேற்றிக் கருக வறுத்து, அதனுடன் கல்சுண்ணாம்பு ஒரு பாக்களவு போடவும். நன்றாக வறுபட்டபின் ஆமணக்கெண்ணெய் ஒரு மாகாணி (வீசம்படி) விட்டுக் கொதிக்க வைத்து இறக்கிக்கொண்டு,

உடையாத கட்டிகள் பவுத்திரம் முதலியவைகளுக்குப் போடவும்.

112. உடையாத கட்டிகளுக்குப் பத்து

பெருங்காய மஞ்சளுங் காசுக்கட்டி
சுண்ணம் விளாம் பிசினில்வைந்தும்
அரும்பொடி செய்துவெள்ளைக் கருவினா
லாட்டியிட வாறிப்போகும்

பெருங்காயம் வெள்ளையுள்ளி சுண்ணம்வசம்
பெருக்கின்பாற் பெய்தரைத்து
இருமூன்று பொழுதிட்டாற் கட்டியுடை
படுங்குணமா மிதற்குத்தானே. 197

(இ-ள்)

(1) பெருங்காயம்
மஞ்சள்
காசுக்கட்டி
சுண்ணாம்பு
விளாம்பிசின்

இவைகளைச் சமனெடை எடுத்துச் சூரணித்து, கல்வத்திலிட்டு கோழி முட்டையின் வெள்ளைக் கருவிட்டு நன்றாக அரைத்துக் கட்டிகளின் மேல் பத்தாகப் போடவும். அவை பழுத்து உடையும்.

(2) பெருங்காயம்
வெள்ளைப்பூண்டு
சுண்ணாம்பு
வசம்பு

இவைகளைச் சூரணித்துக் கல்வத்திலிட்டு எருக்கம் பால் விட்டு நன்றாக அரைத்து, தினம் 6 பொழுது இடவும். கட்டிகள் உடையும்.

113. உடையாத சிலந்திக்குப் பத்து

அவின்காசுக் கட்டிகழற் கோடியிலை
பெருங்காய மாங்களிப்பாக்
கிவையைந்தும் வெண்கருவா லரைத்தாறு
பொழுதிட்டா லேகுங்கட்டி

நவமாவி லங்கந்தோற் கொண்டுவந்து
கட்டியின்மேற் நறுக்கிக்கட்ட
வலமாகும் புங்கதின் றோலிழைத்துப்
போடுகுண மாகுந்தானே. 198

(இ-ள்)

அபின்
கழற்கோடியிலை
பெருங்காயம்
கனிப்பாக்கு
காசுக்கட்டி

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டி டித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டுக் கோழி முட்டையின் வெள்ளைக் கருவிட்டு நன்றாக அரைக்கவும்.

இம்மருந்தைக் கட்டியின்மேல் பூசவும். 6 வேளைகளில் கட்டிகள் குணமாகும்.

(2) மாவலிங்கம் பட்டை வேண்டிய அளவு எடுத்து நசுக்கிக் கட்டியின்மேல் வைத்துக் கட்டிவிடவும். அது பழுத்து உடைந்து விடும்.

(3) புங்கம்பட்டையைக் கல்லுரலிலிட்டு இடித்து மிருதுவாகச் செய்து, கட்டியின் மேல் போட அது வெகு சீக்கிரத்தில் உடைந்து ஆறும்.

114. குத்து, வெட்டுப் புண்களுக்கு மருந்து

குத்துப்ப டுமுட்னே வாய்க்குட்சேலை
விடுகுடைந்துங் குருதிதன்னைச்
சுத்தமாய்த் துடைத்திட்டுத் தசையுள்ளே
தள்ளியெண்ணெய் சுடவுங்காய

வைத்தெலுமிசசம்பழத்தா லொத்திடவுஞ்
சாறுமெண்ணெய் மதனஞ்செய்து
வித்தெரியிற் காய்ந்துசுட வாய்க்குள்விடு
மூன்றுதின மேலுங்கேளே. 199

மேலிலந்தை யாமணக்குந் தூதுவளை
யிலவங்கம் வேம்பாடஞ்சிற்
றேலமதி மதுரநன் னாரியிவை
வேருடனுந் தோ்கழஞ்சு
நாலுமிடு மேலரைத்து நாழியெண்ணெய்
தனிலிட்டு நலம்வடித்துச்
சேலையிற்றோய்ப் படுகாயந்தெரியாம
லிட்டிடவுந் தீருந்தானே. 200

(இ-ள்)

அடிபட்டவுடன் அக்காயத்தின் வாயைத் துணியினால் நன்றாகத் துடைத்து இரத்தம் கசிவதை நிறுத்தவும். பின்பு ஏதேனும் தசை வெளியே வந்திருந்தால் அதை உள்ளே தள்ளிவிடவும்.

ஒரு இரும்புக் கரண்டியில் நல்லெண்ணெய் ஒரு கரண்டிவிட்டு எலுமிச்சம்பழத்தை இரண்டாக அறுத்து, அந்த மூடிகளைக் கரண்டியிலுள்ள கொதிக்கும் எண்ணெயில் தோய்த்துப் பொறுக்கும் சூட்டில், காயத்திற்கு ஒத்தடமிடவும். பின்பு எலுமிச்சம்பழத்தின் சாற்றை எண்ணெயுடனே பிழிந்து ஒன்று கலந்து, பொறுக்கும் சூட்டில் அக்காயத்தினுள்விட்டுக் கட்டிவிடவும். இவ்வாறு 3 நாளைக்குச் செய்யவும்.

(2) இலந்தைவேர்
ஆமணக்கம்வேர்
தூதுவளைவேர்
கிராம்பு

நன்னாரி வேர்
அதிமதுரம்
வேம்பாடம்பட்டை
ஏலக்காய்

இவைகளை வகைக்கு 4 வராகனெடை வீதமெடுத்து, இடித்துச் சூரணித்துத் தண்ணீர் விட்டரைத்து

நல்லெண்ணெய் 1 நாழியுடன் கூட்டி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இத்தைலத்தில் துணியைத் தோய்த்து வெட்டுக் ாயத்தில் வைத்துக் கட்டவும்.

அவை வெகு எளிதில் ஆறும்.

115. வெட்டுக் குத்துக்கு மருந்து

குங்கிலியம் வெள்ளையதாய்க் காயமட்டாய்ப்
பழச்சாறு கொண்டரைப்புத்
தங்கொருநா ழிகைசென்று வழித்துக்காற்
காசளவத் தனை மருந்தில்
நங்கெண்ணெ யாற்சாரித் திடுவதனை
வேரொருத்தர் நன்கையிட்டுத்
தூங்கவெந்நீ ருந்தெளித்துக் கையொடுகை
யொருநாழி சுடவுந்தேயே. 201

தேய்க்கையிலே சுவறிப்போங் கையதனைப்
பிடித்திட்டாற் சிறுகரண்டி
வாய்க்கிடமா யதைவழித்து நல்லெண்ணெய்
தன்னிலந்த மருந்தைப்போட்டு

ஆக்கியதி லொருகாசி னளவுகுத்திச்
சாரித்து மதைப்பிளந்த
வாய்க்கிரண்டு பக்கமிட்டு முலர்ந்தபின்
மேலுமிட்டு வளையம்பூசே. 202

(இ-ள்)

வெட்டுக்காயத்திற்குப் போதுமான அளவு, வெள்ளைக் குங்கிலியம் எடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து ஒரு நாழிகை சென்றபின் அதை வழித்து ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும். இம்மருந்தில் கால் காசளவு எடுத்து இடது உள்ளங்கையில் வைத்துக்கொண்டு, நல்லெண்ணெய் (ஒரு ஸ்பூன்) விட்டு, வெந்நீர் 10துளி தெளித்து மற்றொரு கையினால் நன்றாகச் சூடு வரும்வரை, சுமார் 1 நாழிகை தேய்க்கவும். இப்படித் தேய்க்கையில் மருந்து கையில் சுவறிப்போம். பின்பு இருகைகளும் ஒட்ட ஆரம்பிக்கும். அந்தப் பதத்தில் கையில் ஒட்டியுள்ள மருந்தை ஒரு சிமிழில் வைத்து, நல்லெண்ணெயுடன் குழைத்து, வெட்டுக் காயத்திற்குள் போடவும். உலர்ந்தபின் காயத்தைச் சுற்றிலும் மறவளயமிடவும்.

116. வெட்டு, அம்பு, குண்டு முதலானவை பட்டதற்கு எண்ணெய்

சட்டிநெருப் பெழக்காய்ச்சி யெள்ளினெண்ணெய்
விட்டெலுமிச்சம்பழத்தை
வெட்டியிரு பிளவாக்கிக் காயுமெண்ணெய்
தனிற்றோய்த்து வெட்டுவாயைச்
சுட்டுவிடு மெண்ணெய்குத்திப் புண்ணிலிட
மேலிதற்குச் சொல்லிலந்தை
வட்டநிலக் குமிழ்சூரை நாயுருவி
கடுக்காயா வரைபலாவே 203

தூதுவளை சிறுகுறுஞ்சாச் செவ்வல்லிக்
கொடிகோட்டஞ் சொல்வேம்பாடம்
ஓதுசிறு வழுதலைச தகுப்பை
யிலவங்க முடனேலங்கள்
சாதிமது ரங்களிது வேரொன்றுக்
கிருகழஞ் சாயிடித்து
மீதுபடி யெண்ணெய்விட்டு மெழுகுபதந்
தன்னில்வடி மேலும்போடே. 204

(இ-ள்)

ஒரு புதுச்சட்டியை அடுப்பின் மேலேற்றி நன்றாகப் பழுக்கக் காய்ச்சி, அதில் நல்லெண்ணெய் சிறிது விடவும். ஒரு எலுமிச்சம்பழத்தை இருபாகங்களாகப் பிளந்து, அதைக் கொதிக்கும் எண்ணெயில் தோய்த்து, இரணத்தின் வெட்டு வாயை யொன்று சேர்த்து, அதில் பிழிந்து ஒத்தடமிடவும். புண்கள் ஆறும்.

இலந்தை	நிலக்குமிழ்
சூரை	நாயுருவி
கடுக்காய்	ஆவாரை
பலாவேர்	தூதுவளை
சிறுகுறிஞ்சான்	செவ்வல்லிக்கொடி
கோஷ்டம்	வேம்பாரம்பட்டை
சிறுவழுதலை	சதகுப்பை
கிராம்பு	சிற்றேலம்
பேரேலம்	சாதிக்காய்
அதிமதுரம்	

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்துத் தூளாக்கி, வஸ்திரகாயஞ் செய்து, அதனுடன் நல்லெண்ணெய் ஒரு படி விட்டுக் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயைப் புண்களுக்குப் போடவும். குணமுண்டாகும்.

117. அடிபட்டு விழுந்த, எலும்பு முறிந்த காயத்திற்கு

குமரிமே லெண்ணெயிட்டு மிதைவாட்டிக்
கட்டியபின் கோவைவே வரை
நிமிரடுப் பேற்றியதி நீர்சுருங்கக்
காய்ச்சி வெண்ணெய் நீற்றுஞ்சங்குந்
திமிரவே யரைத்தண்டங் கூட்டுபசை
பூசிடொரு சேலைதன்னில்
அமரத்திப் பாலூட்டி முறிந்ததைக்
கட்டெலும்பு மணுகுந்தானே. 205

உசிலையின் மேற்புரணி நறுக்கிநல்
லெண்ணெய்விட்டு முலகத்தோடு
விசித்திடக் கட்டிநய நீர்ப்பூலா
வேர்ச்சீவி விரிகற்றாழை
பசைமடலி லிடுகட்ட நலமாகு
மொருகம்பைப் பகிர்ந்து மூன்றாய்
மிசைசம்பீரப்பழத்தைப் பிளந்துவைத்
தெண்ணெய்நெய்யு மிட்டுக்காய்ச்சே 206

காய்ச்சிலுந் தோய்த்திடொற்றுக் காட்டிடவுங்
கடுப்புவலிக் கட்டிரத்தம்
போச்சிதென்றாம்வேல தின்தோற்று
வைத்ததை வடிக்கட்டிப்போங்
காய்ச்சிதைக் குழம்பாக்கி யொருசேலை
தனிலூட்டிக் கட்டிரத்தம்
பாய்ச்சலிட னுதிரத்தின் கட்டுநிற்கும்
பசைபோகும் பலமுண்டாமே. 207

(இ-ள்)

சோற்றுக்கற்றாழை மடல் நன்கு முத்தியதாக எடுத்து அதன்மேல் நல்லெண்ணெய் தடவி, அனலில் வாட்டி அதன் சோற்றை எலும்பு முறிந்த இடத்தின் மேல் வைத்துக் கட்டவும்.

பசுவின் மோரை அடுப்பின்மேலேற்றி, அதிலுள்ள நீர் முழுவதும் கண்டும்வரை காய்ச்சி, அதனுடன் சங்கு பஸ்மம், பசுவின் வெண்ணெய் இவ்விரண்டையுஞ் சேர்த்துக் கோழிமுட்டையின் வெள்ளைக் கருவை விட்டுப் பசைபோலரைத்து ஒடிந்த எலும்பையொன்று கூட்டி, அதன்மேல் பூசவும். பின்பு, ஒரு வெண்மையான துணியில் அத்திப்பாலை யூட்டி, முறிந்த எலும்பு, அதன் மேலுள்ள மருந்து முதலானவை நழுவாமல் வைத்து, இறுகக் கட்டிவிடவும். முறிந்த எலும்புகள் கூடும்.

உசிலம்பட்டையைச் சிதைத்து, நல்லெண்ணெயுடனே கூட்டி, முறிந்த எலும்புகளை ஒன்று சேர்த்து அதன்மேல் வைத்துப் பின்பு,* சிம்புகளை வைத்து நழுவாமல் கட்டவும். குணமுண்டாகும்.

நீர்ப்பூலா வேரையும், சோற்றுக் கற்றாழை வேரையும் ஒன்றுபடச் சிதைத்து வைத்தும் கட்டலாம்.

ஒரு (மூங்கில்) கம்பை மூன்று பிளவாகப் பிளந்து, அதனுள் மூன்று பிளவாகப் பிளக்கப்பட்ட எலுமிச்சம் பழத்தை செறுகவும். ஒரு கரண்டியில் நெய்யும், நல்லெண்ணெயும், சமபாகமாக ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றிச் சுடவைத்து குச்சியுடன் கூடிய எலுமிச்சம்பழத்தை அதில் தோய்த்துக் கடுப்பு வலி, இரத்தக்கட்டு முதலியவைகளுள்ள இடங்களில் ஒத்தடமிடவும். மிக்க குணமுண்டாகும்.

கருவேலம்பட்டையைப் பஞ்சுபோலிடித்துச் சாறுபிழிந்து, அனலில் வைத்துக் குழம்பாகக் காய்ச்சி, அதையொரு துணியில் தடவி, இரத்தக்கட்டு, இரத்தம் கசியும் இடம் முதலானவைகளின்மேல் போடவும். அவை தீரும்.

---

* வெச்சோடு கொண்டு கட்ட நலம் என்று 72 நெம்பர் சுவடியில் கூறப்பட்டுள்ளது.

118. அம்புவிழுந்த காயத்திற்கு எண்ணெய்

நிலக்குமிழ் வே ரொடுவி வேரதின்றோற்
றூதளைவேர் நிம்பபஞ்சம்
இலந்தைவே ரிலையூமத் திலைவேருங்
கம்பிப்பிசி னேர்வேம்பாடல்
நலசீதா செங்கழுநீர் மட்டியிலை
முக்கழஞ்சாய் நாட்டொன்றுக்குக்
கலந்துதூள் நாழியெண்ணெய் வடித்திட்டா
லம்புருண்டைக் காயம்போமே. 208

(இ-ள்)

நிலக்குமிழ்வேர்	ஓடுவிவேர்ப்பட்டை
தூதுவளைவேர்	வேப்பமரத்தின்பட்டை
வேப்பஇலை	வேப்பம்பூ
வேப்பங்காய்	வேப்பம்வேர்
இலந்தைவேர்	இலந்தை இலை
ஊமத்தை இலை	ஊமத்தை வேர்
கம்பிப்பிசின்	வேம்பாடம்பட்டை
சீதாசெங்கழுநீர்	*அதிமதுரம்

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு (3¾ வராகனெடை) வீதம் எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து, அதனுடன்,

நல்லெண்ணெய் நாழி (5 சேர்) விட்டுக் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இந்த எண்ணெயை அம்பினாலேற்பட்ட காயங்களுக்குப்போட அவை ஆறும்.

---

* நீர்மட்டி என்ற சரக்குக்கு அதிமதுரம் என்ற பொருள் 72 நெம்பர் சுவடியில் காணப்படுகிறது.

119. குண்டு, கத்தி, அம்புக்குத்து இவைகளினாலேற்பட்ட காயத்திற்கு எண்ணெய்

வெடிகுண்டு கத்திவெட்டு வம்புருகிக்
குத்துடல் மெத்தநொந்தால்
நெடிவேம்பு மேற்புரணித் தூளிடித்துத்
தண்ணீரில் நிரம்பப்போட்டுத்
துடியலரக் காய்ந்திறக்கி யுடல்தங்கப்
பிடித்திட்டுத் துவளையிட்டு
விடுவெந்நீர் வலிதீரு மலவாத
கரப்பானாய் விடுவிக்கும்பாரே. 209

நிலவேம்பு பொற்கடுக்காய் தூதுவளை
சிவன்வேம்பு நிலக்குமிழ்வேர்
நல்சீந்தில் சென்னக்காய் நெரிஞ்சிலது
சகலநன் னாரிவேரும்
பலமாகா ளிக்கிழங்கு நாயுறுவி
வேம்பாடல் பருவெள்ளுள்ளி
சிவசூரை கோட்டமஞ்சள் சாதிக்காய்
அதிமதுரந் திரிபலாவே. 210

கரிலீது வேர்மருந்து வகையொன்று
முக்கழஞ்சாய்க் கலந்துகொண்டும்
அரையில்லா விடிற்பொடி யாகிலுஞ்செய்
வடிகட்டி யதனைநாழித்
தரியெள்ளி னெண்ணெய்விட்டு மடுப்பேற்றிப்
பதங்கண்டு தான்றுழாவி
எரிவடித்திடக்காயத் தெழுவாத
கரப்பானு மிராமற்போமே. 211

(இ-ள்)

வெடிகுண்டு, கத்தி, வெட்டு, அம்பு இவைகளினால் விரணங்கள் ஏற்பட்டு ஆறாமலிருந்து குத்துவலி உண்டானால் அதற்கு மருந்தாவது:-

வேப்பமரத்துப் பட்டையின் மேல் புரணியைக் காயவைத்து இடித்துத் தூள்செய்து, 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும். நன்றாகச் சுண்டியபின் அக்கஷாயத்தை இறுத்து, பொறுக்கும் சூட்டில் ஸ்நானம் செய்யவும். வலி முதலியவை தீரும். இல்லாவிடில் வாதகரப்பானாக ஏதுவாகும்.

நிலவேம்பு	சிவனார்வேம்பு
கடுக்காய்த்தோல்	நிலக்குமிழ்வேர்
தூதுவளைவேர்	சீந்தில்கொடி
செப்புநெருஞ்சில்	நன்னாரிவேர்
மாகாளிக்கிழங்கு	நாயுருவி
வெம்பாடம்பட்டை	வெள்ளைப்பூண்டு
சூரை	கோஷ்டம்
மஞ்சள்	சாதிக்காய்
அதிமதுரம்	திரிபலா
மிளகின்வேர்	

இவைகளை வகைக்கு 3 கழஞ்சு வீதமெடுத்துக் காயவைத்து, கல்லுரலிலிட்டுடிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்பு, இதனை நல்லெண்ணெய் 1 நாழியுடன் (5 சேருடன்) குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

கரப்பான், புண்களுக்கு இந்த எண்ணெயைப் போட அவைகள் ஆறும்.

120. யோனி சூலைக்குப் புகை

நாகதுண்டங் குங்கிலியம் பொடிபண்ணிச்
சட்டியிலு நடுநெருப்பை
யாகவடி யில்லாத வுரலின்கீ
முனலைவைத்த திற்றூளிட்டுத்

தோகையரை யுரலிருத்திப் புகையிட்டால்
யோனிவருஞ்சூலை தானும்
போகுமுத்தின் கொட்டைநிம்ப விற்றிரண்டும்
வேமிபினிலைப் பொழியுஞ்சாறே. 212

சாற்றிலரைத் துண்டைசெய்து யோனியுள்ளும்
வைத்திடப்போஞ் சாரமஞ்சள்
மூற்றகடிப் பகைதேவ தாரம்வேம்
பதின்வைர மொழிசமன்றான்
சேற்றபசு மோரிலரை யோனியின்மேற்
பூசிடப்போந் திகழ்வெள்ளுள்ளி
யேற்றபகை யூறலும்பேய்த் திமிட்டிவேர்
வாய்விளங்க மிவைசரிக்கே. 213

இடுகண்டங் கத்திரியின் சாற்றிலரைத்
துருண்டைபண்ணி யிதையோனிக்குள்
படுவைத்து மேலுமிட்டுப் பகச்சூலை
தீர்ந்துவிடும் பாவைமார்க்குத்
தோடுமலட் டுப்புழுவுஞ் செத்துவிழு
மேழுதினந் தொடர்ந்து செய்யில்
அடுபினியெல் லாந்தீருஞ் சரபோசி
மகராச னரைந்ததாமே. 214

(இ-ள்)

பாம்புக் கண்டம்
வெள்ளைக்குங்கிலியம்

இவ்விரண்டையும் சமனெடை எடுத்துச் சூரணித்துக் கொள்ளவும். ஒரு அகலில் தணலையிட்டு, அதன் மேல், (அகல் உட்புகும்படியாக) அடியில்லாத இருபுறமும் துவாரமுள்ள உரலை மூடவும். பின்பு, அதனுள்ளிருக்கும் தணலில் மேலே சொல்லிய தூளைப்போடவும். அதிலிருந்து

புகையெழும்பும். வியாதியுள்ள ஸ்திரீயை உரலின் புறவாயிலிருத்து அப்புகையை மர்மஸ்தானத்தில் படும்படி செய்யவும் யோனிச் சூலை தீரும்

ஆமணக்கங்கொட்டை
வேப்பங்கொட்டையினுள்ளிருக்கும் பருப்பு

இவ்விரண்டையும் சமனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டு வேப்பிலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

இந்த உருண்டைடை மர்மஸ்தானத்திலுள்ளேசெருகி வைக்க யோனிச்சூலை தீரும்.

மஞ்சள்
தேவதாரம்
வேம்பின்வைரம்

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து, பசுவின் மோரிலரைத்து, மரம ஸ்தானத்தில் பூசவும். யோனி சூலை குணமாகும்.

வெள்ளைப்பூண்டு
புகையூறல் (புகைக்கூண்டு)
பேய்த்திமிட்டி வேர்

சரியெடை எடுத்துத் தூள்செய்து கண்டங்கத்திரிச் சாறுவிட்டு நன்றாக அரைத்து, சுண்டைக் காயளவுள்ல மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும். இதை மர்மஸ்தானத்தினுள்ளே வைத்து, அதையே மேலேயும் அரைத்துப் பூசவும்.

யோனிச்சூலை தீருவதுடன் மலட்டுப் புழுவும் விழும். 7 தினங்களில் மேலே சொன்னதைப் போலப் பற்பல பிணிகளும் தீரும்.

121. யோனிலிங்கம், வயிறு, மூக்கதிலிரத்தம் இறங்குவதற்கு

பருத்திப்பா னாழிசுக்குக் கரிலோமஞ்
சீரகமும் பகரதிங்கந்
தருபூண்டு மரைத்துடன் பாறனிலுங்
கரைத்திட்டுத் தணலிற் காய்ச்சி
மருகுழம் பாகவரும் போதுபசு
நெய்யையுரி வார்பதத்தில்
திருத்திவடி கழஞ்சுசொன்று கொள்யோனிப்
பிணியெல்லாந் தீர்ந்துபோமே. 215

(இ-ள்)

பருத்திக்கொட்டையை ஊறவைத்து அரைத்துப் பிழிந்த பால் ஒரு நாழி

சுக்கு	மிளகு
ஓமம்	சீரகம்
அதிமதுரம்	வெள்ளைப்பூண்டு

இவைகளை வகைக்கு (1 வராகனெடை) வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து, மேலே சொல்லிய பருத்திக்கொட்டைப் பாலில் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரிக்கவும். அது குழம்பாகும்போது பசுவின் நெய் ½ படி விட்டுக் கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் ஒரு கழஞ்சள வெடுத்துப் பசுவின் பாலிலுட்கொள்ள யோனிலிங்கம், வயிறு, மூக்கு முதலான இடங்களிலிருந்து இரத்தம் கசிதல் முதலியவைகள் தீரும். கைகண்டது.

122. யோனித்திரிவிழ

திரிவிழு முதனாழி லுடல்தலைதா
னுதையத்தி னெண்ணெயிட்டு
பரியவெந் நீர்முழுகு வேறுகறி
தொடாமல்நெய் பாலுங்கூட்டி
அரியபோ சனஞ்செய்து விராவன்னஞ்
செய்யாம லன்றைவைகல்
புரிநந்தி யாவட்டவே ருமிலைபூ
வோரொன்று போடக்கேளே. 216

எலுமிச்சங் காயளவா யரைநல்ல
வெல்லமுட னிட்டுக்கொள்ள
மலிசாமைச் சோறரைத்து முடலேறப்
பூசிவிட்டு வடிவயோனி
யிலும்பூசி யுலரவிட்டுத் தொட்டியிலே
குளிர்ந்தநீ ரிட்டதன்றான்
நலமாக விருக்கும்போ திரிவிழு
மிதைமற்ற நாளுஞ்செய்யே. 217

மர்மஸ்தானத்திலுள்ள அதிமாம்ஸம் விழவேண்டு மானால் அந்த ஸ்திரி

சிகித்ஸை ஆரம்பிப்பதற்கு முதல்நாள், உடம்பு, தலை, முதலான இடங்களில் நல்லெண்ணெய் தேய்த்துக் கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும். ஸ்நானம் செய்த தினத்தன்று

வேறு கறிகள், கூட்டாமல், பால் சாதமும், நெய் சாதமும் மாத்திரமே மத்தியானத்தில் உண்ணவும், இரவு யாதொன்றும் சாப்பிடாமல் பட்டினியாக இருந்து மறுநாளதி காலையில்

நந்தியாவட்டையிலை		எலுமிச்சங்காயளவு
,,	வேர்	,,
,,	பூ	,,

எடுத்து, ஒன்று சேர்த்து நன்றாக அம்மியின் மேல் வைத்து, அரைத்து நல்ல வெல்லம் எலுமிச்சங்காயளவும் கூட்டி உட்கொள்ளவும். பின்பு சாமையரிசியைச் சமைத்துச் சோறு ஆக்கி (¼படி) அம்மியில் வைத்து அரைத்து, உடம்பிலும் மற்றும் மர்ம ஸ்தானத்திற்குள்ளும் நன்றாகப் பூசி உலரவிடவும்.

ஒரு தொட்டியில் குளிர்ந்த ஜலத்தை ஊற்றி அதில் அந்நோயாளியைச் சிறிது நேரம் இருக்கச் சொல்லவும். யோனித் திரி விழும். அன்று விழவில்லையென்றால், மறுநாளும் இவ்வாறு செய்யத் திரி விழுந்துவிடும்.

இது கைகண்டது. பத்தியமாக இருக்கவும்.

123. குரு, மறுக் கொப்புள மருந்து

நீர்க்கடம்பின் வேரெலுமிச் சம்பழத்தி
னளவு சிறு நீரிலாவ
தாரநீராகாரமாவ தொருசேரிற்
கலந்தரைத்த தைக்குடிக்கப்
பார்குருவு மறுவுடன் கொப்பளிக்கும்
படுவன்கள் பருவாறிப்போஞ்
சீர்முறையைச் சரபோசி மகராச
னுயிர்க்கிரங்கிச் செய்ததாமே. 218

குருவுக்கு மூன்றுதினந் தவசெனு
முருங்கையுட கொடுமிடித்துப்
பெருமருந்த தின்வேரைத் தரித்தொரு
சிரங்கையாம் பேணியுட்கொள்
திருமாலின் கரந்தைபூ வரசிலைப்ப
முப்பீரஞ் சேர்வெங்காயங்
கருஞ்சீர மிவையாறுங் குடிநீரா
யிதுகொள்ளக் காய்ந்தும் போமே. 219

(இ-ள்)

நீர்க்கடம்பின் வேர் எலுமிச்சங்காயளவெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் *சிறுநீர் அல்லது சோற்றின் நீராகாரம் இவற்றிலே ஏதேனுமொன்றை யொரு சேரளவெடுத்து, அதில் நன்றாக அரைத்துக் கொள்ளவும். பின்பு இதனைக் குடிக்கவும்.

குரு, மறு, கொப்பளிக்கும் படுவன் முதலியவை தீரும்

தவசுமுருங்கை ஈர்க்கு ஒரு சிரங்கை
பெருமருந்துவேர் ,,

இவ்விரண்டையும் நசுக்கி, அம்மியின் மேல் வைத்து நேக அரைத்துச் சாப்பிடவும். பின்பு,

விஷ்ணுக்கிரந்தி பூவரசிலைப்பழுப்பு
ஈரவெங்காயம் கருஞ்சீரகம்

இவற்றைச் சமனெடை எடுத்து இடித்து, இதற்கு எட்டு மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சி இறக்கிக்கொண்டு, இக்கஷாயத்தை முன் சொன்ன மருந்திற்கு அனுபானமாகக் குடிக்கவும்.

படுவன் முதலியவை தீரும்.

---

* சிறுநீர்- உலகமறியாக் குழந்தைகளின் சிறுநீரை எடுத்துக்கொள்ளவும்.

124. பெருவியாதிக்கு மருந்து

பேய்மருட்டிச் சாரணைக்கீழ்க் காய்நெல்லி
சேங்கொட்டைப் பெரியதுத்தி
யாயிவைவேர் சமன்கூட்டி யிடித்தொரு
பானைதனி லாட்டின்நீரை
நீயிடுவா ழாக்கதுவு மிதுகாய்ச்சு
நாலுதின நீளவிட்டுப்
போயுழக்கு வீதமெட்டு நாட்குடித்தேழ்
தினம்வெந்நீர் போம்மலுண்ணே. 220

(இ-ள்)

பேய்மருட்டி	1 பலம்
சாரடை வேர்	1 பலம்
கீழாநெல்லி	1 பலம்
சுத்திசெய்த சேங்கொட்டை	1 பலம்
துத்திவேர்	1 பலம்

இவைகளை வெய்யிலில் காயவைத்து, இடித்து ஒரு பானையிலிட்டு, வெள்ளாட்டு மூத்திரம் 1 ஆழாக்கு விட்டூற வைத்து, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சி இறக்கி வைத்துக்கொள்ளவும். நான்கு தினங்கள் சென்றபின் இதைக் குடிக்கவும். இவ்வாறு தினம் ஒரு உழக்கு வீதம் 8 நாட்களுக்குச் சாப்பிடவும். 7 நாட்களுக்கு மறுபத்திய மிருக்கவும். தினமும் வெந்நீர் சாதம் மாத்திரமே உட்கொள்ளவும்.

குறிப்பு:

1. இம்மருந்தில் சேங்கொட்டை சேர்த்திருப்பதால் அதிசாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும்.

2. 2 உழக்கு - 1 ஆழாக்கு

125. உடல் வெள்ளைக்கு மருந்து

கொடிவேலி வேரதின்றொ லெலுமிச்சம்
பழச்சாறு கொண்டரைத்துள்
ளிடுவதோர் பாக்களவா யுடல்வெள்ளை
காணிடத்தி லிதனைப்பூசிக்
கெடுமூன்று நாட்குடிக்கப் புளியுப்புத்
தள்ளுவெள்ளைக் கெட்டுமாறுந்
தொடுபத்தி யங்கார்ப்பா யிவ்வாறு
மூன்றுமுறை தொடங்கித்தானே. 221

(இ-ள்

பச்சையான கொடிவேளிவேர்ப்பட்டை ஒரு பாக்களவெடுத்துக் கொண்டு அம்மியின்மேல் வைத்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டுக் கைப்படாமல் அரைத்து உட்கொள்ளவும். இம்மருந்தையே வெள்ளை இருக்கு மிடங்களிலும் மேலே பூசவும்.

இவ்வாறு 3 நாட்கள் செய்யவும். உப்பு, புளி, முதலானவைகளை நீக்கிப் பத்தியமாக இருக்கவும். உடம்பிலேற்படும் வெள்ளை (white patches) தீரும்

குறிப்பு:

கொடிவேலிவேர், அதிகக்காரமுள்ள மருந்தாகையால் அதன் பிரமாணத்தை நிதானித்தறிந்து உட்கொள்ளவும்.

126. பெருவியாதிக்கு மருந்து

நீரடிய தனில்முத்தை யொருதுலாங்
கொடுவந்து நீரவித்தும்
ஏரண்டந் தானூற்றும் வாறதுபோ
லுற்றியத னெண்ணெய் வாங்கிப்

பார்கலசந் தன்னிலுமிதை வைத்துந்
துட்டெடையுள் பருகவீந்து
சார்வடல மிருதாறு சிங்கின்றூள்
எண்ணையிட்டுந் தடவுந்தானே. 222

தடவிந்தப் படிக்குநாற் பதுதினமுட்
குடித்துத்தந்த னைமேற்பூசும்
உடல்வெந்நீர் குளித்திட்டுப் புளிப்புப்பு
கைதள்ளி யொருமையாக
நடவிது பத்தியமாய் வெந்நீருஞ்
சோறுமுண்டு நாட் கழித்தால்
அடல்பெரு வியாதிபோஞ் சரபேந்திர
னிம்முறையு மரைந்ததாமே. 223

(இ-ள்)

நீரடிமுத்து 5 வீசை கொண்டுவந்து ஒரு பெரும் பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் விட்டு அடுப்பின்மேலேற்றிக் கொதிக்கவைத்து, சிற்றாமணக்கெண்ணெய் ஊற்றுவதைப் போல, இதன் எண்ணெயை ஊற்றிக்கொள்ளவும். இத்தைலத்தை ஒரு பழகிய பானையில் பத்திரப் படுத்திக் கொண்டு வேளைக்கு ஒரு துட்டெடை வீதம் உட் கொள்ளவும்.

இந்த எண்ணெயை மிருதார்சிங்குடன் குழைத்து பெருவியாதியினாலேற்படும் விரணங்களுக்கு மேலே போடவும்.

இம்மாதிரி 40 நாட்களுக்கு மேலுக்கும் உள்ளுக்கும் உபயோகிக்கவும். தினமும் வெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

பத்தியம்:

புளி, உப்பு, புகையிலை முதலியவைகளை நீக்கிவிடவும் . வெந்நீர் சாதம் மாத்திரமே சாப்பிடவும்.

கொட்டைமுத்திலிருந்து எண்ணெய் வடிக்கும் முறை:

நன்றாக முற்றிய கொட்டைமுத்துக்களை எடுத்து ஒரு வாயகன்ற பாத்திரத்தில் போட்டு, கொட்டைமுத்துகள் நன்கு முழுகும்வரை தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி கொட்டைக்குள்ளிருக்கும் பருப்பு மிருதுவாகும்படி எரிக்கவும். பின்பு, பாத்திரத்தை கீழிறக்கி, மீதியுள்ள தண்ணீரை வடித்துவிட்டுக் கொட்டைகளை யுடைத்துப் பருப்புகளை எடுத்துக்கொண்டு அம்மியின் மேல் வைத்து அரைத்தோ அல்லது கல்லுரலிலிட்டு இடித்தோ மொத்தையாகச் செய்து கொள்ளவும்.

ஒரு தவலையில் இவ்விழுதை விட்டு, அதன் விளும்புவரை தண்ணீர் விட்டுக்கொண்டு, அடுப்பின் மேலேற்றிச் சிறு தீயாக எரித்தால் எண்ணெய் மேலே மிதக்கும். அதை ஒரு கரண்டியால் வழித்து வேறொரு பாத்திரத்தில் வடிக்கவும். இவ்வாறு அதிலுள்ள எண்ணெய் முழுதும் மேலே கிளம்பும்வரை எரித்துச் சேகரிக்கவும். பின்பு, இந்த எண்ணெயை அடுப்பின்மேல் வைத்து எரித்து எண்ணெயுடன் கலந்திருக்கும் தண்ணீரையும் நீக்கி எண்ணெயைப் பத்திரப்படுத்தவும்.

மேலே சொன்ன பிரகாரமே நீரடிமுத்திலிருந்து எண்ணெயைக் கிரகிக்க வேண்டும்.

127. வெண்குஷ்டத்திற்கு மருந்து

திருகுள்ள கள்ளிவெட்டிக் கண்டமதை
வெய்யிலிலே திகழுலர்த்தி
வருதூளா யிடிசேலை வடிக்கட்டி
யிருநாழி தானதின்பால்
யிருநாழி மேலெடுத்து ஒருபானை
தனில்மேதி யிட்டசாணம்
வரும்தயிர் போற்கரைத்து முதற்கள்ளிக்
கண்டமிட்டு வைத்துக் கேளே. 224

வாயதனிற் சேலைகட்டி நெல்லரிசி
நாழிமொச்சை வாங்குரித்தான்
றோயமதிலூ றவைத்து மாவிடித்து
வொருபங்குத் தூளைமுன்போல்
மேயவிட்டுப் பிசைசேலை வேட்டில்வைத்து
சுடுபிட்டாய் வெந்தபோது
நீயிடுமுற் பொடிதன்னை வெருகடிப்
பிரமாணம் நினைவாய்த்தானே. 225

தூளுமிட்டு வெள்ளையிலும் வேதுகாட்
டிதுதின்னத் தொட்டேழ்நாட்டான்
நீளுகைப் புப்புளியுப் புத்தள்ளி
பத்தியஞ்செய் நேர்வெண்குட்டந்
தாளுடலின் மேற்பூசக் காக்கணத்தை
யிடிசாற்றைத் தடவிக்கொண்டு
மீளுபுளி யம்புரணி சுடுநெருப்பி
லுங்காய்ச்ச வெள்ளைபோமே. 226

(இ-ள்)

திருகுக்கள்ளியைச் சிறுசிறு துண்டுகளாக்கி வெய்யிலில் உலர்த்தவும். பின்பு இதைக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியில் எருமைச் சாணத்தைப் போட்டுத் தண்ணீர் விட்டுக் கெட்டித் தயிர்போல் கரைத்து, மேலே சொன்ன திருகுக்கள்ளித்தூளை, அதிலிட்டுச் சட்டியின் வாய்க்கு ஒரு மெல்லிய துணியைக் கட்டவும். பின்பு,

அரிசி 1 படியும்
மொச்சைக்கொட்டை ½ படியும்

ஒரு பாத்திரத்திலிட்டு தண்ணீர் விட்டூறவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்துக் கொள்ளவும். இதற்குச் சரி அளவு

திருக்கள்ளிப் பாலை விட்டுப் பிசைந்துகொண்டு, இதை மேலே சொன்ன வேட்டின்மீது வைத்துச் சட்டியை அடுப்பின் மேலேற்றி, அதற்குச் சரியான பாத்திரத்தினால், ஆவி வெளியே போகாமல் மூடிப் புட்டவியலாகச் செய்துகொள்ளவும். இளஞ் சூடாயிருக்கையில், இப்பிட்டில் ஒரு வெருகடித்தூள் உட்கொள்ளவும். இவ்வாறு 7 தினம் உபயோகிக்கவும்.

இத்தூளையே ஒரு மூட்டையாகக்கட்டி வெள்ளைக் குஷ்டம் இருக்குமிடங்களில் வேது பிடிக்கவும்.

பத்தியம்:

புளி, உப்பு, கைப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

2. வெள்ளையுள்ள இடங்கள் மறைய வெள்ளைக் காக்கண இலையை இடித்துச் சாறு பிழிந்து அதை மேலே பூசி வரவும். பின்பு புளியம் புரணியினால் உண்டான தணலில் மேற்சொன்ன இடங்களைக் காய்ச்சவும்.

குறிப்பு:

பிட்டில் திருகுக்கள்ளிபால் சேர்ந்திருப்பதால் அது நன்றாக பேதியாகும். ஆகவே நேயாளியின் குடல் பலத்தை அறிந்து உபயோகிக்க வேண்டும்.

128. கருங்குஷ்டத்திற்கு மருந்து

தென்னெயின் காய்ச் சிப்பிதனில் நெல்லையிட்டு
மெருக்கம்பாற் சேரவாங்கித்
தன்னிலெண்ணெய் சரிகூட்டிக் குழம்பாக
மத்தித்துந் தடவத்தீருஞ்
சொன்னசுண்ண முடன்வேலிப் பருத்தியுட
னாறுதினந் தொட்டுத்தேய்க்க
வின்னகருங் குட்டமுதற் றீருமுறை
சரபேந்திரன் விதித்ததாமே. 227

(இ-ள்)

தேங்காய்க் கொட்டாங்கச்சியில் ஒரு சிறிது நெல் போட்டு, அதனுடன் எருக்கம்பாலைக் கறந்துகொள்ளவும். அதற்குச் சரி அளவு நல்லெண்ணெய் விட்டு நன்றாக மத்தித்துக் கொண்டு, கருங்குஷ்டமிருக்கு இடங்களில் பூசவும். அவை தீரும்.

2. வேலிப்பருத்திச் சாற்றுடன் சுண்ணாம்பைக் கூட்டிக் கருங்குஷ்டத்தில் தேய்க்கவும். 6 நாட்களுள் குணம் கிடைக்கம்.

குறிப்பு:

ஒரு உத்தரணிச் சாற்றிற்குச் சுண்டைக்காயளவு சுண்ணாம்பு கூட்டிக்கொள்ளவும்.

129. பெருவியாதிக்கு மருந்து

வடபாலின் பாலுமொரு பாக்களவு
சேலையிலே வார்த்துருட்டி
யிடவந்தி சந்தியிரு வேளையினு
முட்கொடுக்க விதில்முழுக்குப்
படமறுதி னங்குப்பை மேனியுள்ளி
வசம்பிட்டுப் பார்த்துவைத்து
உடலதிற்று வாலைசெய் திடுமாறு
தினங்கருவூ மத்தைகொண்டே. 228

வசம்புள்ளு யிடுவைத் திருநேரந்
துவாலைசெய்ய வகையுங்கேழு
பிசகாம லிருபதுநா ளளவுந்தா
னடத்திப்பெ ரும்புளிப்புங்
கசந்தவைக ளாகாது பத்தியமாய்
நடந்துவரக் கடும்வியாதி
நிசந்தீரு மிம்முறையைச் சரபோசி
மகராசனிகழ்ந்ததாமே. 229

(இ-ள்)

ஆலம்பாலை ஒரு சிறிய வெள்ளைத்துணியில் வைத்து, இறுகிய பின்பு இதைத் தினம் 2 வேளை காலையிலும், மாலையிலும் ஒரு சுண்டைக்காயளவு (இவ்விறுகிய பாலை) சாப்பிடவும். மறுநாள்,

குப்பைமேனி பூண்டு
வசம்பு

இம்மூன்றையும் இடித்துத் தண்ணீர் விட்டரைத்து உடம்பில் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும்.

அதற்கடுத்த நாள்,

ஊமத்தையிலை பூண்டு
வசம்பு

இம்மூன்றையுமிடித்துத் தண்ணீர் விட்டரைத்து தினம் 2 வேளை, மேலே தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யவும்.

இவ்வாறு 20 நாட்களுக்குச் செய்யவும்.

பத்தியம்:

புளிப்பான பதார்த்தங்களையும், கைப்புச் சுவை உள்ள பதார்த்தங்களையும் அறவே நீக்க வேண்டும்.

130. பதினெண் குஷ்டத்திற்கும் "பிரண்டைச் சூரணம்"

பிரண்டையின் கணுநீக்கி யரிந்திட்டு
வறுத்திடித்துப் பின்வடிக்கொள்
தெரிபுதுக் கலசத்துள் வைத்துக்கொ
ஞ்தையாதி தேனிற்கொள்ள

ஒருவொரு கடியளவந் திவெ நீர்
தனிலுண்ண வுத்தகுன்மஞ்
சொறிதேமல் விரைவாதங் குஷ்டம்போம்
பத்தியமாய்த் துய்க்கத்தானே. 230

(இ-ள்)

பிரண்டையைப் புதியதாகக் கொண்டுவந்து, அதன் கணுக்களை நீக்கி, மீதமுள்ள துண்டுகளை, ஒரு வாயகன்ற சட்டியிலிட்டு, அடுப்பின் மேலேற்றி நன்றாக வறுக்கவும். பின்பு இதனை இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஒரு புதுக் கலசத்தில் பத்திரப்படுத்தவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலை வேளைகளில் தேனில் கலந்து உட்கொள்ளவும். சாயங்காலத்தில் முற்கூறிய அளவெடுத்து வெந்நீருடன் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள்:

குன்மம், சொறி, தேமல், விரைவாதம், குஷ்டம் முதலியன.

131. கருங்குஷ்டம், காணாக்கடிக்குக் வல்லாதி எண்ணெய்

கொடிவேலி பிடிவேரும் பதினைந்து
சேங்கொட்டை கொள்நேர்வாளம்
இடுமிரு பதுநெல்லிக் கெந்தகமு
மோர்கழஞ்சு யிரதம்ரெண்டு
தொடுகழஞ்சு வாலுளுவை விதைமஞ்சள்
கருஞ்சீரகம் சொற்கார்போகப்
படுமரிசி மிளகிதொன்றுக் கழக்கிட்டு
நேரரைத்துப் பவழக்குன்றி. 231

இலையும்வன் னெற்றிலையுங் காடிதெளித்
திடிசாறு மதிலுநாழி
நிலையுமுன் சேங்கொட்டை நறுக்கிட்டுக்
காயவைத்து நீள்மருந்தை
உலகரைத் துடநாழி யெண்ணெய்விட்டுக்
கள்ளியின்பா லுழக்குமிட்டு
குலைமெழு காம்பதத்திற் சூதமிட்டுள்
மேற்பூசுக் குஷ்டம்போமே. 232

(இ-ள்)

கொடிவேலிவேர்ப்பட்டை	1 பிடி
சுத்திசெய்த சேராங்கொட்டை	15 (எண்ணிக்கையில்)
சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு	20 ,,
,, நெல்லிக்காய்	1¼ வராகனெடை
,, பாதரஸம்	2½ ,,
வாலுளுவை அரிசி	1¼ வராகனெடை
மஞ்சள்	,,
கருஞ்சீரகம்	,,
கார்போகரிசி	,,
மிளகு	,,

இச்சரக்குகளை எடுத்துக்கொள்ளவும்.

நத்தைச்சூரி இலையும், குன்றிமணி இலையும் வேண்டிய அளவு எடுத்துக் காடி தெளித்துக் கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்த சாறு 1 நாழி எடுத்து, இதனுடன் முன்சொன்ன சேராங்கொட்டைகளை எடுத்து ஊற வைத்து உலர்த்திக்கொண்டு, இடித்துக்கொள்ளவும்.

மேலே சொன்ன கடைச்சரக்குகளில் கூறப்பட்டுள்ள இரஸத்தையும், கெந்தகத்தையும் முதலில் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு, மற்ற மருந்துகளையும் இடித்துச் சூரணித்துக் கொள்ளவும். இதனுடன்,

நல்லெண்ணெய்	1 படியும்
கள்ளிப்பால்	1 உழக்கு

விட்டு, யாவற்றையும் ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி, எரித்து, மெழுகு பதத்தில் இறக்கவும்.

இவ்வெண்ணெயை மேலே பூசிவரக் குஷ்டங்கள் தீரும்.

132. குஷ்டத்திற்கு "வெள்ளீய வெட்டை"

வெள்ளை வங்கம் பலமொன்று மமுக்கிராக்
கிழங்கிட்டு விரைவாய்க்கிண்டி
மெள்ளவதை யெடுத்தொரு கலசத்தி
லடைத்திட்டு மேற்புடஞ்செய்
துள்ளம்மி யிற்பொடிசெய் திப்படியு
மேழுபுட முடனே போட்டுக்
கொள்ளுகுஷ்டஞ் சிறங்கிரும னீரடைப்பும்
பிரமேகங் குணமாய்ப்போமே. 233

(இ-ள்)

சுத்திசெய்த வெள்ளீயம் 1 பலத்தை ஒரு வாயகன்ற சட்டியிலிட்டு உருக்கி, அதனுடன் அமுக்கிராக் கிழங்கை இடித்து வஸ்திரகாயஞ் செய்து தூளைச் சிறுகச் சிறுகப் போட்டு வறுக்கவும். வெட்டையான பின்பு இதை யொரு அகலில் வைத்து, வேறொரு அகலால் மூடிச் சீலைமண் செய்து புடம் போடவும். இவ்வாறு 7 புடங்கள் போடச் சுத்தமான வெள்ளீய பற்பம் கிடைக்கும்.

இதில் ஒரு குன்றியளவெடுத்துத் (தேனிலோ, நெய்யிலோ) உட்கொள்ளச்

சிறங்கு, குஷ்டங்கள், இருமல், நீரடைப்பு, பிரமேகங்கள் முதலானவை தீரும்.

குறிப்பு:

வெள்ளீயத்தை யொரு கரண்டியில் இட்டு உருக்கி 7 தடவை இலுப்பெண்ணெயில் விடவும். சுத்தியாகும்.

133. குஷ்டத்திற்கு "வல்லாதி லேகியம்"

கரியசேங் கொட்டையொரு நூற்றிருபா
னிருநாழி கலந்தெள்ளுத்தான்
உரிமஞ்சட் பலமைந்து பழவெல்ல
மவ்வளவா யொக்கக்கூட்டி
நெரியவு மிடித்ததைப் பிசினைப்போ
லெடுவைத்தோர் நேரம்புன்னைக்
குரியகாய ளவுங்கொள்ளி ளங்கீரை
முருங்கையா முப்பாகாதே. 234

(இ-ள்)

சுத்திசெய்த சேராங்கொட்டை	120 எண்ணிக்கையில்
எள்ளு	2 படி (பட்டணம்படி ¼)
மஞ்சள்	4 பலம்
நாட்பட்டவெல்லம்	5 பலம்

இவைகளைக் கல்லுரலிலிட்டு, நன்றாக மசியும்படி இடிக்கவும். பிசினைப் போலாகும். இதில் புன்னைக்காயளவு எடுத்து காலையில் உட்கொள்ளவும்.

பத்தியம்:

இளங்கீரை, முருங்கைக்காய், முதலியவைகளை சேர்த்துக்கொள்ளவும். உப்பை நீக்கிவிடவும்.

குறிப்பு:

மிளகு, துவரை முதலியவைகளையும் நிரம்ப உபயோகித்துப் புளியையும் நீக்கிவிடவும் என 72நெம்பர் சுவடியில் காணப்படுகிறது.

134. குஷ்டம் முதலானவைகளுக்குத் திரிபலாதி கிருதம்

திரிபலை முக்கடுகு கொடிவேலிவே
ரதின்றோலை சிவதைவட்டத்
திருப்பிநில வாமணக்கு மரமஞ்சள்
கடுரோணி செம்பொற்கொன்றை
யுரிகாயு மஞ்சளதி விடையம்விழ
லரிசிமொழி வகையொன்றுக்கு
நிறைமூன்று நிட்கமரைப் பசுவினெய்
நாழிதனி னேர்கரைத்தே. 235

நேருக்குக் கள்ளியின்பா லிட்டுஉடல்
பலமறிந்து நிட்கமொன்
பாருமுண்டு விரேசனத் தைக்கருதி
யிருபானாட் பருகக்குஷ்டஞ்
சாருகுன்மம் விடபாகஞ் சூலைபித்தம்
பாண்டுமுதற் றனுசுவாதந்
தீருமெனச் சரபோசி மகராச
னிம்முறையசைச் செய்ததாமே. 236

(இ-ள்)

சுக்கு	திப்பிலி
மிளகு	கடுக்காய்த்தோல்
தான்றித்தோல்	நெல்லிவற்றல்

கொடிவேலிவேர்ப்பட்டை	நிலவாமணக்குவேர்
வட்டத்திருப்பி	சிவதைவேர்
மரமஞ்சள்	கடுகரோகிணி
செம்பொன்கொன்றை	மஞ்சள்
அதிவிடயம்	விழலரிசி

இவைகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணித்து, அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டரைத்துப்

பசுவின் நெய் 1 படியுடன்

குழப்பி, திருகுகள்ளிப்பால் ஒரு உழக்கும் விட்டு, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

தேகத்தின் பலத்தை அறிந்து, ஒரு வராகனெடை நெய்யைப் (பசுவின் பாலுடனே) உட்கொள்ளவும். நன்கு பேதியாகும். இவ்வாறு 20 நாளைக்குச் சாப்பிடக்

குஷ்டம், குன்மம், விஷகடிகள், சூலை, பித்தபாண்டு முதலான ரோகங்கள் தீரும்.

135. 18 வகை குஷ்டங்கள், 14 வகைக் கிராணிகள் முதலியவைகளுக்குக் "கெந்தக ரஸாயணம்"

கெந்தகமும் பலமாறு முக்கடுகுந்
திரிபலைகி ராம்புமேலம்
வந்தவில வங்கமுஞ்சேங் கொட்டையில
வங்கப்பத்திரி வாய்விடங்கம்
முந்துசணல் விதையொன்றுக் கொருபலவீ
தங்கூட்டி முழுதிடித்துத்
தந்திடுசூ ரணந்தன்னைக் கொள்ளுகுட்டம்
பதினெட்டுஞ் சாறாதென்னே. 237

* செம்மயிர்க்கொன்றையை எடுத்துக்கொள்ளவும்.

பதினாலு மாங்கிராணி யிருபத்தி
நான்கென்னும் பைத்தியங்கள்
அதிமந்தாக் கினிபஞ்ச குன்மம்போந்
தாதுவ்ருத்தி யாயுவ்ருத்தி
மதிதேக காந்திகளு மாபெலமு
முண்டாகும் பலவியாதி
சதிசெய்யா திம்முறையைச் சரபோசி
மகராசன் தந்ததாமே. 238

(இ-ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்	6 பலம்
சுத்திசெய்த சேராங்கொட்டை	1 பலம்
சுக்கு	திப்பிலி
மிளகு	கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்	தான்றித்தோல்
கிராம்பு	ஏலக்காய்
இலவங்கப்பட்டை	இலவங்கப்பத்திரி
வாயுவிடங்கம்	சணல்விதை

இவைகள் வகைக்கு 1 பலம்

மேற்கூறிய சரக்குகள் யாவற்றையுமொன்று கலந்து, கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தினம் 2 வேளை உட்கொள்ள

18 வகைக் குஷ்டங்கள்	14 வகைக் கிராணிகள்
24வகை பித்தரோகங்கள்	அக்கினிபலக்குறைவு
5 வகைக் குன்மங்கள்	

முதலியவை தீரும். தாது வ்ருத்தியும், ஆயுள் விருத்தியும் உண்டாவதுடன், தேகக்காந்தியும், பலமும் அதிகமாகும். பற்பல ரோகங்களும் அணுகாது.

138. குஷ்டத்திற்கு மருந்து

நிலவாகைச் சமூலமுங் கொண்டுவந்து
காடிகுத்தி நேரரைத்துக்
குலவுகூ முதுகிண்டி நாற்பதுநா
ளுண்டுவரக் குஷ்டமெல்லாம்
விலகிடு முதையாதி கொள்ளுவது
பத்தியமாய் மேவத்தானும்
பலநூலுங் கற்றறிந்த சரபோசி
மகராசன் பகர்ந்ததாமே. 239

(இ-ள்)

நிலவாகையைச் சமூலமாகக் கொண்டு வந்து நன்றாக ஆய்ந்து, கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். அதில் ½ பலமளவெடுத்துக் காடி விட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி ஒரு கரண்டியிலிட்டு அனலில் வைத்துக் கூழாகச் செய்துகொண்டு அதிகாலையில் சாப்பிடவும். இவ்வாறு 40 நாட்கள் உட்கொள்ள 18 வகைக் குஷ்டங்களுந் தீரும்.

137. குஷ்டத்திற்கு மற்றோர் மருந்து

குமிழவேர்ப் பொடிசெய்து மாவுமுக்கூ
றாகுமிள கொருகூறுந்தூள்
நிமிரவுங் கலதேனிற் குழைத்துண்ணு
மண்டலந்தா னினமாங்குட்டஞ்
சமிபதி னெட்டதும் போம் பத்தியமாய்
நடந்தகொள்ளத் தக்கதாகும்
தமிழாய்ந்து கோதகற்றுஞ் சரபோசி
மகராசன்தந்ததாமே. 240

(இ-ள்)

* குமிழம்வேர்ச்சூரணம்	3 கூறு (குத்தளவு)
மிளகுச் சூரணம்	1 ,,

இவைகளை ஒன்றுகலந்து தேனுடன் குழைத்துச் சாப்பிடவும். 40 நாட்களுள் 18 வகைக் குஷ்டங்களுந் தீரும். பத்தியமாக இருக்கவும்.

138. குஷ்டத்திற்கு மருந்து

அழிஞ்சில்வேர்ப பொடிநாழி செம்பருத்தி
வேரதின்றூள் ளம்விம்மட்டாம்
வழிவேல வேரதின்று ளாறுநாழி
மஞ்சள தின்மாவுமாம்
குழிபுற்றாஞ் சோறுமிவை கலந்தெல்லா
மொருகழற் கோடிநேராய்
பிழிதேனிற் குழைத்துண்ண மண்டலங்கள்
மூன்றுகுட்டம் பிரிந்துபோமே. 241

(இ-ள்)

அழிஞ்சில்வேர்ச் சூரணம்	1 படி
செம்பருத்திவேர்ச்சூரணம்	1 படி
கருவேலம்வேர்ச்சூரணம்	1 படி
மஞ்சட்பொடி	1 படி
புற்றாஞ்சோறு	1 படி

இவைகளை யொன்று கலந்து ஒரு புதுச்சட்டியில் பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு ஒரு கழற்சிக்காய்ப்

* பெருங்குமிழ், சிறுகுமிழ், நிலக்குமிழ ஆக இம்மூன்று வகைகளின் சூரணத்தையும் எடுத்துக்கொள்ளும்.

பிரமாணமெடுத்துத் தேனில் குழைத்து உண்ணவும். இவ்வாறுமூன்று மண்டலங்கள் (4மாதங்கள்) உட் கொள்ளவும்.

குஷ்டங்கள் தீரும்

குறிப்பு:

புற்றாஞ்சோறு, கரையான் புற்றுக்குள் வெண்மை நிறமானதும், புரைபுரையாகவும் உள்ள கரையான் முட்டையுடன் கூடிய மிருதுவான கட்டிகள் காணப்படும். அவற்றைக் கொண்டுவந்து மண் முதலியவைகளில்லாமல் சுத்தமாக எடுத்து உள்ளுக்குப் பிரயோகிக்கவும்.

139. கிரந்தி, சூலை, கிருச்ரங்குன்மம் முதலியவைகளுக்கு வங்க தாளேச்வர பற்பம்

பாதரதந் தாமிரத்தூ ளரிதாரங்
கெந்தகமும் பகரொன்றுக்கு
வீதைந்து வராகனெடை யிடுசுத்தி
செய்துகொண்டு மெருக்கம்பாலாற்
போதவிட்டு முச்சாம மரைத்துமொரு
தகழியிலே பொருந்தவைத்து
ஓதிதுமேன் மூடியுமண் சேலைசெய்து
காய்ந்தபிற கொருமிடாவே. 242

மிடாவிலே மணலிட்டு மதன்மேலே
தகழிவைத்து விடுமணற்றான்
விடாவின்வாய்ச் சட்டிகொண் டிடுசந்து
வாய்தனில் மேல்மணல்செய்து
மிடாவடுப் பேற்றிவைத்துக் காலாக்கினி
நாற்சாம மேலெரித்தே
மிடாவாறி யெடுகறுப்பா யிருக்குமந்
தப்பற்ப மிட்டிடாயே. 243

முக்கடுகுஞ் சாதிபத்திரி யேலமிவை
னெல்லினெடை மூன்றாதாகத்
தொக்கவிவைப் பொடிசெய்து பற்பத்திற்
கூட்டிவிட்டு சுவைத்தேன் விட்டுச்
சக்கியஞ்செய துட்கொள்ளப் புண்கிரந்தி
சூலை குன்மஞ் சலக்கிரிச்சம்
மிக்கிதெல்லாந் தீருமுப்பும் புளிதள்ளிப்
பத்தியஞ்செய் மிகவும் நன்றே. 244

(இ-ள்)

சுத்திசெய்த	பாதரஸம்	5	வராகனெடை
,,	தாமிரத்தூள்	5	,,
,,	தாளகம்	5	,,
,,	நெல்லிக்காய்		,,
	கெந்தகம்	5	,,

இவைகளைக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்றாக அரைக்கவும். 3 ஜாமங்கள் (9மணி நேரம்) அரைத்தபின்பு இதை வழித்து வில்லையாகத் தட்டி ஒரு அகலில் வைத்துக் காய்ந்தபின், வேறொரு அகலினால் பொருந்த மூடிச் சீலைமண் செய்யவும். பின்பு, ஒரு வாயகன்ற சாலில் பாதிவரை ஈரமில்லாத மணல் போட்டு, அதன் நடுவில் சீலைசெய்த அகலை வைத்து மேலேயும் மணல் நிரம்பப்போட்டு, சாலின் வாய்க்குத் தகுந்தபடி ஒரு ஓட்டினால் மூடிச் சீலை மண் செய்யவும்.

பின்பு, சாலை அடுப்பின் மேலேற்றிக் காடாக்கினியினால் 4 ஜாமம் (12 மணி நேரம்) எரிக்கவும். தானாகவே ஆறியபின், உள்ளிருக்கும் அகலை வெளியே எடுத்துச் சீலை மண்ணைப் பிரித்துப்பார்க்க கருமையான பொடி கிடைக்கும். இத்துடன்,

சுக்கு	திப்பிலி
மிளகு	சாதிப்பத்திரி
ஏலக்காய்	

இவைகளை வகைக்கு 2¼ சேர் எடுத்து இடித்து வஸ்திர காயஞ்செய்த சூரணத்தைக் கலந்துகொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேன்விட்டுக் குழப்பி உட்கொள்ளப்

புண்கள்	கிரந்திகள்
சூலை	குன்மம்
மூத்திரக்கிரிச்சம்	

முதலிய பற்பல ரோகங்கள் தீரும்.

பத்தியம்:

உப்பு, புளிப்பு முதலிய சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

140. கிரந்தி, சிறங்கு, கரப்பான் முதலியவைகளுக்கு எண்ணெய்

கோவைசிறு குறட்டையின் குழங்குள்ளி
கருஞ்சீரங் கூர்வசம்புங்
காவெளுத்தப் பிசின்பூதக் கரப்பான்றோ
லீருளியுங் காணிதெல்லாங்
கூவுகோழி யினவரை யிலைச்சாற்றா
லரைத்திட்டுக் கொட்டையெண்ணெய்
பாவனைசெய் திதைநக்கக் கிரந்திகரப்
பான்சிறங்கும் பறந்துபோமே. 245

(இ-ள்)

கோவைத்தண்டு
சிறுகுரட்டைக்கிழங்கு
வெள்ளைப்பூண்டு

கருஞ்சீரகம்	வெளிச்சைப்பிசின்
வசம்பு	பூதக்கரப்பான்பட்டை
ஈரவெங்காயம்	

இவைகளை வகைக்குச் சமனெடை எடுத்துக் கல்வத்திலிட்டுக் கோழியாவாரையிலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து

ஆமணக்கெண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இந்தஎண்ணெயில் ஒரு காலணா அளவு எடுத்துக் காலையில் சாப்பிடக் கிரந்தி, கரப்பான், சிறங்கு முதலானவைகள் தீரும்.

குறிப்பு:

சரக்குகள் வகைக்கு 1 வராகனெடையானால் ஆமணக்கெண்ணெய் 1 சேர் எடுத்துக்கொள்ளவும்.

141. கிரந்தி, கரப்பான், சிறங்குளுக்கு மருந்து

எருக்கவேர் பாலுழக்கு வெக்காவேர்
வசம்புள்ளி யெண்ணெய்கூட்டி
வருக்கமா யெரித்திட்டுப் புண்கிரந்தி
தனிற்பூசி மத்தியானம்
பெருக்கரப் பதுதேய்த்துக் குளித்திடவும்
விரணங்கள் பேசாதோடுந்
திருக்கமலத் தாள்மார்பன் சரபேந்திர
னிம்முறையுஞ் செய்ததாமே. 246

(இ-ள்)

எருக்கம்வேர்	வெக்காவேர்
வசம்பு	பூண்டு

இவைகளை வகைக்கு (1¼ வராகனெடை) எடுத்து அம்மியின்மேல் வைத்தரைத்து, நல்லெண்ணெய் 1 சேரும் எருக்கம்பால் ஒரு உழக்கும் விட்டு ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயைப் புண்கள், கிரந்திகள் முதலானவைகளின்மேல் பூசி, மத்தியான வேளையில் அரப்புத் தேய்த்துக் குளிக்கவும்.

குறிப்பு:

வெக்கவோர் என்பது என்னவென்று தெரியவில்லை. வெள்ளைக்காய் வேளையாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

142. கிரந்தி, கரப்பானி, சிறங்களுக்கு மருந்து

கொடிவேலி யிருபலவோர் நாற்பதிடு
வெள்ளுள்ளிக் கொழுத்த பூண்டாய்
கடுஞ்சுக்கு விரல்நீளம் வசம்பளவு
மம்மட்டே கரிலரைக்கா
சிடைகள்ளிப் பாலுமொரு கரண்டியா
யெள்ளினெண்ணெய் சேரக் கூட்டிக்
கொடுநக்கப் புண்கிரந்தி சிரங்குகளுங்
காய்ந்துபோங் குணமுண்டாமே. 247

(இ-ள்)

கொடிவேலிவோர்	2 பலம்
வெள்ளைப்பூண்டு	40 (எண்ணிக்கையில்)
சுக்கு	ஒர விரல் நீளம்
வசம்பு	,,
மிளகு	½ காசெடை
கள்ளிப்பால்	ஒரு கரண்டி
	(சுமார் ½ அவுன்ஸ்)

இவைகளை ஒன்றுசேர்த்து அம்மியின் மேல் வைத்து நசுக்கி, நல்லெண்ணெய் (4 சேருடன்) குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு காலணா அளவெடுத்துத் தினம் ஒரு வேளை நக்கிவரப்

புண்கள், கிரந்திகள், சிறங்குகள் தீரும்.

குறிப்பு:

இது பேதியாகும் குணமுள்ளதாகையால் குறைந்த அளவில் உபயோகிக்கவும்.

143. கிரந்திக்குச் சேர்வை

வெள்ளைபெருங் குங்கிலிய மாமணக்கி
னெண்ணெய்தனை விட்டரைத்து
நள்ளவொரு பழுப்பிலே பூசிவிட்டுப்
போடுமறு நாளலம்பி
விள்ளெட்டு நாள்பொறுத்துக் காலையுகி
னம்பழுப்பின் மேலும்பூசி
உள்ளகுழிப் புண்ணிலிட வேண்டினதிற்
குழிதூர்ந்து முலர்ந்து போமே. 248

(இ-ள்)

வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடி செய்து, கல்வத்திலிட்டு ஆமணக்கெண்ணெய் விட்டு நன்றாக அரைத்துக் குழம்பாக்கி புளிமாவிலைப் பழுப்பிலே பூசிக் கிரந்திகளின்மேல் வைத்துக் கட்டிவிடவும். மறுநாள் காலையிலே அம்மருந்தை எடுத்துவிட்டுப் புண்களைச் சுத்தமாகத் துடைத்து மறுபடியும் மருந்தைப் போடவும் இவ்வாறு 8 நாட்கள் கட்டிவரக் குழிப்புண்கள் தூர்ந்து உலர்ந்து விடும்.

குறிப்பு:

உகினம் - புளிமாவிலை

144. கிரந்திப புண்களுக்கு வேது

சாதிலிங்க மரிதாரம் கெந்தகந்
துரிசுமுள்ளி தனிலவித்தும்
ஓதுகண்டங் கத்திரியின் வித்துவைகள்
சமன்கூட்டி யுடன் றூட்செய்து
யீதையெழு பங்காக்கி யேழுதிரிச்
சேலைசெய்து மிருவேளைக்கும்
போதியொரு திரிகொண்டு யேழுதினம்
பசுநெய்யிற் புகட்டித்தானே. 249

விளக்கேற்றி மேலுமுக்கா டிட்டுக்கொள்
மூன்றுதினம்வேதுங்கொண்டு
விளக்கெண்ணெ யால்முழுகு முத்தினங்கள்
மேலொருநாள் விட்டுத்தானே
குளித்திடக் கீரையுப்புப் பசுவின்நெய்
பாலுடனே கூட்டிக்கொள்ளு
இளப்பமில்லைபத்தியஞ்செய் புண்கள்போ
மிம்முறையை யிசைந்து செய்யே. 250

(இ-ள்)

சாதிலிங்கம்	கெந்தகம்
தாளகம்	துரிசு
முள்ளிவிரை	கண்டங்கத்திரி விதை

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதனை 7 பங்குகளாக்கிச் சிறு சிறு வெள்ளைத் துணியில் பரப்பி, ஓரே சீராகத் திரித்துக்கொள்ளவும். இவ்வாறு செய்த 7 திரியையும் தினமொன்றுக்கு ஒரு திரி வீதமெடுத்துப் பசுவின் நெய்யில்

தோய்த்து ஒரு திரி வீதமெடுத்துப் பசுவின் நெய்யில் தோய்த்து ஓர் அகலிலிட்டு விளக்கேற்றித் தினம் காலைவேளையில் ½ திரியும் சாயங்கால வேளையில் ½ திரியும் உப யோகிக்கவும். அவ்வாறு விளக்கு எரிகையில் நோயாளியை இதனருகில் இருக்கச்செய்து அவனை ஒரு வஸ்திரத்தினால் நன்றாக மூடி வேது பிடிக்கவும். 7தினங்களுஞ் சென்றபின் விளக்கெண்ணெய் தேய்த்துக்கொண்டு 3தினங்கள் சேர்ந்தாப் போல ஸ்நானஞ் செய்யவும். பின்பு ஒன்றை விட்டொருநாள் ஸ்நானம் செய்யவும்.

இதற்குப் பத்தியம்:

அரைக்கீரை, பசுவின்பால், நெய், உப்பு முதலியவைகள் கூட்டவும்.

புண்களாறும் கைகண்டது.

குறிப்பு:

முள்ளிவிதை - நீர்முள்ளிவிதை

14. கிரந்தி, கன்னவாதத்திற்குப் பத்து

முருங்கைவே ரெருக்கின்வேர் தூதளைவேர்
கருவேம்பின் மூலந்தானும்
எருமுட்டைப் புற்றுமண்ணும் வெருகமுக்
கிராக்கார்த்தி யின்கிழங்கும்
மருள்மூலங் கடுகமிவை யரைத்துப்பூ
சுகன்ன வாதந்தீரும்
குருகிரந்தி புரைபுண்கள் போகுமெனச்
சரபேந்திரன் கொடுத்ததாமே. 251

(இ-ள்)

முருங்கைவேர் எருக்கம்வேர்
தூதுவளைவேர் கருவேப்பிலை வேர்

எருமுட்டைச்சாம்பல்	}	புற்றுமண்
அதாவது விபூதி	}	அமுக்கிராக்கிழங்கு
கலப்பைக்கிழங்கு		மருளக்கிழங்கு
கடுகு		வெருகங்கிழங்கு

இவைகளைச் சமனெடையெடுத்து, அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துப் பத்தாகப் போடவும்.

கிரந்திகள், சன்ன வாதங்கள் தீரும்.

148. கிரந்தி, கன்னக் கிரந்தி, கன்ன வாதங்களுக்கு எண்ணெய்

சிற்றவரை தீலியுய்ய கொண்டானுங்
கொடிவேலி சிவனார்வேம்பும்
உற்றகொன்றை பாற்கோவை பெருமருந்து
வனமல்லி யுயர்குறும்பை
பெற்றசெங்க தாரிவிளா விரைமல்லி
வெள்ளுருகும் பின்குருந்து
மன்றகுன்றிப் பொன்முகட்டை சாறணையுஞ்
சூத்தனதகரில் வகைம்புத்தாமே. 252

கான்குறிஞ்சிற் சிறுகுறிஞ்சில் கருஞ்சீர
மரிதகிகத் தூரிமஞ்சள்
தான்வெளுத்தைப் பிசின்பாம்புக் கண்டமுத்தி
னெண்ணெயுரி தனியெள்ளெண்ணெய்
யானெய்யவ் வனைவினிட்டுக் கூட்டியெரித்
ததைநக்க வாகிரந்தி
வானகன்னக் கிரந்திமுதல் வாதங்க
ளுருமென வகுத்ததாமே. 253

(இ-ள்)

சிற்றவரைவேர்	அவுரிவேர்
உய்யகொண்டான்வேர் (அதாவது கொய்யா வின்வேர்)	பாற்கோவைவேர்
கொடிவேலிவேர்ப்பட்டை	சிவனார்வேம்பு
கொன்றைவேர்	காட்டுமல்லிகை
குறும்பை	பெருமருந்து
செங்கதாரி	விளாம்பழத்தின் உள்ளிருக்கும் விதை
மல்லிகைவேர்	வெள்ளருகு
குருந்துவேர்	குன்றியின்வேர்
பொன்முசுட்டை	சாரணை
சூத்தைவேர்	மிளகு
வசம்பு	காட்டுக்குறிஞ்சான்
சிறுகுறிஞ்சான்	கருஞ்சீரகம்
கடுக்காய்த்தோல்	கஸ்தூரிமஞ்சள்
வெளிச்சைப்பிசின்	பாம்புக்கண்டம்

இவைகளை வகைக்கு (1 வராகனெடை) வீதமெடுத்து அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி, அதனுடன்

பசுவின் நெய்	½ படியும்
நல்லெண்ணெய்	½படியும்
ஆமணக்கெண்ணெய்	½ படியும்

விட்டுக்குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவத்திலிறக்கவும்.

இந்த எண்ணெயை வேளைக்கு ஒரு காலணா அளவு எடுத்து நக்கிவரவும்.

அரிகிரந்தி, கன்னக்கிரந்தி, வாதரோ முதலானவைகள் தீரும்.

குறிப்பு:

சூத்தைவேர் என்பது என்னவென்று புலப்படவில்லை

147. கிரந்திக்குக் களிம்பு

துரிசதனை மண்வெட்டி காயவைத்து
மதிலிட்டுத் தோய்புடஞ்செய்
பரிசம்பீ ரச்சாற்றி னாலரைத்துக்
கடுக்காய்த்தூட் பசுமஞ்சட்டூள்
ஒருகழற் கொடிகொழுந்து மரைசாந்து
மிவையெல்லா மொன்றாய்க்கூட்டி
மருவநல் லெண்ணெயிட்டுக் கரைத்திட்டு
மிடுகிரந்தி மாறுந்தானே. 254

(இ-ள்)

ஒரு புதிய மண்வெட்டியை அடுப்பின்மேல் வைத்துப் பழுக்கக் காய்ந்தபின் அதில் (½ பலம்) துரிசைப் போட்டுப் பொறித்து இறக்கிவிடவும். பின்பு அதனுடன் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைக்கவும். இவற்றுடன்,

கடுக்காய்த்தூள்	½ பலம்
மஞ்சள்பொடி	½ பலம்
கழற்சிக்கொடிக்கொழுந்து	,,

இவைகளை வைத்து நன்றாக அரைத்து நல்லெண்ணெய் விட்டுக் குழைத்துக் களிம்பாகச் செய்துகொள்ளவும். இதைக் கிரந்திகளின் மேல் தடவிவரக் குணமுண்டாகும்.

148. பெருங்கிரந்தி, கண்டமாலைக்கு வாந்தி

முற்றெருக்கம் பட்டைதனைத் தூணிநன்னீ
ரிற்றுவைத்து முரிநீர்நாழி
யுற்றபச்சைக் கொள்ளிடித்துப் பொடிதூளாய்
முன்சாற்றி லுறக்கரைத்து
யற்றவைக்கோல் வடிகொண்டு தெளிநீரைக்
குடித்தாலு மாகும்சத்தி
ஒற்றைநுனி மஞ்சடனை யரைத்துநீ
ருட்குடித்தா லோங்குஞ்சத்தி 255

உடல்கொண்டு வயிரிழிந்தால் முசுட்டைப்
பூவினிலே யுண்மோருத்தி
யிடுதுவைத் தரமுட்டக் குடித்திட்டாற்
சத்திசெய்யு மிசைபேய்ப்பீர்க்கின்
அடவுளகாய் முப்பதனை வைக்கோலிற்
றீயிட்டு மதனிற்போட்டுச்
சுடவெதும்பும் போதெடுத்து மிருநாழி
சாறுபிழிந் தொருசட்டிக்குள் 256

கூவிளைவே ரழிஞ்சில்தேர் பொடிசீவி
யதிலிட்டுக் கொள்பின்றீயிற்
பாவனைசெய் துட்கடுகு திரளவெடுத்
தச்சட்டி பருதிமுன்னர்
மேல்வைத்துப் பொடிசெய்து வெருகடிதூ
ளில்வெந்நீர் மீட்டிக்கொள்ள
கூவுசத்தி யாகுமிதிற் கிரந்திகண்ட
மாலைகளுங் குணமதாமே. 257

(இ-ள்)

முத்தெருக்கப் பட்டையைக் கொண்டுவந்து கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து 4 மரக்கால் ஜலம் விட்டு

அடுப்பின் மேலேற்றி ½ படியாக வற்றக் காய்ச்சவும். பின்பு இதனுடன் பச்சைக் கொள்ளின் சூரணம் கொஞ்சம் போட்டு நன்றாகக் குழப்பி, வைக்கோல் பிரியை உபயோகித்து வடிக்கட்டித் தெளிந்த கஷாயத்தைப் பருகவும். வாந்தி உண்டாகும்.

நுனிமஞ்சளை நன்றாக அம்மிமேல் வைத்து அரைத்துத் தண்ணீரில் குழப்பிச் சாப்பிட வாந்தியாகும்.

அதிகமான கழிச்சல் உண்டானால், முசுட்டைப் பூவை மோருடன் அரைத்துக் குழப்பி வயிறு நிரம்பக் குடிக்கவும். சத்தி ஏற்படும்.

பேய்ப்பீர்க்கங்காய் முப்பது எடுத்து, வைக்கோலுக்குள் வைத்து கொளுத்தி நன்றாக வெதுப்பியபின், அவற்றை இடித்துப்பிழிந்த சாறு சுமார் 2 படி எடுத்துக் கொண்டு ஒரு சட்டியில் ஊற்றி, அடுப்பின் மேலேற்றிக் கடுகு திரளும்வரை காய்ச்சிக்கொள்ளவும். இதனுடன், வில்வவேர்ச்சூரணமும், அழிஞ்சில் வேர்ச் சூரணமும் போட்டுக் கிண்டிப் பொடியானபின் சட்டியை கீழிறக்கி வெயிலில் வைக்கவும்.

இத்தூளில் மூவிரல் கொள்ளும் அளவெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும். வாந்தி ஏற்படும்.

கிரந்திகள், கண்டமாலை முதலான ரோகங்கள் தீரும்.

149. கிரந்திக்குச் சேர்வை

முளிமஞ்சட் பொடிசெய்து தெள்ளிவைத்துப்
பாதரத முரிக்கக்கேளு
வெளியவெற் றிலைச்சாற்றில் மேனியிலைச்
சாற்றிலொன்று விட்டுச்சுத்தி

குளி(ழி)க்கல்லி லாட்டியரைக் கழஞ்சுங்கொள்
கற்சுண்ணங் கூடப்போட்டு
ஒளியெண்ணெ யாலரைத்துக் கிரந்திக்கி
நுணாவிலையி லொதியிற்போடே. 258

(இ-ள்)

முளிமஞ்சளைக் கல்லுரலில் இட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, ஒரு கல்வத்திலிட்டு சுத்திசெய்த பாதரஸம் அரையேயரைக்கால் வராகனெடை விட்டு, வெற்றிலைச்சாறும், குப்பைமேனிச் சாறும் விட்டு, வெற்றிலைச்சாறும், குப்பைமேனிச்சாறும் விட்டு நன்றாக அரைத்து முறித்துக்கொள்ளவும். பின்பு, கற்சுண்ணாம்பு சரியளவெடுத்துக்கூட்டி, ஆமணக் கெண்ணெய் விட்டு நன்றாக அரைத்து மெழுகு பதத்தி லெடுத்து, ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும். இதை நுணாவிலையிலோ, அல்லது ஒதியம் இலையிலோ தடவிக் கிரந்திப் புண்களுக்குப் போட அவைகள் ஆறும்.

150. கிரந்திக்கு மருந்து

கர்த்தபத்தின் காய்ந்தலெத்தி கொண்டுவந்தோர்
புதுச்சட்டிக் கடைப்படிநீர்
குத்தெருவிட் டிருநிட்கங் கருஞ்சீர
மரைச்சிரங்கை கொண்டீருள்ளி
யித்தையுடை தன்னில்முடிந் தச்சட்டி
யுள்ளிட்டு மிரவிலூற
வைத்துதைய காலமெடுத் ததையந்நீரா
லரைத்துவழித் தெடுத்துக்கொண்டே. 259

கொண்டதனை யரைப்படி முந்நீரி
னுட்கலந்து கொள்ளத்தானுங்
கண்டந்தி வேளையிலு மிப்படியே
யேழிதினங் காலையாகும்

உண்ட புளிப் புப்புத்தள் ளிமறுபத்
தியஞ்செய்யோ ரேழ்நாட்டான்
அண்டாது கிரந்தியெலாந் தீருமெனச்
சரபேந்திர னரைந்ததாமே. 260

(இ-ள்)

கழுதை லத்தியை காய்ந்ததாக ஒரு குத்தளவு கொண்டுவந்து ஒரு புதுச்சட்டியிலிட்டு, ஒரு படி சுத்த ஜலம் விட்டு, அதனுடன்

கருஞ்சீரகம்	2 வராகனெடையும்
ஈரவெங்காயம்	அரைச்சிரங்கையும்

எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டி அத்தண்ணீருக்குள் ஒரு இரவு முழுவதும் ஊறப்போடவும். மறுநாள் காலை அம்முடிச்சை அவிழ்த்து, அத்தண்ணீரை விட்டு நன்றாக அரைத்துக்கொண்டு, மீதமுள்ள தண்ணீரிலே கலக்கிக் காலையில் அரைப்படி தண்ணீரும் மாலையில் அரைப்படி தண்ணீரும் குடிக்கவும். இவ்வாறு 7 நாளைக்குச் சாப்பிடவும்.

பத்தியம்:

உப்பு, புளிப்புச் சுவைகளுள்ள பதார்த்தங்களை நீக்கி விடவும். மறுபத்தியம் 7 நாட்கள் பிடிக்கவும். கிரந்திகள் தீரும்.

151. கிரந்திக்குச் சூரணம்

சார்பரங்கிப் பட்டையிரு பலஞ்சாதிக்
காய்கிராம்புஞ் சாதிப்பத்திரி
யோர்வகைக்கு நிட்கமொன்றுஞ் சிற்றரத்தை
முக்கடுகு முடனதிங்கம்

பார்கடுகு ரோகிணியுஞ் செங்கதாரி
யின்புரணி பகர்வகைக்கு
நேர்பலங்கால் பதினொன்றுஞ் சேர்த்திடித்து
வடிகொண்டு நிகழ்த்தக்கேளே. 261

சூரணத்தை யொருவேளைக் கொருவெரு
கடியளவு தொட்டுப்பத்து
வாரங்கொள் கடுகடுப் பெடுத்தாலு
முத்தினெண்ணெய வார்த்தென்னாளுங்
கோர்முழுக்குச் செய்திடவும் கிரந்திப்புண்
போம்பசுமோ ரொன்றுங்கூட்டி
யாறவெந்நீர்மெய்குளிக்க லாகுமென்றுஞ்
சரபேந்திர னரைந்ததாமே. 262

(இ-ள்)

சுத்திசெய்த பரங்கிப்பட்டை		2 பலம்
சாதிக்காய்		1 வராகனெடை
கிராம்பு		,,
சாதிப்பத்திரி		,,
சித்தரத்தை	சுக்கு	
திப்பிலி	மிளகு	
அதிமதுரம்	கடுகரோகிணி	
செங்கதாரிப்பட்டை		

இவைகள் வகைக்கு ¼ பலம்

இவைகளை நன்றாக காயவைத்துக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். தினம் ஒரு வேளை மூவில் கொள்ளுமளவெடுத்து (வெந்நீருடன்) உட்கொள்ளவும்.

இவ்வாறு பத்து நாட்கள் சாப்பிடவும். வயிற்றுக் கடுப்பு, ஏற்பட்டால் 8 நாட்களுக்கொரு தடவை ஆமணக் கெண்ணெய் தேய்த்துக்கொண்டு தலை முழுகவும்.

கிரந்தி, புண்கள் முதலியவை தீரும்.

பத்தியம்:

பசுவின் மோரூத்திச் சாதம் சாப்பிடவும். ஆறவைத்த வெந்நீரைக் குளிப்பதற்கு உபயோகிக்கவும்.

152. கிரந்திக்கெல்லாம்
"கருங்கோழிச் சூரணம்"

கருங்கோழி கொண்டுவந்து தலைகுட
லீரல்மயிர்க் காலும்போக்கிக்
குருபரங்கிப் பட்டையெழு பதுநிட்கம்
பாதரதங் கூட்டுமூன்றும்
தருசூத செந்தூர மிருநிட்க
மொன்றாகுஞ் சாதிக்காய்தான்
மருவிடதின் வயிற்றுள்வை நூற்கயிற்றி
னாற்றைத்து மண்டாழிக்குள் 263

தாழியிலு நாலுமரக் கானீரை
யூதாதவ்வாய் தானைவேட்டிற்
கோழியைவை பெரும்பானை மூடியும்மண்
பூசுவிற கொருசாதியாய்
ஊழியெரித் துங்குறுணி நீர்வத்திப்
பின்னிறக்கி யுப்பமாற்றிக்
கோழிதனை யுரலிட்டு நொறுக்கிடிதூள்
வடிசெய்துகொண்டுதானே 264

கொள்கலசந் தனில்வைத்துக் காலையொரு
பிடியந்திக் கொருபிடிதான்
விள்ளஞ்சு தினமுண்ணப் பத்தியமா
யிருசாதம் வெந்நீருந்தான்

கொள்ளாறா நாள்முத்தி னெண்ணெய்தலை
யிட்டுசிலைக் கொழுந்தரப்பால்
உள்ளவெந்நீர் முழுகஞ்சு தினமறு
பத்தியத்தி லுப்புக்கூட்டே 265

(இ-ள்)

ஒரு வியாதியில்லாத கருங்கோழியைக் கொண்டுவந்து, அதன் தலை, மயிர், கால்கள் முதலியவைகளை நீக்கி, அதன் வயிற்றைக்கீறிக் குடலையும், ஈரலையும் நீக்கிவிடவும்.

சுத்திசெய்த பரங்கிப்பட்டை 70 வராகனெடை (7 பலம்) எடுத்துக் காயவைத்துக் கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

ஒரு சுத்தமான கல்வத்தில்

சுத்திசெய்த பாதரஸம்	3	வராகனெடை
,, இரஸச்செந்தூரம்	2	,,
சாதிக்காய்	1	,,

இம்மூன்றையும் இட்டு, நன்றாக அரைத்து, முன்சொன்ன பரங்கிப்பட்டைச் சூரணத்துட் கலந்துகொண்டு, கருங்கோழியின் வயிற்றிற்குள் திணித்து நூல் கயிறு கொண்டு தைத்துவிடவும்.

ஒரு வாயகன்ற சட்டியில் 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அதன் வாய்க்கு மெல்லிய வெள்ளைத் துணியினால் வேடுகட்டவும். அதன்மேல் கருங்கோழியை வைத்து, அச்சட்டிக்குத் தக்கபடி வாய்பொருந்தும் மற்றொரு சட்டியினால் மூடி, அதன் சந்துவாய்க்குச் சீலைமண் செய்து, அடுப்பின்மேலேற்றிக் கொதிக்கவைக்கவும்.

ஓரே ஜாதியான விறகினால் எரிக்கவும். சாலில் உள்ள ஜலம் 1 மரக்காலாக வற்றும்வரை எரித்து, சட்டியைக் கீழே

இறக்கி சீலைமண்ணைப் பிரித்து, கோழியை எடுது, நன்றாக ஆறவைத்து, உரலிலிட்டு நொறுங்க இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு புதுக் கலசத்தில் பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு பிடியளவெடுத்துத் தினம் இருவேளை காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். இவ்வாறு 5 நாளைக்கு உபயோகிக்கவும்.

பத்தியம்:

தினந்தோறும் வெந்நீர்சாதம் மாத்திரமே சாப்பிடவும். 6வது நாளன்று விளக்கெண்ணெய் தேய்த்துக்கொண்டு உசிலம் பொடியிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும்.

மறுபத்தியம் 5 நாளும் பிடிக்கவும். உப்பை வறுத்து உபயோகிக்கவும். கிரந்திகள் தீரும்.

153. கிரந்திக்குக் களிம்பு

வெத்திலைநீ ரோர்கலத்தில் விட்டிரண்டு
பணவெடையாய் வெண்சூதந்தான்
உத்திரண்டுங் குழப்பிட்டுத் துருசியொரு
பாக்களவா யுடன்கலந்து
மத்திபசு வெண்ணெயுநாற் பாக்களவு
கூட்டுசெம்பால் மத்தனஞ்செய்
தொத்தவுட னோர்சிமிழி லடைபுண்ணி
லிடக்கிரந்தி யுலர்ந்துபோமே. 266

(இ-ள்)

ஒருகல்வத்தில் வெற்றிலைச்சாறு விட்டு அதில் சுத்தி செய்த பாதரஸம் 2 பணவெடை கூட்டி, நன்றாக

அரைத்துக்கொள்ளவும். மசிந்தபின், சுத்திசெய்த துருசு 1, பாக்களவும், பசுவின் வெண்ணெய் 4 பாக்களவும் கூட்டிச் செம்பு பாத்திரத்தினால் மத்தித்து வைத்துக்கொள்ளவும். இக்களிம்பை ஒரு புதுத்துணியில் தடவிப் புண்களிலும், கிரந்திகளின்மேலும் போடவும். அவைகள் ஆறும்.

குறிப்பு:

72 நெ. சுவடியில் "இக்களிம்பைப் புண்களிலிடத் தண்ணீர் வடியும். மறுபடியும் போட அவை ஆறும்" என்று காணப்படுகிறது.

154. கிரந்திக்கு எண்ணெய்

மாவிலுப்பை யொதிநெல்லி வேலழிஞ்சி
விவையாறு வகையின் பட்டைப்
பாவியரை வசம்புள்ளி வேம்பாடம்
அதிமதுரம் பகர்ந்த நாலுஞ்
சீவியரைத் திதையோர்சே ரெண்ணெயிலுங்
கூட்டிவடித் திடக்கிரந்தி
யாவதெலாந் தீருமெனச் சரபோசி
மகராசன் அரைந்ததாமே. 267

(இ-ள்)

மாம்பட்டை ஒதியம்பட்டை
இலுப்பைப்பட்டை நெல்லிப்பட்டை
கருவேலம்பட்டை அழிஞ்சில்பட்டை

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்து அம்மியின்மேல் வைத்து அரைத்து, இதனுடன்

பூண்டு வசம்பு
வேம்பாடம்பட்டை அதிமதுரம்

இவைகளையும் சேர்த்து நன்றாக அரைத்து நல்லெண்ணெய் ஒரு சேருடனே கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்த எண்ணெயைக் கிரந்திகளுக்கு இடவும்.

குறிப்பு:

சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துக் கொள்ளவும்.

155. கிரந்திக்குச் சேர்வை

சுடுகாட்டிற் கனித்தவெள் ளெலும்புங்கா
சுக்கட்டித் தூளாய்ச்செய்து
எடுகறைப் பற்றினமண் வெட்டிதனி
லிட்டுமுத்தி னெண்ணெய்விட்டுத்
தொடுசங்கு கொண்டிழைத்து வழித்துவை
புண்ணளவிற் றுணிகிழித்து
நடுவிட்டுப் போட்டிடவுங் காய்ந்துபோம்
விரணங்கள் நலமுமாமே. 268

(இ-ள்)

சுடுகாட்டில் தகனம் பண்ணின (வெந்த) எலும்பும், காசுக்கட்டியும் சமனெடை எடுத்து, ஒரு துருபிடித்த மண்வெட்டியில் வைத்து, ஆமணக்கெண்ணெய் விட்டு ஒரு சங்கினால் இழைக்கவும். பின்பு இதை வழித்து வைத்துக்கொண்டு, புண்ணின் அளவிற்குத் தக்கபடி ஒரு வெள்ளத்துணியில் தடவிப் புண்களில் போடவும்.

அவை காய்ந்து போம். கைகண்டது.

156. கிரந்தி, புண், புரைகளுக்கு "வீரமெழுகு"

வீரமொரு நிட்சுமதை வாழைமூலந்
துளையாக விட்டுக் கட்டி
சேரவைத்து மொருசாம மெரித்திட்டோர்
காசினெடை சீராவெண்ணெ
யாறவொரு கல்வத்தி லரைப்பதிலு
முக்கடுகு மதுவகைக்கு
நேரவிருநிட்கமிட்டு மிளவறுப்பாய்த்
தூளிடித்து நிகழ் சேலைக்கே. 269

வடிக்கட்டி முன்மருந்திற் கலந்திட்டு
மரைப்பதிகை வழித்துவைக்கும்
படிசிமிழி லிடுகிரந்தி கொண்டவர்க்குக்
கொடுப்பதொரு பயறுமட்டாய்க்
கடிபுரைபுண் விரணமெல் லாந்தீரு
மிந்தமுறை கைகண்டுந்தான்
குடிகாவற் பூண்டசெங்கோற் சரபோசி
மகராசன் கொடுத்ததாமே. 27

(இ-ள்)

சுத்திசெய்த வீரம் 1 வராகனெடை ஒரே கட்டியாக எடுத்து, வாழைக்கிழங்கைத் துளைத்து அதனுள்ளே வைத்து (சாணிக்கவசம் செய்து காய்ந்தபின்) அடுப்பிலிட்டு எரிக்கவும். பின்பு அவ்வீரத்தை எடுத்துக் கல்வத்தில் வைத்துப் பசுவின் வெண்ணெய் ஒரு காசெடை கூட்டி நன்றாக அரைக்கவும். பின்பு இதனுடன்

சுக்கு	2 விராகனெடையும்
திப்பிலி	,,
மிளகு	,,

எடுத்துப் பொன் வறுவலாக வறுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, மேலே சொல்லிய வீரவெண்ணெயுடன் கூட்டியொன்று சேரும்படி அரைத்து, ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும். இதில் ஒரு பயறளவு எடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

புண்கள், புரைகள், விரணங்கள் முதலியவை தீரும். கைகண்டது.

157. உடையா சிலந்தி, உடைந்த சிலந்தி முதலியவைகளுக்கு மருந்து

ஆமணக்கி னுட்பருப்பை மாதர்முலை
யமுதத்தா லரைத்துக்கொண்டு
ஊமத்தை பெரும்பசளை துத்தியிலை
யிவையொன்றி லூட்டிவாட்டித்
தாமித்தை யுடையதா சிலந்திகளிற்
போடுடைந்தாற் றண்டுளாயுங்
காமமிகு வெற்றிலைகற் பூரவல்லி
மென்றுமியக் காய்ந்துபோமே. 271

(இ-ள்)

ஆமணக்கெண்ணெயினுள்ளே யிருக்கும் பருப்பை வேண்டிய அளவு எடுத்துக் கல்வத்திலிட்டுத் தாய்ப்பால் விட்டரைத்து மெழுகாக்கி, ஊமத்தையிலோ அல்லது பெரும் பசளையிலையிலோ அல்லது துத்தியிலையிலோ ஒரே சீராகத் தடவி அனலில் வாட்டி உடையாத சிலந்திகளின் மீது போடவும். அவை உடைந்துவிடும்.

வாய்ச்சிலந்திக்கு:

வெற்றிலை, துளசி இலை, கற்பூரவல்லி இலை முதலானவைகளை மென்று உமிழவும். அவை தீரும்.

15. சிலந்தியுடன் கூடிய வியாதிக்கு எண்ணெய்

திலவெண்ணெ யொருநாழி கருஞ்சீர
முடனாடு தீண்டாப்பாளை
மலகருநொச்சிசிறு சின்னியுஞ்சங்
கங்குப்பி வகையொன்றுக்கு
இலையொரு பிடிகூட்டித் துவைத்துச்சா
றும்பிழிந்து மிதில்வேம்பாடல்
கலபூதக் கரப்பான்செங் கதாரி
யிவைமூன்றுங் காணுந்தோலே. 272

பொடிசெய்தும் போட்டெரித்துப் பதத்தில்வடித்
துச்சிலந்திப் புண்ணுக்கெல்லாங்
கொடிவேலி வேரரைத்தோ ரெலுமிச்சங்
காயளவு கோவின்பாலும்
படிநாழி யிற்கரைத்துக் காய்ச்சியுறைக்
குத்துகடை பட்டவெண்ணெய்
துடிகோவை யிலைப்பூசிப் புண்ணிலிட
விரணங்கள் சுகமாய்ப்போமே. 273

(இ-ள்)

சுத்தமான எள்ளெண்ணெய்	1 படியுடன்
கருஞ்சீரகம்	1 பிடி
ஆடுதீண்டாப்பாளையிலை	1 பிடி

கருநொச்சியிலை	1 பிடி
சிறுசின்னி	1 பிடி
சங்கங்குப்பி	1 பிடி

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்த சாற்றைக் கலந்து, இதனுடன்

வேம்பாடம்பட்டை
பூதகரப்பான்பட்டை
செங்கதாரிப்பட்டை

இவைகளை வகைக்கு (1 வராகனெடை) வீதமெடுத்துப் பொடிசெய்து போட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

சிலந்திப் புண்களுக்குப் போடக் குணமாகும்.

பச்சையான கொடிவேலிவேரை ஒரு எலுமிச்சை யளவெடுத்துக் கைபடாமலரைத்து 1 படி பசுவின் பாலில் குழப்பி, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சிப் பிறை குத்தவும். மறுநாளிதைக் கடைந்து வெண்ணெயை யெடுத்துக் கோவையிலையில் தடவிப் புண்களிலிட அவைகள் ஆறும்.

159. செவ்வாப்புக்கு மருந்து

பாலருக்குச் செவ்வாப்புக் கட்டிகண்டாற்
றுத்தியிலை பருத்திதானுஞ்
சீலெண்ணெ யிற்மிசைந் திடுபருதி
முன்னர்வைத்துச் சிறங்கிற்பூசு
ஆலமுண்டோன் வேமிபிளில்வே ரிடித்துமுத்
தெண்ணெயிலு மதைப்பிசைந்து
காலவெயில் வைத்துள்ளுங்கொள் மேலுமிடச்
செவ்வாப்புக் காய்ந்துபோமே. 274

(இ-ள்)

சிறு குழந்தைகளுக்குச் செவ்வாப்புக் கட்டிகள் உண்டானாலதற்கு மருந்து

பருத்தி யிலையும்
துத்தி யிலையும்

வகைக்கு *(1 பிடி)* எடுத்து அரைத்து வேப்பெண்ணெயுடனே *(1 சேர்)* குழப்பி வைத்துச் சூரிய புடமிடவும். இந்த எண்ணெயைச் சிறங்குகளில் பூசவும்.

சிவனார்வேம்பு வேரைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஆமணக்கெண்ணெயுடன் குழப்பி வெய்யிலில் வைக்கவும். இதனை உள்ளுக்குக் *(காசெடை)* கொடுத்து மேலுக்கும் போடவும். குணமுண்டாகும்.

160. செவ்வாப்புக்கு

மணிக்குட்டித் தக்காளி யுஞ்சாறு
நாயுருவி வளர்ந்த வேரும்
அணித்தரைத் ததைப்பூசத் தீருமிதைக்
கொதிப்பித்துள் ளருந்தக்கட்டி
பிணிதீருங் கிளுமூக்குக் கிழங்குநன்
னாரியின்வேர் பிரனரைத்துப்
பணித்தெண்ணெ யிற்குழப்பிக் காலையிலும்
விழுங்கப்போம் படுசெவ்வாப்பே. *275*

(இ-ள்)

மணிக்குட்டித் தக்காளிச் சாற்றினால் நாயுருவி வேரை, அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்துச் செவ்வாப்புக்

கட்டிகளின்மேல் பூசவும். இதையே வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். செவ்வாப்புக் கட்டிகள் தீரும்.

நன்னாரிவேர்
கிளிமூக்குக் கிழங்கு

இவ்விரண்டையும் சமனெடை எடுத்து அம்மியின் மேல் வைத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடன் குழப்பித் தினம் காலைவேளைகளில் சாப்பிடவும். செவ்வாப்புக் கட்டிகள் தீரும்.

குறிப்பு:

கிளிமூக்கன் - கற்றாழை.

161. படுவனுக்கு மருந்து

படுவனுக் கானபுளி நரளையி
னிற்கிழங்கைப் பரித்தெடுத்தும்
அடுபுளிர சத்தாலரை கரண்டியுட்
கொதிப்பித்து மதனிற்கட்டப்
படுமொரு வருடத்தி னாறுமதி
சிலகட்டும் படுவன் றீருந்
தொடும்படி பத்துமுறை கட்டிடவு
மாறிப்புண் சுகமாய்ப் போமே. 276

(இ-ள்)

புதிய புளி
புளிநரளைக்கிழங்குச் சாறு

இவ்விரண்டையும் ஒரு இரும்புக் கரண்டியிலிட்டு அடுப்பில் வைத்துக் கொதிக்க வைக்கவும். இறுகிய பின்பு இதைப் படுவனில் மேல்வைத்துக் கட்டவும்.

ஒருவருடஞ் சென்றதோ, ஆறுமாதமான படுவன்களோ வெகு சீக்கிரத்தில் ஆறும். இவ்வாறு பத்து முறைகள் கட்டவும்.

162. குடற்படுவனுக்கு மருந்து

பன்னிரண்டு கிராம்புதிப் பிலியளவப்
படியாம்ப ருத்திக்கொட்டை
யினிற்பருப்பா வாரம்பூ வகைக்கொரு
நிட்கமிட்டு மிதையுழக்குத்
தனிநீரை வார்மருந்து தீயாம
லவியரைத்துத் தான்குடிக்க
நனிகுடற் படுவன்போமிம்முறைச்
சரபேந்திர னவின்றதாமே. 277

(இ-ன்)

கிராம்பு	12	வராகனெடை
திப்பிலி	12	வராகனெடை
பருத்திக்கொட்டைப்பருப்பு	1	,,
ஆவாரம்பூ	1	,,

இவைகளை அம்மியின்மேல் வைத்து, ஒரு உழக்குத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து ஒரு சட்டியிலிட்டு, அடுப்பின் மேலேற்றி மருந்து தீய்ந்துவிடாமல் கிண்டி வரவும். இதை இறுகிய பதத்திலிறக்கி உட்கொள்ளவும்.

குடல்படுவன் தீரும். கைகண்டது.

163. படுவன், பருவிற்கு மருந்த

கொடிவேலி குளப்பாலை நீலியிது
மூன்றதிண்வேர் கொடுசமந்தான்
இடுபாக மாயரைத்துக் கொதிபாலிற்
கலந்துள்ளே யீயமுன்வேர

தேனுகமன் கூட்டியரைத் திருதாழி
கொச்சையின்பாற் றுனைகரைத்து
விதிமுறியசனஞ்செய்துப்படுவன்
முத்தினத்தில் விழலாய்ப்போமே. 278

(இ-ள்)

கொடிவேலி வேர்ப்பட்டை
குவளம்பாலை வேர்
அவுரி வேர்

இம்மூன்றையும் சமனெடை எடுத்து, அம்மியின்மேல் வைத்தரைத்துச் சூடான பசுவின் பாலுடனே குழப்பியுட் கொள்ளவும்.

முன்சொன்ன வேர்களை அரைத்த விழுதை ஒரு படிப்பாலே 2 படியுடன் கலந்து, அதில் அரிசி போட்டுச் சாதம் சமைத்துச் சாப்பிடவும். மூன்று தினங்களுள் படுவன் நிற்கும்.

164. பரு, படுவன்களுக்கு எள்ளெண்ணெய்

இலுப்பையிலைப் பட்டைகுன்றி யிலைசெருப்
படிரைத்தி லுப்பெண்ணெய்க்குள்
கலக்கிவைத் தெரியிட்டுப் பருப்படுவன்
றன்னிலிடக்காய்ந்துபோகும்
குலப்பசு வெண்ணெயிலுங் குன்றியிலை
தானரைத்துக்குழைத்த புண்வா
யிலுக்குபிட மாறிப்போ மதிவிடையங்
காடியினி லிழைத்துட்கொள்ளே. 279

(இ-ள்)

இலுப்பைப்பட்டை	குன்றிமணியிலை
இலுப்பையிலை	செருப்படை

இவைகளைச் சமனெடுத்து அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்து இலுப்பெண்ணெயில் குழப்பி அடுப்பின்மேல் ஏற்றி எரித்துப் பதத்தில் இறக்கிப் பரு, படுவன் முதலியவைகளுக்கு இடவும். அவை காய்ந்து போகும்.

குன்றிமணி இலையைப் பசுவின் வெண்ணெயுடன் கூட்டிக் களிம்பாகச் செய்து புண்களிலிடவும்.

அதிவிடையத்தைக் காடியுடனரைத்துக் குடிக்கவும். படுவன் தீரும்.

கடைசியாக எழுதப்பட்ட முறை "குடல் படுவனுக்கு" என்று 72 நெ. சுவடியில் காணப்படுகிறது.

165. பருப் படுவனுக்கு மருந்து

நரிமலமி ளகுந்தூட்செய் துகுப்பை
மேனிரசந் தனில்கலந்து
சிரந்தடவப் பொற்கண்ணி வேரழிஞ்சில்
வேரரைத்துத் தேணுநெய்யிற்
கரந்திடு புண்முகந்திற் றலையிலும்
வைத்திடவுங் கசந்தவேம்பின்
முரிகொழுந் தெலுமிச்சங் காயளவா
யரைத்திட்டு மோரிற்கொள்ளே. 280

(இ-ள்)

நரிவிட்டை (காய்ந்தது)
மிளகு

இவ்விரண்டையுஞ் சமனெடுத்துச் சூரணித்துக் குப்பை மேனிச்சாறு விட்டு நன்றாக அரைத்துத் தலையில் தேய்த்துக் கொண்டு ஸ்நானஞ் செய்யவும்.

பொன்னாங்காணி வேர்
அழிஞ்சில் வேர்

இவைகளை அம்மியின் மேல் வைத்து அரைத்துத் தேனிலோ அல்லது நெய்யிலோ குழைத்துப் படுவன் புண்ணின் மேல் தடவவும். இதையே தலையிலும் தடவிக்கொள்ளவும்.

வேப்பங்கொழுந்து ஒரு எலுமிச்சை அளவு எடுத்து நன்றாக அரைத்துப் பசுவின் மோரில் குழப்பி உட்கொள்ளவும். பரு, படுவன்கள் தீரும்.

166. குஷ்டத்திற்கு மருந்து

வேம்பதின்மேற் புல்லுருவி நாகரமுங்
கடுக்காயு மிகுநெல்லிமுள்ளிச்
சாம்புகளிப் பாக்குடனுந் தான்றிக்கா
யினவையிட்டுந் தணலிற்காய்ச்சிக்
கூம்புழக்குச் சாறுமாவெண் ணெயெள்ளி
னெண்ணெயுடன் குடிக்கத்தீரும்
பாம்புமுடி மேற்சுமக்கும் பராபரிக்கும்
சரபேந்திரன் பகர்ந்ததாமே. 281

(இ-ள்)

வேப்பமரத்தின் மேலுள்ள புல்லருவி
சுக்கு
நெல்லிமுள்ளி
களிப்பாக்கு
தான்றிக்காய்த தோல்

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 16 மடங்கு சுத்த ஜலம் விட்டு ஒரு உழக்காகும் வரைக் காய்ச்சவும். இக்கஷாயத்தை இறுத்து இதனுடன் (சுண்டைக்காயளவு) பசுவின் வெண்ணெயும், நல்லெண்ணெயும் (2 ஸ்பூன்) சேர்த்துக் குடிக்கவும். குஷ்டம் தீரும்.

167. குட்டத்திற்கு மற்றொரு மருந்து

நாகமெனுந் தாளியின் வேர் நிழலுலர்த்
திப்பொடிசெய் நலமாய்த்தானும்
பாகமிதிற் சாரணையின் கிழங்கின்றூ
ளதுகூட்டிப் பசுவிநீரில்
ஆகவிட்டு மண்டலமுங் குடித்திட்டாற்
குட்டமெல்லா மாறிக்காய்ந்து
போகவிது கையில்வந்த முறையாகச்
சரபேந்திரன் புகன்றதாமே. 282

(இ-ள்)

நாகதாளிவேரைக் கொண்டுவந்து சிறுசிறு துண்டுகளாக்கி, நிழலில் உலர்த்திக்கொண்டு, கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயம் செய்துகொண்டு, அதற்குச் சமனெடை சாரணைவேர்ச் சூரணம் போட்டு ஒன்று கலந்து கொள்ளவும். இதில் ஒரு குத்தளவெடுத்துப் பசுவின் மூத்திரத்துடன் 40 நாட்கள் உட்கொள்ளவும். குஷ்ட ரோகந் தீரும்.

குறிப்பு:

சாரணை - வெள்ளைச் சாரணை.

168. குஷ்டம் முதலானதற்கு மருந்து

புலிதுடக்கி வேர்ப்பட்டை தனையுலர்த்
திடிதூளிற் புகலுங்கோட்டம்
நிலவேம்பு முக்கடுகு மஞ்சளுடன்
றிரிபலையும் நேர்பொடித்துக்
கலந்திட்டு வேம்பினெய்யில் விழுங்கிடொரு
மண்டலந்தான் கருத்தகுட்டம்
புலர்ந்தசெங் குட்டமுதற் றீருமெனச்
சரபேந்திரன் புகன்றதாமே. 283

(இ-ள்)

இண்டம் வேர்ப்பட்டையைக் கொண்டுவந்து நிழலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து, அதனுடன்

கோஷ்டம்	நிலவேம்பு
சுக்கு	திப்பிலி
மிளகு	மஞ்சள்
கடுக்காய்த்தோல்	நெல்லிவற்றல்
தான்றிக்காய்த்தோல்	

இவைகளைச் சமனெடை எடுத்துக் கூடப்போட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்து வேப்பெண்ணெயுடன் குழைத்து விழுங்கவும். 40 நாட்களுக்குள்

கருங்குஷ்டம் செங்குஷ்டம்

முதலான ரோகங்கள் தீரும்.

169. பதினெண் குஷ்டத்திற்கும் மருந்து

இலவமதின் வேருடன்றோற் கரில்பழஞ்
சோடுசுட்டு மிவைதூளாக்கி
நல்லவெள்ளு முன்னருந்திப் பின்னையிந்தப்
பொடிதன்னை நற்றேன்றன்னிற்
புல்லிடவுங் குழைத்துள்ளே விழுங்கிடப்
பதினெட்டுப் புண்ணாங் குட்டஞ்
சொல்லவெரு வியும்போகு மிம்முறையைச்
சரபேந்திரன் சொன்னதாமே. 284

(இ-ள்)

இலவம்வேர்ப்பட்டை
மிளகு

இவ்விரண்டையுஞ் சமனெடை எடுத்துக் கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். நோயாளி முதலில் எள்ளை வாயில் போட்டுக்கொண்டு மென்று தின்றபின், மேலே சொன்ன பொடியில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்து விழுங்கவும்.

18 வகைக் குஷ்டங்களுந் தீரும். சுகமுண்டாகும்.

170. வெள்ளை, கறுப்பு, செங்குஷ்டங்களுக்கு மருந்து

காரெள்ளெண் ணெயாநானாழி பெருமுட்டிச்
சிறுகுறிஞ்சா காணீர்ப்பூலா
வேர்வகைக்குச் சாறுழக்காய் சேங்கொட்டை
நூற்றிருபா னொக்கக்கூட்டி

நீரெரித்துக் காய்ந்துவற்றி நானாழி
யாகவடி நின்றெண்ணெய்க்குள்
சேரிரதங் கழஞ்சிருபான் கூட்டியுட்கொள்
குட்டமெலாந் தீருந்தானே. 285

(இ-ள்)

சுத்தமான நல்லெண்ணெய்	4 படி
பேராமுட்டி	சிறுகுறிஞ்சா
நீர்ப்பூலா	

இவைகளின் சாறுகள் தனித்தனியே ஒரு உழக்கு

சுத்திசெய்த சேராங்கொட்டை 120 எண்ணிக்கையில்

முதலியவைகள் ஒன்று கலந்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றிச் சாறுகள் வற்றும்வரை எரிக்கவும். பின்பு, எண்ணெயை வடித்துச் சுத்திசெய்த பாதரஸம் 2½ பலத்தை அதனுடனே போட்டுக் குழைத்து, வேளைக்கு, (10 துளிகள்) வீதம் (பசுவின் பாலுடன்) உட்கொள்ளவும்.

குஷ்டங்கள் தீரும்.

171. சொறி, குஷ்டம், கடிகளுக்கு மருந்து

பாவட்டை யிலைச்சாறு முரிகாய்ச்சி
யுழக்காக்கிப் பருகத்தீரும்
மேவுமுத்த மாகாளி வேர்பசும்பா
லிற்குடிக்க விடஞ்சிறங்கும்
பாவுசொறி குட்டமுதற் கிரந்திகுட்டம்
போங்கரிப்பான் பார்சமூந்
தூவுலர்த்தி யிடிதூளை யெண்ணெய் வெய்யி
லுண்ணுகுட்டஞ் சொறிகள்போமே. 286

(இ-ள்)

பாவட்டையிலைச்சாறு	½ படி

யெடுத்து அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை காய்ச்சிப் பருகவும்.

மாகாளி வேரைப் பசுவின் பால் விட்டரைத்துக் குழப்பிப் பருக விஷகடிகள், சிறங்குகள், கிரந்திகள் குஷ்டங்கள் முதலியவை தீரும்.

கரிசலாங்கண்ணியைச் சமமூலமாக எடுத்து, நிழலிலுலர்த்தலாக, உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, வேளைக்கு முவிரல் கொள்ளுமளவு எடுத்து நெய்யும், நல்லெண்ணெயும் விட்டுக் குழைத்துச் சாப்பிடவும்.

குஷ்டங்கள், சொறிகள் முதலானவைகள் தீரும்.

172. சொறி, குஷ்டம் தீர மருந்து

சொறிகுட்டம் போமெருக்கின் பழுப்பின்சா
றொருபடியிற் சொல்லுங்கள்ளி
யெரிவெதுப் பிடுநீருஞ் சங்கிலைநீர்
மாகாளி யிவையொன்றுக்கும்
விரியுழக் காயிதெலாங் கூட்டியெண்ணெய்
எரித்திட்டு மேலிற்பூசக்
கரியகுட்டஞ் செங்குட்டந் தீருமென்று
சரபேந்திரன் (ப)ணித்ததாமே. 287

(இ-ள்)

எருக்கம்பழச்சாறு	1 படி
இலைக்கள்ளியை வெதுப்பிப் பிழிந்த சாறு	ஒரு உழக்கு

சங்கிலைச்சாறு	ஒரு உழக்கு
மாகாளிக்கிழங்கின் சாறு	,,
நல்லெண்ணெய்	1 படி

இவைகளை ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்த எண்ணெயைக் கருங்குஷ்டம், செங்குஷ்டம், முதலியவைகளுக்கு மேலே பூசவும். அவைகள் தீரும்.

173. குஷ்டத்திற்கு மருந்து

கருஞ்சீரந் தகரைவிற் றெருக்கின்வேர்ப்
பட்டைகெந்த கங்கார்போகத்
தரிசிபே யத்தியின்றோல் மூலமுமா
விரம்பட்டை தன்னில்வேரும்
பருங்கொடி வேலியின்வேர் காவிளைவிற்
றிவையெல்லாம் படுந்தூட்செய்து
கரியாலங் கன்றதின்சா றிட்டரைத்துஞ்
சுண்டாங்கிக் களவுசெய்தே. 288

செய்துநிழ லுலர்த்தியொரு சுண்டாங்கி
தனைக்கொச்சைத் தீம்பாலிட்டு
நெய்தரைத்து முட்குடிக்க மூன்றுமதி
புளியுப்பு நோக்கம்விட்டு
மெய்மருந்து கொண்டபத்தா நாளிலந்த
வெள்ளையின்மேல் விரணங்கண்டு
எய்துநிறம் பழஞ்சோறுண் பாலுஞ்சோ
றிட்டுண்டு மிருக்கலாமே. 289

(இ-ள்)

கருஞ்சீரகம்	தகரைவிதை
எருக்கம்வேர்ப்பட்டை	நெல்லிக்கெந்தகம்

கார்போகரிசி	பேயத்திப்பட்டை
பேயத்திவேர்	ஆவாரம்வேர்
ஆவாரம்பட்டை	கொடிவேலிவேர்
காய்வேளை விதை	

இவைகளைச் சமனெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ்செய்து, கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு, நன்றாக அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

தினம் ஒரு வேளை ஒரு மாத்திரை வீதம் வெள்ளாட்டுப் பாலுடன் அரைத்துப் பருகவும். மூன்று மாதங்களுக்கு உப்பு, புளிப்பு முதலிய சுவைகளுள்ள பதார்த்தங்களை நீர்கி விடவும். 10 நாட்களில் வெள்ளைக் குஷ்டமிருக்கு மிடங்களில் விரணங்களுண்டாகி ஆறிவிடும். பழையமுதும் பாலுஞ்சோறும் நிரம்ப உட்கொள்ளவும். அவை தீரும்.

174. பதினெட்டு குட்டத்திற்கும் மருந்து

சிவன்வேம்பு மழிஞ்சிவே ராணாவே
ரெருக்கின்வேர் செம்முள்ளிதான்
நல்மாவி லங்கதின்றோற் காஞ்சிரைவிற்
றப்பட்டை நற்புங்கின்றோற்
புவிவிளாந் தோனிம்பத் தோல்பிரண்டை
வெள்ளறுகு பொருவேர்தானும்
பலவுய்ய கொண்டநீர் வெட்டிமுத்துக்
கான்குறிஞ்சாப் படும்பேய்ப்பீர்க்கே. 290

பீசமுடன் பாலொடுவி கொடிவேலி
யகிற்பட்டை பெருநொச்சிவேர்
மாசதுரக் கள்ளியின்வேர் வனக்கொட்டை
மிளகறணை வண்டுகொல்லி

நேசமுறும் பட்டைகட்டுக் கொடிமூலம்
கழல்வித்து நிலத்துவாகைப்
பேசிவைக டயிலஞ்செய் நெல்லெடையுட்
கொள்மேலும் பிரளப்பூசே. 291

(இ-ள்)

சிவனார்வேம்பு	அழிஞ்சில்வேர்
ஆவாரைவேர்	எருக்கம்வேர்
செம்முள்ளி	மாவலிங்கப்பட்டை
எட்டிக்கொட்டை	எட்டிப்பட்டை
புங்கம்பட்டை	விளாம்பட்டை
வேப்பம்பட்டை	பிரண்டை
வெள்ளறுகு	கொய்யாவின்வேர்
நீரடிமுத்து	காட்டுக்குறிஞ்சான்
பேய்ப்பீர்க்கம்விதை	கொடிப்பாலை
கொடிவேலிவேர்	அகில்பட்டை
நொச்சிவேர்	சதுரக்கள்ளிவேர்
காட்டாமணக்கம்வேர்	மிளகறணை
வண்டுகொல்லிப்பட்டை	சுட்டுக்கொடிவேர்
கழற்சிக்காய்	நிலவாகைப்பட்டை

இவைகளை வகைக்கு(1 வராகனெடை) எடுத்து நன்றாக இடித்து அம்மியின்மேல் வைத்துத் தணணீர்விட்டு நன்கு அரைத்து, நல்லெண்ணெயுடன் 93 சேர்) குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தில் ஒரு நெல்லெடை எடுத்து (வெற்றிலையில் வைத்து) உள்ளே உட்கொள்ளவும். இதையே மேலுக்கும் பூசவும்.

குஷ்டங்கள் சீராகும். கைகண்டது.

குறிப்பு:

இந்த எண்ணெயை ஒரு ஸ்பூன் முதல் 2 ஸ்பூன் வரையிலும் கொடுக்கலாம்.

175. வயிறு, வாய் நாற்றத்திற்குக் குடிநீர்

செம்பரத்த யிலையாடா தோடையிலை
சீந்திலிலை சீராவின்பால்
உம்பவரக் கடாயஞ்செய் திலுப்பைப்பூ
மட்டியரைத்துடன் கரைத்து
நம்பசுவின் நெய்யுமிட்டு முட்குடிக்க
வேப்பிரத்த நாற்றம்போகுந்
தம்பசும்பா லுடன்பற்பா டகமுமரைத்
துடன்குடிநாற் றங்கள்போமே. 292

(இ-ள்)

செம்பரத்தையிலை ஆடாதோடாயிலை
சீந்தில்கொடியின் இலை

இவைகளை வகைக்கு (1 கொட்டைப் பாக்களவு) எடுத்து நன்றாக அரைத்துப் பசுவின் பாலுடனே (1 சேர்) குழப்பி அடுப்பின்மேல் ஏற்றிக் கொதிக்கவைத்து, அதனுடன் இலுப்பைப்பூ, அதிமதுரம், இவ்விரண்டையும் (1வராகனெடை) எடுத்து, அரைத்து அப்பாலுடனே குழப்பி உட்கொள்ளவும்.

வாயிலிருந்து இரத்தம் வடிதல், வாய் நாற்றம் முதலியவை தீரும்.

உஷ்ணமும் வெட்கையும் தணியும்.

176. வயிற்றுட் சீழ், புரை, புழுவுக்கு

ஓமமொரு கழஞ்சிந்து காற்கழஞ்சு
திப்பிலியு மொத்தசுக்கும்
ஏமமொரு வகைகழஞ்சாய்க் கொடுக்காயின்
புளிதானு மிருகழஞ்சு
நேமமிள நீரைவிட்டு மரைத்திட்ட
விழுதிள நீரிற்கொள்ளத்
தாமமட்டிச் சீழ்புரைபுண் டீருமுறை
சரபேந்திரன் றந்ததாமே. 293

(இ-ள்)

ஓமம்	40	குன்றியெடை
இந்துப்பு	10	,,
திப்பிலி	40	,,
சுக்கு	40	,,
கொடுக்காப்புளி	2½	வராகனெடை

இவைகளைச் சுத்தமான அம்மியின்மேல் வைத்து, இளநீரை விட்டு நேக அரைத்து அதிலேயே கலக்கிச் சாப்பிடவும்.

வயிற்றிலுள்ள சீழ், புண்கள், புரைகள், முதலானவை தீரும்.

177. ஓடுவுக்கு எண்ணெய்

கொடிவேலி மூக்கரட்டை முன்னைசத்திச்
சாறணைவேர் கோடசாலை
கொடுசாற ணைக்கிழங்குங் குழிமீட்டா
னன்னாரி குதிரைவாலி

தொடுஞ்சிறு புள்ளடிவன் னெற்றுடனு
முத்தெருக்கஞ் சொல்லுவேரும்
மொடுவசம் புள்ளியரைத் தெண்ணெய்வடித்
திடுநக்க வொடுவும் போமே. 294

(இ-ள்)

கொடிவேலிவேர்	மூக்கரட்டை
முன்னைவேர்	சத்திச்சாறணைவேர்
கோடகசாலை	வெள்ளைச்சாறணைக் கிழங்கு
நத்தைச்சூரிவேர்	நன்னாரிவேர்
முதியார் கூந்தல்	சிறுபுள்ளடி
நத்தைச்சூரிவிதை	முத்தெருக்கஞ்செவி
வசம்பு	பூண்டு

இவைகளை வகைக்கு (1 வராகனெடை) எடுத்து அம்மியின் மேல்வைத்து நன்றாக அரைத்து நல்லெண்ணெய் (1½ சேருடன்) குழப்பி, அடுப்பின் மேல் ஏற்றிப் பதமாக வடித்து இறக்கவும். இதிலொரு காசளவு எடுத்துப் (பாலுடனே) நக்கிவர ஓடுவிப்புருதி தீரும்.

குறிப்பு:

72 நெ. சுவடியில் "சிறுபாம்பு கடியுந் தீரும்" என்று காணப்படுகிறது.

178. ஓடுவுக்கெண்ணெய்

சொறித்தவளை யைச்சுட்டுப் பொடிசெய்து
மெண்ணெயிலே தூவிக்காய்ச்சி
இறக்கொடு விடத்தீரு மாட்டுப்பற்
சுட்டபொடி யெண்ணெய்தன்னில்

விரிக்குழைத் தொடுவிட்டாற் றீரும்வன்
னெற்றுமுன்னை வேர்வெள்ளுள்ளி
கரிவசம்புங் குழிமீட்டான் சிறுபுள்ளடி
யெண்ணெய்வடித் தொடுவிற் பூசே. 295

(இ-ள்)

சொறித்தவளையைப் பிடித்து, அடுப்பிலிட்டுக் கறுக்கித் தூள் செய்து நல்லெண்ணெயுடன் தூவி அடுப்பின்மேல் வைத்துக்காய்ச்சிப் பத்துவத்தில் இறக்கவும்.

இதை ஒடுவிகளுக்குப் போடவும். அவை தீரும்.

மாட்டுப்பற்களை, வரளிகளுக்கிடையில் சொருகிக் கொளுத்திவிடவும். அது பொரபொரப்பாகும். இதைத் தூள்செய்து நல்லெண்ணெயுடன் குழைத்து ஒடுவிகளின்மேல் பூசவும்.

நத்தைச்சூரி வேர்	முன்னைவேர்
வெள்ளைப்பூண்டு	வசம்பு
நத்தைச்சூரிவிதை	சிறுபுள்ளடி

இவைகளைச் சமனெடை (1 வராகனெடை) எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து அதை நல்லெண்ணெயுடன் (1 சேர்) குழப்பியடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக்கி இறக்கவும்.

இதை ஒடுவிகளுக்கிடவும்

179. ஒடுவிக்கு எண்ணெய்

சேவகனார் மூலமெண்ணெய் நெய்சமனாய்க்
குளவிந்தஞ் சேருமஞ்சள்
தூவுகுக்கு லுப்பொடியுங் கூட்டியெரித்
தொடுவிட்டாற் துலைந்துபோகும்

பாவனையா டொட்டியிலை முலைப்பாலிட்
டரைத்திட்டுப் பார்குழைத்து
மேவுமொடு தனைக்கிட்டாற் றீர்ந்துவிடு
மிம்முறையை விரும்பிச்செய்யே. 296

(இ-ள்)

நல்லெண்ணெயும், நெய்யும் வகைக்கு (½சேர்) எடுத்து ஒன்று கலந்து அதனுடன்

சேவகனார் பூண்டின்வேர் (சிறுபுள்ளடிவேர்)
குளவிந்த மஞ்சள்
(கறி) மஞ்சள்

இவைகளை வகைக்கு (½பலம்) வீதமெடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்துக் குழப்பிக்கொள்ளவும். இதையடுப்பின் மேலேற்றி எரித்துப் பதமானவுடன், வெள்ளைக் குங்கிலியத்தூள் (½ பலத்தைப்) போட்டு, வடிக்கவும்.

இந்த, மருந்தை ஒடுவிகளுக்கு மேலே பூசவும். அவை குணமாகும்.

(2) ஆடையொட்டி இலையை வேண்டிய அளவெடுத்து முலைப்பால்விட்டு அரைத்து ஒடுவியின்மீது பூசவும். அவை குணமாகும்.

180. அக்கிரோகத்திற்கு மருந்து

மிதிபாக லிலைதன்னை யரைத்தாவின்
வெண்ணெயிட்டு மேற்குழைத்துப்
பதியக்கி தனிற்பூசத் தீர்ந்துவிடு
முருங்கைவேர்ப் பட்டைதன்னை

யதியதைத் தொட்டடையும் பசுவெண்ணெ
யிட்டுமத்தித் தக்கிழுச
நிதிவெண்ணெய் பசளையரைத் துடனிட்டால்
அக்கியெலாம் நீங்கிப்போமே. 297

(இ-ள்)

மிதிபாகல் இலையை அம்மியின்மேல் வைத்து நேக அரைத்துப் பசுவின் வெண்ணெயுடன் குழைத்து அக்கியின்மேல் பூசவும்.

முருங்கை வேர்ப்பட்டையும், ஒட்டடையும் சமமெடுத்து, தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துப் பசுவெண்ணெயுடன் குழைத்துப் போட அக்கிகள் தீரும்.

பசலையிலையைப் பசுவின் வெண்ணெயுடன் அரைத்துப் பூசவும். அக்கிகளெல்லாம் நீங்கும்.

181. வாய்ப்புத்துக்கு மருந்து

வசம்புள்ளி நாகரமுஞ் சமன்கொண்டு
மூன்றுக்கு மட்டாய்த்தானே
இசைசிற்றா மணக்கின்வேர்ப் பட்டையுடன்
நறுக்கிட்டு மெழுவாய்ப்புற்றின்
அசையாம லன்றாடங் கட்டிவைத்துத்
தீர்ந்தும்போ மதற்கின்னங்கேழ்
கசக்கும்பேய்க் கரும்பினீர் சீனமிட்டுக்
கொப்பளித்தாற் காய்ந்துபோமே. 208

(இ-ள்)

வசம்பு வெள்ளைப்பூண்டு
சுக்கு

இம்மூன்றையும் சமனெடை எடுத்து, இதற்குச் சரிஎடை சித்தாமணக்கம் வேர்ப்பட்டையும் சேர்த்துக் கல்லுரலிலிட்டு நசுக்கித் தினந்தோறும் வாய்ப்புற்றின் மேல் வைத்துக் கட்டி வரவும்.

இதற்குக் கொப்பளிக்க மருந்து:

பேய்க்கரும்பின் (கொழுத்தாடைச்) சாற்றில் சீனாக்காரம் பொடி செய்து போட்டு வாய்க் கொப்பளிக்கவும்.

வாய்ப்புற்றுகள் தீரும்.

182. அகுவைக்கு மருந்து

பிரண்டைசிறு துண்டாக்கிக் கொடிவேலி
வேர்ப்பட்டைப் பெருகச்சீவி
இரண்டையு மொருபானை தன்னிட்டு
நீர்வார்த்து மெரித்துக்காய்ந்து
உரவுநீர் தானிறுத்து முக்கடுகோ
மங்கடுக்கா யுரைவெள்ளுள்ளி
யரைவகைக் கிருபலமுஞ் செங்கதாரி
யின்பட்டை யாயிற்றாலே. 299

இவையெல்லா முந்நீரா லாட்டுக்கல்
லிட்டரைத்து மெடுத்துக்கொண்டோர்
நவைசட்டி காயவைத்து மோருபடி
யெள்ளினெண்ணெய் நயமாய்விட்டுக்
கவைபெருங் காயமொரு நிட்கமிட்டுப்
பொங்களவிற் கரைமருந்ததைத்
துவைபதங் கொண்டிறக்கித் தான்றியின்காய்
தனைக்குவை துலையக்கொள்ளே. 300

(இ-ள்)

பிரண்டையைப் புதிதாகக் கொண்டுவந்து, சிறுசிறு துண்டுகளாக்கி அதற்குச்சமன் கொடிவேலிவேர்ப் பட்டை எடுத்து, இவ்விரண்டையும் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பானையிலிட்டு (9 மடங்கு) தண்ணீர்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொரு பங்காகக் காய்ச்சி வடிக்கட்டிக் கொள்ளவும். பிறகு,

சுக்கு	திப்பிலி
மிளகு	ஓமம்
கடுக்காய்த்தோல்	வெள்ளைப்பூண்டு
செங்கதாரிப்பட்டை	ஆயில்பட்டை

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்து, முன்சொன்ன கஷாயமிட்டுக் கல்லுரலிலிட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி, வைத்துக்கொள்ளவும்.

ஒரு புதுச்சட்டியை அடுப்பின்மேல் வைத்துக் காயவைத்து, அதில் நல்லெண்ணெய் 1 படி விட்டுப் பெருங்காயம் 1 வராகனெடை போட்டுப் பொங்கும்போது முன்விழுதைப் போட்டுக் கிளறி, நீர்வற்றியவுடன் கீழே இறக்கவும். இக்கடுகில் ஒரு தான்றிக்காய் அளவு எடுத்து உட்கொள்ளவும்.

அகுவை தீரும்.

குறிப்பு:

72 நெ. சுவடியில் "உப்பு, புளி இவ்விரண்டையும் நீக்கி விடவும்" என்று காணப்படுகிறது.

183. வயிற்றுள் புழுவிற்கு

சாயவே ருள்விரண்டுங் கடலையிற்
பாதியிடுஞ் சார்வசம்புந்
தோயமுலைப் பாலிலரைத் தூட்குடிக்க
நுரைக்காணுந் துடர்நாள்ரெண்டு
பாய்ச்சிறுகக் கூட்டி யுட்கொடுக்கப்
புழுசெத்துப் பாரில்வீழுந்
தூயதில வெண்ணெய்தனைத் தீண்டவொண்ணா
திருதீர்ந்து சுகமதாமே. 301

(இ-ள்)

இம்புரல்வோர்	வெள்ளைப்பூண்டு
கடலை	வசம்பு

இவைகளை (வகைக்கு ஒரு வராகனெ டை எடுத்து) அம்மியின் மேல் வைத்து முலைப்பால் விட்டு நேக அரைத்துச் சாப்பிடவும். இதை இரண்டு நாள் சேர்ந்தாப்போல் கொடுக்க வயிற்றிலுள்ள புழு செத்துவிழும்.

பத்தியம்:

ஆகாரங்களில் நல்லெண்ணெய் சேர்க்கக்கூடாது.

184. [illegible]னுக்கு மருந்து

கருவேலி னிலைதன்னைப் பொன்வண்டின்
நிறமாகக் காண்வறுத்து
மறுகிடப் பொடிசெய்து பசுநெய்யிற்
குழைத்திட்டு வைசிமிழ்குள்

உருபுண்வாய் தனில்வைத்து மூமத்தி
னிலைவாட்டி யூடேபோடப்
பருசீயும் பிடிபட்டுச் செம்புண்ணாஞ்
சீழ்வழிந்தாற் பண்ணைக்கேளே. 302

ஆனையெனும் பூச்சிதனி லைரெண்டு
பிடித்தெண்ணை யதனிலிட்டு
ஊனமுழி மஞ்சளுடன் குங்கிலிய
மருதின்றூ ளொக்கக்கூட்டித்
தானெரித்து முபசிங்கின் மேலிடவு
மாறியும்போம் தரணியோற்கும்
ஈனநோ யாகிருளுக் கினையரவி
சரபேந்தி ரனிசைத்ததாமே. 303

(இ-ள்)

கருவேலம் இலையை ஒரு இரும்புச் சட்டியிலிட்டுப் பொன் வண்டின் நிறம்போல் வறுத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, பசுவின் நெய்யுடன் குழைத்துச் சிமிழில் பத்திரப்படுத்தவும். இக்களிம்பைப் புண்களின் வாயில் தடவி ஊமத்தையிலையை வாட்டிக் கட்டி விடவும்.

சீழ்வற்றிச் செம்புண்ணிடும். சீழ் அதிகமாக வடிந்தால்,

ஆனைப் பூச்சி 10 கொண்டுவந்து நல்லெண்ணெயி விட்டு, சிறிதுமஞ்சளும், குங்கிலியத் தூளும், மருதம் பட்டைத் தூளும் இட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயை ஊமசிங்களுக்கு போட அவை ஆறும்.

குறிப்பு: ஆனைப்பூச்சி - குழியானை.

185. தண்டு நொந்தால் மருந்து

அழிஞ்சிவே ரெலுமிச்சம் பழச்சாற்றி
லிட்டரைத்து மதைத்தண்டின்மேல்
வழிபூசத் தீர்ந்துவிடும் வெள்ளலரி
மாதளையில் வகைச்சமூலங்
கழிநறுக் குலர்த்தியே சமனாக்கோர்
பானையிட்டுக் காணப்பூமி
குழித்தைலம் வாங்கியரைப் பணவெடையுண்
தண்டிசுடக் குணமதாமே. 304

(இ-ள்)

அழிஞ்சில்வேரை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துத் தண்டின் மேலே பூசவும்.

வெள்ளரலி வேர் (காய்ந்தது)
மாதளை வேர் ,,

இவ்விரண்டையும் சமனெடை எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி ஒரு துவாரமுள்ள பானையிலிட்டுச் சீலைமண் செய்து குழித்தைலமாக இறக்கிக்கொள்ளவும்.

இதில் ½ பணவெடை எடுத்துச் (சர்க்கரையுடன்) சாப்பிடவும். இதையே தண்டின்மேலும் பூசவும். வலி தீரும்.

சரபேந்திரர் வைத்ய முறைகள்

கரப்பான் ரோக சிகித்ஸை

1. மண்டைக்கரப்பானுக்கு மருந்து

குருந்தாடா தோடையோ டிருநொச்சில் புங்கு
கொடிவேலி மிளகரணை நிலவடம்பு
பரிந்த சிறுக்கீரை யுத்தாமணி யெருக்கிப்
பதினோருவே ருங்கருஞ்சீ ரகஞ்சிறுத்த
வரத்தையுங் கார்போகரிசி யிவைநேர் கூட்டி
யரைத்துக்கோ சலம்விட்டெண்
ணெயிலெரித்துச்
சிரத்தினிற் பூசிடமண்டைக்கரப்பன் றீருந்
திவ்வியமா மிம்முறையைச் செய்துபாரே. 1

(இ-ள்)

குருந்து	ஆடாதோடை
கருநொச்சி	வெண்ணொச்சில்
புங்கு	கொடிவேலி
மிளகரணை	நிலவடம்பு
சிறுகீரை	உத்தாமணி
எருக்கு	

இச்சரக்குகளின் வேர்கள் வகைக்கு 1 வராகனெடை

கருஞ்சீரகம்	கார்போகரிசி
சிற்றரத்தை	

இம்மூன்றும் வகைக்கு (1 வராகனெடை)

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து, அம்மியின்மேல் வைத்துப் பசுவின் மூத்திரம் விட்டு நேக அரைத்து,

நல்லெண்ணெய் (1½ சேருடன்) குழப்பி, அடுப்பின் மேல் வைத்து எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தினந்தோறும் தலையுச்சியில் வைத்துவர, மண்டைக்கரப்பான் தீரும்.

2. சகல கரப்பானுக்கும் மருந்து

நாய்வேளைச் சிறுகுறிஞ்சா வவுரிமுள்ளி
நற்கண்டங் கத்திரிதூ துவளைசங்கு
நெய்க்கொட்டான் றலைச்சுருளி மணித்தக்காளி
நண்ணியவிப் பத்துவேர் செங்கதாரி
வாய்ப்பாம்பொற் கொன்றைமிள கரணைபுன்கு
நன்முருங்கை சென்னாக மென்றவாறி
னாய்ந்திடுமேற் பட்டைபெருங் குறும்பைகாய
மரத்தையொடு காட்டுச்சீ ரகம்வசம்பே. 2

வசமான வெள்ளுள்ளி யிவைகளெல்லாம்
வகைதனக்கோர் கழஞ்சாகக்கூட்டிக்கொண்டு
பசுமையா மணக்கெண்ணெய் படியொன்றிற்றான்
பண்பாக வேகலந்து கழுதையானை
யிசைவான விலத்தியில்வெள் ளாட்டுநீர்விட்
டேபிழிந்தோர் சாறுபடி யெடுத்தேவிட்டு
நசையாக வேகாய்ச்சி வடித்தீர்போது
நவிலிரண்டு காசெடைகொள் கரப்பான்
போமே. 3

(இ-ள்)

நாய்வேளை சிறுகுறிஞ்சான்
அவுரி முள்ளி
கண்டங்கத்திரி தூதுவளை

சங்கன்வேர்	பூத்திக்கொட்டை
பெருமுரந்து	மணித்தக்காளி

இச்சரக்குகளின் வேர் வகைக்கு (1¼ வராகனெடை)

செங்கதாரிப்பட்டை	பொற்கொன்றை
மிளகரணை	புங்கம்பட்டை
முருங்கை	நாகப்பட்டை

இச்சரக்குகளின் பட்டைகள் வகைக்கு (1¼ வராகனெடை)

பெருங்குறும்பை	பெருங்காயம்
சிற்றரத்தை	காட்டுச்சீரகம்
வசம்பு	வெள்ளைப்பூண்டு

இச்சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்துக் கல்லுரலில் இட்டிடித்துப் பின்பு

ஆமணக்கெண்ணெய் 1 படியுடனும் (5 சேர்)

கழுதை இலத்தி	யானை இலத்தி

இவ்விரண்டிலும் வெள்ளாட்டு மூத்திரம் விட்டு இடித்துப் பிழிந்த சாறு 1 படியுடனும் இவைகளைச் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். தினந்தோறும் 2 காசளவு எடுத்துக் காலையிலும் மாலையிலும் (பாலுடனே) உட்கொள்ளவும். கரப்பான்கள் நீரும்.

3. படை, கரப்பான், கிரந்தி முதலியவற்றிற்கு

கொடிவேலி வேரைப்பாக் களவரைத்துக்
குணமான தேனிலிட்டுக் குழைத்தருந்திற்
கடிதாமுளவியாதியோடு கண்டமாலை
கனமான புண்ணுடனே கிரந்திநோயும்

புடைகரப்பான் தீர்ந்தாரோக் கியமுண்டாகும்
புனிதனாந் துளசேந்திர னீன்றபாலன்
வடிவமதி லுயர்மதவே ளனையதீரன்
மால்சரபேந் திரன்வகுத்த முறையிதாமே. 4

(இ-ள்)

வேடிவேலி வேர்ப்பட்டை ஒரு பாக்களவெடுத்துக் கைபடாமலரைத்துத் தேன் விட்டு கலந்து அருந்தவும்.

கண்டமாலை, நாட்பட்ட புண்கள், கிரந்திகள், கரப்பான் முதலான ரோகங்களை நீக்கி ஆரோக்கியத்தை உண்டாக்கும்.

4. விரணங்கள், கிரந்தி, புடைகரப்பானுக்கு

வெள்ளைக்குங் கிலியத்தைப் பொடித்தெடுத்து
வெங்கலத்தா லத்தினில்வைத் துக்குழித்தே
யெள்ளெண்ணெ யோடிரதம் தனிலிட்டே
யியல்பாய்வே றொருகிண்ணி யாலரைத்து
மெள்ளவழித்தேசிமிழில் வைத்துக்கொண்டு
விரணங்கள் கிரந்திபுடை கரப்பானோடே
யெள்ளியபுண் களுக்கிதனைப் போடத்தீரும்
இயல்பான முறையிதனையெண்ணிப்பாரே.

(இ-ள்)

வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடிசெய்து ஒரு வெங்கலத் தாலத்தில் வைத்து அதன் நடுவில் குழிசெய்து அதில், நல்லெண்ணெயும், சுத்திசெய்த பாதரஸமும் விடவும். பின்பு இதை வேறொரு கிண்ணியினால் நன்றாக அரைக்கவும். களிம்பாகும். இதை ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி விரணங்கல், கிரந்திகள் புடைகரப்பான் முதலியவைகளுக்கிடவும்.

புண்களும் தீரும்.

5. கரப்பானுக்கு

நல்லெண்ணெய் மிளகுபழச் சாறுமூன்று
நலமாகச் சமன்கலந்து வெயிலில்வைத்தே
பொல்லாத கரப்பானுக்கு மூன்றுநாட்டான்
பூசிடவே யாறிப்போம் புதுமையாகச்
சொல்லியவிம் முறைதப்பா தாகையாலே
துரிதமதாய்ச் செய்திடுவீர் சுந்தரஞ்சேர்
வல்லவனாஞ் சரபேந்திரபூ பதியுணர்ந்தே
வழுத்தியநன் முறையிதனை
மனதிற்கொள்ளே 6

(இ-ள்)

நல்லெண்ணெய் 1 உழக்கு
மிளகு ,,
எலுமிச்சம்பழச்சாறு ,,

இவைகளை ஒன்று கலந்து (3 நாட்கள்) வெயிலில் வைக்கவும். கரப்பான் புண்களுக்கு 3 நாட்களுக்கு மேலே பூசிடவும். அவை ஆறிப்போம்.

6. மண்டைக் கரப்பானுக்கு

வசம்புகோடகசாலை மிளகோடுள்ளி
வகைநான்குஞ் சமபாக மாகக்கூட்டி
யிசைந்திடுநல் லெண்ணெய்தனிற் போட்டெரித்தே
யிருகாது தனிலேவிட் டதனைத்தானும்
பொசிந்தவெளி வாராமற் றுணியடைக்கப்
போகுமண்டைக் கரப்பனெல்லாம்
பொய்மையன்று
நிசஞ்செய்து பார்த்தறிவீ ராயுர்வேத
நிலைகண்ட சரபேந்திர னிகழ்த்தும்வாறே. 7

(இ-ள்)

வசம்பு	கோடகசாலை
மிளகு	வெள்ளைப்பூண்டு

இவைகளைச் சம (1 வராகனெடை)மெடுத்து நசுக்கி, நல்லெண்ணெய் (1 சேருடன்) கூட்டி எரித்துப் பதத்தில் இறக்கவும். இத்தைலத்தை இரு காதுகளிலும் விட்டுப் பஞ்சினால் தைலம் வெளிவராமலடைக்கவும். மண்டைக் கரப்பான் தீரும்.

7. கரப்பானுக்கும் புண்ணுக்கும்

பழச்சாற்றிற் றுருசியிட்டே யரைத்துநல்ல
பெரியவெள்ளைச் சேலைதனிற் றடவிக்
கொண்டே
யெழுங்கரப்பான் புண்ணிற்குப் போட்டீரானா
லேகிவிடு மினிவாரா தென்றுஞ்சொன்னே
னாழ்ந்திதனைச் செய்துபார்த் தறிந்துகொள்வீர்
வீணல்லவிம் முறையுண்மை யாகையாலே
கழிந்துமே புண்ணாறு மட்டுமிந்த
காரத்தைப் போட்டிடுவீர் கனமாய்த்தானே 8

(இ-ள்)

எலுமிச்சம்பழச் சாற்றில் துருசை ஊறவைத்து, அம்மியின்மேல் வைத்தரைத்து, ஒரு துல்யமான வெள்ளைத் துணியில் தடவிக் கரப்பான் புண்களின் மேல் போடவும். அவை தீரும். புண்கள் நன்றாக ஆறும்வரை இந்தக்காரமுள்ள மருந்தைப் போடவும்.

8. கரப்பானுக்கு எண்ணெய்

ஈருள்ளி யுரிகிரந்தி நாயகச்சா
றிதிற்பாதி யாம்கம்பிப் பிசின்கறுத்தச்
சீரகங்கா செடையிரண்டு வகையொன்றுக்குச்
சேர்கடுக்காய் மூவைந்தேரண்டத்தெண்ணெய்
நேர்நாழி யிதின்மருந்தை யரைத்தேயிட்டு
நினைவாய்ச் சூரியபுடம்வைத் தோர்கரண்டி
யீர்போது முண்டுவரக் கரப்பானேகு
மிதற்குப்பத் தியம்புளிப்புக் கைப்புநீக்கே. 9

(இ-ள்)

தோலுரித்த வெள்ளைப்பூண்டு	½ படி
கிரந்திநாயகச்சாறு	½ படி
கம்பிப்பிசின்	1 காசெடை
கருஞ்சீரகம்	1 ,,
கடுக்காய்	15 (எண்ணிக்கையில்)

கடைச் சரக்குகளைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து, ஆமணக்கெண்ணெய் 1 படி (பட்டணம்படி $^{1}/_{8}$) யுடன் குழப்பிச் சூரியபுடமிடவும். இதிலோரு ஸ்பூனளவெடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

கரப்பான் தீரும்.

பத்தியம்:

புளிப்புச்சுவை, கசப்புச்சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

9. கரப்பான், மேகவெடி முதலானவைகளுக்கு

ஒருபிடி வெட்பாலையிலை துவைத்தேரண்டத்
துண்மையாமணக் கெண்ணெயது சேரி
ரண்டின்
மருவியே மூன்றுநா ளூறவைத்து
மற்றைநா லாநாள்கத் தூரிமஞ்சள்
கருஞ்சீரகங்கம்பிப்பி சின்வசம்பு
கடுக்காய்கார் போகரிசி வெள்ளையுள்ளி
பரங்கிப்பட் டையுமெட்டுச் சரக்கைக்கூட்டிப்
பரிவாக விரவிதனிற் காயவையே. 10

வைத்ததனைச் சூரணித்தெண் ணெயிற்கலந்து
வளமாக மெழுபதத் தெரித்துவாங்கிப்
பத்துநா ணெற்பானைக் குள்ளேவைத்துப்
பகர்சனிவா ரத்திலெண்ணெய் தேய்த்து
மூழ்கிச்
சுத்தமாய் மறுநாள்முன் ணெண்ணெய்தன்னைச்
சுடவைத்தே யுதையத்திற் காற்சேருண்க
வொத்தவந்தி வேளையரைக் காற்சேருண்க
வொழியாதிப் படிமூன்று நாட்கொள்வாயே. 11

கொண்டதன்மேற் பத்தியம்பின் மூன்றுநாளாங்
குலவேழா நாள்கஞ்சி தேய்த்துமூழ்கிப்
பண்பாக வுப்பதனை வறுத்துக்கூட்டு
பத்தியந்தான் பகற்பச்சைப் பயற்றங்கஞ்சி
ருண்டிடுராத் திரிபசுவின் பாலுங்கூட்ட
லுப்பில்லாப் பத்தியமா மாறுநாள்கை
கைகண்டமுறை மேகவெடி சூலைவாயு
கரப்பன்னரை யாப்பினோடு கிரந்திபோமே. 12

(இ-ள்)

வெட்பாலை இலை ஒரு பிடியெடுத்து ஆமணக்கெண்ணெய் 2 சேருடன் பிசைந்து 3 நாட்களுக்கு ஊறவைக்கவும். 4வது தினத்தன்று,

கஸ்தூரிமஞ்சள்	கருஞ்சீரகம்
கம்பிப்பிசின்	வசம்பு
கடுக்காய்த்தோல்	கார்போகரிசி
வெள்ளைப்பூண்டு	பரங்கிப்பட்டை

முதலான சரக்குகளை (வகைக்கு 1 வராகனெடை) எடுத்து வெய்யிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு, மேலே சொன்ன ஆமணக்கெண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதையொரு சீசாவில் இட்டு மூடி (10 நாட்கள்) நெல்லுக்குள் வைக்கவும்.

சனிக்கிழமையன்று நன்றாக எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து, மறுநாள் உதையத்தில் ¼ சேரளவு முன்னெண்ணெயைச் சுடவைத்துக் குடிக்கவும். சாயங்கால வேளைகளில் $^{1}/_{8}$ சேர் சாப்பிடவும்.

இப்படி 3 நாட்களுட்கொள்ளவும்.

பத்தியம்:

பகல் வேளைகளில் பச்சைப்பயறுக் கஞ்சி சாப்பிடவும். இரவு நேரங்களில் பசுவின்பால் சேர்த்துச் சாப்பிடவும். உப்பு இல்லாப் பத்தியமாக 6 நாளைக்கு இருக்கவும். 7வது நாளன்று வடிகஞ்சியைத் தேய்த்துக் கொண்டு தலைமுழுகவும். அன்று உப்பை வறுத்துக்கூட்டிக்கொள்ளலாம்.

இது மேகவெடி, சூலை, வாயு, கரப்பான், அரையாப்பு, கிரந்தி முதலிய ரோகங்களுக்குக் கைகண்ட மருந்தாகும்.

10. கரப்பானுக்கு

செங்கதாரிப்பட்டை கொண்டுவந்து
செம்மையாய்ப் பொடித்துவடிக் கட்டியேதான்
பங்கமிலாக் கலசத்தில் வைத்தீர்போது
பண்பாக வோரளவா யெடுத்தருந்திற்
றங்குகரப் பான்முதல் நோய்கடருஞ்
சௌக்யமா மறிந்துகொள்வீர் தஞ்சைவாழு
மிங்கிதவுல் லாசமுளச் சரபபூப
னியற்கையா யறிந்துரைத்த முறையிதாமே. 13

(இ-ள்)

செங்கதாரிப் பட்டையைப் புதியதாக எடுத்துக் கொண்டுவந்து, நிழலில் உலர்த்திக் கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளமளவு எடுத்து (வெந்நீருடன்) உட்கொண்டுவரக் கரப்பான் ரோகங்கள் தீரும்.

11. முழங்காற் கரப்பானுக்கு

நிலப்பனையின் கிழங்கமுக் கிராக்கிழங்கு
நேராக நிழலுலர்த்திச் சூரணித்தே
நலத்தகல சத்தினிலே வைத்துக்கொண்டு
நாடோறு மிருபோது பசுவினெய்யிற்
சொலத்தகுங் கற்கண்டினுட் பொடியுங்கூட்டித்
துணிவாக வெருகடி யளவுட்கொள்ள
வலிக்குமுழங் காற்கரப்பன் வாராதென்று
மானிலத்தீ ரிம்முறையை மனத்துட்
கொள்ளே. 14

(இ-ள்)

சுத்திசெய்த நிலப்பனைக்கிழங்கு
,, அமுக்கிராக்கிழங்கு

இவைகளைச் சமனெடுத்து, நிழலில் உலர்த்திக் கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு பானையில் பத்திரப்படுத்தவும். இதில் தினந்தோறும் மூவிரல் கொள்ளும் அளவு எடுத்துக் கற்கண்டுப் பொடியுஞ் சேர்த்துப் பசுவின் நெய் விட்டுக் குழைத்து உட்கொள்ளவும். தினம் காலையிலும் மாலையிலும் சாப்பிடவும்.

வலியுடனே கூடிய முழங்கால் கரப்பான் தீரும்.

குறிப்பு:

கிழங்கு வகைகளைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிப் பசுவின் பாலுடன் வேகவைத்துக் கொள்ளவும்.

12. சடைக்கிரந்தி, கிரந்திக் கரப்பானுக்கு மருந்து

கொடிவேலி வேர்குழிமீட் டான்சமூலங்
குணமான வுள்ளிவசம் பிவையொன்றுக்கே
யிடையைந்து காசாகு மிதைநறுக்கி
யெள்ளினெண்ணெய் சேரரையிற்
போட்டெரித்தே
யடைவாய்நற் பதத்திறக்கி யேவடித்தே
யரியகல சந்தனில்வைத் ததைமேற்பூசச்
சடைக்கிரந்தி யுடன் சிலந்தி கரப்பான்றீருஞ்
சத்துவமா மிம்முறைகை கண்டதாமே. 15

(இ-ள்)

கொடிவேலிவேர்ப்பட்டை
நத்தைச்சூரிச்சமூலம்
வசம்பு

இவைகளை வகைக்கு 5 காசெடை வீதமெடுத்து நசுக்கி, நல்லெண்ணெய் ½ சேருடன் சேர்த்து, அடுப்பின்மேல் ஏற்றி எரித்துப் பக்குவமாக வடிக்கவும். இதையொரு புதுக் கலசத்தில் பத்திரப்படுத்திச் சடைக்கிரந்தி, கிரந்தி கரப்பான் முதலிய புண்களின் மேலே பூசவும். அவைகள் தீரும்.

13. கழலை, கரப்பான், சிலந்திக்கு

நல்லெண்ணெய் வாகையிலைச் சாறிரண்டு
நயமாகச் சமன்கொடுக்கப் பெருங்கரப்ப
னில்லாமற் போமின்ன மொன்றுகேளு
நிலையான பங்கிலைநன் னாரிவேருஞ்
சொல்லுகருஞ் சீரகமிம் மூன்றுங்காடித்
தோயமதை விட்டரைத்துக் கொதிக்கவைத்து
கல்லான கழலைகரப் பன்சிலந்தி
கண்டவுடன் மேற்பூசத் திருந்தானே. 16

(இ-ள்)

நல்லெண்ணெய (¼ சேர்)
வாகையிலைச்சாறு ,,

இவ்விரண்டையுமொன்று கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும். பெருங்கரப்பான் ரோகந்தீரும்.

புங்கின் இலை
நன்னாரி வேர்
கருஞ்சீரகம்

இம்மூன்றையும் சமனெடை (வகைக்கு 1 வராகனெடை) எடுத்துக் காடிவிட்டரைத்துக் கொதிக்க வைத்துக் கழலை, கரப்பான், கிரந்தி முதலியவைகளின்மேல் பூசவும். அவைகள் தீரும்.

14. சடைக்கிரந்திக்குக் "குக்குலு கிறுதம்"

குக்குலுநாற் கழஞ்சையொரு பாண்டத்திட்டுக்
குணமான வேப்பிலையின் சாறுநாழி
யொக்கவிட்ட பின்வேக வைத்தெடுத்தே
யுயர்வெள்ளைக் குங்கிலிய மிருகழஞ்சு
தக்கநெல்லிக் காய்கெந்தி யிருகழஞ்சு
தன்னுடனே மூவகைமுன் சாறுதன்றாற்
பக்குவமா யரைத்தாவி னெய்யோர் நாழி
பாங்காய்விட்டேபதமாய்க் காய்ச்சிவாங்கே 17

வாக்கியனெய் தனைக்கடுகி னுடனிரண்டு
வராகனெடை யருந்திடவே சடைக்கிரந்தி
யேங்கவரு கரப்பனெலா நீங்கிப்போகு
மிம்முறைகை கண்டதிதை யெளிதாய்செய்வாய்
பூங்கமல மாதுவளர் சோழநாடன்
பொன்னிந்தித் துறையாளன் பொன்னாரிஞ்சி
யோங்குமளகைக்கதிபன் மன்னர்மன்ன
னுயர்சரபேந்திரபூப னுரைத்தவாறே. 18

(இ-ள்)

குக்கில் 4 கழஞ்செடுத்து (½ பலம்) ஒரு பாத்திரத்தில் இட்டு வேப்பிலைச்சாறு 1 படி விட்டு, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும். சாறுசுண்டியபின்பு அதை இறக்கிக் குக்கிலை அலம்பி அதனுடன்

சுத்திசெய்த வெள்ளைக் குங்கிலியம் 2கழஞ்சு
நெல்லிக்காய் கெந்தகம் 2கழஞ்சு

இவைகளைச் சேர்த்துக் கல்வத்திலிட்டு வேப்பிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பசுவின் நெய் 1 படியுடனே கூட்டி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து இறக்கவும்.

இதைக் கடுகுடனே (வண்டல்) 2 வராகனெடை அள வெடுத்துச் சாப்பிடவும்.

சடைக்கிரந்தி, கரப்பான் முதலானவை தீரும்.

15. விடக்கரப்பானுக்கு எண்ணெய்

வெங்காயம் பூவரசு துளசிகுப்பை
மேனிகஞ்சாங் கோரையிலை பெருங்கரந்தை
சங்கங்குப் பியுங்கொழி யவரைகையாந்
தகரையாடா தோடைநற் பொன்னாங்காணி
மங்காத வுப்பிலியி னிலையும்புங்கும்
வட்டமெனுங் கிலுகிலுப்பைமணித்தக்காளி
பங்கமிலகொட் டைக்கரந்தை யவரையிந்தப்
பதினெழு வகையிடித்துச் சாறுவாங்கே. 19

வாங்குவாய் வகைக்குக்காற்சேரகாக
வளமான மாவெண்ணெய் நெய்
நல்லெண்ணெய்
யீங்கிவைமூன் றும்வகைக்கோர் சேரதாய்ச்சேர்த்
தினியசீந்திற் கொடியோட முக்கிராவேர்
பாங்காய்வெள் ளறுநில வேம்பினோடு
பகர்நஞ்சுண் டாறுமரைப் பலம்வகைக்கு
நீங்காமல் வெந்நீரி லரைத்தெடுத்து
நேர்மையா யெண்ணெய்தனிற் கலந்துக்
கொள்ளே. 20

கலந்துகொள்வாய் முன்சாறு மெண்ணெய்தன்னிற்
கைபாக மாயடுப்பில் வைத்துக்காய்ச்சி
நலமான மெழுகினுட பதம்வந்தக்கா
னாட்டமாய்ப் பார்த்திறக்கிக் கலசந்தன்னில்

நிலையாக வடித்துவைத்துக் கொண்டபின்பு
நிதமுதையந் தனிலொருகா செடையருந்தில்
விலகாத விடக்கரப்பான் வீக்கமெல்லாம்
விட்டோடிப் போகுமிது மெய்யதாமே. 21

(இ-ள்)

வெங்காயச்சாறு
பூவரசந்தழைச்சாறு
துளசிச்சாறு
குப்பைமேனிச்சாறு
கஞ்சாங்கோரையிலைச்சாறு
பெருங்கரந்தைச்சாறு
சங்கங்குப்பிச்சாறு
கோழியாவரைச்சாறு
கையாந்தகரைச்சாறு
ஆடாதோடையிலைச்சாறு
பொன்னாங்காணிச்சாறு
உப்பிலிக்கொடியின்சாறு
புங்கந்தழைச்சாறு
வட்டக்கிலு கிலுப்பைச்சாறு
மணத்தக்காளிச்சாறு
கொட்டைக்கரந்தைச்சாறு
அவரையிலைச்சாறு

முதலானவைகளை வகைக்கு ¼ சேர் வீதம் எடுத்துக் கொண்டு, அதனுடன்

பசுவின் வெண்ணெய்	1 சேர்
,, நெய்	,,
நல்லெண்ணெய்	,,

இவைகளையொன்று கலந்து

சீந்தில்கொடி	அமுக்கிராக்கிழங்கு
வெள்ளறுகு	நிலவேம்பு
பெருமருந்து	சிலந்திக்கொடி

முதலான சரக்குகளை வகைக்கு ½ பலமெடுத்து அம்மியின்மேலிட்டு, ஷி சாற்றிலேதேனுமொன்றை விட்டு நன்றாக அரைத்துச் சாறுகலந்த எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்து பதத்தில் இறக்கவும். இந்த மருந்தை ஒரு புதுக்கலசத்தில் வைத்துப் பத்திரப்படுத்தித் தினம் அதிகாலையில் 1 வராகனெடை சாப்பிடவும்.

நீண்ட நாளான விஷக்கரப்பான், வீக்கம் முதலானவைகள் தீரும்.

குறிப்பு:

98 நெ. சுவடியில் "நஞ்சுண்டான்" என்பதற்குச் சிலந்திக்கொடி என்று பெயர் காணப்படுகிறது. அதற்குப் பதில் கிரந்தி நாயகத்தை எடுத்துக் கொள்ளலாமென்று தோன்றுகிறது.

16. ஊதுகரப்பானுக்கு மருந்து

நெருஞ்சிவேர் சங்கின்வேர் கொழுந்துகீழ்காய்
நெல்லிவேர் காட்டுமல் லிகையுந்தண்டும்
பருங்குளரி யிலைதண்டு கோவைத்தண்டும்
பகிலந்தை யிலைசிறுபுள் ளடியிதெல்லா
முரியபதக் குத்தண்ணீருடனடுப்பி
லுண்மையாய்க் காய்ச்சிநா னாழியாக்கி
யருந்திடவே யூதுகரப் பன்கடரும்
அருமையா மிம்முறையை யறிந்துபாரே. 22

(இ-ள்)

நெருஞ்சில்வேர்	சங்கம்வேர்
சங்கங்கொழுந்து	கீழாநெல்லிவேர்
காட்டுமல்லிகையிலை	காட்டுமல்லிகைத்தண்டு
குளரியிலை	குளரித்தண்டு

கோவைத்தண்டு	உப்பிலிக்கொடி
இலந்தையிலை	சிறுபுள்ளடி

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து 2 மரக்கால் ஜலம் விட்டு, 4 படியாக (பட்டணம் படிக்கு ½)க் கஷாயம் செய்து சாப்பிடவும்.

ஊது கரப்பான் தீரும்.

17. பித்த கரப்பானுக்கு

ஏலமக்கி ராக்கார மிலாமிச்சம்வேர்
இலவங்கம் பழம்புளிநெற் பொரிவல்லாரை
சீலமுள வெட்டிவேர் வில்வத்தின்வேர்
சீரகங்கோட் டம்புளியா ரையுமேநெல்லி
கோலவதி மதுரமிவை சமமாய்க்கொண்டு
குணமான பசுவின்பா லாலரைத்துச்
சாலவரைப் படிபாலில் வேகவைத்த
சாரமுண்ணிற் பயித்தியமாங் கரப்பான் போமே.23

(இ-ள்)

ஏலக்காய்	அக்கிராக்காரம்
இலாமிச்சம்வேர்	கிராம்பு
பழம்புளி	நெற்பொறி
வல்லாரை	வெட்டிவேர்
வில்வவேர்	சீரகம்
கோஷ்டம்	புளியாரை
நெல்லிவற்றல்	அதிமதுரம்

இவைகளை வகைக்குச் சமனெடை எடுத்து (1 வராகனெடை) அம்மியின்மேல் வைத்துப் பசுவின்

பால்விட்டு நன்றாக அரைத்து, ½படி பசுவின்பாலில் கலக்கிக் கொதிக்க வைத்துப் பருகவும்.

பித்த கரப்பான் தீரும்.

18. செங்கரப்பான், விடக்கரப்பான் முதலானவைகளுக்கு

கொடிவேலி மிளகரணை செங்கதாரி
கொன்றையுந்தூ துவளைசிறுகுறிஞ்சாசங்கோ
டடைவான பூவரசு பெருங்குருந்த
மாடாதோ டைகருவேல் சங்கங்குப்பி
திடமான குன்றிகழற் கொடிபாவட்டை
சின்னிபிராய் தழுதாழை வேம்புதேற்றா
னுடனேயுத் தாமணிமுக் குருந்தமிண்டோ
டுயர்சத்திச் சாறடையுகின்னங்கேளே. 24

இன்பமுறுங் காட்டுவிளா புலிதுடக்கி
யிசைந்தபெரு மரத்தினோடிவையின்வேரும்
பன்னுகருஞ் சீரகநீர் மேனேருப்புப்
பகராடு தீண்டாத பாளையோடே
மன்னுகருங் குங்கிலியங் கொல்லங்கோவை
மருவியவிவ் வகைகளுக்கோர் பிடியதாகு
முன்னியபேய்க் கொம்மட்டிக் காயைந்தாகு
முதிரானகடுக்காயு மீரைந்தாமே. 25

ஈருள்ளி யறுநாழி பெருங்கிழங்கு
மியலுங்கற் றாழையின்ற சருகுங்கோவை
நேர்கிழங்கிம் மூன்றுவிளாங் காய்மட்டாக
நீங்காதே யிடித்தரைத் தோணடத்
தெண்ணெய்

சேரேட்டிற் போட்டேரித்தே யளவாயுண்ணிற்
செங்கரப்பப் விடக்கரப்பான்றேகந்தனினிற்
சார்கொள்ளிக் கரப்பனோ டுங்கரப்பன்
றளர்கட்டுங் கரப்பனெலாந் தவிருந்தானே 26

(இ-ள்)

கொடிவேலிவேர்	மிளகரணை
செங்கதாரிப்பட்டை	கொன்றை
சிறுகுறிஞ்சாவேர்	சங்கம்வேர்
பூவரசம்வேர்	பெருங்குருந்து
ஆடாதோடைவேர்	சங்கங்குப்பிவேர்
குன்றி	கழற்கொடி
பாவட்டை	சின்னி
பிராய்	தழுதாழை
வேம்பின்வேர்	தேற்றாம்வேர்
உத்தாமணி	முக்குருந்தைவேர்
இண்டு	கற்றாழைவேர்
பெருமருந்து	தூதுவளைவேர்
கருவேலம்வேர்	

இவைகளின் வேர் வகைக்கு 1 பலம்

கருஞ்சீரகம்	நீர்மேல்நெருப்பு
ஆடுதீண்டாப்பாளை	கருங்குங்கிலியம்

இவைகள் வகைக்கு ஒரு பிடி

முற்றியபேய்க் கொம்மட்டிக்காய் 5 (எண்ணிக்கையில்)

கடுக்காய்	10 ,,
வெள்ளைப்பூண்டுச்சாறு	6 படி

பெருங்கிழங்கு கற்றாழைச்சருகு
கோவைக்கிழங்கு

இம்மூன்றும் வகைக்கு ஒரு விளாங்காய்ப்பிரமாணம் எல்லாச் சரக்குகளையும் கல்லுரலிலிட்டிடித்து, அம்மியின் மேல் வைத்து நன்றாக அரைத்து ஆமணக்கெண்ணெய் 8 சேருடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தி லிறக்கவும்.

இதில் ஒரு (துட்டெடை) எடுத்துப் பசுவின் பாலுடனே உட்கொள்ள

செங்கரப்பான், விடக்கரப்பான், கொள்ளிக்கரப்பான், ஓடுகரப்பான், கட்டுக்கரப்பான், முதலானவைகள் தீரும்.

19. கரப்பானுக்கு

நன்னாரிவேர் நெருஞ்சில்வேர் சங்கம்வேர்நத்
தைச்சூரி யின்வேரீ சுரவேருள்ளி
வன்சிற்றா விரையின்வேர் வசம்பிவ்வேழு
வகைசமஞ்சேர்த் தரைத்தெண்ணெய்
தனியேகாய்ச்சி
யன்பாக வடித்துண்ணிகரப்பனேகு
மதனைமேற் பூசநல மாகுமுண்மை
பொன்மாது திலகமெனுஞ் சரபபூபன்
பூதலத்தோர்க் கிம்முறையைப்
புகன்றவாறே. 27

(இ-ள்)

நன்னாரிவேர் நெருஞ்சில்வேர்
சங்கம்வேர் நத்தைச்சூரி வேர்
பெருமருந்துவேர் வெள்ளைப்பூண்டு
ஆவாரைவேர் வசம்பு

இவைகளை வகைக்கு (1 வராகனெடை) வீதமெடுத்துத் தூள்செய்து, ஆமணக்கெண்ணெய் 1 சேரில் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதில் ஒரு துட்டெடை உட்கொள்ள கரப்பான் தீரும். இத்தைலத்தைக் கரப்பான் புண்களிலும் இடலாம்.

குறிப்பு:

செய்யுளில் 7 வேர் வகைகள் என்று காணப்படினும், வாஸ்தவத்தில் 8 வகைகள் இருப்பதைக் கவனிக்கவும்.

20. விடபாகத்திற்கு

கரிசாலை வேளைமுன்னை பொன்னாங்கானி
கரிப்பாலை யழிஞ்சிலிவ்வேர் பலம்வகைக்குச்
சரிபாக மாயரைத்தோர் சேர்வேப்பெண்ணெய்
தனிற்கலந்து காய்ச்சியரைப் பலமதாகப்
பரிவாக வேயிருபோ துண்டுவந்தாற்
பறந்தோடும் விடபாக மென்றதெல்லா
மரிதான விம்முறையை யுலகோருய்ய
வழகைவாழ் சரபேந்திர னருளிதாமே. 28

(இ-ள்)

கரிசாலங்கண்ணி	நல்லவேளை
முன்னை	பொன்னாங்காணி
கரிப்பாலை	அழிஞ்சில்

இவைகளின் வேர்கள் வகையொன்றுக்கு ஒரு பலம் எடுத்து, அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்து, வேப்பெண்ணெய் 1 சேருடன் குழப்பி, அடுப்பின் மேல் ஏற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இதில் வேளைக்கு ½ பலம் வீதம் தினம் இருவேளை காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

விஷபாகங்கள் தீரும்.

21. வீடபாகத்திற்கு மற்றொரு மருந்து

கற்றாவி னெய்நாழி பானானாழி
கதித்தறு கஞ்சாறு நாழிதன்னில்
நற்பாலை முகிழ்கோட்ட மதுரமூன்றும்
நயமாயொவ் வொன்றுக்கோர் பலமரைத்தே
யுற்பனமா கக்கரைத்துக் காய்ச்சியுண்பா
யொருவேளைக் கொருவரா கனெடையாகத்
துர்பலஞ்செய் விடபாகம் நீங்கிப்போகுஞ்
சொற்பமல விம்முறையைச் செய்துபாரே 29

(இ-ள்)

பசுவின்நெய்	1 படி
பசுவின் பால்	4 படி
அருகம்புல்லுச்சாறு	1 படி

இவைகளை ஒன்று கலந்து

நற்பாலைமொட்டு	கோஷ்டம்
அதிமதுரம்	

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துப் பசுவின் பால் விட்டரைத்து, சாறுகூட்டிய நெய்யுடனே கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவத்தில் இறக்கவும்.

இதில் 1 வராகனெடை அளவு எடுத்துப் (பசுவின் பாலுடனே) சாப்பிட விஷகரப்பான் தீரும்.

22. கரப்பானுக்கு மருந்து

கொடிவேலி நிலக்கடம்பு செங்கதாரி
குணமான வாதண்டை புலிதொடக்கி
யடைவுளநன் னாரியும்வெள் ளறுகுஞ்சங்கு
மன்பான சென்னகர மீசன்மூலி
திடமான விவைபத்தின் வேர்களோடு
திருந்தியதோர் புளிநரளைக் கிழங்குஞ்சேர்த்தே
யெடைச்சமனாய்க் கொண்டிடித்து வடித்தெடுத்தே
யிதமாயெள் ளெண்ணெயிற்போட்
டெரித்திடாயே. 30

எரித்தபின்பு மெழுகுபத மானவாறே
யெட்பொடிநற் றவிடிரண்டுஞ் சற்றுத்தூவி
யுரிமையுள பக்குவத்தி லிறக்கியேதா
னுண்மையாய் முலைப்பாலி லுடன்கலந்தே
யிருபோதும் புகட்டிடவே கரப்பானெல்லா
மேகிவிடுந் தேகசௌக் கியங்களுண்டாந்
தருமகுண வானளகைக் கதிபனெங்கள்
சரபபூ பதியுணர்ந்து சாற்றும்வாறே. 31

(இ-ள்)

கொடிவேலிவேர்	நிலக்கடம்பு
செங்கதாரி	ஆதண்டை
இண்டு	நன்னாரி
வெள்ளறுகு	சங்கம்வேர்
சென்னகரம்	பெருமருந்து

இவைகளின் வேர் வகைக்கு (ஒரு பல) மெடுத்து, அதனுடன் புளிநரளைக்கிழங்கு (ஒரு பலமு)மிட்டு யாவற்றையும் கல்லுரலில் இட்டிடித்து, நல்லெண்ணெய் (5 சேருடன்) கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகுபதமானபின்

எள்ளின் தூள் தவிடு (வகைக்கு ஒரு பலம்) இவ்விரண்டையும் அதில் தூவிப் பக்குவமாக இறக்கவும். இந்த எண்ணெயில் 1 வராகனெடை யெடுத்து, முலைப்பாலுடன் குலுக்கிக் குழந்தைகளுக்குப் புகட்டவும். கரப்பான் தீரும். உடம்பும் நன்றாகத் தேறும்.

23. விடபாகம், வீக்கம், வாதக்கரப்பான் முதலானவைகளுக்கு

முருக்கின்வேர் கழற்கொடி வேர்க்கீழ்க்காய்
நெல்லிமுதிர்வீழிவேரும்பாவட்டைவேருங்
கருவேப்பந் தண்டுசா றடைக்கிழங்கு
கனத்திடுமுத் தமதாளி வேரோரெட்டு
மொருபிடியாஞ் சுக்குபல மொன்றங் கூட்டி
யொருங்காகநறுக்கிப்பானையிலேபோட்டுத்
திறமாய்நாற் படிதண்ணீர் விட்டுக்காய்ச்சிச்
சிறுகவே யெட்டொன்றாயிறக்கிக்
கொள்ளே 32

இறக்கியந்தக் கடாயத்தை யந்திசந்தி
யிருபோது முண்டிடில்வாதக்கரப்பான்
குறையாத வீக்கமிவிட பாகத்தோடு
கூறுமல சலபந்தங் குணமதாகு
மரைகின்ற விம்முறையின் படிதப்பாம
லாதரவாய்ச் செய்திடுவீர் தஞ்சையாளு
மிறைவனாஞ் சரபபூ பதியுணர்ந்தே
யிதமாக வருளியநன் முறையிதாமே. 33

(இ-ள்)

முருக்கின்வேர்	கழற்கொடிவேர்
கீழாநெல்லி	வீழிவேர்
பாவட்டைவேர்	கருவேப்பந்தண்டு
சாறடைக்கிழங்கு	உத்தாமணிவேர்

இவைகளின் வேர்கள் வகைக்கு ஒரு பிடி

சுக்கு 1 பலம்

இவைகளச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு பானையிலிட்டு 4 படி தண்ணீர்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகக் காய்ச்சி இறக்கவும்.

இக்கஷாயத்தைத் தினம் இருவேளை காலையிலும் மாலையிலும் (ஒரு அவுன்ஸ்) சாப்பிடவும்.

வாதகரப்பான், வீக்கம், விஷம், மலச்சிக்கல், நீரடைப்பு முதலியவைகள் தீரும்.

24. கரப்பானுக்கு

செருப்படிவெள் ளறுகுசா றடைக்கற்றாழை
சீந்திலுடன் கிரந்திநா யகமகத்தி
கருணையின்ற கிழங்கவுரி துவளத்தோடே
கரிசாமை யிவைபதினோர் வகையொன்றுக்கே
யுரிசாறு கற்கங்கா ரெள்ளுங்கோட்டத்
துடன்மிளகு சுக்குதிப்பிப் பிலிவசம்பு
கருஞ்சீர கம்பங்கம் பாளைநெல்லிக்
கடுக்காய்ச்சந் தனமேலந் தான்றிக்காயே. 34

காய்ந்தகார் போகரிசி புழுகுசட்டங்
கனமான செவ்வல்லித் தேவதார
மாய்ந்தவில வங்கம்பச் சிலையினோடே
யழுக்கிரா வேரினையொவ் வொன்றினுக்கே
வாய்ப்பாயோர் கழஞ்சிடித்தெள்
ளெண்ணெயாவெனெய்
வகைக்குரிகூட் டிங்கலந்து வடித்தருந்தித்
தோய்ந்திடமே லினும்பூசக் கரப்பானெல்லாந்
தொலைந்துபோங் கைமுறையாய்த்
தொகுத்துச்செய்யே. 35

(இ-ள்)

சிறுசெருப்படி	வெள்ளறுகு
சாறடைக்கிழங்கு	கற்றாழை
சீந்தில்கொடி	கிரந்திநாயகம்
அகத்தி	கருணைக்கிழங்கு
அவுரி	துளசி
கையாந்தகரை	

இச்சரக்குகளின் சாறுகள் வகைக்கு ½ படி வீதமெடுத்து ஒன்று கலந்து

காட்டெள்ளு	கோஷ்டம்
சுக்கு	திப்பிலி
மிளகு	வசம்பு
கருஞ்சீரகம்	ஆடுதீண்டாப்பாளை
நெல்லிவற்றல்	கடுக்காய்த்தோல்
சந்தனத்தூள்	ஏலக்காய்
தான்றிக்காய்த்தோல்	கார்போகவரிசி
புனுகுசட்டம்	செவ்வல்லிக்கொடி
தேவதாரு	கிராம்பு
கிச்சிலை	அமுக்கிராக்கிழங்கு

முதலான சரக்குகளை வகைக்கு (1¼ வராகனெடை வீதம்) எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, மேலே சொன்ன ஏதேனும் ஒரு சாறு விட்டு நன்றாக அரைத்து,

நல்லெண்ணெய்	½ படியும் (2½ சேர்)
பசுவின் நெய்	½ படியும் ,,

விட்டு எல்லாவற்றையுமொன்று கலந்து அடுப்பின்மேல் ஏற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இம்மருந்தில் ஒரு ஸ்பூன் அளவெடுத்து உள்ளுக்குச் சாப்பிடவும். இதையே கரப்பான் புண்களின் மேலும் பூசவும். அவை குணமாகும். கைகண்டது.

25. கரப்பான், கிரந்திகளுக்கு "அறுகுநெய்"

நண்பான வெள்ளறுகின் சாறுதானும்
நானாழி பசுவினெய்பால் வகையொன்றுக்கு
வண்பாக நாழியுரி கலந்துகாய்ச்சிப்
பாங்காகக் கூட்டுகற்கத் திரவியங்கேள்
செண்பகப்பூ விருவேலி மதுரங்கோட்டஞ்
செங்கழுநீர்க் கிழங்குடசந் தனநன்னாரி
திண்பாலை மரத்தின்வே ரிலாமிச்சம்வேர்
செய்யதா மரைவளைய மிவையீரைந்தே. 36

ஈரைந்தும் வகையொன்றுக் கோர்கழஞ்சா
யிடித்தரைத்தெண் ணெயிற்கரைத்துக்
காய்ச்சிக்கொண்டு
சீராக வடித்துநல் கலசந்தன்னில்
சேர்த்துதையந் தனிலளவாய்ச் சுட
வைத்துண்ணிற்
றீராத கிரந்தியொடு கரப்பானெல்லாந்
தீர்ந்துவிடுந் தேகசௌக் கியமுண்டாகும்
வீராதி வீரனெனுஞ் சரபபூபன்
மேதினியோர்க்கிம்முறையை விதித்தவாறே.37

(இ-ள்)

வெள்ளறுகுச்சாறு	4 படி
பசுவின்நெய்	1½ படி
பசுவின் பால்	1½ படி

இவைகளையொன்று கலந்து

செண்பகப்பூ	வெட்டிவேர்
அதிமதுரம்	கோஷ்டம்
செங்கழுநீர்க்கிழங்கு	சந்தனத்தூள்
நன்னாரிவேர்	பாலைவேர்
இலாமிச்சைவேர்	தாமரையிலையின்உட்சுருள்

இச்சரக்குகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துப் பசுவின் பால் விட்டரைத்துச் சாறுகூட்டிய நெய்யுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதனையொரு புதுக்கலசத்தில் பத்திரப்படுத்தித் தினம் காலை வேலைகளில் 1 ஸ்பூனெடுத்துச் சுட வைத்துச் சாப்பிடவும்.

தீராத கிரந்திகள், கரப்பான்கள் முதலியவைகள் குணமாகி தேக சௌக்யமும் உண்டாகும்.

குறிப்பு:

98 நெ. சுவடியில் பசுவின் நெய் என்பதற்கு பதில் பசுவெண்ணெய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

26. செங்கரப்பானுக்கு

செங்கதாரி யின்வேரு மெருக்கின்வேருஞ்
சிறுகுறிஞ்சா வேருநல் குறட்டைவேரும்
பங்கமிலாத்தலைச்சுடுவள் ளியின்வேராவின்
பாலிலரைத்துள்ளிவசம் பதுவுங்கூட்டி
யிங்கிதமாய் நல்லெண்ணெய் விட்டுக்காய்ச்சி
யியல்பாக வடித்தருந்தி மேலும்பூசிற்
செங்கரப்பன் றீர்ந்துவிடும் நிறையறிந்து
செய்திடுவீரிம் முறையைத் திறமாய்த்தானே.38

(இ-ள்)

செங்கதாரிவேர்	எருக்கம்வேர்
சிறுகுறிஞ்சான்	குறட்டைவேர்
பெருமருந்துவேர்	பூண்டு
வசம்பு	

இவைகளைச் சமனெடுத்து (1 பலம்) பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்து நல்லெண்ணெய் (1½ சேருடன்)

கூட்டி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்து உள்ளுக்குச் சாப்பிடவும். இதையே செங்கரப்பான் புண்களின் மேலும் பூசவும். அவை தீரும்.

27. பெருங்கரப்பான், ஒடுகரப்பானுக்கு

நிலவேம்பு சிறுகுறிஞ்சா சிவனார்வேம்பு
நீர்முள்ளி யீசுரவேர் மணித்தக்காளி
நலமான வந்தரத்தா மரைகிரந்தி
நாயகமுத் தாமணிபேய்ப் பீர்க்கங்காயுஞ்
சொலுந்துளசி நன்னாரி யிவையின்வேருஞ்
சுகமான வசம்புள்ளி யிவையொன்றுக்கு
விலைகாசி னெடையரைத்து வைத்துக்கொண்டு
விரும்பியதேங் காயெண்ணெய்
கூட்டிடாயே 39

கூட்டுவா யிலுப்பெண்ணெய் புங்கினெண்ணெய்
குணமான யெள்ளெண்ணெய் யிவையொன்றுக்கு
நாட்டமா யுழக்களவு சேர்த்தெரித்து
நயமாக வோர்காசி னளவுட்கொண்டு
வாட்டமிலா வோடுகரப் பான்புண்ணுக்கு
வளமாகப் பூசிடவே வாசியாகுந்
தாட்டிகனாஞ் சரபபூ பதியுணர்ந்து
சாற்றியவிம் முறையிதனை யறிந்துபாரே. 40

(இ-ள்)

நிலவேம்பு சிறுகுறிஞ்சான்
சிவனார்வேம்பு நீர்முள்ளி

பெருமருந்து	மணித்தக்காளி
அந்தரத்தாமரை	கிரந்திநாயகம்
உத்தாமணி	பேய்ப்பீர்க்கங்காய்
துளசி	நன்னாரி

இவைகளின் வேர் வகைக்கு 1 வராகனெடை

வசம்பு	பூண்டு

இவ்விரண்டும் வகைக்கு 1 வராகனெடையும், எடுத்து இடித்துத் தண்ணீர்விட்டு நன்றாக வரைத்துத்

தேங்காயெண்ணெய்	1 உழக்கு
இலுப்பெண்ணெய்	1 ,,
புங்கெண்ணெய்	1 ,,
நல்லெண்ணெய்	1 ,,

முதலானவைகளுடன் ஒன்று கலந்து, அடுப்பின்மேல் ஏற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு வராகனெடை எடுத்து உட்கொண்டு, புண்களின் மேலேயும் போடவும்.

ஓடுகரப்பான் தீரும்.

28. கரப்பானுக்கு

நிலவேம்பா ணாப்பட்டை புங்கம்பட்டை
நெடியதூ துவளையின்வேர் சிவனார்வேம்பு
நிலவாகை வேர்சங்கத் தாரிப்பட்டை
நிலைத்தகொடி வேலிவேர் மணித்தக்காளி
யிலையாறு முடக்கொத்தான் கண்டகாரி
யின்வேர்காத் தொட்டிவேர் நாவற்பட்டை
நலமானகற்குறட்டை வேர்கிரந்தி
நாயகம்பேய்ப் புடலுமிளகரணைவேரே. 41

வேராகுந் தைவேளை சிறுகுறிஞ்சா
வேர்தவசு முருங்கைமா வலிங்கப்பட்டை
சீரான பெருமரத்தின் பட்டை யோடு
சென்னகரப் பட்டைநரி விளாவின்பட்டை
சாரமுறு பொன்முசுட் டை வேரும்வெள்ளைச்
சாறடைவே ருடன்செப்புநெருஞ்சியின்வேர்
நேராக விவைவகைக்கோர் பலத்தைக்கூட்டி
நிழல்தனி லுலர்த்தியிடித்
தெடுத்துக்கொள்ளே 42

எடுத்தபொடி தன்னையே ரண்டத்தெண்ணெய்
யேற்றதோர் நான்குசேர் தனிற்கலந்தே
யடுப்பேற்றிப் பதமாகக் காய்ச்சிவாங்கி
யறியகல சத்தினிலே வைத்துக்கொண்டே
யெடுத்தளவா யுண்டுவரிற் கரப்பானெல்லா
மேகிவிடுங் ககைகண்ட முறையீதாகுங்
கடற்குவலை யம்புரக்குந் துளசபூபன்
காதனாஞ் சரபேந்திரன் கண்டவாறே. 43

(இ-ள்)

நிலவேம்பு
புங்கம்பட்டை
மணித்தக்காளியிலை
செங்கதாரிப்பட்டை
முடக்கொத்தான்
காத்தொட்டிவேர்
குறட்டைவேர்
பேய்ப்புடல்
தைவேளை
தவசுமுருங்கை
பெருமரப்பட்டை
நரிவிளாப்பட்டை
வெள்ளைச்சாறடைவேர்
சிவனார்வேம்பு
ஆவாரைவேர்ப்பட்டை
தூதுவளைவேர்
நிலவாகைவேர்
கொடிவேலிவேர்
கண்டங்கத்திரி
நாகப்பட்டை
கிரந்திநாயகம்
மிளகரணைவேர்
சிறுகுறிஞ்சாவேர்
மாவலிங்கம்பட்டை
சென்னகரப்பட்டை
பொன்முசுட்டைவேர்
செப்புநெருஞ்சிவேர்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, நிழலில் உலர்த்திக்கொண்டு கல்லுரலில் இட்டிடித்துத் தூளாக்கி,

ஆமணக்கெண்ணெய் 4 சேருடன்

குழப்பியடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதையொரு கலசத்தில் பத்திரப்படுத்தி, வேளைக்கு 1 ஸ்பூன் வீதம் உட்கொள்ளக் கரப்பான்கள் அனைத்தும் தீரும். கைகண்டது.

29. கரப்பானுக்கு

ஏரண்டத் தெண்யெும்வெங் காயச்சாறு
யினாத வெருமைச்சா ணாகப்பாலும்
நேராக வகைக்குநாற் சேருஞ்சேர்த்து
நினைவாகக் காய்ச்சியே பதத்திறக்கிச்
சீராக வொருகரண்டி யளவுண்டக்காற்
றீருமே கரப்பனெல்லாம் பத்தியங்கேள்
காரமாம் புகையிலையும் புளியும்நீக்குக்
கைகண்ட முறையிதைப்போற் கண்டிலேனே 44

(இ-ள்)

ஆமணக்கெண்ணெய்	4 சேர்
வெங்காயச்சாறு	4 சேர்
கன்றுபோடாத எருமைக் கிடாரியின் சாணியைப் பிழிந்தெடுத்த நீர்	4 சேர்
எருமைப்பால்	4 சேர்

இவைகளை யொன்று சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதில் ஒரு கரண்டியளவு (1 ஸ்பூன்) உட்கொள்ளவும். கரப்பான்கள் தீரும்.

காரம், புளிப்பு முதலான சுவைகளுள்ள பதார்த்தங்களையும், புகையிலையையும் நீக்கவும். கைகண்ட மருந்தாகும்.

30. கர்ப்பிணி கரப்பானுக்கு

வாதகரப் பான்பட்டை பரங்கிப்பட்டை
வசம்புகம்பிப் பிசின்கருஞ்சீ ரகம்வெள்ளுள்ளி
பூதகரப் பான்பட்டை வேப்பம்பட்டை
புகலுஞ்செங் கத்தாரிப் பட்டைமஞ்சள்
சீதமுள கொத்தமல்லி கடுகுரோகிணி
சீரங்கத் தூரிமஞ்ச ளிவையீரேழு
மோதியவொவ் வொன்றுக்கோர் பலமதாகு
முயர்ந்தகடுக் காயிருப தாகச்சேரே. 45

சேர்ந்திடுவாய் செருப்படிகொட் டைக்கரந்தை
சின்னியிலை கோவையிலை மணித்தக்காளி
யூரநொச்சி கிரந்திநா யகமிரண்டி
னிலைகோழி யவரையிலை துளசிச்சாறுஞ்
சேரெட்டுப் பசுவின்பா னான்குசேருஞ்
சேர்நான்கே யீரவெங்கா யத்தின்சாறு
மேரண்டத் தெண்ணய்படி மூன்றுங்கூட்டி
யிதமாய்முன் மருந்ததனை யரைத்திடாயே 46

அரைத்திடுவாய் குளிர்ந்தநீ ருட்டிக்கொண்டே
யதனைவழித் தெண்ணெய்நல் சாற்றிற்போட்டு
கரைத்திரண்டு நாளிரவிப் புடலத்தில்வைத்து
கைபாக மாயடுப்பிற் சற்றுவைத்தே
யுரியவிளங் கொதியிட்டு வரும்பதத்தி
லுயர்கலசந் தனில்வடித்தே யுழக்குவீத
மருந்திடவிப் படியெட்டு நாளைக்கோர்நா
ளன்பாக நான்குமுறை கொடுத்திடாயே. 47

கொடுத்திடுவாய் கர்ப்பிணிக்கும் பாலர்க்குந்தான்
குணமாகுங் கரப்பனெல்லா மாறிநன்காங்
கடுகுபூசினிக்காய்கைப் புப்புளிப்பு
கருதாமற் பாலன்ன மருந்தவேணுந்
திடமான விம்முறைகை கண்டதாகுந்
திருவளர்கா விரியுடைதென் னளகையாளுங்
கடிகமழ்பூந் தொடைமார்பன் சரபபூபன்
கண்டுணர்ந்து சாற்றுமுறையிதுதப்பாதே. 48

(இ-ள்)

வாதகரப்பான்பட்டை	பரங்கிப்பட்டை
வசம்பு	கம்பிப்பிசின்
கருஞ்சீரகம்	வெள்ளைப்பூண்டு
பூதகரப்பான்பட்டை	வேப்பம்பட்டை
செங்கதாரிப்பட்டை	மஞ்சள்
கொத்தமல்லிவிதை	கடுகுரோகிணி
சீரகம்	கஸ்தூரி மஞ்சள்

இச்சரக்குகள் வகைக்கு 1 பலம்

முற்றிய கடுக்காய் 1 பலம்

பின்பு

செருப்படி	கொட்டைக்கரந்தை
சின்னியிலை	கோவையிலை
மணித்தக்காளி	நொச்சியிலை
கிரந்திநாயகம்இலை	கோழியாவாரையிலை

இவைகளின் சாறுகள் வகைக்கு 1 சேர்

துளசிச்சாறு	8 சேர்
பசுவின்பால்	4 சேர்
ஈரவெங்காயச்சாறு	4 சேர்
ஆமணக்கெண்ணெய்	3 படி

முதலானவைகளுள், கடைச்சரக்குகளை முதலில் இடித்து, அம்மியின்மேல் வைத்துக் குளிர்ந்த ஜலம் விட்டு நன்றாக அரைத்து விழுதாக்கிச் சாறுகூட்டிய எண்ணெயுடனே ஒன்று கலந்து ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு 2 நாட்களுக்குச் சூரிய புடமிடவும். பின்பு, இதை அடுப்பின் மேல் வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக கொதிக்க வைக்கவும். பதமானபின் இதை வடித்துப் புதுகலசத்தில் பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு உழக்கு எடுத்து 8 நாட்களுக்கொரு தடவை உட்கொள்ளவும். இவ்வாறு 4 முறை சாப்பிடவேண்டும்.

சிறுகுழந்தைகளுக்கும், கர்ப்ப ஸ்திரீகளக்கும் ஏற்படும் கரப்பான் தீரும்.

பத்தியம்:

கடுகு, பூசினிக்காய், கசப்புப் பதார்த்தங்கள் முதலியவைகளை நீக்கிவிடவும். மருந்து சாப்பிட்ட தினத்தன்று பால் சாதம் சாப்பிடவும். கைகண்ட முயோகும்.

31. ஊதுகரப்பான் முதலானவைகளுக்கு

வாகைமா விலுப்பையிலை மூன்றின்பட்டை
வளமான வெள்ளடம்பி னிலைநென்மாவிற்
பாகமாய்ச் சேர்த்திடித்தக் களியாய்கிண்டிப்
பருகிடவே திமிர்வாத நடுக்குவாதஞ்
சோகமுற வருமூது கரப்பனோடு
சொல்லாத கரப்பனெலாந் துலைந்துபோகுந்
தேசெளக் கியமுண்டாஞ் சரபபூபன்
திறமாக வாய்ந்துரைத்த முறையிதாமே. 49

(இ-ள்)

வாகைப்பட்டை இலுப்பைப்பட்டை
மாம்பட்டை வெள்ளடம்பிலை

இவைகளைக் கல்லுரலில் இட்டிடித்துச் சூரணஞ் செய்து அரிசிமாவுடன், கலந்து தண்ணீர் விட்டு, அடுப்பின் மேல் வைத்துக் களியாகச் செய்து சாப்பிடவும்.

திமிர்வாதம், நடுக்குவாதம், ஊது கரப்பான், வாதகரப்பான், முதலியவைகள் தீரும். உடம்பும் நன்றாகத் தேறும்.

32. கரப்பான், கிரந்திகளுக்கு

திரிகடுகுங் கரியசீரகமிந்நான்கு
சேர்வகைக்கோர் பலங்குக்கில் பலமைந்தாகு
மரியதோர் வெள்ளறுகு பலமூன்றிந்த
வாறையுமே கூட்டியிடித் ததைத்தூளாக்கிப்
பரியநல் சேலைகொண்டு வடியுங்கட்டிப்
பாண்டத்தி லிட்டுவெரு கடியதாக
விருபோதுண் டிடக்கரப்பன் கிரந்தியெல்லா
மேகுங்குக் கிலாதிச்சூ ரணமதாமே. 50

(இ-ள்)

சுக்கு	திப்பிலி
மிளகு	கருஞ்சீரகம்

இவைகள் வகைக்கு ஒரு பலம்

சுத்திசெய்த குக்கில்	5 பலம்
,, வெள்ளறுகு	3 பலம்

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணஞ்செய்து, வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதில் மூவிரல் கொண்ட அளவெடுத்துத் தினம் இருவேளை காலையிலும், மாலையிலும் (தண்ணீருடன்) உட்கொள்ளவும். கிரந்தி, கரப்பான் முதலானவைகள் தீரும்.

33. விடப்பாகம், விடவாயுவிற்கு

சங்கிலியாடாதொடையு முக்காவேளை
சாற்றியவெண் ணொச்சியிவை நான்குங்
கொண்டே
யங்கையா லோர்பிடியிட் டிடிக்கநற்சா
றதிலில்லாதிருந்தால்வெள் ளாட்டுநீராற்
றங்காமற் பிழிந்துவைத்தே யிருமாகாணிச்
சாறதனிற் கடுகுரோ கணிபலங்கால்
பங்கமில்சுக் கொருபலந்திப் பிலியின்மூலம்
பலமரைநல் லோமமது பலமைந்தாமே. 51

பலமரைதிப் பிலிமிளகு மரைப்பலந்தான்
பதினைந்து கடுக்காயொ டிவையேழ்கொண்டு
நலமாய்முன் சாறதனா லரைத்தெடுத்து
நற்றேற்றம் பழத்தினள வுண்டையுஞ்செய்
துலர்த்திக்குப் பியினிலடைத் திட்டீர்போது
முரியதே னிற்பனைவெல் லத்தினாதல்
கலந்தனுபா னஞ்செய்தே யருந்தத்தீருங்
கனத்தவிட பாகமுடன் வாயுத்தானே. 52

(இ-ள்)

சங்கிலை ஆடாதோடாயிலை
முக்காவேளையிலை வெண்ணொச்சியிலை

இவைகளை வகைக்கு ஒரு பிடி யெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சாறுபிழியவும். சாறு வேண்டிய அளவு கிடைக்காவிட்டால், வெள்ளாட்டு மூத்திரம் இரண்டு மாகாணி விட்டு இடித்துப் பிழியவும்.

கடுகரோகிணி ¼ பலம்
சுக்கு 1 பலம்

திப்பிலிமூலம்	½ பலம்
ஓமம்	5 பலம்
திப்பிலி	½ பலம்
மிளகு	½ பலம்
கடுக்காய்	15 (எண்ணிக்கையில்)

இவைகளை இடித்துச் சூரணித்துக் கல்வத்திலிட்டு, முன் சொன்ன சாறுவிட்டு நன்றாக (ஒரு நாள்) அரைத்துத் தேத்தாங்கொட்டை பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதை நிழலிலுலர்த்தி ஒரு பாட்டிலில் பத்திரப்படுத்தி, வேண்டும்போது தினமிருவேளை தேனிலோ அல்லது பனை வெல்லத்திலோ சேர்த்துச் சாப்பிடவும்.

விஷபாகம், வாயு முதலியவைகள் தீரும்

குறிப்பு:

98 நெ. சுவடியில் மூச்சு சுரமும் விடும் என்றும் காணப்படுகிறது.

33. விடபாக வீக்கத்திற்கும், கரப்பானுக்கும்

உய்யகொண் டான்வேறோர் பாக்கினேரா
யொருங்காக வ ரைத்துவெந்நீ ரிற்குழப்பித்
துய்த்திடுவா யொன்பதுநாட் காலைமாலை
சுட்டநீர் முள்ளிச்சாம் பலையானீரான்
மெய்வீக்கங் கரப்பனின்மேற் குழைத்துப்பூச
விலகுமிவை யோர்நான்கு தினமேதின்றால்
வையவீக் கங்கரைந்து நீரிறங்கு
மேலான விந்தபாக விரும்புவாயே. 53

(இ-ள்)

(1) எருமை முல்லை அல்லது கொய்யாவின் வேர் ஒரு பாக்களவெடுத்து, அம்மியின்மேல் வைத்து நன்றாக வரைத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

தினம் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். இவ்வாறு 9 நாட்கள் செய்யவும்,

நீர்முள்ளியைச் சமூலமாக எடுத்து ஒரு புதுச் சட்டியில் இட்டு அடுப்பின் மேலேற்றிக் கருக வறுத்துச் சாம்பலாக்கவும். இதில் ஒரு மூவிரல் கொள்ளுமள வெடுத்துப் பசுவின் மூத்திரத்துடன் குழைத்து

உடம்பு வீக்கம், கரப்பான் முதலியவைகளின் மேல் பூசவும். 4 நாட்களுள் வீக்கங்கள் குறைந்து சிறுநீருமிறங்கும்.

35. விடப்பாகம், வீக்கத்திற்குப் "பஞ்சத்திரவ்ய நெய்"

பசுவின்பா னாழியுங்கோ மியங்கரைத்து
பாத்திரத்திற் றெளியவைத்த நீருநாழி
பசுவின்மோ ரிருநாழி தயிருநாழி
பாங்காய்கோ சலநாழி யிவையெல்லாஞ்சேர்த்
துசிதமுள தேவதா ரங்கிராம்பு
முய்யங்கொண் டான்வேருங் கடுகரோணி
யிசைந்திடுபூ தக்கரப்பான் முதிர்ந்தபட்டை
யினித்தவதி மதுரமிவை யரைத்திடாயே. 54

அரைத்திடுவா யொவ்வொன்றுக் கோர்கொட்டைப்
பாக்களவா கவாவினெய் நாழிகூட்டி
கரைத்திடுவா யிவையெல்லா மொன்றாய்ச்சேர்த்துக்
கைபாக மாய்க்காய்ச்சி வடித்துக்கொண்டு
சிரத்தினிற்பூ சிடவீக்கம் விடபாகங்கள்
தீர்ந்துசௌக் கியமாகு மிதன்பேர்பஞ்சத்
திரவியநெய் முறையிதனை யுணர்ந்து செய்வீர்
தீரன்சர பேந்திரமால் செப்பும்வாறே. 55

(இ-ள்)

பசுவின் பால்	1 படி
பசுவின் மூத்திரம்	1 படி
பசுவின் மோர்	2 படி
பசுவின் தயிர்	1 படி
பசுவின் சாணியைக் கரைத்துத் தெளிய வைத்தநீர்	2 படி

இவைகளை யொன்று கூட்டி,

தேவதாரம்	கிராம்பு
எருமைமுல்லைவேர்	கடுகரோகிணி
பூதகரப்பான்பட்டை	அதிமதுரம்

முதலான சரக்குகளை வகைக்கு ஒரு பாக்களவு எடுத்து, மேல்சொன்ன திரவங்களிலேதேனும் ஒன்றை விட்டு நன்றாக அரைத்து

பசுவின் நெய் 1 படியும் (5 சேர்) கூட்டி, எல்லாவற்றையும் ஒன்று கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடித்திறக்கவும். இந்த நெய்யைத் தலையில் தேய்த்துவர, வீக்கம், விஷபாகங்கள் முதலியவைகள் தீர்ந்து குணமுண்டாகும்.

குறிப்பு:

98 நெ. சுவடியில் "கற்கத் திரவியத்"தில் "பெருங் குரும்பை" என்ற சரக்கும் காணப்படுகிறது.

36. விடபாகத்திற்கு

அப்பையினற் கொடியரைத்தோ ரலகுபாக்கி
னளவாய்வெள் ளாட்டின்பா லிற்குழப்பித்
தப்பாம னான்குதினமிருபோதுண்டு
சர்வாங்க மும்பூசப் பத்தியங்கே

ளப்பாலினுடனனமு மிளகின்றூள் சேர்த்திடு
மிளங்கீரைக் கறியா மருமையாகச்
செப்பியவிம் முறைப்படியே செய்யவொன்றுஞ்
சேராது விடப்பாகந் தெரிந்துபாரே. 56

(இ-ள்)

அகப்பைக் கோவைக்கிழங்கின் கொடியைக்கொண்டு வந்து தண்ணீர்விட்டு நன்றாக வரைத்து அதிலொரு அலகு பாக்களவு எடுத்து வெள்ளாட்டுப் பாலுடன் குழப்பி 4 நாட்களுக்குச் சாப்பிடவும். தினமும் காலையிலும் மாலையிலும் உண்ணவும். இதையே மேலுக்கும் பூசிவரவும்.

பத்தியம்:

இளங்கீரையுடன், மிளகுபொடி கூட்டியுண்ணவும். விஷபாகங்கள் தீரும்.

37. விடப்பாகத்திற்கு

அப்பையினற் கிழங்கலகு பாக்கினேரா
யிரிய வெள்ளாட் டின்பாலி லரைத்துக்
கொண்டே
யொப்புடனே யப்பாலிற் குழப்பிநன்றா
யோர்நான்கு தினமிருபோ துண்பீராகில்
எப்போது மணுகாது விடபாகங்க
ளிதமான விம்முறைகை கண்டதாகுந்
தப்பாமற் செய்திடுவீர் மன்னர்மன்னன்
சரபபூ பதியுணர்ந்து சாற்றும்வாறே. 57

(இ-ள்)

அப்பைக்கோவைக் கிழங்கைக்கொண்டு வந்து, அம்மியின் மேல் வைத்து அரைத்து ஒருஅலகு

பாக்களவெடுத்து வெள்ளாட்டுப் பாலுடன் குழப்பித்தினம் இருவேளை (காலையிலும், மாலையிலும்) சாப்பிடவும். இவ்வாறு 4 நாட்கள் சாப்பிடவும்.

விடபாகங்கள் தீரும். கைகண்டது.

38. கிராணி, அக்கினிமந்தம், பாண்டுவிற்கு

கொடிவேலி வேர்சுக்கு மிளகிந்துப்புங்
கூறுமிவை யோர்நான்குஞ் சமனிடித்த
பொடிநிரைக்குக் கடுக்காய்ச்சூ ரணித்துச்சேர்த்து
புளித்தமோர்காய்ச்சிக்கா செடைமருந்தை
யடைவாயிட் டருந்திவர வேகிராணி
யக்கினிமந் தம்பாண்டு மட்டகுன்மம்
விடபாக வாயுமுத லானநோய்கள்
விட்டுப்போஞ் செளக்யங்குண
மேவுந்தானே 58

(இ-ள்)

கொடிவேலிவேர்	சுக்கு
மிளகு	இந்துப்பு
இவைகள் வகைக்கு	1 பலம்
கடுக்காய்த்தோல்	4 பலம்

இச்சரக்குகளைக் கல்லுரலில் இட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு வராகனெடை தூளெடுத்துக் காய்ச்சிய புளித்தமோருடன் கலந்து சாப்பிடவும்.

கிராணி, அக்கினிமாந்தம், விடபாகம், வாயு, பாண்டு, அட்டகுன்மங்கள் முதலான ரோகங்கள் தீரும்.

39. விடப்பாக வீக்கத்திற்கு

முருக்கிலைவெங் காயமுநா கரம்வகைக்கு
முறையாகப் பலமிரண்டு சங்கின்பட்டை
முருங்கைப்பட் டையுமிரண்டு மொவ்வொன்றுக்கு
மொழிந்தபல மைந்திதெலா மிடித்துப்போட்டு
திருந்தவெரித் தடைகுடிநீர் வைத்துக்கொண்டு
தேகமறிந் தோரளவா யிரண்டுபோது
மருந்திடவே வீக்கம்விட பாகமேகு
மருமையுள விம்முறைகை கண்டதாமே. 51

(இ-ள்)

கல்யாணமுருங்கையிலை வெங்காயம் சுக்கு

இவைகள் வகைக்கு 2 பலம்

சங்கப்பட்டை முருங்கைப்பட்டை

இவ்விரண்டும் வகைக்கு 5 பலம்

இவைகளைக் கல்லுரலில் இட்டிடித்துத் தண்ணீர் விட்டுக் கஷாயமாகப் போட்டு, ஆறியபின் 2 வேளையிலும் நேரமொன்றுக்கு 1 பலம் அளவெடுத்து உட்கொள்ளவும். வீக்கம், விஷபாகங்கள் முதலானவை தீரும்.

குறிப்பு:

அடைகஷாயம் என்பது தண்ணீர்விட்டுக் காய்ச்சாமல் ஊறவைத்து இறுத்த நீராகும். இங்கு காய்ச்சிக் குளிரவைத்த கஷாயமாகும்.

40. அரையாப்பு, துடைவாழை, கட்டு வீக்கம், விப்புருதி, எழுச்சி முதாலன வியாதிகளுக்கு எண்ணெய்ப் பூச்சு

சங்கம்வேர் மிளகரணை வேருவாய்
வேர்சத்திச் சாரணைவேர்
செங்கத்தா ரியின்வேர்மா விலிங்கைவேர்
சாரணைவேர் சித்ரமூலி
பொங்கமிகு மாதண்டை வேருடனொன்
பதுவகையும் பொருந்துங்கையாற்
றங்குமொரு சிரங்கைவசம் பொருபிடியுள்
ளித்தோலைத் தானும் போக்கே. 60

போக்கியொரு பிடியிதெல்லாம் நறுக்கியிரு
நாழியெள்ளின் புதியநெய்யிற்
றாக்கியடுப் பினில்வைத்துப் பொன்னிறமாய்க்
காய்ச்சியதைத் தானிறக்கித்
தேக்கிடவா ழாக்கெண்ணெய் காலையந்தி
யிலுங்கொள்ளு தினமுந்தானே
வீக்கமதில் கடுகையரைத் தும்மிடு
பத்தியம்வெந் நீருஞ்சோறே. 61

வெந்நீரும் புழுங்கிளங் கிரைதனில்
மிளகுபொடி மேலேபோட்ட
தன்னையுங்கொள்ளிலவெண்ணெய் முழுதுங்கொட்
டீரும்நோய் தானேகேளு
வின்னஞ்செய் யரையாப்புத் துடைவாழை
கட்டுநின்ற வீக்கமுந்தான்
இன்னமும்விப் புருதியெழு வியாதியது
உயர்ந்தார்விட் டேகுந்தானே. 62

(இ-ள்)

சங்கம்வேப்	மிளகரணைவேர்
உகாய்வேர்	சத்திச்சாரணைவேர்
செங்கதாரிவேர்	மாவலிங்கம்வேர்
வெள்ளைச்சாறடைவேர்	சித்திரமூலவேர்
ஆதண்டைவேர்	

இவைகளின் துண்டுகள் வகைக்கு	ஒரு பிடி
வசம்பு	,,
தோல் நீக்கிய பூண்டு	,,

இவைகள் எல்லாவற்றையும் ஒரு கல்லுரலில் இட்டு நசுக்கி,

நல்லெண்ணெய் 2 படியுடன் (2½ சேர்) கலந்து ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, சரக்குகள் பொன்னிறமாகியவுடன் அதைக் கீழிறக்கவும்.

தினந்தோறும் காலையிலும், மாலையிலும் ஒரு ஆழாக்கு எண்ணெய் உட்கொள்ளவும். எண்ணெயின் கடுகை அம்மியின்மேல் வைத்தரைத்துக் கரப்பான் வீக்கங்களின் மேல் பூசவும்.

வெந்நீர் சாதம் சாப்பிடவும். இளங்கீரையை மிளகுடன் சுண்டி உண்ணவும்.

இம்மாதிரி அந்த எண்ணெய் முழுவதையும் சாப்பிட,

அரையாப்பு	துடைவாழை
கட்டுள்ள வீக்கங்கள்	விப்புருதி

முதலான ரோகங்கள் தீரும்.

விரணம் 18

41. அரையாப்பிற்கு உருண்டை

சீரகமுங் கொடிவேலி களிப்பாக்கு
மிவைமூன்றில் செய்யக்கேளு
சீருடனே யொருபலந்தான் றண்ணீர்வார்த்
தரைத்துநன்றாய் திகழெள்ளெண்ணெய்
சேருமொரு மாகாணி தனிற்போட்டு
மெழுகுபதத் தினிலேகாய்ச்சிச்
சாரமுள்ள நல்லவெல்ல மொருபலம்போட்
டிதையிறக்கித் தானும்வையே. 63

வைத்துமுள்ளிக் காயளவு முண்டைபண்ணி
நிழலுலர்த்தி யதிலேதானே
நித்தமதி காலையந்தி யோருண்டை
கொண்டும்பார் நீயுந்தானே
பத்தியமுப் பும்புளிப்பு மாகாது
மரையாப்பும் பறந்தேபோகுஞ்
சுத்தமா யாறுநாள் பத்தியஞ்செய்
நோயகன்று சுகமதாமே. 64

(இ-ள்)

சீரகம்
கொடிவேலிவேர்
களிப்பாக்கு

இவைகளை வகைக்கு ஒரு பலமெடுத்து இடித்து, அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து

நல்லெண்ணெய் ஒரு மாகாணி (வீசம்படியுடன்)

கூட்டி அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்திலிறக்கி அதில் ஒரு பலம் வெல்லத்தையிட்டுக் கரைக்கவும்.

பின்பு இதனை *முள்ளிக்காய் அளவுள்ள சிறு சிறு உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். இதனை நிழலில் உலர்த்தித் தினம் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு உருண்டையை உட்கொள்ளவும்.

பத்தியம்:

உப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும், புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கவும். அரையாப்பு தீரும்

6 நாட்களுக்கு இவ்வாறு பத்தியம் பிடிக்கவும்.

42. அரையாப்புக்கு

கொடிவேலி வேர்நத்தைச் சூரியின்வே
ரிரண்டில்வகைக் கொன்றுக்குத்தான்
அடவுடனே கொட்டைப்பாக் களவரைத்து
யெள்ளெண்ணெ யதுகாற்சேரி
லுடனேமத் தித்துமதி காலைதனில்
மூன்றுநா ளுங்கொள்நீதா
னிடுமேலின் பத்துகொடி வேலிவேர்
தனையரைத்து மேலும்பூசே. 65

பூசுமிப் படியாறு நாடாறும்
பத்தியமும் புசிவெந்நீர்சோறு
நேசமுட னேகொண்டால் அரையாப்புக்
கட்டியுமே நீங்கிப்போகுந்
தேசமன் பத்தாறு தீவுதீ
வாந்திரமற் றேற்கும்போற்ற
வாசவன்போல தஞ்சைநகர் தனையாளுஞ்
சரபேந்திரன் வகுத்தாமே. 66

---

* முள்ளிக்காய் - தண்ணீரில் வளரும் ஒருவகைக் கொடியின் காய். இதற்கு 2 முட்கள் எதிரும் புதிருமாக இருக்கும்.

(இ-ள்)

கொடிவேலிவேர்	ஒரு கொட்டைப்பாக்களவு
நத்தைச்சூரிவேர்	,,

இவ்விரண்டையும் நன்றாக அரைத்து, நல்லெண்ணெய் ¼ சேருடன் குழப்பி, அரையாப்புக் கட்டிகளின்மேல் ஒரு குச்சியினால் போடவும். 6 நாட்கள் இவ்வாறு செய்யவும்.

கொடிவேலிவேரைக் கைபடாமல், தண்ணீர் விட்டரைத்து அரையாப்புக் கட்டிகளின்மேல் ஒரு குச்சியினால் போடவும். 6 நாட்கள் இவ்வாறு செய்யவும்.

பத்தியம்:

வெந்நீர் சாதம் மாத்திரமே உட்கொள்ளவும். அரையாப்பு தீரும்.

43. அரையாப்பிற்கு அடை

ஒருவடைதட் டிடும் புழுங்க லரிசிதனை
யூறவும்வைத் துக்கொண்டேதா
னுரமான கொடிவேலி வேருமதி
னுடன்கலந்து வொருமையாக
வரைத்துநன்றாகவுமடுப்பில் சட்டியிலே
வேகவைத்த வடையைத்தானே
பருகுநித மொருவடையை யெள்ளெண்ணெய்
தனிற்றோய்த்துப் பதமாய்த்தானே. 67

பதமாக மூன்றுநாள் மூன்றடைசுட்
டுத்தின்னும் பத்தியங்கேள்
யிதமான நல்லெண்ணெ யைத்தானே
சோற்றினிலே யிட்டுமுண்ணு

சதமாக வொன்பதுநா ளுப்புடனே
புளிப்புமது தானாகாது
பதமாய்ப்பத் தானாட்கஞ்சி தேய்த்தே
முழுகுபனி ரெண்டேநாள் 68

பன்னிரண்டா நாடனிலே யெண்ணெய்தேய்த்
தேமுழுகிப் படிக்குத் தானே
ஒன்றைவிட்டோர் நாள்மூழ்கு பால்மோருந்
தயிர்நெய்யு முண்ணிரம்ப
தன்னிலே யரையாப்புக் கரைந்துவிடு
மேலேயொன்றுந் தான்போடாதே
யுன்னிதமா மருந்திதையுந் தென்னளகை
சரபேந்திர னுணர்ந்ததாமே. 69

(இ-ள்)

ஒரு அடை தட்டுமளவிற்கு வேண்டிய புழுங்கரிசி சுமார் ஒரு சிரங்கை எடுத்துக்கொண்டு தண்ணீர் விட்டு ஊறவைக்கவும். அதற்குச் சரியெடை கொடிவேலி வேர் சேர்த்து, ஊறின அரிசியுடன் கல்லுரலில் இட்டு ஒன்றாக அரைத்துக்கொள்ளவும். ஒரு சட்டியை அடுப்பின்மேல் வைத்து அதில் கொடிவேலி வேர் சேர்த்தரைத்த மாவை இட்டு அடையாகத் தட்டி எரிக்கவும். நன்றாக வெந்தபின் இதை இறக்கி நல்லெண்ணெயில் தோய்த்துச் சாப்பிடவும். இவ்வாறு தினமொன்றுக்கு ஒரு அடை வீதம் 3 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம்:

சாதத்தில் நிரம்ப நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிடவும். உப்பு புளி முதலானவைகள் 9 நாட்களுக்கு ஆகாது. 10வது தினத்தன்று வடிக்கஞ்சியைத் தலையில் தேய்த்துக் கொண்டு ஸ்நானஞ் செய்யவும். 12வது தினத்தன்று நல்லெண்ணெய் தேய்த்துக்கொண்டு முழுகவும். இவ்வாறு

ஒன்றுவிட்டொரு நாள் முழுகவும். பசுவின் பால், மோர், தயிர், நெய் முதலானவைகளைத் தாராளமாக உபயோகிக்கவும்.

அரையாப்புக்கட்டி தானாகவே கரைந்துவிடும். அரையாப்புக் கட்டியின்மேல் ஒன்றும் போடக்கூடாது.

44. கரப்பான் வீக்கத்திற்கு மருந்து

கல்லுப்பும் வேப்பிலையு மிடித்துவிளக்
கெண்ணெய்தனிற் கலந்துகொண்டு
வல்லுப்பி சத்தினரை யாப்பதனில்
நின்புண்ணில் வைத்துக்கட்டு
சொல்லுமந்த வீக்கமட்டும் பிசகாதே
கட்டிப்பார துரிசாய்த்தானே
அல்லலற வறுபத்து நாழிதனிற்
கரைந்திடும் பரவத்தானே. 70

தானேமறு படியுமொரு விசைகட்ட
வுங்கட்டோ டதுபோமிந்த
யீனமிலா முறையதனை நந்தியுரைத்
தார்பொதிகை யின்முனிக்கு
வூனமிலா மனிதருக்கா யுரைத்தமுறை
யைத்தினமு முணர்ந்துணர்ந்து
மானமான் றஞ்சையையாள் சரபேந்திர
னுணருமரை யாப்புப்பூச்சே. 71

(இ-ள்)

கல்லுப்பு	(ஒரு பிடி)
வேப்பிலை	,,

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஆமணக் கெண்ணெய் விட்டு நன்றாக அரைத்து, அரையாப்புக் கட்டியைச் சுற்றிலும் வீக்கம் இருக்கும் அளவிற்கு அதன்மேல் போட்டுக் கட்டிவிடவும்.

24 மணி நேரத்திற்குள் வீக்கம் கரையும். இம்மாதிரியே மறுநாளும் கட்டவும். அவை தீரும்.

45. அரையாப்பிற்கு மருந்து

நத்தைச்சூ ரியின்வேர்ப்பட் டையுமொரு
தலைப்பூண்டு நவில்வசம்புஞ்
சுத்தாய்வ கைக்குமொரு வராகனெடை
சேர்த்தரைத்து துருசாய்த்தானே
வைத்துகரண் டியிலெள்ளின் னெண்ணெய்விட்டுச்
சிவந்தநிற மானவாறே
யத்தையிறக் கியுமருந்தை யெடுத்துள்ளுக்குங்
கொள்மேலுக் கப்பால்கேளே. 72

கேளந்த யெண்ணெய்தனை மேலிலே
தடவிப்பார் கெட்டியாக
நாளளவில் வந்தவரை யாப்பிருந்தா
லும்புண்ணும் நழுவிப்போகுந்
தானதினா லோரடியா யளந்தநெடு
மால்சரபச் சக்ரவர்த்தி
நீளுமுல கத்தின்மனுக் காயுணர்ந்து
மிம்முறைநிச் சயித்ததாமே. 73

(இ-ள்)

நத்தைச்சூரியின் வேர்ப்பட்டை 1 வராகனெடை
ஒருதலைப்பூண்டு 1 ,,
வசம்பு 1 ,,

இவைகளை ஒன்றிரண்டாக நசுக்கி, ஒரு கரண்டியிலிட்டு நல்லெண்ணெய் விட்டுச் சிவக்கச் காய்ச்சி இறக்கி, இம்மருந்தை உட்கொள்ளவும்.

அந்த எண்ணெய மேலுக்குத் தடவவும். அரையாப்புப் புண்கள் தீரும்.

46. படர்தாமரைக்குப் பூச்சு

ஒருகூடை பேய்ப்பீர்க்கி னிலையரிந்து
கல்லின்மே லும்போட்டுத்தான்
அரிசியும்வா யினிலடக்கிக் காலினா
லேதுவைக்கவ் வரிசிதானும்
விரைவான வரிசிகசக் கிறமட்டு
மூன்றுநாள் மிதித்தாயானா
லுரமான படர்தாம ரையுமகலுந்
தப்பாம லுடனேசெய்யே. 74

(இ-ள்)

ஒரு கூடை பேய்ப்பீர்க்கின் இலையைக் கொண்டுவந்து ஒரு அம்மிக்கல்லின் மேல் போட்டு, அரிசியை வாயில் போட்டுக்கொண்டு, அந்த நோயாளியை மிதிக்கச் சொல்லவும். தினந்தோறும் இவ்வாறு வாயிலுள்ள அரிசி கசக்கும்வரை மிதிக்கவும். 3 நாட்களுக்குள் எப்பேர்ப்பட்ட படர்தாமரையும் அகலும்.

47. மேகக்கட்டி, அரையாப்புரக்கட்டி புண்களுக்கு மருந்து

எலுமிச்சங் காயளவு சித்ரமூலி
யையரைத்தெள் ளெண்ணெய்தன்னில்
நலமுடைய பனங்கட்டி யுமதிற்பா
தியும்போட்டு ரவியில்வைத்தே
வுலவுமொரு கிளிஞ்சியெண்ணெய் காலையந்தி
யுந்தானே யுள்ளுக்குங்கொள்
வலுவான மேகத்தின் கட்டியரை
யாப்புபுண்ணும் வாங்கிப்போமே. 75

போகுமே பத்தியமுப் பும்புளிப்பு
மாகாது பொரிமாதூவி
யாகுமிளங் கீரையொன்று புரைபுண்ணா
மிருந்தாலு மவ்வெள்ளெண்ணெய்
யூகமுட னரைப்படியி லெலுமிச்சங்
காயினள வுந்தான் கேளு
லாருளசித் திரமூலி யரைத்துப்போட்
டிரவிதன்னில் வைத்திடாயே. 76

வைத்துமே லிலுந்தடவு புண்ணிலும்போ
டும்புரையில் வளமாயூத்தி
பத்திரமா யூதுகட்டிக் கரையும்புண்
ணாறும்புரை வளர்ந்தோயாறுஞ்
சத்தியவா சகன்தன்ம நெறிவழிசெங்
கோல்நடத்துஞ் சக்கிரவர்த்தி
யுத்தமனாந் தஞ்சைநகர் சரபேந்திரன்
நிச்சயித்த வுண்மைதானே. 77

(இ-ள்)

கொடிவேலி வேர் அரைத்த விழுது	ஒரு எலுமிச்சையளவு
பனைவெல்லம்	½ எலுமிச்சையளவு

இவ்விரண்டையும் நல்லெண்ணெய் 1 சேருடன் குழப்பி, கடும் வெய்யிலில் வைத்துக் கலக்கிவரவும். இதில் ஒரு சிறு கிளிஞ்சில் அளவு எண்ணெய் எடுத்துக் காலை வேளையிலும் சாயங்கால வேளையிலும் சாப்பிடவும்.

மேகக்கட்டி, அரையாப்பு முதலியவை தீரும்.

பத்தியம்:

உப்பு, புளி இவ்விரண்டும் ஆகாது. இளங்கீரையுடன் மிளகுத்தூள் சேர்த்துச் சாப்பிடவும். பொரிமா சேர்த்துக்கொள்ளவும்.

புண், புரைகளிருந்தால் ½ படி நல்லெண்ணெயில், எலுமிச்சையளவு சித்திரமூல வேர் அரைத்த விழுதைக் கலந்து (2 நாட்களுக்கு) வெயிலில் வைத்துப் புண்களின் மேலேயும் போட்டுப் புரைக்குள்ளேயும் செலுத்தவும். கட்டிகள் கரைந்து புண்களும் ஆறும்.

48. படர்தாமரைக்குப் பூச்சு மருந்து

தகரைவேர் நுணிமஞ்சள் சித்திரமூ
லங்கொன்னைத் தளிர்புங்கைவேர்
திகழ்வாழைக் கிழங்கனிச்சை வேருடனே
விழலரிசி யுங்கடுக்காய்
தகுநெல்லி முள்ளிவசம் புடன்கோட்டம்
பத்துவகை தனைச்சமன்கொள்
சுககோமூத் திரம்வார்த்து நேகவரைத்
தேசெய்யுந் தொழிலைக்கேளே. 78

கேளுபடர்தாமரைமேற் படருகிற
தையுஞ்சொறிந்து நிளறிப்பூச்சி
தாளுபத்து கடிகைமட்டு மிருந்துநா
லஞ்சுநா டான்குளித்தால்
பீளுபடர்தாமரையுஞ் சருகுதிர்ந்தாப்
போலுதிரு மெய்ப்பதான
வேளிலுயர்ந் திடுமெழிலான் சரபேந்திர
ராசனுணர் விந்தபூச்சே. 79

(இ-ள்)

தகரைவேர் சித்திரமூலவேர்ப்பட்டை
நுணிமஞ்சள் கொன்னைக்கொழுந்து
புங்கைவேர் வாழைக்கிழங்கு
காட்டுமல்லிகைவேர் விழலரிசி

கடுக்காய்த்தோல்	நெல்லிமுள்ளி
வசம்பு	கோஷ்டம்

முதலான சரக்குகளைச் சமனெடை எடுத்து இடித்துப் பசுவின் மூத்திரம் விட்டு நன்றாக அரைக்கவும். படர்தாமரை (எச்சிற்றழும்பு)யைச் சொறிந்து அங்கு முன் சொன்ன மருந்தைப் பூசி, 10 நாழிகை அளவு ஊறவைத்து ஸ்நானஞ் செய்யவும். இவ்வாறு 4 அல்லது 5 நாட்கள் செய்யவும்.

படர்தாமரைகள் பொரிந்து உதிர்ந்துவிடும்.

49. படர் தாமரைக்குப் பூச்சு

தகரைவாய் விளங்கம்நெல்லிப் பருப்புகொடி
வேலிமஞ்ச ளுங்கடுக்காய்
மகிழுஞ்செங் கழுநீரின் கோட்டமுடன்
கார்போக வரிசிகூட
திகழ்செழும லர்கொன்றை புங்கம்விதை
பத்துமஞ்சமன் சேர்த்துக்கொண்டு
வகையாவி னீரதனி லரைத்துநன்றாய்
குழப்பியதை வைத்துக்கொள்ளே. 80

கொண்டுமேல் படருந்தா மரையசைச்சொ
றிந்துநீ குணமருந்தை
மொண்டுகையாற் பூரிபத்து நாழிமட்
டிருந்துமேல் குளித்துக்கொண்டு
கண்டிதமாய் நாலஞ்சு நாட்டடவிக்
குளிநீயுங் கணக்கதாக
மண்டியமே லின்படர்தா மரையதிர்ந்து
தேகம்நல்ல வளமதாமே. 81

(இ-ள்)

தகரைவிதை	வாயுவிடங்கம்
நெல்லிப்பருப்பு	கொடிவேலிவேர்
மஞ்சள்	கடுக்காய்த்தோல்
செங்கழுநீர்க்கிழங்கு	கோஷ்டம்
கார்போகரிசி	செழுமலர்க்கொன்றை
புங்கம்விதை	

இவைகளைச் சமனெடைஎடுத்து, அம்மியின்மேல் வைத்துப் பசுவின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்துக் குழம்பாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

படர்தாமரையை நன்றாகச் சொறிந்துவிட்டு, முன் சொன்ன மருந்தைப் பூசி 10 நாழிகை வரை ஊறவைக்கவும். பின்பு ஸ்நானஞ் செய்யவும். இம்மாதிரி 4 அல்லது 5 நாட்களுக்குத் தடவிக் குளிக்கவும்.

படர்தாமரை உதிர்ந்துவிடும்.

குறிப்பு:

செய்யுளில் 10 சரக்குகள் என்று கூறப்பட்டிருப்பினும் வாஸ்தவத்தில் 11 சரக்குகள் உள்ளன.

50. படர் தாமரைக்கும் மருந்தும், பூச்சும்

இந்துப்பு நிலவாரை கொன்றையுட
தளிர்சொல்லு மிதுகள்மூன்றுஞ்
சந்தேக மில்லாமற் சேர்த்தாவின்
கோமியத்தி னாய்வேளை
யிந்திரண்டி லொன்றிலரைத் துப்பூசு
நாலுநா ளேதானேநீ
வந்தபடர்தாமரையு திர்ந்துநன்றாய்
மேனிநல்ல வண்மையாமே. 82

(இ-ள்)

இந்துப்பு நிலவாரை
கொன்றைத்துளிர்

இம்மூன்றையுஞ் சமமெடுத்துப் பசுவின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்துப் படர்தாமரையின்மேல் பூசவும். 4 நாட்களில் அது தீரும்.

நாய்வேளையைப் பசுவின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்துப் படர்தாமரையின்மேல் பூசவும். 4 நாட்களில் மாறிப்பாகும்.

51. படர்தாமரைக்கு மருந்தும், பூச்சும்

மருக்காரை வேர்விரையு மனிச்சம்வே
ரிம்மூன்று வகையுந்தானே
முருக்கெலுமிச் சம்பழச்சாற் விட்டரைத்து
நன்றாக மூன்றுருண்டை
சரியாகச் சிறுகொட்டைப் பாக்களவு
செய்துள்ளுக்குத் தானேகொண்டு
உரமான மேலுக்கும் பூசபடர்
தாமரையு முதிர்ந்துபோமே. 83

(இ-ள்)

மருக்காரை வேர் மருக்காரை விதை
காட்டுமல்லிகைவேர்

இம்மூன்றையும் சமனெடுத்து (வகைக்குக் கொட்டைப் பாக்களவு) அம்மியின்மேல் வைத்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு நன்றாக அரைத்து 3 உருண்டைகளாக உருட்டி உள்ளுக்குச் சாப்பிடவும். இதையே மேலுக்கும் பூசவும். படர்தாமரைகள் தீரும்.

52. படர்தாமரைக்கும் பூச்சும், மருந்தும்

தகரைவிதை யெருக்கம்வேர் பட்டையுட
னருகம்புல் லதனுட்பட்டை
வகைமூன்றுஞ் சிறுகவுமே நறுக்கிப்பசும்
பால்நாழி வார்த்துக்காய்ச்சி
தகுமான வுரைக்குத்திக் காலமே
யத்தயிரைத் தானேகொள்ளு
புகுமந்த மருந்தெடுத்து மஞ்சளுங்கூட்
டியுமரைத்துப் பூசிடாயே. 84

பூசிசொறிந் தேசொறிந்து மிருந்துமிப்
படிமூன்று போதுதானே
நேசமுட னுள்ளுக்குங் கொண்டுமே
லும்பூசி நீகுளித்தால்
வீசிபடர் தாமரையுஞ் சருகுதிர்ந்தாப்
போலுதிரும் விபுலைதன்னில்
ராசர்புகழ் சரபோசி ராசன்மனம்
நிச்சயித்த நன்மருந்தே. 85

(இ-ள்)

தகரைவிதை எருக்கம்வேர்பட்டை
அருகம்புல்லின்மேல்பட்டை (சரகு)

இவைகளை நறுக்கிப் பசுவின் பால் 1 படியுடன் (பட்டணம் படி ¼) சேர்த்துக் காய்ச்சிப் புளிப்பில்லாத மோர் விட்டு உறையவிடவும். மறுநாள் அத்தயிரை உட்கொள்ளவும்.

மஞ்சளை, அத்தயிரினால் , அரைத்துப் படர்தாமரையைச் சொறிந்தபின் அதன்மேல் போடவும். இவ்வாறு மூன்று நாட்கள் செய்யவும். படர்தாமரை, சருகுகள்உதிர்ந்தாப் போலுதிரும்.

53. படர் தாமரைக்குப் பூச்சு

நிலவாகை வேரெலுமிச்சம்பழச்சாற்
விட்டரைத்து நேகத்தானே
வலுவுசெழு மலர்கொன்றைச் சாற்றினிலே
குழப்பியதை வளமதாக
நல்மேனி தனில்படரும் தாமரையைச்
சொறிந்ததனில் நாட்டமாகச்
சலமதாகப் பூசிகுளிப் படர்தாம
ரையுமுதிர்ந்து நலமதாமே. 86

(இ-ள்)

நிலவாகை வேரை, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து செழுமலர் கொன்றைச் சாற்றில் குழப்பவும். படர்தாமரையைச் சொறிந்து முன்சொன்ன மருந்தைப் பூசி சிறிதுநேரஞ் சென்றபின் குளிக்கவும். அவை தீரும்.

54. படர்தாமரைக்கு மருந்து

சகமதனில் மானிடர்மேல் படர்தாம
ரைவளரு மதற்குக்கேளு
தகரைவிரை யையார்க்கப் பொடிசெய்து
கக்கரிக்காய்த் தண்ணீர்வாங்கி
வகையாகக் குழைத்துசொறிந் துப்பூசி
மேல்குளிக்க வந்தநோயுந்
திகிலெடுத்துப் படர்தாம ரையுமுதிர்ந்து
தேகமதுந் தீர்க்கமாமே. 87

(இ-ள்)

தகரை விதையைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து, கக்கரிக்காய்ச் சாற்றில் குழைத்துப் படர்

தாமரையின் மேல் பூசவும், பூசுவதற்குள் படர்தாமரையை நன்றாகச் சொறிந்து விடவும். சுமார் 2 மணி நேரஞ் சென்ற பின் குளிக்கவும்.

படர்தாமரை தீரும். உடம்பும் தேறும்.

55. படர்தாமரைக்குப் பூச்சு

வாகையுட கொழுந்துகொன்றைக் கொழுந்தி
புண்ணாக்கு மஞ்சளோனே (லுப்பைப்
வாகுடனே சிவந்திருக்குங் காரையிலை
யுஞ்சேர்த்து மரைத்துநன்றாய்
திகழ்மேனி தனிற்படருந் தாமரையைச்
சொறிந்துசொறிந் தேதான்பூசுச்
சுகமாகும் படர்தாம ரையுமுதிர்ந்து
சரீரமது சுத்தியாமே. 88

(இ-ள்)

வாகைக்கொழுந்து கொன்றைக்கொழுந்து
அரப்புக்கட்டி மஞ்சள்
காரையிலை

இவைகளைச் சமனெடுத்து அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துத் தேகத்தின்மேல் ஏற்பட்டிருக்கும் படர்தாமரையைச் சொறிந்து, அதன்மேல் பூசவும்.

அவை தீரும்.

56. படர்தாமரைக்குப் பூச்சு

நிலவாகை வேரேலுமிச் சம்பழச்சாற்
தனிலரைத்து நேரேபூசிப்
பலயிலுப்பைப் புண்ணாக்கி லெருக்கம்பா
லாதல்கள்ளிப் பாலிலாத

லுலவுமம்மி தனிலரைத்துச் சொறிந்துபடர்
தாமரையு முற்றிடத்தில்
நலம்பெறவே பூசபடர்தாமரையு
முதிர்ந்துசடம் நலமதாமே. 89

(இ-ள்)

நிலவாகை வேரை அம்மியின்மேல் வைத்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துப் படர்தாமரைகளின் மேல் பூசவும்.

அரப்பை எருக்கம்பால் அல்லது கள்ளிப்பால் விட்டு நன்றாக அரைத்துப் படர்தாமரையைச் சொறிந்தபின் இம்மருந்தைப் போடவும். படர்தாமரை உதிர்ந்துவிடும்.

57. படர்தாமரைக்கு உள்மருந்து

நிலவாகைச்சமூலமே பிடுங்கிவந்து
மதைவெய்யி லினிலுலர்த்தி
நலமான மருள்கிழங்கு முலர்த்தித்தா
மரைமணியும் நலமாய்ச்சேர்த்து
வலுவான வுரல்தனிலே யிடித்துமம்மி
தனிலரைத்து வடியுங்கட்டிக்
கலசமதில் வைத்துவெரு கடித்தூளைத்
தேன்றனில் காலையுண்ணே. 90

காலையந்தி யிலுங்கொம்புற் றேனிலே
மண்டலந்தான் கனிவாயுண்ணு
சோலிசெய்யா மல்வயிறு மன்றாட
கமும்மலமுஞ் சுத்தியாகும்

ஞாலமதிற் புளிப்புகைப்புத் தள்ளிச்சாப்
பத்தியமாய் நனினமேனி
மேலுபடர் தாமரையுந் தன்னிச்சை
யாயுதிர்ந்து மேன்மையாமே. 91

(இ-ள்)

நிலவாகையைச் சமூலமாக எடுத்து வெய்யிலில் உலர்த்தவும். அதற்குச் சமமாகத் தாமரைக் கொட்டையும், மருளங்கிழங்கும் சேர்த்துக் காயவைத்து, எல்லாவற்றையும் உரலிலிட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவு உள்ள தூளை எடுத்துத் தேன் விட்டுக் குழைத்துச் சாப்பிடவும். சாயங்கால வேளைகளிலும் இவ்வாறே உண்ணவும். இம்மாதிரி 40 நாட்கல் சாப்பிடப் படர் தாமரை தீருவதுடன், அன்றாடம் மலப்பிரவ்ருத்தியும் சரியாக ஆகும்.

பத்தியம்:

புளிப்புச் சுவையுள்ள பண்டங்களையும் கைப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கிவிடவும்.

58. படர்தாமரைக்கு உள்மருந்து.

புளிக்கொழுந்து சிறுகுறிஞ்சா யிலையுங்கொண்
டைக்கொழுந்தும் பிசகாமற்றான்
வனவெலுமிச்சம்பழச்சாறு தனிலரைத்துத்
தின்னுமிதை மாறேழாநாள்
விளைக்குபடர் தாமரையுஞ் சரகுதிர்ந்தாப்
போலுதிரும் விமலர்நெஞ்சங்
களிக்கமல ரர்ச்சனைகெய் தஞ்சைசர
பேந்திரனுணர் கருணையாமே. 92

(இ-ள்)

புளியங்கொழுந்து	ஒரு பிடி
சிறுகுறிஞ்சா இலை	,,
கொன்றைக்கொழுந்து	,,

இம்மூன்றையும் அம்மியின்மேல் வைத்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துச் சாப்பிடவும். 7 நாட்களுக்குள் படர்தாமரை பட்டுப்போகும்.

59. படர்தாமரைக்குப் பூச்சு

நிலவாகைவேர் பிரண்டை கொடிவேலிவேர்
யின்வேரும் நிலத்தின்மேலும்
பலமான குளவிந்த மஞ்சள்தக
ரையின்வித்தும் பகரதல்லால்
வலுவான மிளகாறுந் திருகுகள்ளிச்
சாற்றைவிட்டு மரைத்துப்பூச
அலர்போலே தேகத்திற் படர்தாம
ரையுமகலு மன்பாய்ச் செய்யே. 93

(இ-ள்)

நிலவாகைவேர்	குளவிந்தான்
பிரண்டைவேர்	தகரைவிதை
கொடிவேலி வேர்	மிளகு

இவைகளைச் சமமெடுத்து அம்மியின்மேல் வைத்துத் திருகுக்கள்ளிச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பூசவும். தேகத்தில் படர்ந்திருக்கும் படர்தாமரை தீரும்.

60. படர்தாமரை, குஷ்டம், கடிவிஷங் களுக்குப் பூச்சு மருந்து

சித்தமல்லி யின்கிழங்கின் மேற்றோலைப்
போக்கியுலர்த் தியுமிடித்து
வைத்துக்கை யிலெலுமிச்சம் பழச்சாற்றி
னிற்குழப்பி வளமாய்க்கொள்ளு
சத்துவமாந் தகரைவிதை யெலுமிச்சம்
பழச்சாற்றிற் றானரைத்து
வுத்தபடர்தாமரைமேற் றடவக்கடி
குட்டமும்போ யுசிதமாமே. 94

(இ-ள்)

சித்தாமல்லியின் கிழங்கின் மேல்தோலை நீக்கிவிட்டு, வெயிலில் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, அதில் ஒரு குத்தளவெடுத்து எலுமிச்சம்பழத்துடன் குழைத்துச்சாப்பிடவும்.

தகரை விதையையெலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துப் படர்தாமரையின்மேல் போடவும்.

படர்தாமரை, குஷ்டம் முதலான ரோகங்களும் தீரும்.

61. எழு நாயிறு, படுநாயிறுக்கு நஸ்யம்

வசம்புள்ளி முருங்கையிலை பிராயிலைவெத்
திலையாக வகைகளைந்து
மிசைவான சிறுநீரி லரைத்துச்சந்
தலையிலப்பி மேலுந்தானே

வசமுடனே நசியமது செய்யயெழு
நாயறுடன் வளருமந்த
நிசமான படுநாய றுமகன்று
போமிதையும் நீயுஞ்செய்யே. 95

(இ-ள்)

வசம்பு	பிராயிலை
உள்ளிப்பூண்டு	வெத்திலை
முருங்கையிலை	

முதலான ஐந்து சரக்குகளையும் எடுத்து (வகைக்கு ஒரு பிடி) அம்மியின் மேல் வைத்து உலகமறியாப் பிள்ளையின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்து, நோயாளி தலையுச்சியில் அப்பவும்.

இதையே ஒரு வெள்ளைத் துணியிலிட்டுப் பிழிந்த சாற்றை மூக்கில் நஸ்யஞ் செய்யவும்.

எழுநாயறு, படுநாயறு முதலானவை தீரும்.

62. படர்தாமரைக்குப் பூச்சு

ஒருபடி தகரைவிதை கொண்டுவந்து
கலயத்தி னுள்ளே போட்டு
சரிதண்ணீர் விட்டுமொரு நாலுநாட்
புதைத்துவைத்துத் தானெடுத்து
உரமான அனிச்சை வேருமதி
னுடனேமோ ரும்விட்டேதான்
அரைத்துமைப் போலசொறிந் தேதடவு
மறுபடியப் படி யேதானே. 96

அப்படியா யிரண்டாவ துக்கிளைக்கு
மலையாமல் தாக்குங்கேளு
செப்பியவெள் ளுள்ளிதனை நேகவரைத்
தேசொறிந்து தேய்த்தாயானா
லப்படியே படர்தாம ரையுமுதிருந்
தப்பாமல் லாதிமூர்த்தி
பொற்பஞ்ச னைபுரியுஞ் தஞ்சைசர
பேந்திரனுணர் புனிதமாமே. 97

(இ-ள்)

ஒரு படி தகரைவிதையை ஒரு கலயத்தில் போட்டு, ஒரு படி விட்டு தண்ணீர் ஊற்றவும். பின்பு அக்கலயத்தின் வாய்க்குத் தகுந்தபடி அகலினால் மூடிச் சீலைமண் செய்து பூமிக்குள் புதைத்து வைக்கவும். நாலாவது நாளன்று அதை வெளியே எடுத்துத் தகரைவித்தை அம்மியின் மேல் வைத்து அனிச்சைவேர் (காட்டுமல்லிகை வேரும்) கூட்டிப் பசுவின் மோர்விட்டு நன்றாக மைப்போல அரைக்கவும்.

படர்தாமரையைச் சொறிந்தபின் அங்கு இவ்விழுதைத் தடவவும். இவ்வாறு 2 நாளைக்குச் செய்யவும்.

மறுபடியும் ஏதேனும் கிளைக்கும்போல் தோன்றினால், அவ்விடத்தைச் சொறிந்து, வெள்ளைப் பூண்டை மைப்போலரைத்து அவ்விடத்தில் பூசவும்.

படர்தாமரைகள் உதிரும்.

63. புண்புரைகளுக்கு எண்ணெயும், பூச்சும்

நல்லெண்ணெய் தனிலேதிரி புரமெரித்தான்
சமூலமுமே நறுக்கிப்போட்டு
மல்லலறப் பொன்னிறமாய் வறுத்துவைத்துக்
கொண்டுபுரை யிலேவிட்டு

வல்லமையாயூதுமந்தப் புரைநாலு
நாளில்சதை வளருங்கண்டாய்
கல்லதனில் மஞ்சாநாள் வேப்பிலையும்
நறுக்கியுந்தான் கருதக்கேளே. 98

கருதக்கேள் முன்னெண்ணெ யிலிந்தப்
பொடிபொரித்துக் கட்டினாலே
திருளுசெய்யும் புண்ணாறுங் கைகண்ட
யெண்ணெயிது சிவனார்பாத
மர்ச்சனைசெய் தஞ்சைநகர் விபுசரபேந்
திரனுணர்ந்து வரியயெண்ணெய்
பரிவுடனே சொன்னபடி யெசெய்து
மதன்குணத்தைப் பார்நீதானே. 99

(இ-ள்)

நல்லெண்ணெய் ஒரு படியில் (5 சேர்) மாவலிங்கின் சமூலத்தையும் (சுமார் 2 பலம்) சிறு சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டு, அடுப்பின் மேலேற்றிப் பொன்னிறமாக வறுத்து இறக்கவும்.

இத்தைலத்தைப் புண்களில் போடவும். புரைகளுள் இதைவிட்டு நன்றாக ஊதி உட்புகும்படி செய்யவும். நாலு நாட்களுள் சதை வளர்ந்து புரைகள் தூர்ந்துவிடும்.

மஞ்சட்தூளையும், வேப்பிலையையும் சேர்த்தரைத்து ஒரு சுண்டைக் காயளவு எடுத்து மேல்சொன்ன தைலம் ¼ சேரில் குழப்பி எரித்து அப்படியே புண்களின்மேல் கட்டவும்.

புண்கள் ஆறிவிடும். கைகண்டது.

64. எழுநாயிறு, படுநாயிறு முதலியவைகளுக்கு மருந்து

முற்றினதேற் றான்காயின் சாறுழக்கு
மேனிச்சாறு மொழியக்கேளு
நத்துவமாய் நாற்பலம்பொன் னரிதாரம்
பணவெடைநன் றாய்ச்சாரித்து
சுத்தவெள்ளைச் சீலைதனிலூட்டிநிழ
லுணர்த்தியும்வைத் துக்கொண்டேதான்
அத்தீயி னிளவெந்நீ ருழக்கதனி
லிருவிரல்சீ லையுங்கிழித்தே. 100

கிழித்துக்கசக் கியநீரை நாலஞ்சுநாள்
உட்கொள்ளக் கிளைக்குமந்த
யெழுநாய றும்படுநா யறும்பருதி
கண்டபனி யெனவேயோடும்
வழியான மருந்தினையும் பாம்புகடித்
தாலுமிந்த மருந்தைக்கொள்ளு
எழில்மிகுந்த தஞ்சையையாள் விபுசரபேந்
திரனுணர்ந்த வியல்பிதாமே. 101

(இ-ள்)

தேத்தான் காயை
இடித்துப் பிழிந்த சாறு 1 உழக்கு
குப்பைமேனிச்சாறு 4 பலம் (½ சேர்)
சுத்திசெய்த மடல்தாளகம் 1பணவெடை

இவைகளையொன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு மெழுகுபோல் அரைத்துக் கொள்ளவும். சாறு வகைகள் அதிகமாக இருந்தால் அது வற்றுமளவும் வெயிலில் வைக்கவும். ஒரு முழ நீள அகலமுள்ள வெள்ளைத் துணியில் முன்சொன்ன விழுதையூட்டி நிழலில் உலர வைக்கவும்.

இதில் 2 விரற்கெடை அளவு துணியைக் கிழித்து, இளஞ் சூடான வெந்நீர் ஒரு உழக்குடன் ஊறவைத்துக் கசக்கிப் பிழியவும். இச்சலத்தை உள்ளுக்குச் சாப்பிடவும். இவ்வாறு 4 அல்லது 5 நாட்கள் உட்கொள்ளவும்.

அடிக்கடி கிளைத்துக்கொள்ளும் எழுநாயறு, படுநாயறு முதலான ரோக வகைகள் தீரும்.

பாம்பு கடித்து அதனால் துன்புறும் நோயாளிக்கும் இம்மருந்தைக் கொடுக்கவும்.

குறிப்பு:

பணவெடை - $3\frac{1}{8}$ குன்றினெடை

65. எழுநாயறு, படுநாயறு முதலான ரோகங்களுக்கு எண்ணெய்

வசம்புள்ளி சிறுகுறட் டைக்கிழங்கு
மழிஞ்சில்வேர் வளரிண்டம்வேர்
பசையான குப்பைமேனி வேரானு(று)ம்
நறுக்கியெண்ணெய் பதியப்போட்டு
வசமான பதங்கண்டு மிறக்கியதை
நக்கிடவும் வளருமந்த
அசுசைசு மெழுநாய றும்படுநா
யறும்விட்டு மகலுந்தானே. 102

(இ-ள்)

வசம்பு	அழிஞ்சில்வேர்
பூண்டு	இண்டம்வேர்
சிறுகுறட்டைக்கிழங்கு	குப்பைமேனிவேர்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து நறுக்கி, நல்லெண்ணெய் (1 சேருடன்) கலந்து அடுப்பின் மேலேற்றி, எரித்துச் சிவந்த பதங்கண்டு இறக்கவும்.

இதிலொரு காலணா அளவெடுத்து நக்கிவர அருவருப்பை உண்டாக்கும் எழுநாயறு, படுநாயறு முதலான ரோகங்கள் தீரும்.

66. எழுநாயறு, படுநாயறுக்கு மருந்து

இலுப்பைமர வைரத்தை வெட்டிப்பொடி
யாய்ச்சீவி யிளவெந்நீரில்
கலக்கியதை யூறவைத்து யிறுத்துமே
கொள்ளுமதி காலையந்தி
வலுத்தயெழு நாயறுடன் படுநாய
றுந்தீரு மதங்கள்மீறி
பலக்கடமான்களிற்றிற் பவனிவருஞ்
சரபேந்திரன் பகரும்வாறே. 103

(இ-ள்)

இலுப்பைமர வைரத்தைத் துண்டாக்கி ஒரு இழைப்புளியால் நன்றாகச் சீவி வைத்துக்கொள்ளவும். இத்தூளில் கொஞ்சமெடுத்து (ஒரு குத்தளவு) ஒரு சேர் இளஞ்சூடான வெந்நீரில் போட்டு ஊறவைத்து, மறுநாள் காலையில் இதை இறுத்துச் சாப்பிடவும். இவ்வாறு (2 அல்லது 3 நாட்கள்) சாப்பிட எழுநாயறு, படுநாயறு முதலான ரோகங்கள் தீரும்.

67. எழுவியாதிக்குப் பூச்சு

நீளுமுல கினின்மனிதர்க் கெழுவியாதி
வந்துற்றால் நெடுநாட்சென்ற
தாளிப்பூ வரைத்துபசு வெண்ணெய்தனிற்
குழப்பிமுகந் தானேவிட்டு
பாளமாய் சுற்றிலும் பூசுகாலை
யந்தியிலும் பலமதான
நாள்சென் றிடுமெழு வியாதியது
மேயகன்று நலமதாமே. 104

(இ-ள்)

நெடுநாள் சென்ற அதாவது முற்றிய தாளிக்கொடியின் பூவை அம்மியின் மேல் வைத்து நன்றாக அரைத்து அதற்குச் சரியளவு பசுவெண்ணெய் கூட்டி, ஒன்றாகக் கலந்து எழுநாயறின் முகத்தை விட்டுவிட்டு அதைச் சுற்றிலும் ஒரே சீராகக் காலையிலும் மாலையிலும் பூசி விடவும். நாட்பட்ட எழுவியாதிகள் தீரும்.

68. எழுவியாதிக்குப் பூச்சு

எலுமிச்சங் காயளவு கொடிவேலி
வேர்வெண்ணெ யினிலரைத்து
நலனுற்ற பசும்பாலும் நாழிதனிற்
கரைத்துமதை நன்றாய்க் காய்ச்சி
சலமுற்ற மோர்விட்டு வுரைக்குத்திக்
கடைந்துவெண்ணெய் தனையெடுத்து
வலுவுற்ற யெழுவியாதி மேற்றடவ
வன்னோயு மகலுந்தானே. 105

(இ-ள்)

பசுமையான கொடிவேலி வேரின் மேல்தோல், எருமை வெண்ணெய் இவ்விரண்டும் வகைக்கு ஒரு எலுமிச்சங் காயளவு எடுத்து, அம்மியின் மேல் வைத்துக் கை படாமல்

அரைத்துப் பசுவின் பால் பட்டணம் படி கால் படியுடன் குழப்பி, அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்சி, மோர்விட்டு உறைய வைக்கவும். மறுநாள் இத்தயிரைக் கடைந்து வெண்ணெயெடுத்து எழுநாயிறின்மேல் தடவவும்.

அவை குணமாகும்.

69. எழுநாயிறு, படுநாயிறுக்கு மருந்து

படுநாய றெழுநாய றெனும் வியாதி
தொண்டையதைப் பற்றித்தானே
யடைக்குமுண்டை யுண்டையதா யிவ்வியாதி
தனக்குமருந் ததுவுங்கேளு
கபமான பூவந்திப் பழமிரண்டு
மவ்வளவு கணக்கரப்புந்
திடமான பழம்புளியுஞ் சமங்கூட்டி
யரைத்துமதைச் சிறுகத்தானே. 106

தானிரண்டு திறஞ்சிறுகச் சிறுகவடி
நாக்கினிலே தானேவைக்க
ஈனமுறு மெழுநாய றும்படுநா
யறுந்தீரு மிதிற் றீராட்டால்
ஊனமிலா மருந்ததனை மற்றநா
ளும்வைக்க வோடிப்போகும்
மாருநெல்லி நொய்காய்ச்சி யுப்பும்போட்
டதையுண்ண வாசியாமே. 107

(இ-ள்)

எழுநாயறு, படுநாயறு முதலான நோய்கள் தொண்டையைப்பற்றி உண்டாகும். அங்கு சிறுசிறு உருண்டையேற்பட்டுத் தொண்டையை அடைக்கும். இவ்வியாதிக்கு,

பூவந்திப்பழம்	2
அரப்பு	இருபூந்திக்கொட்டையளவு
பழம்புளி	,,

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து அடிநாக்கில் அதாவது உருண்டையிருக்குமிடங்களில் தினம் இருவேளைச் சிறுகச் சிறுகத் தடவவும். அவை தீரும். இவ்வாறு மறுநாளுஞ் செய்யவும். நொய்யரிசிக்களிசியுடன் சிறிது இந்துப்பு சேர்த்துச் சாப்பிடவும்.

70. எழுநாயறு, படுநாயறு வீக்கத்திற்குக் கட்ட மருந்து

பருத்தியடை யைநெயத் தட்டியடை
யாய்ப்பிசைபின் பதிலெயுப்பு
இருபது மிளகுமஞ்சற் றேரொன்றும்
பொடிபண்ணி யிதையுணர்ந்தான்முன்
பருத்தியடைக் குள்வைத் தெழுநாயற்
வீக்கமதைப் பார்த்துத்தானே
யுரத்திடுவீக் கம்மிடது புறம்வீங்கில்
வலதுபுற முந்தான்கட்டே. 108

கட்டுவல துபுறமது வீங்கிடிலே
யிடதுபுறங் கையிற்கட்டு
வெட்டிவே ரையுமரைத்து மறுநாளும்
போடுமந்த வீக்கம்வாங்குஞ்
சட்டமதிள் கோபுரமு மாலயஞ்சூழ்
பெருவிடையர் சம்புபாத
மட்டவிழு மலர்சூடி பூசனைசெய்
தஞ்சைவிபு வருளிதாமே. 109

(இ-ள்)

கொட்டையுடனிருக்கும் பருத்தியை அம்மியின்மேல் வைத்து நசுக்கி அடையைப்போல் செய்துகொள்ளவும்.

உப்பு	ஒரு பிடி
மிளகு	20 (எண்ணிக்கையில்)
மஞ்சள்	ஒரு சிறு துண்டு

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்துப் பொடி செய்து மேல் சொன்ன பருத்தியடையின் மத்தியில் வைத்துச் சுருட்டி எழுநாயிறு வலதுபுறமிருந்தால் இடது புறங்கையில் கட்டவும். எழுநாயிறு இடது புறமிருந்தால் வலது புறங்கையில் வைத்து கட்டிவிடவும்.

மறுநாள் அந்த இடத்தில் வெட்டிவேரை அரைத்துக் கட்டப் பலவித வீக்கங்களுந் தீரும்.

குறிப்பு:

யுங்கை - முன்கை

71. எழுநாயிறு, படுநாயிறுக்கு இலுப்பைக்கட்டி மருந்து

இலுப்பையின்புண் ணாக்கதை யனலினிலே
யிட்டது புகையெடுக் கச்சே
நலத்துட னெடுத்து யெருக்கம்பால் விட்டு
நன்றாக வேயரைத்து மைப்போல்
வலுத்த சுண்டைக்கா யளவுண்டை செய்து
வைத்திடு பதனம தாக
நிலத்தினிற் பெரிய மனிதர்கோ ருண்டை
நிகழ்சிறு பிள்ளைக ளுக்கே. 110

பிள்ளைகளுக்கு முண்டையிற் பாதி
பிரித்துமே கொடுமிள வெந்நீ
ரன்னிலே குழப்பிக் கொடுத்திடக் கோழை
யகன்று வாந்திய தாகு
முள்ளது சொன்னேன் வலுத்தெழு நாய
றுடன்படு நாயறு மகன்று
சள்ளைசெய் யாது வளமிகுந் தஞ்சை
சரபபூ பதி யருளாமே. 111

(இ-ள்)

இலுப்பைப் புண்ணாக்குத் தூளை (அரப்பை) ஒரு சட்டியில் போட்டு வறுத்தால் அதிலிருந்து புகையெழும்பும். அப்போது சட்டியை அடுப்பின் மேலிருந்து கீழே இறக்கி, அதிலுள்ல அரப்பைக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்றாக மைபோல் அரைக்கவும். பின்பு இதைச் சுண்டைக் காயளவுள்ள உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

பெரியவர்களுக்கானால் ஒரு உருண்டையும், சிறு குழந்தைகளுக்கெனில் ½ உருண்டையும் எடுத்து இளஞ் சூடான வெந்நீருடன் உட்கொள்ளக் கொடுக்கவும்.

கோழைக் கட்டுடன் வாந்தியாகும். எழுநாயறு, படுநாயறு முதலானவைகள் தீரும். கைகண்டது.

72. பவுத்திரத்திற்கு ரஸமருந்து

இரும்பினாற் செய்த கரண்டியை யடுப்பி
லேயன லினிலதை வைத்து
நெருப்பெனக் காய்ச்சி யெடுத்ததைப் பழுத்த
சேருட னெலுமிச்சம் பழச்சாறு

சுருக்கென விட்டுமச் சாறது தானுஞ்
சுண்டியு மறுபடி சாற்விட்
டிரதமும் பணவின் னெடையதி லிட்டு
மியல்கடுக்காய் தாற்றே. 112
தேய்த்திட விழுதா மவ்விழு தையும்நீ
சிக்கென வெடுத்துவைத் துக்கொள்
வாய்ந்தமுன் கரண்டி திரும்பவு மடுப்பில்
வைத்ததை நெருப்பதாய்க் காய்ச்சி
காய்ச்சிடு வெலுமிச் சம்பழம் பாதி
கடுகவே யறுத்துமக் கரண்டி
வாய்த்தசூட் டினிலே யொத்தியே விரண
மதிலொத்து யிப்படித் தானே. 113

இப்படித் தானப் பழமதி ரண்டு
மேயறுத் தொத்திப் பின்முன்
செப்பிய மருந்தைத் துணியிலே யூட்டித்
தினமந்தி காலையும் போடு
தப்பா மலுமச் சீயெலா மேலே
தான்புறப் படுமதைத் துடைத்துச்
செப்பமா யிரண்டு மூன்றுநாட் போட்டுச்
செய்வித மின்னமுங் கேளே. 114

கேளதின் மேலே புங்கம்வே ரிழைத்துக்
கிளர்புரை யதிலிருந் தாலுங்
குளவே மருந்து மூதுவா யாலே
சுத்தியக் காயையும் நறுக்கிப்
பாளம தாலே கட்டிட மாதர்
பைங்குறும் பைமுலைக் குத்து
மீளுமி தெல்லா மலுடம்பி னிற்கண்ட
விரணமும் போக்கிடு மிதற்கே. 115

(இ-ள்)

ஒரு குழுவுள்ள இரும்புக் கரண்டியை அடுப்பில் போட்டு நன்றாகச் சிவக்கும்வரைக் காயவைத்து, அதில் ஒரு எலிமிச்சம் பழத்தின் சாற்றை விடவும். அது கருகும். மறுபடியும் அதில் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாற்றைப் பிழியவும். அதனுடன்சுத்திசெய்த பாதரஸம் 1 வராகனெடை சேர்த்து ஒரு கல்வத்திலிட்டு ஒரு முற்றிய கடுக்காயினால் நன்றாக அரைக்கவும். இவ்வாறு அரைக்கப்பட்ட விழுதை பத்திரப்படுத்தவும்.

பின்பு, அந்த இரும்புக் கரண்டியை அடுப்பில் போட்டுப் பழுக்கக் காய்ச்சி ஒரு புது எலுமிச்சம்பழத்தை இரண்டாக நறுக்கி, அதிலொத்திச் சூட்டுடனே இரணத்தில் ஒத்தடமிடவும். அதன் பிறகு, முன்னே சொல்லப்பட்ட விழுதை ஒரு வெ ள்ளைத் துணியில் தடவி காலையிலும், மாலையிலும் அவ்விரணத்தின்மேல் ஒட்டி விடவும். விரணத்திலுள்ள சீழ் அனைத்தும் வெளியே வந்துவிடும். புண்களை அடிக்கடி துடைக்கவும். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று நாட்கள் செய்யவும்.

சீழ் வற்றியபின் புங்கம் வேர்ப்பட்டையைத் தண்ணீர் விட்டிழைத்துப் பவுத்திரத்தின்மேல் போடவும். புரைகளிருந்தால், அவைகளுக்குள்ளேயும் புங்கம் வேரின் விழுதை ஊதி உட்செலுத்தவும். அவ்விடத்தில் புங்கங்காயை நறுக்கி வைத்து ஒரு துணியினால் இழுத்துக் கட்டிவிடவும்.

உடம்பிலுள்ள விரணங்கள், பவுத்திரம், முலைக்குத்து முதலானவைகள் தீரும். கைகண்டது.

விரணம் 20

73. பஞ்சைக்குப் பிராய்வேர் கட்டு மருந்து

பஞ்சது போலப் பிராய்ப் பட்டையைப்
பஞ்சை வாயினி லதைத்தானே
யஞ்சி டாமலு மேகட்டு மூன்றே
நாளப் படியே யதுமழுந்தி
சஞ்சலஞ் செய்யாம லுமது காய்ந்து
தான்விடும் பஞ்சை யென்பதுவுங்
கொஞ்சியச மொழியான் றுரைசர பேந்திரன்
குணமுட னுணர்ந்திடு முறையே. 116

(இ-ள்)

பிராய்வேர்ப்பட்டை, வேண்டிய அளவெடுத்துக் கல்லுரலிலிட்டு பஞ்சு போலிடிக்கவும். பின்பு இதை ஒரு வெள்ளைத் துணியில் வைத்துச் சிலந்தியின் வாயில் கட்டிவிடவும். இவ்வாறு 3 நாட்கள் கட்டிவரச் சிலந்திகள் தீரும்.

74. பவுத்திரப்புண்ணுக்கு நத்தைச்சூரி மருந்து

அடவியின் நத்தைச் சூரிவே ரன்னை
யங்கையா லொருபிடி பிடுங்கி
திடமுட னன்றா யரைத்து நல்லெண்ணெய்
சேர்த்ததைக் குழப்பி நாற்பதுநாள்
துடியுடன் கொள்ளும் பவுத்திரப் புண்ணுந்
துலைந்திடும் சிவ கிருபையினால்
வடிவழ குள்ள சரபபூ பாலன்
மகிழ்ந்துரைத் திடுமுறையிதுவே. 117

(இ-ள்)

நத்தைச்சூரியின்வேரை நோயாளியின் கையால் ஒரு பிடியிருக்கும் அளவு பிடுங்கி அம்மியின் மேல் வைத்து

நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடன் குழப்பிச் சாப்பிடவும்.

இவ்வாறு 40 நாட்களுக்கு உண்ணவும். பவுத்திரப் புண்கள் ஆறும்.

75. பவுத்திரச் சிலந்திக்கு எண்ணெய்

கொடிவேலி வேர்விளாம் பழத்தள வுகொண்
டரைத்தே மைகள் போல
லடவுள வுள்ளி யுரித்துப் பலமூன்
றதுல்லாற் சுக்கைந்து பலமுந்
திடமுள சீர கம்பல மூன்றுந்
திப்பிலி யரைப்பல முடனே
வடிவுள மிளகும் பலமது மூன்றும்
வளர்கருஞ் சீரக மதுவே. 118

அதுவுமோர் மூன்று பலமிது வாக
வறுவகை மருந்துதண் ணீர்விட்
டிதமுட னரைத்தெள் ளெண்ணெயிற் போட்டுத்
தீயினில் வைத்ததை மெழுகு
பதமதி லிறக்கி வடித்துமோர் கரண்டி
பருகிடு காலை யந்தியிலு
மதிவிதப் பவுத்திரச் சிலந்தியுந் தீருமப்
புண்ணின் மீதிலும் யோடே. 119

போட்டிடப் புண்ணும் மாறிடு மிதையும்
பூசிடு வண்டு கடிக்கும்
நாட்டமா யுள்ளுக் கொள்ளு பீனிசமும்
நகர்ந்திடுஞ் சொற்படி கரண்டி
பூட்டிடு நாசி தனிலுமே நசியமுஞ்
செய்து பாரந்த நோய்கள்
போட்டிடு மிதற்குப் பத்தியம் புளிப்பு
முறுத்தன் புகையிலை நீக்கே 120

நீக்கியே முருங்கைக் காயிலை யுடனே
நேருள துவரையின் பருப்பு
மாக்கிடு முளைக்கீ ரையுமிது வாகு
மப்புற மொன்றுமா காது
வாக்கினி லரிச்சந் திரன்மனு நீதி
வாய்மைநன் றியும்விற் பன்னன்
யோக்கி யருந்தஞ் சையில் வாழு
முச்சித விபுவுரை யாமே. 121

(இ-ள்)

கொடிவேலி வேர் ஒரு விளாம்பழத்தளவு

எடுத்து அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டுக் கைபடாமல் நன்றாக வரைத்து, அதனுடன்

உரித்த உள்ளிப்பூண்டு	3 பலம்
சுக்கு	5 பலம்
சீரகம்	3 பலம்
திப்பிலி	½ பலம்
மிளகு	3 பலம்
கருஞ்சீரகம்	3 பலம்

இவைகளையுஞ் சேர்த்து, அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நன்றாக வரைத்து, நல்லெண்ணெய் (10 சேருடன்) குழப்பி அடுப்பின்மேல் வைத்தெரித்து மெழுகு பதத்தில் இறக்கவும். இதை வடிகட்டிப் பத்திரப்படுத்தித் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் சிறுகரண்டி (காலணா) யளவு உட்கொள்ளவும்.

பவுத்திரம், சிலந்தி முதலானவைகள் தீரும்.

இத்தைலத்தையே பவுத்திரப் புண்களிலும் போடவும். வண்டுகடிக்கும், இதை மேலே பூசலாம்.

பீனிஸத்திற்கு இந்த எண்ணெயில் ஒரு கரண்டி உள்ளுக்குங் கொடுத்து, நாசிகளிலும் (4 துளிகள்) வீதம் நஸ்யஞ் செய்யவும்.

பத்தியம்:

புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும், புகையிலையையும் நீக்கிவிடவும். முருங்கைக்காய், முருங்கையிலை, துவரம்பருப்பு, முளைக்கீரை முதலானவைகளை உபயோகப்படுத்தலாமேயல்லாது இதர பதார்த்தங்களை அறவே நீக்கிவிடவேண்டும்.

76. பவுத்திரத்திற்குக் குப்பைமேனி மருந்து

குப்பைமே னியையும் பிடுங்கியும் வந்தே
குணமுடன் றலைகீழாய்க் கட்டி
தப்பிலா துலர்த்தி வைத்தத னிலையைத்
தான்பறித் திடித்து நன்றாக
செப்பமாய் வடியுங் கட்டியே கொம்புத்
தேனிலே காசெடை கொள்முன்
னப்பாங் கழற்கா யளவது கொள்ளு
மடவுள தேனினிற் றானே. 122

தேனிலே கொள்ளப் பவுத்திரந் தீருஞ்
செப்பிய பாகத்தின் படியே
ஈனமி லாமற் பத்துநாள் கொள்ளு
மிதற்கிச் சாப்பத் தியமாக
ஞானமுங் கல்வி யாகம புராண
நான்மறை முறையறி வோர்க்கு
வூனமி லாத தஞ்சையில் வாழு
முச்சிதமா னுவின்முறை யிதுவே. 123

(இ-ள்)

குப்பைமேனிச் செடியைச் சமூலமாகப் பிடுங்கிக் கொண்டுவந்து, ஒரு கயிற்றினாலிதைத் தலைகீழாகக் கட்டி விடவும். அப்படியே அது உலர்ந்தபின், அதன் இலைகளைப் பறித்துக் கல்லுரலில் இட்டு நன்றாக இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவும், இதை ஒரு பாட்டிலில் பத்திரப்படுத்தி வேண்டும்போது, முதலில் ஒரு வராகனெடையளவு தேன் சாப்பிட்டு விட்டுப், பின்பு, சூரணத்தில் ஒரு கழற்சிக்காயளவெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இவ்வாறு 10 நாட்கள் உட்கொண்டுவரப் பவுத்திரரோகந் தீரும்.

பத்தியம்:

ஸ்திரீ சேர்க்கை கூடாது.

77. நெடுநாளான பவுத்திரம், நூதனப் பவுத்திரங்களுக்குப் குப்பைமேனி மருந்து

குணமுள்ள குப்பையின் மேனிச் சமூலங்
கொண்டு வந்தே நிழலிலுலர்த்தி
உணர்வுடன் சூரண மாக்கியே வடித்து
வொருமையாய் மூவிரற் றூளை
மணமுள வெருமை வெண்ணெய் விளாங்காய்
மாத்திரத் தினிற்பொடி குழப்பி
கணிதமாய் நெடுநாட் பவுத்திர மாகிற்
கண்டித மண்டலங் கொள்ளே. 124

மண்டலங் கொள்ளு நூதன பவுத்திர
மாகிடிற் மண்டல மரையே
கொண்டிடு மிதற்கு நெய்யுடன் பாலுங்
கூட்டிடு பின்னையொன் றையுமே

யண்டியே கையாற் றொடாதே யாதொன்று
மாகிடாதிதற்குசுத் தமுமா
கண்டித மாகப் பவுத்திர நோயுங்
கலங்கியூர்விட்டகன்றிடுமே. 125

(இ-ள்)

குப்பைமேனிச் செடியைச் சமூலமாகப் பிடுங்கி நிழலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்துப் புதிய எருமை வெண்ணெய் ஒரு விளாங்காய்ப் பிரமாணத்துடன் தூவிக் குழைத்துச் சாப்பிடவும்.

வெகுநாள் சென்ற பவுத்திரமாகில் இம்மருந்தை 40 நாட்களுக்குச் சாப்பிடவும். புதிதாயேற்பட்ட பவுத்திரமானால் இம் மருந்தை 20 நாட்களுக்கு உபயோகிக்கவும்.

பத்தியம்:

பசுவின் நெய், பசுவின் பால் முதலியவைகளை வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும். மற்ற பதார்த்தங்களைக் கையினால் கூடத் தொடாமலிருத்தல் வேண்டும்.

78. நீர்விழும் பவுத்திரத்திற்கு வில்வவேர்க்களி

இரவியு மிந்துங்கூடுமா மாவா
சியில்விநா யகனைப்பூ சித்து
வுரமுடன் வடக்கே யோடும் வில்லவே
ருன்கையாற் சேரையு மொன்று

முரித்திடு நவ்வல் பட்டையுஞ் சேரை
யொன்றிதி ரண்டையுந் தானே
பருவமாங் குருவை யரிசியி லிடித்துப்
பக்குவ மாய்க்களி கிண்டே 126

கிண்டிநெய் வார்த்துக் கருப்புட்டி கூட்டிக்
கேளமா வாசை பூரணையுங்
கண்டநா டொட்டு மூன்றுநாட் கொள்ளு
கணக்கதாய் நீர்விழு பவுத்திரம்
அண்டிடா தோடும் புண்ணிலெவ் வேழு
வடவியி னெருக்கிலை வாட்டி
கண்டித மாகக் கட்டிடப் பவுத்திரங்
கரைந்துபுண் ணாறிடுந் தானே. 127

ஆறிடும் பத்தியம் புளிபுகை யிலையு
மாகிடா திதற்குமா வின்பால்
சேருநெய் கூட்டி யுண்முருங் கைக்காய்
தின்றிடு மூன்றுமு றையுமே
ஆரியர் தமக்கு ஷோடச தான
மருளிய தஞ்சைமா நகரை
வீரிய மாக நீதிகள் செலுத்தும்
விபுசர பேந்திர னருளே. 128

(இ-ள்)

அமாவாசையன்று அதிகாலையில் விநாயகரைப் பூசை செய்து, வடக்கு நோக்கிப் போகும் ஒரு பருத்த வில்வவேரை எடுத்துக் கொள்ளவும். அதைச் செதுக்கிய தூள் ஒரு சிரங்கை இருந்தால் போதுமானது. இதே போல் நாகப்பட்டைத் துண்டுகளும் ஒரு சிரங்கையளவு எடுத்துக்கொள்ளவும். இவ்விரண்டையும் குறுவை அரிசியுடன் சேர்த்துக் கலந்து கல்லுரலிலிட்டு இடித்து மாவாக்கித் தண்ணீர் சேர்த்து களியாகக் கிண்டி வைத்துக்கொள்ளவும். இதனுடன் நெய்யும் பனை வெல்லமும் சேர்த்து அமாவாசை முதல் 3 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

துர்நீர் கசியும் பவுத்திரம் தீரும். மேலும், ஏழு எருக்கிலைகளை ஒன்றின்மேலொன்றாக அடுக்கி அனலில் வாட்டி சூடாக இருக்கும்போதே அப்புண்ணின் வாயில் வைத்துத் துணியினால் கட்டிவிடவும். பவுத்திரம் கரைந்து, புண்களும் ஆறிவிடும்.

பத்தியம்:

புளி, புகையிலை முதலியவைகளை நீக்கிவிடவும். பசுவின் பால், பசுவின் நெய், முருங்கைக்காய் முதலானவைகளை வேண்டிய அளவு கூட்டிக்கொள்ளவும்.

79. பவுத்திரம், கர்ணப்புண்களுக்கு மிளகரணைக் கிழங்காதிக் களி

கானக மிளகரணைக்கிழங் கிரம்பக்
கையினால் வெட்டியே வந்துத்
தானதைப் பாக்குப் போலவே நறுக்க
தனையுலர்த் திப்பொடி யாக்கி
யேனய மாயுரி யரிசியி லிடித்து
மிதமுள களியதாய் கிண்டி
யூனமில்சாதி லிங்கங் காற் கழஞ்சு
மொக்கவே பொடிபண்ணித் தூவே. 129

தூவியே மூன்றுநான்குநாட் கொள்ளு
துடியுட னந்தியுங் காலை
மேவிய பவுத்திர முங்கர் ணப்புண்
விட்டிடுஞ் சுத்தமாய்த் தானே
பூவினி லதிகக் கீர்த்தியே பெற்ற
புண்ணிய வான்மனு நீதிக்
காவலன் சரப பூபனு முணர்ந்த
வகையது காண்முறை யிதுவே. 130

(இ-ள்)

காட்டு மிளகரணைக் கிழங்கை வேண்டிய அளவு வெட்டிக்கொண்டு வந்து, பாக்கு வெட்டியினால் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் உலர்த்தவும். பின்பு இத்துண்டுகளை கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து, அதனுடன் ஊறிய அரிசி பட்டணம் ¼ படி போட்டு நன்றாக இடித்து மாவாக்கிக் கொள்ளவும்.

பின்பு இதையொரு பாத்திரத்திலிட்டுச் சிறிது தண்ணீர்விட்டு, அடுப்பின் மேலேற்றிக் களியாகக் கிண்டவும். பின்பு, அதனுடன் சுத்திசெய்த சாதிலிங்கம் ¼ கழஞ்சு (10 குன்றியெடை) எடுத்துப் பொடி செய்து களியுடன் சேர்த்துக் காலையில் ஒரு கொட்டைப் பாக்களவும், சாயங்காலத்தில் ஒரு கொட்டைப் பாக்களவுமாக, 12 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

பவுத்திரப் புண்கள், காதிலுள்ள புண்கள் முதலானவைகள் தீரும்.

80. பவுத்திரம், பிளவை, விப்புருது, முலைக்குத்து நாடி விரணம், தாதுநஷ்டம், பீனஸம், கண்டமாலை யோனிச்சூலை, நாக்குச் சிலந்திப் புண்களுக்குக் கிருதம்.

திப்பிலிகோரைக்கிழங்கு கொத்தமல்லி
சித்திரமூ லமுங்கடுக்காய்
திப்பிலிமூ லஞ்செவ்வி யஞ்சுப்பு
தேவதாரஞ் சுக்குசீந்தில்
தப்பிலாப்பொன் னின்முசுட்டை வேருடனே
சாரணைவேர் வில்வவேரு
மொப்பிலாமுக் காவேளை வேர்ப்பேய்ப்பு
டாலின்வே ரின்னமுங்கேளே. 131

இன்னமுமா டாதோடை யின்வேருட
னேகண்ட ங்கத்திரிவேரும்
நன்னயவாடு தின்றாத பானையின்வேர்
நவின்றிடு மெட்டுவேரெல்லா
லுன்னிதக் கருவேலப் பட்டையுமா
யிலுடப்பட்டை கொன்னையின்பட்டை
வன்னமாம் புங்கம்பட் டையும்வேப்ப
மரத்துடபட் டையுமைந்தே. 132

ஐந்துட னிருபத்தி நாலுள வகையு
மறுபலம் வகைய தொன்றுக்கு
மிந்தவேர்ப் பட்டை மருந்தையுந் தட்டி
யேகலத் தூணிதண் ணீர்விட்
டுந்திறமாக யெட்டொன்றாய்க் காய்ச்சி
யொக்கவா நெய்யும் நாநாள்
தந்திர மாய்விட்டதற்குமேல் கற்கந்
தகுமி லவங்கப் பத்திரியே 133

இலவங்கப் பத்திரி வசம்புவெண் கடுகு
யேலம்பொன் முசுட்டை வேர்கடுகு
இலவங்கஞ் சவுக்கா ரஞ்சீனாக்கார
மிந்துப்பி னுடனே வைந்துப்பு
இலவங்கப்பட் டையுங்கொடி வேலி
யினிப்பதி மதுரமு மோமம்
நலமிகுந் தேவ தாரமுங் கோட்டம்
நாகப்பூ பெருங்குறும் பையுமே, 134

குறும்பையு வாய்வேர்ப் பட்டைமஞ் சிட்டி
கூறிடும் பெருமரப் பட்டை
பெருங்காய மத்தித் திப்பிலி திப்பிலி
பெலமிகுஞ் சத்தியின் சாரஞ்

தருசடா மாஞ்சிலி மமதி விடையந்
தப்பிலாக் கடுகரோகிணியு
முரமிகுஞ் சிறுமுல் லையுந்திப் பிலிமூலத்
துடன் சரள தேவ தாரமுமே. 135

தாரமுங் கையாந் தகரையு முப்பத்
தறுவகை மருந்ததுஞ் சரியா
யோயொரு வராக னெடையது கூட்டி
யொக்கவுஞ் சுத்தியே செய்த
கூறுள குக்கிலு மைந்து பலமுங்
கோவினின்பால் விட்டதைத்தானே
நேருட னெல்லாம் பாலினி லரைத்து
நெய்யினிற் போட்டிடுவாயே. 136

போட்டு மைந்தேநாட் சிறுகொதி யிட்ட
பிறகறு நாடனில் வடித்து
நாட்டமாய் பத்து மாறுநா டானிய
நளிர்புடந் தன்னிலே வைத்து
தேட்டமாய் நல்ல முகூர்த்தங்கள் பார்த்து
திரிபுர சுந்தரி பதத்தில்
சூட்டியே மலரை யர்ச்சித்து தீப
தூபநி வேத்திய முஞ்செய்யே. 137

செய்திந்த நோயைத் தவிறெனப் போற்றி
சிரமது வணங்கி யுந்தானே
கையினால் வராக னெடையது வொன்று
கணக்குட னெடுத்துக்கா லையினிற்
பையவே கொள்ளத் தீரும்நோய் கேளு .
பவுத்திரம் புளவை விப்புருதி
தையலர் முலைக்குத் துடனாடி விரணந்
தாதுநஷ்ட மதும் போமே. 138

போகுமெண் வகைபீனசங்கண்ட மாலை
பலமிகு நாக்கினில் சிலந்தி
வாகுள யோனிச் சூலையும் பல்லாம்
வகைவெகு புண்களுந் தீரும்
நாகரீகங்கள் மிகும்பல பண்டு
நாவலர்க் கருளியே முன்சொல்
ஆகப் படியே தஞ்சை யையாளு
மரசர்கோன் விபுவரு ளிதுவே. 139

(இ-ள்)

திப்பிலி	கோரைக்கிழங்கு
கொத்தமல்லிவிதை	கொடிவேலிவேர்
கடுக்காய்த்தோல்	கண்டத்திப்பிலி
செவ்வியம்	தேவதாரம்
சுக்கு	சீந்தில்கொடி
பொன்முசுட்டைவேர்	சாரணைவேர்
வில்வவேர்	முக்காவேளைவேர்
பேய்ப்புடல்வேர்	ஆடாதோடைவேர்
கண்டங்கத்திரிவேர்	ஆடுதீண்டாப்பாளைவேர்
கருவேலம்பட்டை	ஆயில்பட்டை
கொன்றைப்பட்டை	புங்கம்பட்டை
வேப்பம்பட்டை	சோத்துப்பு
இந்துப்பு	வளையலுப்பு
அட்டுப்பு	உவர்மண் உப்பு

மேற்கூறிய சரக்குகளை வகைக்கு 6பலம் வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு ஊறவைத்து, மறுநாள் அதை அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும்.

இக்கஷாயத்தை வடிக்கட்டிப் பசுவின் நெய் பட்டணம் படி 1 சேர்த்துக் கலந்துகொண்டு,

இலவங்கப்பத்திரி	வசம்பு
வெள்ளைக்கடுகு	ஏலக்காய்
பொன்முசுட்டைவேர்	சவர்க்காரம்
சீனாக்காரம் (படிக்காரம்)	இந்துப்பு
சோத்துப்பு	வளையலுப்பு
உவர்மண் உப்பு	அட்டுப்பு
இலவங்கப்பட்டை	கொடிவேலிவேர்த்
அதிமதுரம்	ஓமம் (தோல்
தேவதாரம்	கோஷ்டம்
சிறுநாகப்பூ	*பெருங்குரும்பை
உவாய்வேர்ப்பட்டை	பெருங்காயம்
பெருமரப்பட்டை	திப்பிலி
யானைத்திப்பிலி	சடாமாஞ்சில்
அதிவிடையம்	கடுகரோகிணி
சிறுமுல்லைவேர்	கண்டத்திப்பிலி
சரளதேவதாரம்	கையாந்தகரை
மஞ்சிஷ்டி	சத்திச்சாரம்

ஆக இந்த வகை மருந்துகளை வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துக்கொள்ளவும்.

சுத்திசெய்த குக்கில் 5 பலமும்

எடுத்து எல்லாச் சரக்குகளையும் கல்லுரலிலிட்டி டித்துப் பசுவின் பால் விட்டு அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்து விழுதாக்கி முன்சொன்ன கஷாயஞ் சேர்ந்த நெய்யுடனே குழப்பிக்கொள்ளவும்.

பின்பு இதை அடுப்பின் மேலேற்றி 5 நாட்களுக்குச் சிறுகச் சிறுக எரிக்கவும். 6வது நாளன்று அதை நன்றாகக் கொதிக்க வைத்துப் பக்குவமாக்கி இறக்கவும்.

---

* இதற்குப்பதில் மருளைச் சேர்த்துக்கொள்ளலாம்.

அதற்குப் பின், நெய்யையொரு,ஜாடியிலிட்டு நன்றாக மூடித் தானிய (நெல்லினுள்) புடத்தில் 16 நாட்கள் வைக்கவும். பின்னர், இந்நெய்யைப் பத்திரப்படுத்தி, சுப முகூர்த்தத்தில் தேவியைப் பூஜித்துத் தீப, தூப, நைவேத்யம் முதலானவைகள் செய்தபின் உபயோகிக்கவும். நோயாளி, இந்நெய்யில் ஒரு வராகனெடை அளவு எடுத்துத் தினந்தோறும் காலை நேரங்களில் உட்கொள்ளவும்.

இதனால் பவுத்திரம், பிளவை, விப்புருதி, முலைக்குத்து, நாடி விரணம், இந்திரிய நஷ்டம், 8 வகைப் பீனிஸ ரோகங்கள், கண்டமாலை நாக்கிலுண்டாகும் சிலந்தி, யோனிச்சூலை, புண்கள் முதலான பற்பல ரோகங்களும் தீரும்.

81. பவுத்திரத்திற்கு மேற்போடச் சீலை

திருகுகள் ளிப்பால் மங்கையர் முலைப்பால்
சேர்கருங் கோழியின் கார
முரமிகு மரளிப் பாலுட நாலு
மொக்கவே சரியதாய்க் கூடக்
கரமதி னால்மத் தித்துச்சீ லையினிற்
கருத்துட னூட்டியே போட
எரியுறு பவுத்திர மாறிடு மாதி
யீசரின் கிருபையி னாலே. 140

(இ-ள்)

திருகுக் கள்ளிப்பால் கருங்கோழிக்காரம்
முலைப்பால் அரளிப்பால்

இவைகளைச் சமம் எடுத்துக் கையினால் நன்றாக மத்தித்து, ஒரு வெள்ளைத் துணியில் ஊட்டவும். இதை வலியுடன் கூடிய பவுத்திரத்தில் வைத்துக் கட்டி விடவும். எரிச்சல் முதலானவை தீரும்.

82. சகல வீக்கத்திற்கும் உள்ளுக்கு மருந்து

வனத்தில் செங்கத் தாரிவேர் சென்னா
வரையின்வேர் குன்றி வேர்மூன்று
மினத்துடன் சரியாய்க் கூட்டிச் சம்பீரத்
தின்பழத் தளவரைத் தேதான்
கனத்தவெள் ளெண்ணெய் நாழியிற் கலந்து
காய்ச்சிபாக் களவெண்ணெய் கொள்ளு
அனைத்துள வீக்க மற்றிடுந் தனே
யன்புட னேசெய் வாயே. 141

(இ-ள்)

செங்கத்தாரிவேர்
சென்னாவாரைவேர்
குன்றிமணிவேர்

இம்மூன்று வகை வேர்களுஞ் சேர்த்து ஒரு எலுமிச்சம் பழப் பிரமாணமெடுத்து அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து, நல்லெண்ணெய் 1¼ சேருடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயில் ஒரு பாக்களவு எடுத்து (சுமார் 2 ஸ்பூன்) உட்கொள்ளவும்.

உடம்பிலேற்பட்ட வீக்கங்கள் குறையும்.

83. பவுத்திரம், புரை, புண்கள் முதலியவைகளுக்கு மேலேபோட எண்ணெய்

கொடிவேலி வேரெலி மிச்சங்கா யளவு
கொண்டரைத் தேகருஞ் சீரகந்
திடமுள்ள வெள்ளைக் குங்கிலி யத்தோ
டேவெளிச் சைப்பிசின் டானும்

மடவுள் கார்போ கரிசியிம் மூன்றும்
வகைக்கி ரெண்டே வ ராகனெடை
பொடிசெய்தெள் ளெண்ணெ யரைப்படி யினிலே
போட்டதை யடுப்பினில் வைத்தே. 142

ஏற்றியே காய்ச்சிப் பதத்தினில் வடித்தவ்
வெண்ணெயிற் றுணியதை நனைத்து
பூத்திடு பவுத்திரந் தன்னிலே சரியாய்ப்
போட்டதைப் புரையிருந் தாலு
மாத்திடு மிதுவுஞ் சோதனை முறையு
மாகிடு மெந்தப் புண் ணுக்குஞ்
சாத்திய படிக்கிச் செய்யெனத் தஞ்சைச்
சரபரா சேந்திர னருளே. 143

(இ-ள்)

கொடிவேலி வேர்த்தோல் சுமார் ஒரு எலுமிச்சங் காயளவெடுத்து, அம்மியின்மேல் வைத்துக் கைபடாமலரைத்து, அதனுடன்

கருஞ்சீரகம் வெள்ளைக் குங்கிலியம்
வெளிச்சைப்பிசின் கார்போகரிசி

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து இடித்துச் சேர்த்து, நன்றாக அரைத்து நல்லெண்ணெய் அரையே அரைக்கால் சேருடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு சிறிய வெள்ளைத் துணியை நனைத்துப் பவுத்திரத்தின் மேல் வைத்துக் கட்டவும். புரைகளுக்குள்ளேயும், இந்த எண்ணெயை விட்டு ஊதவும்.

இதைத் தவிர, மற்றெந்தப் புண்களுக்கும் இந்த ண்ணெயைப் போட மிகக் குணந்தரும்.

84. ஓட்டுக்கோழை, விப்புருதி முதலானவைகளுக்கு உள்ளுக்குச் சாப்பிட மருந்து

கூரெள்ளி ணெண்ணெய் வெங்காயச் சாறுங்
குணமாடா தோடையின் சாறும்
நேருடன் சரியாய்க் கூட்டியே காய்ச்சி
நீபதத் தினிலதை யிறக்கி
கூறுடன் காலை நக்கிட வொட்டுக்
கோழைவிப் புருதியு மாறும்
பாருல கிலத்தஞ் சையினிலே வாழும்
பார்த்திப னருளிது தானே. 144

(இ-ள்)

சுத்தமான நல்லெண்ணெய்	1 சேர்
வெங்காயச்சாறு	1 சேர்
ஆடாதோடைச்சாறு	1 சேர்

இவைகளையொன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதில் ஒரு ஸ்பூன் அளவெடுத்துக் காலை நேரங்களில் நக்கி வரவும்.

கோழை, விப்புருதி முதலானவைகள் தீரும்.

85. விப்புருதிக்கு எலுமிச்சங்காயெண்ணெய்

எலுமிச்சங் காயி னளவுசிற் றவுரி
யிலையரைத் தேமைகள் போல
நலமுற்ற கோழி முட்டையின் வெள்ளை
நறக்கு வெடுத்த திற்குழப்பி

பலமுற்ற வெள்ளி னெண்ணெயை விட்டுப்
பருகிடு மூன்று நாட்காலை
வலிமிச்ச மாம்விப் புருதியுந் தீரு
மன்புடன் செய்து பாரிதையே. 145

(இ-ள்)

சிற்றவுரியிலை ஒரு எலுமிச்சங்காயளவெடுத்து அம்மியின்மேல் வைத்து, நேக அரைத்துக் கோழி முட்டையின் வெள்ளைக் கருவுடனே குழைத்து, நல்லெண்ணெய் (2 ஸ்பூன்) சேர்த்துத் தினந்தோறும் காலை வேளையில் உட்கொள்ளவும்.

இவ்வாறு 3 நாட்கள் செய்ய விப்புருதிகள் தீரும்.

86. ஐந்துவகை விப்புருதிகளுக்கும் நெய்

அவுரி யிம்பூர லெருக்கு மாவிலங்கை
யடவியின் பிராய்குறிஞ் சாவேர்
கவன மாயிந்த வாறுவே ருள்ளிக்
கடுகரோகணியும்நேர் வாளம்
நவம தாஞ்சுக்கு யிதுநாலு முன்பு
நவின்றிடு வகையின் வேராறு
மிவையதி லொவ்வோர் வகைக்குப்பாக் களவு
மிதமுட னரைத்துக் கொள்வாயே. 146

அரைத்து வாநெய்யிற் போட்டெரித் தேவடித்
தக்கடு குடன்வைத்துக் கொண்டு
திருத்தமாய் நாலு நாளது கொள்ளு
செய்யெட்டு நாளுமே பத்தியம்
வருக்கமாம் புளியுப் பாகிடா தொன்றும்
வளரஞ்சு விப்புருதி யும்போ
யுரத்திடுந் தேகந் தப்பிலா முறையிது
உண்மையாய்ச் செய்துநீ பாரே. 147

அவுரிவேர்	சிறுகுறிஞ்சாவேர்
இம்பூரல் சமூலம்	பூண்டு
எருக்கம்வேர்	கடுகரோகிணி
மாவிலங்கம்வேர்	சுத்திசெய்த நேர்வாளம்
பிராய்வேர்	சுக்கு

முதலான சரக்குகளை வகைக்கு ஒரு பாக்களவெடுத்து அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நேக அரைத்து பசுவின் நெய் (5 சேருடன்) குழப்பி அடுப்பின்மேல் வைத்துப் பதத்தில் இறக்கவும். இந்நெய்யைக் கடுகுடனேயே வைத்துக்கொண்டு 4 நாட்களுக்குச் சாப்பிடவும். தினம் 2 வேளை காலையிலும் மாலையிலும் ஒரு ஸ்பூன் உபயோகிக்கவும்.

பத்தியம்:

எட்டு நாட்களுக்கு உப்பு, புளி முதலியவை கூடாது.

விப்புருதிகள் தீரும்.

87. விப்புருதக்குத் திருகுக்கள்ளியெண்ணெய்

திருகுக் கள்ளியுங் கொடிவேலி யாதண்டை
சேர்சங்கங் குப்பியு மமுக்கிரா
பெருமருந் துடனுத் தாமணி கூடப்
பிரண்டைவே ராகவு மெட்டே
பெருங்கா யம்வெங் காயமு மிளகும்
பலமுள காந்த மிந்துப்பு
உரமுள வசம தாகமுஞ் சுக்கி
னுடன்கருஞ் சீரக முங்கூட்டே 148

கூட்டிடு கடுக்காய் பூதகரப் பான்
கூறிய பத்து மெண்வகையுங்
கூட்டிடு சமனா யரைத்துவேப் பெண்ணெய்
கொண்டிடு நாழியுந் தானே
நாட்டினா மணக்கி னெண்ணெய்யுந் தானே
நாழியுங் கூட்டியே காய்ச்சி
வாட்டமில் லாமல் பதத்தினிற் றானே
வடித்துக்கொள் வகையு மோதுவனே. 149

ஓதுவே னெட்டு நாளதி காலை
யுங்கொளு விப்புரு தியும்போய்ச்
சாதக மாகும் பத்திய மாய்க்கொள்
சட்டமா மதிளுங்கோ புரஞ்சூழ்
பூதம தோடே யாடிய பாதர்
பொற்பாதம் பணி சரபேந்திரன்
நீதியாய் வைத்திய நூல்களை யுணர்ந்து
நிட்சயித் ததுமிது வாமே. 150

(இ-ள்)

திருகுக்கள்ளி வேர்	வெங்காயம்
கொடிவேலிவேர்	மிளகு
ஆதண்டைவேர்	சுத்திசெய்த காந்தம்
சங்கங்குப்பி	இந்துப்பு
அமுக்கிராகிழங்கு	ஓமம்
பெருமருந்துவேர்	சுக்கு
உத்தாமணிவேர்	கருஞ்சீரகம்
பிரண்டைவேர்	கடுக்காய்த்தோல்
பெருங்காயம்	பூதகரப்பான்பட்டை

முதலான சரக்குகளை வகைக்கு ஒரு பாக்களவு எடுத்து, இடித்துப் பின்பு அம்மியின்மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நேகவரைத்து,

வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் இவ் விரண்டும் தனித்தனியே 1¼ சேர் வீதமெடுத்து ஒன்று கூட்டி, அதனுடன் குழப்பி அடுப்பின்மேல் வைத்துப் பதமாகக் காய்ச்சி இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினந்தோறும் அதிகாலையில் உட்கொள்ளவும்.

பத்தியம்:

(உப்பு, புளி முதலியவைகளை நீக்கவும்.)

விப்புருதிகள் தீரும்.

88. விப்புருதிக்குச் சீத்திரமூல மருந்து

சித்திர மூலியு மாவாரைத் தூதுவளைத்
திறகறி முள்ளி வேர்நாலுஞ்
சத்துவ மாகச்சரிசமன் கொண்டு
தானிடித் தேவடிக் கொண்டு
வைத்துமே கோழி முட்டையு மூன்று
மதின்வெள்ளைக் கருவதிற் போட்டு
யுத்ததூள் பருவெரு கடியதிற் போட்டு
முன்கையாற் குழப்பியும் பருகே. 151

பருகிடு மூன்றுநா ளந்தி காலை
பத்திய முப்புடன் புளிப்புந்
திருகுசெய் புகையி னிலையதுந் தள்ளித்
தின்னுவெந் நீருமே சோறு
முரையிளங் கீரை மிளகுடன் பொரிமா
வுந்தூவிக் கொள்ள விப்புருதி
இரவியைக் கண்ட பனியென வோடு
மிம்மருந் துறுதியாய்ச் செய்யே. 152

(இ-ள்)

சித்திரமூலம் தூதுவளைவேர்
ஆவாரைவேர் கறிமுள்ளிவேர்

முதலானவைகளைச் சமனெடை எடுத்து (வகைக்கு 1 பலம்) காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். மூன்று கோழி முட்டையின் வெள்ளைக் கருவுடன் ஒரு வெருடியளவு சூரணத்தையிட்டுக் குழைத்துச் சாப்பிடவும்.

இவ்வாறு தினமொன்றுக்கு 2 வேளை வீதம் காலையிலும் மாலையிலும் 3 நாட்களுக்குச் சாப்பிடவும்.

பத்தியம்:

உப்பு, புளிப்பு முதலிய சுவைகளுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும். புகையிலையையும் நீக்கவும். வெந்நீர் சாதம் மாத்திரமே சாப்பிடவும். இளங்கீரையைச் சுண்டி மிளகும், பொரிமாவுஞ் சேர்த்துச் சாப்பிடவும்.

விப்புருதிகள் தீரும்.

89. மலட்டு விப்புருத்திக்கு மருந்து

அடவி வேம்பாடம் வேர்கொழிஞ் சியின்வே
ரத்துட னேகருஞ்சீரந்
திடமுள மூன்றுவ கையதில் வகைக்குச்
சேர்த்தொரு பலமதா யிடித்து
வுடனேவேப் பெண்ணெய் தன்னிலே குழப்பி
யும்பத மாகவுங் காய்ச்சி
விடியநே ரத்தில் வாலையைப் போற்றி
மேல்செய்யும் வகையதுங் கேளே. 153

வகையது கேளு சொல்லிய படிக்கு
வண்மையாய் பதினைந்து நாட்டான்
துகையுடன் கொள்ளக் குடலிலே யூறித்
தோன்றிடும் மலட்டு விப்புருதி
யகண்டுபூச் சியது விழுந்திடுங் கெர்ப்ப
மாகிடு முப்புடன் புளிப்பு
புகையிலை யுந்தள் ளிம்முறை நல்ல
புண்ணியத் தஞ்சை மானுரையே 154

(இ-ள்)

வேம்பாடம்வேர்	1 பலம்
கொழிஞ்சிவேர்	1 பலம்
கருஞ்சீரகம்	1 பலம்

இம்மூன்று சரக்குகளையும் சிறுசிறு துண்டுகளாக்கிக் கல்லுரலிலிட்டு இடித்து, வேப்பெண்ணெயுடன்(1 சேர்) குழப்பி (ஒரு நாளுற வைத்து) அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் 1 ஸ்பூன் எடுத்துப் பருகவும். இம்மாதிரி 15 நாட்கள் பருகிவர

மலட்டு ரோகம், விப்புருதி முதலானவைகள் தீரும்.

பத்தியம்:

எண்ணெய் சாப்பிடும் நாட்களில் உப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களையும், புகையிலையையும் நீக்கவும்.

90. கொப்ப விப்புருதிக்கு நக்க நெய்

தெங்கினில் முற்றக் காயைப்பால் பிழிந்துத்
தீயினில் வைத்துநெய் யெடுத்து
வங்கண வாய்பே சாமல்நெய்க் கொட்டான்
வடக்கினி லோடும்வேர் வெட்டி
யுங்க வனத்தோ டந்தவேர்ப் பட்டை
யுரித்தரைத் தேநெய்யி னிற்போட்
டுங்கன லிட்டு மெழுகினின் பதத்தி
லுமிறக்கி யும்வடித் திடுமே. 155

வடித்துச்சங் கரனைப் போற்றி யர்ச்சித்து
வளமுட னந்தியுங் காலை
நிடத்துட னோர்காசளவது நக்குத்
தீர்ந்திடுங் கொப்பவிப் புருதி
துடித்துக் கூட்டோடே விழும்புழு செத்து
துர்க்குண மென்பதெல் லாம்போய்
வடிப்பமாங் கொப்பந்தானது முண்டாம்
வன்மையாந் தஞ்சை மாலுரையே. 156

(இ-ள்)

முற்றின தேங்காயையுடைத்துத் துருவிப் பால் பிழிந்துகொண்டு, ஒரு ஈயம் பூசிய பாத்திரத்திலிட்டு அனலில் வைக்கவும். அது எண்ணெயாகும். அதனுடன், நெய்க்கொட்டான் (பூந்திக்கொட்டை) மரத்தின் வடக்கே போகும் வேரை வாய் பேசாமல் வெட்டிக்கொண்டு வந்து அதன் மேல் பட்டையை உரித்துத் தண்ணீர் விட்டரைத்துச் சேர்த்து, எரித்து, மெழுகு பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு சிறு ஸ்பூனளவு எடுத்து (காசளவு)க் காலையிலும், மாலையிலும் உட்கொள்ளவும்.

கெர்ப்ப விப்புருதி அப்படியே விழும். மலட்டுப் புழு கூண்டுடன் செத்து விழும். பற்பல துன்பங்களும் நீங்கும். கெர்ப்பமும் உண்டாகும்.

91. விப்புருதிக்கு முருங்கை நெய்

இருபத்து நாலுப லமுருங் கையின்வே
ரினிற்றூணி நீர்விட்டுக் குறுணி
வருமட்டுங் காய்ச்சிவ டித்துமுன் சொல்வேர்
வகையிரு பத்துநாற் கழஞ்சு
யரைத்த திற்போட்டு நெய்யிரு நாழி
யதிற்புகட் டியும்பதத் திறக்கி
பருகிடு துட்டி னெடையும்விப் புருதி
பறந்திடுங் கைகண்ட முறையே. 157

(இ-ள்)

முருங்கை வேர் 24 பலமெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாகும் வரை வற்றக் காய்ச்சவும்.

பின்பு, இதனுடன் முருங்கை வேர் 24 கழஞ்சு (3 பலம்) எடுத்துச் சிறு துண்டுகளாக்கி, அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்துக் கஷாயத்துடன் கலந்து, பசுவின் நெய் 2 படி (10 சேர்) விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதிலொரு துட்டளவெடுத்துப் பருக விப்புருதிகள் தீரும்.

92. விப்புருதி, கண்டமாலைக்குப் புகை

இலுப்பைக் கட்டியும் நாற்கழஞ் சத்துட
னேயும் வாளங்க ழஞ்சது ரண்டையும்
வலுத்தவே லிப்பருத் திச்சாறு விட்டதை
மைகள் போலரைத் தேசேலை யூட்டியே
யுலர்த்தி நிழலி லேயந்தச் சேலையி
லுறுதியா கச்சற் றேகிழித் துத்திரி
நலத்துடன் செய்து நீகொளுத் திப்புகை
நாளுமெட் டுடன்பத்துநாட் கொண்டே. 158

கொள்ளுமுப் புப்புளி கரப்பான் பண்டங்
கூட்டிடா தேவள முருங்கைப் பிஞ்சு
அள்ளியே பொரிமா விட்டுக்கூட் டிக்கொள்
கண்ட விப்புருதி கண்ட மாலையு
முள்ளினிற் புரையுங் கூட மாறிடு
முறுதி யாக யற்புதத் தஞ்சையின்
வள்ளலிற் றய வுள்ள குடையருள்
மன்னர்கோன்சர பேந்திர னருளிதே 159

(இ-ள்)

இலுப்பைப் புண்ணாக்கு	4 கழஞ்சு (½ பலம்)
சுத்திசெய்த நேர்வாளம்	1 கழஞ்சு (½ பலம்)

இவ்விரண்டையும் நசுக்கிக் கல்வத்திலிட்டு வேலிப் பருத்தியிலைச்சாறு விட்டு, நன்கு மைபோலரைத்து, ஒரு சாண் நீள அகலமுள்ள வெள்ளைத் துணியிலூட்டவும். பின்பு இதை நிழலில் காயவைத்து பத்திரப்படுத்தவும். வேண்டும்போது இத்துணியில் கொஞ்சம் கிழித்துத் திரிசெய்து, கொளுத்தி அதனின்று எழும்பும் புகையை உட்கொள்ளவும். இவ்வாறு 8 நாட்களோ அல்லது 10 நாட்களோ செய்யவும்.

பத்தியம்:

உப்பு, புளி, கரப்பான் பண்டங்கள் (கத்தரி, சாமை, முதலியன) முதலியவைகளை நீக்கவும். முருங்கைப் பிஞ்சு பொரிமா முதலியவைகளை அதிகமான அளவில் உபயோகிக்கவும்.

விப்புருதி, கண்டமாலை முதலான ரோகங்கள் தீரும்.

93. கெர்ப்ப விப்புருதி. கூடல் விப்புருதி முதலானவைகளுக்குக் கிருதம்

பசுவின்பா லும்நா னாழியிள நீரும்
பாரதிற் குச்சரி சேர்த்து நாட்டின்
யிசவா யிஞ்சியி டித்ததிற் போட்டுநீ
யிட்டுநா லொன்றா யிறக்கிவ டித்துக்கொள்
வசமதா மெருமை வெண்ணெய் நாழியு
மதிற்க லந்ததில் லிங்கமுங் கோட்டமும்
பசைய தாஞ்செண்ப கப்பூ மதுரமும்
பாரின் னாலுஞ் சரிநிறை யாகவே 160

சரிய தாகவ ரைத்ததிற் போட்டுப்பின்
சற்று கள்ளிப்பா லுஞ்சேரு யின்னமுங்
திருகுக் கள்ளிப்பால் சற்றதிற் கூட்டியே
தீயின் வைத்தெரித் தேபதந் தன்னிலே
திருந்த மாய்வடித் தேகாலை நக்கிட
தீருங் கெர்ப்பவிப் புருதியிங் கூடல்விப்
புருதி யுந்தீரு மேயிது தஞ்சையாள்
புரவலன் சரபேந் திரனரு ளிதே 161

பசுவின் பால் 4 படி
இளநீர் 4 படி

இவ்விரண்டையும் ஒன்றுகலந்து, அதனுடன் இஞ்சிச்சாறு (1 படியும்) விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகும் வரை எரித்து இறக்கவும். இக்கஷாயத்தில் ஒரு படி எருமை வெண்ணெயிட்டு

சுத்திசெய்த லிங்கம்
கோஷ்டம்
செண்பகப்பூ
அதிமதுரம்

இவைகளை வகைக்குச் சரியெடை (1 பலம் வீதமெடுத்து) மேல்சொன்ன கஷாயத்தைவிட்டு நன்றாக அரைத்துக் கலக்கி அதனுடன்

சதுரக்கள்ளிப்பால்
திருகுக்கள்ளிப்பால்

இவைகளையும் சேர்த்து (வகைக்கு 1 பலம்) அடுப்பின் மேலே ஏற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்த நெய்யில் ஒரு ஸ்பூனளவெடுத்துக் காலை நேரங்களில் நக்கவும்.

கெர்ப்ப விப்புருதி, கூடல் விப்புருதி முதலானவைகள் தீரும்.

94. விப்புருதிக்கு மருந்து

பசுவின் பாலிலே நல்லதா யம்மான்
பச்சரிசிசம் பீரப் பழத்தூள்
விசைவ தாகவ ரைத்துக்க ரைத்ததை
மேன்மையாக நாலஞ்சு நாட்கொண்டிடு

தசையி லேயெழு விப்புருதி யும்போய்
சடமுமெற் றக்குணமாந் தஞ்சையினி
லுசித வாணர்தர்மறி யன்புள்ள
உத்தமன் சரபேந்த திரனரு ளிதே. 162

(இ-ள்)

பசுவின் பாலுடன், அம்மான் பச்சரிசி ஒரு எலுமிச்சை அளவெடுத்து அரைத்துக் கலக்கி 4 அல்லது5 நாட்களுக்கு உட்கொள்ளவும். மாம்ஸங்களில் ஏற்படும் விப்புருதிகள் தீரும். உடம்பும் நன்றாகும்.

95. விப்புருதிக்குப் பூச்சு

எருக்கம்வே ரமுக்கி ராவேரும் வேளையி
னிலையிம் மூன்றில் வகையது மொன்றுக்கு
திருத்த நாலுவ ராகனெ டைசிறு
நீரைவிட் டரைத்தே நாழிவேப் பெண்ணெய்
திருத்தமாகவும் விட்டெரித் தேவடி
செய்து மேவினும் பூசந்தி காலையில்
வருத்தஞ் செய்விப்பு ருதியு மற்றிம்
மருந்தை யுஞ்சிறு நீரதாற் பூசீடே. 163

(இ-ள்)

எருக்கம்வேர்
அமுக்கிராக்கிழங்கு
வேளையிலை

இவைகளை வகைக்கு 4 வராகனெடை எடுத்துத் துண்டுகளாக்கி இடித்துத் தூள்செய்து, உலகமறியாப் பிள்ளையின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்து,

வேப்பெண்ணெய் 1¼ சேருடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயை விப்புருதிகளின்மேல் பூசவும். தினம் இரு வேளை காலையிலும் மாலையிலும் உபயோகிக்கவும். சிறு நீர் கூட்டியும் உபயோகிக்கலாம்.

96. விப்புருதிக்கு உள்ளுக்கு எண்ணெய்

முடக்கொத் தானாடா தோடையும் பாவட்டை
முதிர்ந்த வஞ்சிலை நொச்சி கழற்கொடி
திடமுற் றவிந்த வைந்தும்வே ருமிலை
சேர்புளி நரளைக் கிழங்கு மிலை
அடவுற் றதழு தாழையி லையுட
னவனியின் கழற்கொடிப் பருப்பதுங்
கடுக்காய் பதறுவெங் காயத்து டன்பெருங்
காயம் வெந்தயஞ் சீரகங் கூட்டிடே. 164

கூட்டிடு கரகுஞ்சீரகமிந் துப்புங்
குணமாம் பூதகரப் பானின் பட்டையுங்
காட்டி னில்வெளுத் தப்பிசி னித்திலே
காடி யிற்றுவைத் தேயிலை யுள்ளதை
நாட்ட மாகவே நாலுப டிச்சாறு
நயந்து மேபிழிந்துவடி கொண்டுதான்
மூட்டிடு வேர்கடைச் சரக்குள் ளதை
முழுது மேயரைத்துக்கரை சாற்றிலே. 165

சாற்றி லேகரைத் தேதாழி வேப்பெண்ணெய்
தானும் விட்டெரித் தேபதம் தன்னிலே
பாத்தி றக்கியவ் வெண்ணெயிற் காலையிற்
பண்புட னோர்கரண் டியும் நக்கிடு

சாத்தி ரப்படி யேபுளி யும்புகை
தள்ளிடு கரப்பான் பண்டமுள்ளதை
பூத்த விப்பு ருதியெனும் நோயது
போகு மூரைவிட்டப்பால் தானுமே. 166

(இ-ள்)

முடக்கொத்தான்	பாவட்டை
ஆடாதோடை	அஞ்சிலைநொச்சி
கழற்கொடி	

முதலான சரக்குகளின் வேர், இலை இவ்விரண்டையும் எடுத்துக்கொள்ளவும். இதனுடன்

புளிநரளைக்கிழங்கு	வெந்தயம்
புளிநரளையிலை	சீரகம்
தழுதாழையிலை	கருஞ்சீரகம்
கழற்கோடிப்பருப்பு	இந்துப்பு
கடுக்காய்	பூதகரப்பான்பட்டை
வெங்காயம்	வெளிச்சைப்பிசின்
பெருங்காயம்	

முதலியவைகளையும் (வகைக்கு 1 பலம்) எடுத்துக்கொள்ளவும். முதலில் இலை வகைகளை எல்லாம் ஒரு பாத்திரத்தில் போட்டு காடி விட்டூறவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்த சாறு 4 படியுடன், மற்ற வேர்களையும் கடைச்சரக்கு வகைகளையும் தண்ணீர் விட்டு அம்மியின் மேல் வைத்து நன்றாக அரைத்துக் குழப்பிவிடவும். இதனுடன் வேப்பெண்ணெய் 1 படி (5 சேர்) விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு சிறு கரண்டியளவு எடுத்துக் காலை வேளைகளில் சாப்பிடவும்.

பத்தியம்:

புளிப்புப் பதார்த்தங்கள நீக்கிவிடவும். புகையிலையையும் தள்ளவும். கரப்பான் பதார்த்தங்களும் உதவாது.

விப்புருதிகள் தீரும்.

97. விப்புருதி, மகோதரம், புண், புரை, நீராமை பெருவயிறு, நீர்க்கோர்வை, கடிகை விப்புருதிக்கு வேலிப்பருத்தி நெய்

பசுவின் னெய்யும் படிரெண்டு வேலியின்
பருத்தி வேருஞ் சிற்றவரை வேருடன்
னிசவ தாஞ்சித்ர மூலிவே ரும்வசம்
பெழிலாந் தூது வளைவேர் மிளகுடன்
பசைபடுக் கையு வாய்வேரு முள்ளியும்
பகரு மெட்டுவகை மருந்தொவ் வொன்றுக்
கசவ தாகவோ ரைந்துப லங்கூட்டி
யதையும் நைய நறுக்கியும் போட்டிடே 167

போட்டெ ரித்துப் தத்தி லிறக்கியே
புராத னின்பதம் போற்றியே யன்புடன்
நாட்ட மாகக்க ழஞ்சுநெய் கொண்டிடு
நல்லநெய் யைவீக் கத்தினும் பூசிடு
ஊட்டி டாதேயுப் புப்புளி யென்பது
மொன்று மாகிடா தேயிளங் கீரையை
போட்டி டுமிள கின்பொடி மாத்திரம்
போகு நோய்விதங் கேளினிச் சொல்வனே. 168

விரணம் 22

சொல்லக் கேள்விப்பு ருதிம கோதரம்
தோன்றிய புண் புரையும் நீராமையுஞ்
சல்லயஞ் செய்பெரு வயிறு கெண்டையுந்
தானேபட்டுக் கிடக்கிற கட்டியு
மல்லர் செய்நீர்க் கோர்வை கடிகையு
மகட்டின் விப்புரு திப்பல புண்களும்
வெல்லு மிந்தநெய் யென்றுதஞ் சாபுரி
விபுசர பேந்திர னருளாகுமே. 169

(இ-ள்)

பசுவின் நெய்	2 படியுடன் (10 சேர்)
வேலிப்பருத்தி	துதுவளை வேர்
சிற்றவரை வேர்	மிளகு
சித்திரமூல வேர்	உவாய் வேர்
வசம்பு	உள்ளிப்பூண்டு

முதலான சரக்குகளை வகைக்கு 5 பலம் வீதமெடுத்து இடித்து, நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யை விப்புருதி வீக்கத்திற்கு மேலேபூசி, உள்ளுக்கும்¼விராகனெடைஅளவெடுத்து உட்கொள்ளவும்.

பத்தியம்:

உப்பு, புளி, முதலானவைகளை நீக்கவும். முளைக்கீரையை மிளகுத் தூள் சேர்த்து வேகவைத்துச் சாப்பிடவும்.

தீரும் நோய்கள்:

விப்புருதி மகோதரம், புண், புரைகள், நீராமைக்கட்டி, பெருவயிறு, தானே உண்டான கட்டி, நீர்க்கோர்வை, அகட்டின் விப்புருதி முதலானவை.

98. கெற்ப விப்புருதிக்கு அவுரி நெய்

அவுரி வேர்மூக்க ரட்டைவேர் சாறணை
யதின்கி ழங்குமிம் மூன்றுஞ்ச ரியதாய்
நலம தாகிய வுள்ளிவ சம்புடன்
நல்ல கள்ளிப்பால் தானுமே காசெடை
யிவைக ளைந்தையும் நெய்விட்டுக் காய்ச்சியே
யிதமா யுண்ணன லாகிடிலா வின்பால்
கவன மாகவுண் கெற்பவிப் புருதியுங்
கழன்று நல்லகு ணமது வாகுமே. 170

(இ-ள்)

அவுரிவேர்
மூக்கரட்டை வேர்
சாரணைக் கிழங்கு

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து நசுக்கிக் கொண்டு அதனுடன்

பூண்டு வசம்பு
கள்ளிப்பால்

இவைகளை வகைக்கு ஒரு காசெடையும் விட்டுப் பசுவின் நெய் 1 படியுடன் (5 சேர்) கலந்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவத்திலிறக்கவும். இதில் ஒரு சிறு கரண்டியளவு எடுத்துச் சாப்பிடவும். உஷ்ணமதிகமானால் பசுவின் பால் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவும்.

கெற்ப விப்புருதிகள் தீரும்.

99. கெற்ப விப்புருதிக்கு இம்பூரல் புட்டு

ஆவின் பாலி னின்பூரல் வேரதை
யரைத்துண் டாலுந் நரளைக் கிழங்கதை
யேவு லர்த்தியி டித்துக் றுப்பரி
சியின்மா கூட்டிப்பிட்டுச் சுட்டுண் டாலுமே
மேவு கெற்பத்தி லுற்பத்தி யாகிய
விப்பு ருதியு மற்றிடு முண்மையாய்
பூவி னில்மிக்கக் கீர்த்தியே பெற்றிடும்
புரவ லன்சர பேந்திர னருளிதே. 171

(இ-ள்)

இம்பூரல் வேரைப் பசுவின் பாலுடன் அரைத்துச் சாப்பிடவும்.

புளிநரளைக் கிழங்கை உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்துத் தூளாக்கி, குறுவையரிசி மாவுடன்கலந்து, தண்ணீர் விட்டுப் பிசைந்து புட்டுசுட்டு உட்கொள்ளவும்.

இம்மருந்துகளைச் சாப்பிடக் கெற்ப விப்புருதிகள் நீங்கும்.

100. சத்திவிப்புருதி, ஓடு விப்புருதிக்கு எண்ணெய்

ஆமணக் கெண்ணெய் தன்னிலே வீழிவே
ரதின்றூ ளுள்ளி வசம்பதிற் கூட்டியே
நேமமாக விரண்டு மூன்று கொதி
நேரி டவு மெரித்து மிறக்கியே

யாமிவ் வெண்ணெயோர் துட்டெடை நக்கிட
வணுகிடுஞ் சத்தி விப்புரு திகளும்
போமி தற்கோடு விப்புரு திகளும்
புதுமை யான மருந்திது தானுமே. 172

(இ-ள்)

வீழிவேர் சூரணம் பூண்டு
வசம்பு

இவைகளைச் சமனெடுத்து (1 பலம்) தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து, ஆமணக்கெண்ணெய் 1¼சேருடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்து,2 அல்லது 3 கொதிகள் கண்டவுடன் கீழேயிறக்கவும்.

இந்த எண்ணெயில் ஒரு துட்டெடை எடுத்து உட்கொள்ளச் சத்தி விப்புருதி, ஓடு விப்புருதி முதலானவைகள் தீரும்.

101. கண்டமாலை முதலான எந்த வகை வீக்கத்திற்கும் பூச்சு

இரதங் கெந்தக மிந்துப்பு மேசம
னேநிறுத் துக்கொண் டேயதைக் காவள
ரெருக்கம் பால்விட்ட ரைத்துமைப் போலவே
யெழும்பிய கண்டமாலைவீக் கத்திற்குந்
ருகு செய்யுமெவ் வீக்கத்திற் குமிதைத்
திறமாய்ப் பூசந்தி காலைகள் தன்னிலே
வுரம தாம் வீக்க மற்றிடும் பாருநீ
யுண்மை யாமிது கைகண்ட பூச்சிதே. 173

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்மா
சுத்திசெய்த கெந்தகம்
பொரித்த இந்துப்பு

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கம் பால் விட்டு நன்றாக அரைத்து மையாக்கி, வீக்கமுள்ள கண்டமாலையின்மேல் பூசவும். இதைப் போலுள்ள எவ்வித வீக்கங்களுக்கும் காலையிலும் மாலையிலும் மேலே பூசவும். குணமுண்டாகும்.

102. உதர விப்புருதிக்கு லேகியம்

அசம தாகமிந் துப்பு சதகுப்பை
அச்சியின் மிளகுள் ளியுஞ் சுக்குடன்
மிசைவ தாமிந்த வாறு மருந்திலு
மேவ கைக்கு மரைப்பலங் கூட்டிடு
கசக்கும் பேய்கொமட் டிட்டாறு படியொன்று
கனலிலேகுறு கக்காய்ச்சிக் கொண்டுதான்
பசுவின் கோமிய மும்படி முக்காலும்
பாலை கல்லுப்பொரு சேரைக் கூட்டிடே 174

கூட்டுவாய்க் கடுக் காயைந்து சூரணங்
கொண்டு லேகியஞ் செய்து நன்றாகவே
நாட்டமாய்க் கொட்டைப் பாக்கள வெட்டுநாள்
நயமாகக் கொண்டிடு பத்தியங் கைப்புடன்
போட்டிடு புளிதள் ளுதரத் தின்விப்
புருதியும் போயனு கூல மாகிடும்
பாட்டி னுக்காய ருள்புரி யன்பனார்
பாதம் போற்றிய மானு வுரையதே 175

(இ-ள்)

ஓமம்	பொரித்த இந்துப்பு
சதகுப்பை	மிளகு
பூண்டு	சுக்கு

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்துத் தூள் செய்து பேய்க்கொம்மட்டிக்காய் சாறு 1 படி விட்டு, அடுப்பின்மேல் ஏற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். அதனுடன் பசுவின் மூத்திரம் ¾ படியும் கல்லுப்பு 1 சேரும், 5 கடுக்காயின் (எண்ணிக்கையில்) சூரணத்தையும் போட்டு லேகிய பதத்தில் இறக்கவும்.

இதிலொரு கொட்டைப் பாக்களவெடுத்து 8 நாட்களுக்குத் தினம் காலை வேளையில் மாத்திரமே உட்கொள்ளவும்.

பத்தியம்:

கைப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும், புளியையும் நீக்கிவிடவும்.

உதரவிப்புருதிகள் தீரும்.

103. கெற்பவிப்புருதிக்கு உள்ளியாதி கிருதம்

தோலைப் போக்கியே யுள்ளி யொருபடி
சுத்த மாமிள குந்தா னொருபடி
சீலமாஞ் சதரக் கள்ளிப் பாலிலே
சேர்த்தரைத் தொரு நாளுமி ரவியில்
கோலமாக வைத் தேபசு நெய்யது
கூட்டியே யடுப் பில்வைத் திளங்கொதி
மேலிடுஞ் சமயம் பார்த்துக் குத்தான்
மேன்பொடி நெல்லிக்காய்கெந் தகமுமே.176

கெந்தகஞ் சுத்தி வாளப் பருப்புடன்
கிளைக்குஞ் சித்த ரத்தைசிறு தேக்குமே
யிந்தநாலு வகைக்கு மொருபல
மிடித்து நற்பொடி செய்ததிற் போட்டுமே
தொந்தமா யடுப் பேத்திப் பதத்தினிற்
சுறுக்குட னிறக்கி யந்தி காலையி
லிந்த நெய்யினிற் காசெடை ரெணடுமே
யிதமாய்க் கொள்ளந்த வாலையைப்
போத்தியே 177

போத்திக் கொண்டிடு பத்தியந் தானது
புளியும் வாயுப தார்த்தமுந் தள்ளிடு
பூத்திடுங் கெற்ப விப்புருதி களும்
போகிடு மிதுமுன் னோருரைத் ததை
ஆத்தி சூடும்பொன் னம்பலர் பாதத்தை
யர்ச்சனை செய்யும் தஞ்சை விபுவுணர்
சாத்தி ரமிது வுண்மையாய்ச் செய்திடு
தப்பிலாமலும் போகும் வியாதியே. 178

(இ-ள்)

தோல் நீக்கிய உள்ளிப் பூண்டின் பருப்பு	1படி
மிளகு	1 படி

இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டுச் சதுரக் கள்ளிப்பால் விட்டு நன்றாக அரைத்து ஒரு நாள் வெயிலில் வைக்கவும். மறுநாள் அதனுடன் நெய் * 2 படி விட்டு (5 சேர்க்) குழப்பி அடுப்பின் மேலேற்றி எரிக்கவும். இளங்கொதி வருகையில் அதனுடன்,

சுத்திசெய்த	நெல்லிகாக்ய கெந்தகம்
,,	நேர்வாளம்
,,	சித்தரத்தை
,,	சிறுதேக்கு

* 98 நெ. சுவடியில் காணப்படுகிறது.

இச்சரக்குகளை வகைக்கு 1 பலமெடுத்துத் தூள் செய்து போட்டு, நன்றாக எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இந்நெய்யில் 2 காசெடை எடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

பத்தியம்:

புளி, வாயு பதார்த்தங்கள் முதலியவைகளை நீக்கவும்.

கெற்ப விப்புருதிகள் தீரும்.

குறிப்பு:

(1) வாயு பதார்த்தங்களாவன: பாகற்காய், கிழங்கு வகைகள், மாங்காய், கொத்தவரங்காய், அகத்திக்கீரை முதலியன

(2) இந்நெய்க்குப் பேதியாகும் குணமுள்ளதால் இதை நிதானித்து உபயோகிக்கவும்.

105. உதரவிப்புருதிக்கு நெய்

பசுவின் னெய்யுந் நானா ழிக்குமே
பாரொரு தலைப்பூண் டதுபத்துட
னிசவதா மாண்வசம் புமல்ல ரெண்டுட
னேற்ற சுக்கும் பலம திரண்டதாம்
பசையதாம் வெள்ள றுகுகட் டுக்கொடி
பார்ச மூலமரி தார மோமமும்
வசம்பதா முடும்பி ராஞ்சி சமூலமு
மடவியின் கருஞ் சீரகங் கூட்டிடே. 179

கூட்டுவாறு மருந்தில் வகையொன் றுக்கும்
பலமொன்று கொண் டரைத்தே நெய்யில்
போட்டுக் காய்ச்சிப் பதத்தி லிறக்கியே
புனிதமா முள்ளிச் சுக்கு வசம்புமே
வாட்டமில் லாமல் வெவ்வே ரரைத்துமே
வளமாம் நெய்யி லரைத்துக் கலக்கியே
மூட்டு மூன்றுநாட் கொள்ள வுதரத்தில்
முடுகும் விப்பு ருதியும கலுமே. 180

(இ-ள்)

பசுவின் நெய் 1 படிக்கு ஒரு தலைப்பூண்டில் 10 பற்கள் போட்டு அதனுடன்

வசம்பு	2 பலம்
சுக்கு	2 பலம்
வெள்ளறுகு	1 பலம்
கட்டுக்கொடிச்சமூலம்	1 பலம்
சுத்திசெய்த தாளகம்	1 பலம்
ஓமம்	1 பலம்
வசம்பு	1 பலம்
*உடும்பிராஞ்சி சமூலம்	1 பலம்
கருஞ்சீரகம்	1 பலம்

இவைகளை இடித்து அம்மியின் மேல் வைத்துத் தண்ணீர் சேர்த்தரைத்து பூண்டு சேர்த்த நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். பின்பு,

வெள்ளைப்பூண்டு
சுக்கு
வசம்பு

---

* உடும்பிராஞ்சி என்பது என்னவென்று தெரியவில்லை. 98 நெ. சுவடியிலும் இப்படியே உள்ளது.

இம்மூன்றையும் (வகைக்கு ¼ பலம்)எடுத்து நேக அரைத்து நெய்யுடனே சேர்த்துக் குழப்பிக் கொள்ளவும்.

இந்நெய்யைத் தினம் 1 துட்டெடை வீதம் 3 நாட்கள் சாப்பிடவும். வயிற்றில் ஏற்படும் விப்புருதிகள் தீரும்.

குறிப்பு:

98 நெ. சுவடியில் நெய்க்குப் பதில் வெண்ணெயை எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் காணப்படுகிறது.

106. கெற்ப விப்புருதிக்கு எண்ணெய்

கடுக்காய் மஞ்சளிந் துப்புவெள் ளுள்ளியுங்
கடுகுட னிலவாகை வேர்வீழி வேர்
முடுக்காமா மணக்கம் வேர்வெங் காரமு
மொழியு மொன்பது வகை மருந்ததில்
திடத்துட னோர்வகைக் குமூன்று பலஞ்
சேர்த்திடித் துத்தண் ணீருடமெட் டுப்படி
விடுத்தொரு படியா கவுங் காய்ச்சியே
மேலு முன்சொல் மருந்ததிற் றானுமே. 181

மருந்தி லொவ்வோர் வகையது தன்னிலே
வளமாய் மூன்று களஞ்சது கூட்டியே
அரைத்து வாமணக்கி ணெண்ணெ யொருபடி
யத்துடன் கள்ளிப் பாலுமு முக்குமே
திருந்தவே விட்டுக் காய்ச்சி வடித்துதான்
தினமிரு கழஞ்சொன் றிடுகெற் பவிப்
புருதி தீரும் பூமிக்க டலையதும்
பொருந்த வேகழஞ் சைந்தது கூட்டிடே. 182

(இ-ள்)

கடுக்காய்த்தோல்	நிலவாகைவேர்
மஞ்சள்	வீழிவேர்
இந்துப்பு	ஆமணக்கம்வேர்
வெள்ளைப்பூண்டு	வெங்காரம்
கடுகு	

இச்சரக்குகளை வகைக்கு 3 பலம் வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, ஒரு பாத்திரத்தில் இட்டு 8 படி (1 மரக்கால்) ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

பின்பு கடுக்காய்த்தோல் முதலான ஒன்பது சரக்குகளையும் வகைக்கு 3 கழஞ்சு (சுமார் காலே யரைக்கால் பலம்) வீதமெடுத்து கஷாயம் விட்டு நேக அரைத்துக் கஷாயத்துடன் கலக்கிச் சுத்தமான ஆமணக்கெண்ணெய் 1 படி விட்டு, அதனுடன் கள்ளிப் பால் ஒரு உழக்குஞ் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடித்து இறக்கவும். இந்த எண்ணெயில் 2 கழஞ்சு எடுத்துக் காலை நேரங்களில் உட்கொண்ட பின்னர், 5 கழஞ்சளவு நிலக்கடலை சாப்பிடவும்.

கெற்ப விப்புருதிகள் தீரும்.

107. விப்புருதிக்கு உள்ளுக்கு எண்ணெயும் மேலுக்குப் பூச்சும்

நிலக்குமி ழம்வேர் பிராய்பட்டைக் கள்ளக்குன்
றியிலை யுங்கொடி வேலிவே ருள்ளியும்
வலுபெரு மரப்பட் டையிலை யுடன்
வளர்புளி நரளைக் கிழங்குங் கூட

நலமிகும் வெள்ளறுகம்வேர் மிளகு
சாரணையின் வேர்வசம் பாகவும் பத்துமா
மிலகிய வகையொன்றுக்குத் தானுமே
மேன்மை யாய்முழக்க ழஞ்சது கூட்டிடே. 183

கூட்டியே யரைத்தா மணக்கெண் ணெயுங்
கொள்ளோர் நாழிதனி லிட்டுக் காய்ச்சியே
நாட்ட மாகப்பதத் திவ்வடித் துக்கானல்
யிலுங்கொண்டு வவ்வெண் ணெயை
போட்டிடு மந்த வீக்கத் திலுமதை
பொருந்து விப்பு ருதிவீக்க மற்றிடும்
நாட்டிற் கீர்த்தி பெருதழ்சை மாநகர்
நரபதி சரபேந் திரனரு ளிதே. 184

(இ-ள்)

நிலக்குமிழ்வேர் பெருமரத்தின் இலை
பிராய்ப்பட்டை புளிநரளைக் கிழங்கு
குன்றிமணியிலை வெள்ளறுகம்வேர்
கொடிவேலிவேர் மிளகு
வெள்ளைப்பூண்டு சாரணைவேர்
பெருமரப்பட்டை வசம்பு

முதலான சரக்குகளை வகைக்கு 3 கழஞ்சு வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து, ஆமணக்கெண்ணெய் 1¼ சேருடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

காலையில் இந்த எண்ணெயைக் காசளவெடுத்துச் சாப்பிடவும்.

விப்புருதி வீக்கத்தின் மேலும் இவ்வெண்ணெயை உபயோகிக்கவும். விப்புருதிகள் தீரும்.

108. கண்டமாலை முதலான எவ்வித வீக்கங்களுக்கும் பூச்சு

எருமைமூத் திரத்திற் பழங்கிட் டத்தை
யேயரைத் துத்தட விடத் தானுமே
உரமதாங் கண்ட மாலைவீக் கங்களு
முற்ற மற்றசரீரத்தின் வீக்கமுங்
கரைந்து வூரைவிட் டோடுமே சங்கரன்
கருணையால் சோழ மண்டலந்தன்னில்வாழ்
புரவலன் சரபோசி மகரா சேந்திரன்
புனிதமா யுணர்ந்தா ராய்ந்த முறையதே. 185

(இ-ள்)

பழைய கிட்டத்தை (மண்டூரம்) எருமை மூத்திரத்தில் இழைத்துக் கண்டமாலை வீக்கங்களின் மேலும், உடம்பிலேற்படும் மற்ற வீக்கங்களிலும் போடவும். குணமுண்டாகும்.

109. கண்டமாலைக்கு மருந்து

தும்பை வேருமிலை யுந்திருத் துழாய்
துளிரும் வேருட னுப்பதுங் கூட்டியே
நம்பியே யரைத்தே மைகள் போலவே
நல்லவெந் நீரிற் கொண்டிடு காலையில்
வம்பு கண்ட மாலை யுந்தீர்ந் திடுமே
வையகத் தோர்புகழ் சோழ மண்டலம்
அம்புவிக் கதிபதி பன்றுள சேந்திர
னருளிய சரபேந் திரன்முறை யிதே. 186

(இ-ன்)

தும்பைவேர்	துளசி வேர்
தும்பை இலை	உப்பு
துளசி இலை	

இவைகளைச் சமனெடுத்து, அம்மியின் மேல் வைத்துத் தண்ணீர் விட்டு நேக அரைத்து, வெந்நீருடன் கலக்கிக் காலையில் உட்கொள்ளவும்.

கண்டமாலைகள் தீரும்.

110. கண்டமாலை வீக்கத்தீர மருந்து

கானக வெளிக்கொட் டைக்கரந் தைவேர்
கடுகவே பிடுங்கி வந்துமந் தச்சாறு
தானதைப் பிழிந்தே யந்தச்சாற் றில்முன்
சாத்தும் வேரை யரைத்துமைப் போலவே
பானமாகக் கொண்டே மேலும் பூசிடப்
படருங் கண்டமாலை வீக்கந் தீர்ந்திடு
மூனமில்லா மருந்தினை முன்னவ
ருரைத்தச் சரபேந் திரனு ணர்ந்ததே. 187

(இ-ள்)

கொட்டைக் கரந்தைச் செடியைச் சமூலமாகப் பிடுங்கி கொண்டுவந்து கல்லுரலிலிட்டு இடித்துச் சாறு பிழிந்து, அதைக்கொண்டு வந்து கொட்டைக்கரந்தை வேரைச் சேர்த்து நன்றாக அரைத்துப் பருகவும். இதனையே வீக்கத்தின் மேலும் பூசவும். கண்டமாலை வீக்கங்கள் மாறும்.

111. கண்டமாலைக்கு மருந்து

புனலிற் றேற்றான் பழத்தைப் பிசைந்துதான்
பிறகு பேய்ப் பீர்க்குச் சாறுபி ழிந்துமே
மினமதாய்க் கொண்டு சாரித்து வெள்ளையா
மினிய சீலையி லூட்டி நன்றாகவே
நினைவதா கத்தான் னிழலுணர்த் தியன்னீ
வியத்திச் சற்றுக் கிழித்தெ வெந்நீர்
தனிற் பிழிந்துக் குடிகண்ட மாலைதான்
விடுமைந் துடநாறு நாடன்னிலே. 188

(இ-ள்)

தேற்றாம்பழச்சாறு
பேய்ப்பீர்க்கஞ்சாறு

இவ்விரண்டையும் சமமாக ஒன்று கலந்து, ஒரு சாண் நீள அகலமுள்ள வெள்ளைத் துணியிலூட்டவும். பின்பு துணியை நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது இத்துணியில் கொஞ்சம் கிழித்து வெந்நீரில் கசக்கிப் பிழிந்து குடிக்கவும். கண்டமாலை தீரும்.

112. கண்டமாலைக்குக் கருணைக்கிழங்கு உருண்டை

கண்ட மாலைக்கோ ருண்டைசொல் வேனல்ல
கருணையின் கிழங்கைக் கொண்டுவந்துதான்
பண்டுள வரகின் வைக்கோல் தன்னையும்
பாரிற் போட்டுக் கிழங்கை மேல்வைத்து
வண்டலை யந்தவைக் கோலைமேற் போட்டு
மனலை யிட்டுக் கொளுத்திது வெந்தபின்
கண்ட கோலினாற் றள்ளிக் கிழங்கைக்
கடுகவே யெடுத்தே தோலு ரித்திடே. 189

உரித்து வம்மியில் மையதைப் போலரைத்
துக்கொள் பாக்கள வத்தனை தானுமே
கரத்தி னாலெடுத் தேயந்தி தன்னிலுங்
காலையுங் கொள்ளவே கண்டமாலையும்
வருத்த மாய்வெகு நாட்பட்ட துமிந்த
மண்டலம் விட்டுப் போகிடு முண்மையாந்
திருக்குறள் நிர்த்தன மாடுதஞ் சாபுரி
தீரன் மாநரு ளிம்முறை தானுமே. 190

(இ-ள்)

கருணைக் கிழங்கு வேண்டிய அளவு கொண்டுவந்து, வரகு வைக்கோலை அதற்குக் கீழேயும் மேலேயும் போட்டுக் கொளுத்தி விடவும். கிழங்குகள் நன்றாக வெந்தவுடன் ஒரு கோலினால் அவைகளைத் தள்ளி அதன் மேல்தோலை உரித்துவிடவும். பின்பு கிழங்குகளை அம்மியின்மேல் வைத்து நேக அரைத்துப் பத்திரப்படுத்தித் தினம் இருவேளை காலையிலும் மாலையிலும் ஒரு பாக்களவு உட்கொள்ளவும்.

நாட்பட்ட கண்டமாலைகள் தீரும். கைகண்டது.

113. கண்டமாலை, எழுவியாதி பல வியாதிக்கும் கொடிவேலி வேர் உருண்டை

பச்சை யார்ங்கொடி வேலிவேர் தன்னையும்
பாய்ச்சிடா மலரிசி மாவும் வெல்லமு
மிச்சையாய் வகையொன் றுக்கு நல்ல
தோரெலு மிச்சம்பழ மாத்திர மேயரைத்

தச்சமில்லாம லொன் றாகக் கூட்டியே
யரைத்துக் காணி யளவில்லை யாவு
மிச்சமா கச்செய் யாமலே நாழிநெய்
விட்டுச் சட்டியில் வைத்திட டுப்பிலே. 191

அடுப்பில் வைத்துக் கொதிக்கையில் வில்லையை
யதனிற் போட்டுத்துளாவிக் கரண்டியால்
சடக்க தாகவெந் தபணி யாரமாஞ்
சமயந் தன்னிறக் கியும்வைத் துக்கொள்
எடுத்து வேரேயும் வில்லையை வைத்துக்கொண்
டதிலோர் வில்லையுந் துட்டிடை நெய்யுமா
யடுத்த காலையு மந்தியு முண்டிடி
லதற்குத் தீரும் வியாதியைச் சொல்வனே. 192

சொல்லுவே னெழுவியா தியெல் லாமறுந்
துடுக்கத் தாங்கண்ட மாலையுந் தீர்ந்திடும்
வல்லதோர் பலநோய் களுக்கு மற்றிடும்
வாய்வு பண்டம் புளிப்புமே தள்ளிடு
நல்லநூற் பலவா ராய்ந்து வுணர்ந்திதை
நரபதி சரபோ சிரா சேந்திரன்
சொல்லிய முறையே யிதுவுண் டுபார்
சுகமதாங் கொடிவே லிவே ருண்டையே. 193

(இ-ள்)

கொடிவேலிவேரின் மேல்த் தோலை பச்சையாக உரித்துக் கை படாமல் அரைத்தெடுத்த விழுது	ஒரு எலுமிச்சங்காயளவு
ஊற்றிய அரிசி மாவு	,,
வெல்லம்	,,

இம்மூன்றையும் ஒன்று சேர்த்துத் தண்ணீர் விட்டு இடித்து மொத்தை செய்து, ஒரு வெள்ளைத் துணியின் மேல்

துக்காணி அளவுள்ள சிறு சிறு வில்லைகளாகச்செய்து கொள்ளவும்.

ஒரு இரும்புச் சட்டியில் 1¼ சேர் பசுவின் நெய்விட்டு டுப்பின் மேலேற்றி எரித்துக் காய்ந்ததும் அதில் மேற்சொல்லிய வில்லைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு நன்றாகத் துளாவி வரவும். நன்றாக வெந்து பணியாரமான பின்பு அவைகளை சட்டியிலிருந்து எடுத்து விடவும். வில்லைகளை முறுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தினந்தோறும் மூ வில்லைகளிலொன்றை எடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொண்டு, மிகுந்திருக்கும் நெய்யில் ஒரு துட்டெடையுங் கொடுக்கவும்.

தீரும் வியாதிகள்:

எழு ஞாயிறு, கண்டமாலை முதலானவை.

பத்தியம்:

வாயு பதார்த்தங்கள், புளி முதலானவைகளை நீக்கவும்.

114. கண்டமாலைக்கு எண்ணெய்ப் பூச்சு

மனித ரைச்சுட் டெலும்பதைச் சூரண
மாக்கி யேனரி கொண்டுநெய்க் கொட்டான்வேர்
தனிலுறும் பட்டை யெடுத்ததை நையவுந்
தட்டி யோர் விளங்கனி மாத்திர
மூனித மாயரைத் தேவசம் புமிள
குள்ளியாகவு மூன்று வகை யதிற்
றினிச தொன்றுக் கிருகழஞ் சும
ரைத்தே கலந்ததில் நாழிநல் லெண்ணெயே. (194)

நல்லெண் ணெயிற்போட் டும்மவ் வெண்ணெயை
நலம தாகவைத் தேயதின் முன்னமே
வல்ல மோரினில் வெள்ளியச் சீலையை
வளமதாய்த் தோய்த்ததைப் போட்டெட்டு
நாளுமுன்
சொல்லு மெண்ணெயைத் தோய்த்துதான்
போட்டிடச்
சோர்ந்தி டுங்கண்ட மாலையும் மாறிடும்
வல்ல வர்புகழ் மால்சர பேந்திரன்
மனது ணர்ந்தபூச் செண்ணெயி தாகுமே. 195

(இ-ள்)

நன்றாக வெந்த மனிதனின் எலும்பைக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணம் பண்ணி வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, அதனுடன்

பூவந்திவேர்
பூவந்திப்பட்டை

இவ்விரண்டுஞ் சேர்ந்து நசுக்கிய தூள் ஒரு விளாங்கனிப் பிரமாணம் சேர்த்து அரைத்து நல்லெண்ணெய் ஒரு படியுடன் (5 சேர்) சேர்த்து, அதனுடன்

வசம்பு
மிளகு
வெள்ளைப்பூண்டு

இவைகளைத் தனித்தனியே 2 கழஞ்சு (¼ பலம்) எடுத்து நன்றாக அரைத்துக் குழப்பிக்கொள்ளவும்.

கண்டமாலை வீக்கத்தில், ஒரு வெளுப்பான துணியை மோரில் நனைத்துப் போடவும். இவ்வாறு 8 நாட்கள் [illegible]கபின், மேற்சொன்ன எண்ணெயைப் போடக் [illegible]கண்டது.

115. கண்டமாலைக்கு உள்ளுக்கு எண்ணெயும் பூச்சும்

குப்பை மேனி யிலைச்சா றிருநாழி
கொண்டு தானிரு நாழிநல் லெண்ணெயு
மப்ப வேகலந் தேவசம் புள்ளியுட
மதுட னேமிள குமுழி மஞ்சளுந்
தப்பி லாமற் சங்குங் கிலியமுந்
தானே தட்டிப் போட்டேரவி தன்னிலே
முப்பதுங் கடிகை வைத்துத் தீயையு
மூட்டிச் சாறும் சுவறிடக் காய்ச்சியே. 196

காய்ச்சி யேபதந் தன்னிலிறக்கியே கரண்
டியா லொருமுட் டையும் நித்தியம்
வாச்சு தெ னவுள் ளுக்குக் கொள்மே
லுக்கும் வளமதாக வேபூசி டுசிதமாய்
தாச்சி யிலாமுருங் கையின் பிஞ்சிலை
தானே தூதுவளைத்துவ ரம்பருப்
பாச்சு வெள்ளாட்டுப் பால்கூட் டிப்பத்
தியம்பட ருங்கண்ட மாலையதுந் தீருமே. 197

(இ-ள்)

குப்பைமேனி யிலைச்சாறு	2 படி
நல்லெண்ணெய்	2 படி

இவ்விரண்டையும் ஒன்று கலந்து

வசம்பு	வெள்ளைப்பூண்டு
மிளகு	மஞ்சள்
குங்கிலியம்	

முதலானவைகளை வகைக்கு (1 பலம்) வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து, சாறு கலந்த எண்ணெயிலிட்டு 1 பகல்

முழுதும் சூரிய புடத்தில் வைக்கவும். அன்று சாயங்காலம் அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்திலிறக்கவும்.

இதில் ஒரு ஸ்பூனளவெடுத்துத் தினமும் உட்கொண்டு, கண்டமாலைகளின் மேலேயும் பூசவும்.

பத்தியம்:

முருங்கைப்பிஞ்சு, முருங்கையிலை, தூதுவளங்கீரை, துவரம்பருப்பு ரஸம், வெள்ளாட்டுப்பால் முதலியவை களைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

116. கண்டமாலைக்குப் பூச்சு

அடுக்குச் சட்டியிலைச் சாறுநல் லெண்ணெயு
மதில்வசம்பொன்று தட்டியேபோட்டுத்தான்
வடிப்ப மான ரவிதனி லேபுடம்
வைத்துப் பூசிடு கண்ட நேரமெல்லாஞ்
சடுத்தஞ் செய்கண்ட மாலையும் பத்து
நாடன்னிற் றீர்ந்து குணமதாஞ் தஞ்சையை
நடத்து செங்கோல் முறைவழு வாத
நரபதி சரபேந் திரன ருளிதே. 198

(இ-ள்)

அடுக்குச்சட்டி யிலைச்சாறு
நல்லெண்ணெய்

